திருவிளையாடற் புராணம்

திருவாலவாய்க் காண்டம்

(முதல் எட்டுப் படலங்கள்)

மூலமும் - உரையும்

[சென்னைப் பல்கலைக் கழகம்-
வித்துவான் முதனிலை வகுப்புக்குரியது]

உரையாசிரியர் :
வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார்
அர்ச் சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம்	&	சேப்பாக்கம்
திருச்சி		சென்னை-5

விலை ரூ. 2-50

முதற் பதிப்பு : 1960

முன்னுரை

செந்தமிழ் இலக்கியப் பயிற்சிக்குத் தொன்று தொட்டுத் தமிழறிஞர்கள் சங்கத் தொகை நூல்கள், நீதிநூல்கள், இதிகாசங்கள், புராணங்கள், சிறுபிரபந்தங்கள் முதலியவற்றைப் போற்றிப் பயின்று வந்தனர். அம்முறையே சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் வித்துவான் முதல் நிலை (Preliminary) வகுப்பிற்குப் பல நூல்களைப் பாடங்களாக அமைத்துள்ளனர். அவற்றுள் பரஞ்சோதி முனிவர் **திருவிளையாடற் புராணம்** ஒன்று. இது, மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று காண்டங்களை யுடையது. இவற்றுள் மூன்றுவதாகிய திருவாலவாய்க் காண்டத்தில் முதல் எட்டுப் படலங்கள் (1962 முதல்) பாடமாக அமைந்துள்ளன. அவற்றிற்கு, முதலில் வரலாற்றுச் சுருக்கமும், பாடல்களுக்குப் பதவுரை தெளிவுரை விளக்கவுரைகளோடு ஒவ்வொரு படலத்துக்கும் முக்கியமான பயிற்சி வினைக்களும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. வினைக்கள் மாணவர் பயிற்சிக்குப் பெருந் துணை செய்யும்.

இவ்வுரை நூலை வெளியிடுதற்குப் பெருந்துணை புரிந்த எனது நண்பர் **வித்துவான் த. கி. குப்புசாமி ஆழ்வார்** அவர்கட்கும், வெயிட்டுதவிய எனது நண்பர் **செ. மெ. பழனியப்பச் செட்டியார்** அவர்கட்கும் எனது நன்றி.

திருச்சி
2-1-60

திரு ஐயன்பெருமாள் கோனர்.

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-5.

உள்ளுறை

திருவிளையாடற் புராணம்

நூல் வரலாறு

திருவிளையாடற் புராணம் : (மதுரையில் சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்து நான்கு) திருவிளையாடல்களைக் கூறும் பழைய வரலாறு எனப் பொருள்படும். **புராணம் :** பழமையாகிய வரலாறு : அதாவது, உலகத்தோற்றம், உலக ஒடுக்கம், மநுவந்தரம், முனிவர் அரசர் மரபு, அவர்கள் வரலாறு, ஆகியவற்றை விரிவாகக் கூறுவது.

இந்நூலின் பகுப்பு : இப்புராணம் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று பெரும் பிரிவு களையும், முதலில் உள்ள கடவுள் வணக்கம் முதலியனவும், ஈற்றி லுள்ள அருச்சனைப் படலமும் நீங்கலாக, இந்திரன் பழி தீர்த்த படலம் முதல் வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் ஈறாக அறு பத்து நான்கு சிறு பிரிவுகளையும், 3363 விருத்தப் பாக்களையும் கொண்டுள்ளது.

முதல் நூல் : இப்புராணத்திற்கு முதல் நூல், வடமொழிக் கந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய **சங்கர சங்கிதையில்** கூறப்பட்டுள்ள ஸ்ரீஹாலாஸ்ய மகாத்மியம் என்பதாம்.

சிவபெருமான் மதுரையில் செய்த திருவிளையாடல்களைத் தமிழில் கூறும் நூல்கள் : 1. **திருவிளையாடற் புராணம் :** இது பரஞ்சோதி முனிவ ரால் இயற்றப்பட்டது; பரஞ்சோதி திருவிளையாடல் எனவும் வழங் கும். 2. **திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்:** இது, பெரும் பற்றப் புலியூர் நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. இது பழைய திருவிளையாடல் எனவும் வழங்கும்; நம்பி திருவிளையாடல் எனவும் கூறுவர். 3. **கடம்பவன புராணம் :** தொண்டை நாட்டு இலம்பூர் வீமநாத பண்டிதர் இயற்றியது. 4. **சுந்தர பாண்டியம் :** தொண்டை நாட்டு வாயற்பதி அந்தாரியப்பர் என்பவரால் இயற்றப்பட்டது

நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியர் **பரஞ்சோதி முனிவர்.** இவர் சோழநாட்டில் **திரு மறைக்காடு** என்னும் பதியில் **மீனாட்சி சுந்தர தேசிகர்** என்னும் பெரியா ருக்குத் தவப் புதல்வராய்த் தோன்றியவர். சைவ வேளாள மரபினர். இளமையில் இவர் தமிழிலும் வட மொழியிலும் உள்ள பல அருமை யான நூல்களை ஐயம் திரிபு அறக் கற்று இரு மொழிப் புலமை யுடை யவராய்த் திகழ்ந்தவர். இவர் பாடிய பாடல்கள் மிகவும் இனிமை வாய்ந்தவை ; சொற்செறிவும் பொருட் பொலிவும் உடையவை ; கற்பாருக்குத் தமிழ மொழியில் ஆர்வம் உண்டாகச் செய்பவை.

நூல் செய்த காரணம் : இவர் பல சிவதலங்களையும் தரிசித்துக் கொண்டு, மதுரையை அடைந்து, மீனாஷியம்மையையும் சோம சுந்தரக் கடவுளையும் நாள்தோறும் வழிபட்டு வருகையில், மீனாட்சி யம்மை ஓர் இரவு இவர் கனவில் தோன்றிச் சிவபெருமான் மதுரை யில் செய்தருளிய திருவிளையாடல்களைப் பாடும்படி கட்டளையிட்டு மறைந்தனள். அங்ஙனமே இவர் திருவிளையாடற் புராணத்தைப் பாடி முடித்துச் சொக்கலிங்கப் பெருமான் சந்நிதியில் பல புலவர்கள் கூடிய பேரவையில் அரங்கேற்றினர்.

இவர் இயற்றிய வேறு நூல்கள் : வேதாரணிய புராணம், திருவிளை யாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி என்பன.

காலம் : சிலர் இவரது காலம் 350 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும், சிலர் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் கூறுவர்.

திருவிளையாடற் புராணம்

திருவாலவாய்க் காண்டம்

1. திருவாலவாயான படலம்

கதைச் சுருக்கம்

சுகுண பாண்டியன் மரபினர் : மதுரையைச் சிறப்புடன் செங்கோல் செலுத்தி வந்த சுகுண பாண்டியனுக்குப் பின் சித்திர விரதன், சித்திரபூடணன், சித்திரத்துவசன், சித்திரவருமன், சித்திர சேனன், சித்திரவிக்கிரமன், இராச மார்த்தாண்டன், இராசசூடாமணி, இராச சார்த்தூலன், துவிசார குலோத்தமன், ஆயோதனப் பிரவீணன், இராச குஞ்சரன், பரவிராச பயங்கரன், உக்கிரசேனன், சத்துருஞ்சயன், வீமரதன், விம பராக்கிரமன், பிரதாப மார்த்தாண்டன், விக்கிரம கஞ்சுகன், சமர கோலாகலன், அதுல விக்கிரமன், அதுல கீர்த்தி என்னும் இருபத்திரண்டு பாண்டியர்களும் முறையே அரசுரிமை பூண்டு செங்கோல் செலுத்தி வரலாயினர்.

கீர்த்திபூடணன் ஆட்சியும் பிரளயத் தோற்றமும் : அதுல கீர்த்தியின் மகனாகிய கீர்த்திபூடண பாண்டியன் நீதி வழுவாது உலகை அரசாண்டு வருங்காலத்தில், ஏழு கடல்களும் பொங்கிப் பிரளயமாகி வானமும், எட்டுத்திசை யானைகளும் மலைகளும் சக்கரவாளகிரியும் அவ்வெள்ளத்துள் மூழ்கவே, அழிவற்ற பெரிய பூமியும் தீவுகள் ஏழும் அவற்றில் உள்ளனவும் அழிந்து போயின.

வெள்ளத்தால் அழியாதவை : இங்ஙனம் தோன்றிய பெரு வெள்ளத்தில் அங்கயற்கண்ணம்மையின் திருக்கோயிலும் விண்ணிலிருந்து இறங்கிய இந்திர விமானமும், பொற்றாமரைக் குளமும், இடபமலை, யானைமலை, நாகமலை, பசுமலை, பன்றிமலை என்பனவும் அழியாதிருந்தன.

உலகத் தோற்றம் : பிரளய நீர்வற்றிய பின், சிவபெருமான் முன் போலவே உலகத்தைப் படைத்து தேவர்கள், மக்கள், பறவைகள், விலங்குகள் முதலியவற்றையும் தோற்றுவித்துச் சந்திரன், சூரியன், அக்கினி என்னும் மூவர் குலத்தினின்றும் முன்போலவே பாண்டிய, சோழ, சேரர் என்னும் தமிழ் மன்னர் மூவரையும் தோற்றுவித்தார்.

வங்கிய சேகர பாண்டியன் ஆட்சி முறை : *இங்ஙனம் தோன்றிய சந்திரன் மரபாகிய கடலுள் அறுபத்து நான்கு கலைகள் நிரம்பிய முழுமதியின் தோற்றம் போல, வங்கியசேகர பாண்டியன் தோன்றினான். அவன் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலைச் சூழ அழகிய சிறுநகரம் ஒன்று அமைத்து ஆட்சிபுரிந்து வரலானான். அவனது நீதி வழுவா ஆட்சிச் சிறப்பால் நாட்டில் பல்வளங்களும் பெருகியதோடு மக்கட் கூட்டமும் நாளும் பெருகி வரலாயிற்று. ஆகவே, அவர்கள் வசித்தற்கிடமின்றி வருந்தலாயினர்.*

வங்கிய சேகரனின் முறையீடு : *மக்கள் துயரம் தீர்க்கக் கருதிய வங்கிய சேகரன், திருக்கோயிலைச் சார்ந்து இறைவனை வணங்கித் தன் குறையைக் கூறி, 'பெருமானே ! குடிமக்கள் துன்பமின்றி வாழத் தக்க ஓர் நகர் அமைக்க வேண்டும். எனவே, இந்நகரின் பழைய எல்லையினை எனக்குக் காட்டியருள்க' என்று வேண்டினான்.*

இறைவன் திருநகரத்து எல்லையைக் காட்டுவித்தல் : *வங்கிய சேகரன் வேண்டுகோளுக்கு இரங்கிய சோமசுந்தரக் கடவுள், சித்தர் வடிவங் கொண்டு பாம்பினால் ஆகிய அரைஞாண், கோவணம், பூணூல், காதணி, கங்கணம், பாதகிண்கிணி ஆகியவற்றைத் தாங்கிப் பாண்டியன் முன் தோன்றினார். உடனே தமது திருக்கரத்திலே கங்கணமாயுள்ள பாம்பைப் பார்த்து, 'நீ இப்பாண்டியனுக்கு இந்நகரத்தின் எல்லையை அளந்து காட்டுக' என்று பணித்தருளினார். பாம்பு அவரை வணங்கி, 'பெருமானே ! இந்த நகரம் அடியேன் பெயரினால் விளங்கும்படி அருள் செய்ய வேண்டும்' என்று வேண்டிக் கொண்டது. சிவபெருமான், 'அவ்வாறே ஆகுக' என்று கூறினார்.*

பாம்பு நகர எல்லையைக் காட்டுதல் : *பின்னர், அப்பாம்பு விரைந்து கிழ்த்திசையிலே சென்று வாலை நீட்டி, நகரத்தை வலமாகச் சூழும்படி நிலத்திற்படிந்து உடலை வளைத்து வாலை வாயில் வைத்துப் பாண்டியனுக்கு எல்லையைக் காட்டிவிட்டுச் சித்தர் கையில் கங்கணமாயிற்று. சித்தரும் தம் திருக்கோயிலினுள் எழுந்தருளினார்.*

பாண்டியன் மதிலும் வாயிலும் அமைத்தல் : *பாண்டியன் அப்பாம்பு வளைந்து எல்லை கோலியபடியே சுவரெடுத்து, மதில் அமைத்துத் தெற்கு வாயிலுக்குத் திருப்பரங்குன்றமும், வடக்கு வாயிலுக்கு இடபமலையும், மேற்கு வாயிலுக்குத் திருவேங்கடமும், கிழக்கு வாயிலுக்குத் திருப்புவனமும் எல்லையாக வகுத்தான். அம்மதில்* **ஆலவாய் மதிலெனவும்**, *அந்நகரம்* **ஆலவாய் நகரெனவும்** *பெயர் பெற்றன.*

நகர் அமைப்பும் ஆட்சிச் சிறப்பும் : *பாண்டியன் அந்நகரை முன் போல் அமைத்ததோடு மண்டபம், கோபுரம், வீதி, பூம்பொழில்கள் இவை போன்றவற்றைப் புதியனவாக அமைத்தான். சோமசுந்தரக் கடவுளுக்கு இரத்தின கிரீடமும், இரத்தின ஆபரணங்களும் புதியனவாகச் செய்து அணிவித்தான். அத்திருவாலவாய் நகரத்திலே பலவகைக் குடிகளையும் குடியேற்றுவித்து அமராவதி, அளகாபுரி முதலிய நகரங்களைக் காட்டிலும் பல வளங்களைப் பெருக்கி அரசாட்சி செய்து வந்தான்.*

பரசிவ வணக்கம்

1. பாயுடையார் விடுத்தபழி யழல்வழுதி யுடல்குளிப்பப் பதிக மோதும்
சேயுடையா ரணந்திளைக்குஞ் செவியுடையா ரளவிறந்த
[திசைக ளெட்டுந்
தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார் விடவரவஞ்
[சுற்று மால
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல் வேண்டுவதிம் மனித யாக்கை.

தெளிவுரை : *பாயை ஆடையாகவுடைய சமணர்கள் தமது திருமடத்தின் கண் வைத்த பழிக்கு ஏதுவாகிய நெருப்பு, பாண்டிய னுடலிற் சென்று பற்றுமாறு திருப்பதிகம் பாடியருளும் ஆளுடைய பிள்ளையாரின் தமிழ் மறையை இடையறாது நுகருஞ் செவியினை யுடையாரும், எல்லையின்றிப் பரந்த எட்டுத் திக்குகளையும் பொருந் திய ஆடையாக வுடையவரும், பொன்போன்ற கொன்றை மாலையை யுடையாரும், தமது கையில் கங்கணமாயிருந்த நஞ்சினையுடைய பாம்பினாற் கோலி வரையறுக்கப்பட்ட திருவாலவாயினை யுடையாரு மாகிய சோமசுந்தரக் கடவுளின் புகழைப் பாடும் பேறு பெறுவோ மானால் இந்த மனித வுடம்பு வேண்டுவதே யாகும்.*

விளக்கவுரை : *மனித உடம்பு எடுத்ததன் பயன், சோமசுந்தரப் பெருமானை பாடிப் பரவுதலேயாம் என்பதாம். சிவநெறி வளர்க்க, மதுரையம்பதிக்குப் பாண்டிமா தேவியார், குலச்சிறையார் வேண்டு கோளுக்கு இணங்கி எழுந்தருளிய ஆளுடைய பிள்ளையார் தங்கி யிருந்த திருமடத்தில், அமணர்கள் மந்திரத்தால் தீப்பற்றச் செய்ய முயன்று, முடியாமற் போகவே, மனம் வருந்தித் தாங்களே தீயை எடுத்துச் சென்று பற்றச் செய்தனராதலின்* '**பாயுடையார் விடுத்த பழியழல்**' *எனப்பட்டது. 'மாதவர் துயிலும் இத்திருமடப்புறம்பு பழுது செய்வதோ பாவிகாள்' என்று பரிந்தருளிய ஆளுடைய பிள்ளையார், 'இத்தீங்கு வேந்தன்மேற்று' என்று துணிந்து 'செய் யனே திருவாலவாய மேவிய, ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனைப் பொய்யராம் அமணர் கொளுவுஞ்சுடர், பையவே சென்று பாண்டியற் காகவே'என்னும் பதிகம் பாடினாராதலின்,* '**அழல் வழுதி யுடல் குளிப்பப் பதிக மோதும் சேய்**' *எனப்பட்டார். திசைகள் எட்டும் தோய் உடை யார் - திகம்பரர். இச் செய்யுள்,*

> 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
> பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்பால் வெண்ணீறும
> இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
> மனிதப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே'

என்னும் அப்பர் பாடலை அடியொத் திருத்தல் கருதத் தக்கதாம்.

அங்கயற்கண்ணம்மையின் அடியிணை மாண்பு

2. வேதநெடு மாலாதி விண்ணுடர் மண்ணுடர் விரத யோகர்
மாதவர்யா வருங்காண மணிமுறுவல் சிறிதரும்பி மாடக் கூடல்,
நாதனிரு திருக்கரந்தொட் டம்மியின்மேல் வைத்தகய லுண்கட் செல்வி
பாதமல ரெழுபிறவிக் கடனீந்தும் புணையென்பர் பற்றி லாதோர்.

தெளிவுரை : பிரமனும், நெடியோனாகிய திருமாலும் முதலிய தேவர்களும், புவியிலுள்ளாரும், அரிய நோன்பினை மேற்கொண்ட சிவயோகியரும், பெரிய தவத்தினையுடைய முனிவரும் ஆகிய அனைவரும் காணும்படி நான்மாடக் கூடலின் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள், அழகிய புன்னகை முகிழ்த்து இரண்டு திருக்கரங்களாலும் தீண்டி, அம்மியின் மேல் வைத்தருளப் பெற்ற அங்கயற்கண்ணம்மையின் திருவடி மலர்களை, இருவகைப் பற்றுமற்ற பெரியோர், ஏழுவகைப்பட்ட பிறவியாகிய கடலைக் கடப்பதற்குரிய நாவாய் என்று கூறுவர்.

விளக்கவுரை : பிரமன் முதலிய தேவர்களும் முனிவர்களும் காணச் சோமசுந்தரக் கடவுள் தம் திருக்கரத்தால் அங்கயற்கண்ணம்மையின் திருவடிகளை அம்மியின்மேல் வைத்தருளினார் என்பது திருமணப் படலத்தில் கூறிய வரலாறாகும். திருமணக் காலத்தில் நாயகன் நாயகியின் பாதங்களை அம்மிமேல் எடுத்துவைத்தல் மரபாகும். அவ்வங்கயற் கண்ணம்மையின் பாதங்கள் தம்மை வழிபடுவார், பிறவியை ஒழிக்கும் பெருமையுடையன என்பதாம். பாதமலர் எழுபிறவிக் கடனீந்தும் புணை - இப்பகுதி **முற்றுருவக அணி.** 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' என்னும் திருக்குறள் இதனுடன் ஒப்புநோக்கத் தக்கதாகும். தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன எழுபிறவிகளாம். பிறவி அநாதியாகக் காரணகாரியத் தொடர்ச்சியாய் கடதற்கரியதாய் வருதலில் **கடலென** உருவகிக்கப்பட்டது. அகப்பற்று புறப்பற்று என்னும் இருவகைப் பற்றுக்களையும் அறுத்து, பற்றற்ற பரம் பொருளின் நற்றாளைப் பற்றியவரே ஈண்டு **பற்றிலாதார்** எனப் பட்டர்.

ஆலவாயான திருவிளையாடல்

3. ஓலவாய் மறைக டேறு வொருவன்றன் னுலகந் தன்னைச்
சேலவா யுழலு நாரைக் கருளிய செயலீ தம்ம
நீலவாய் மணிநேர் கண்ட னெடியநான் மாடக் கூடல்
ஆலவா யாகச் செய்த வருட்டிற மெடுத்துச் சொலவாம்.

தெளிவுரை : வாய் திறந்து ஓலமிடும் வேதங்களும் தெளியாத இறைவன், தனது சிவலோகத்தை, சேல்மீனை விரும்பிச் சுழன்று திரியும் நாரைக்கு அருளிய திருவிளையாடல் இதுவாகும். நீலநிறம் வாய்ந்த மணியினை ஒத்த திருமிடற்றையுடைய அவ்விறைவன் நீண்ட நான்மாடக் கூடலை திருவாலவாயாகச் செய்த திருவிளையாடலை இனி எடுத்துக் கூறுவோம்.

விளக்கவுரை : நான்மாடக் கூடலான மதுரையை ஆலவாயாகச் செய்த திருவிளையாடல் இது என்பதாம். 'அல்லை அல்லை ஈது என மறைகளும் அன்மைச சொல்லினால் துதித்து இளைக்கும் இச்சுந்தரன்' என்று பரஞ்சோதி முனிவரே கூறியுள்ளது ' **ஓலம் வாய்மறைகள் தேறு ஒருவன்'** இங்கு என்பதனுடன் ஒப்பு நோக்கத் தக்கது. நீலம் வாய்மணி நேர் கண்டன் - நீலகண்டன். பாற்கடலைக் கடையுங்கால் தோன்றிய

விடமுண்டமையால், அமைந்தது நீலகண்டம் எனக் கொள்க. அம்ம - உரையசை.

சுகுண பாண்டியன் மரபினர்

4. சித்திர மேரு வென்ற திரண்டதோட் சுகுணன் பின்பு
சித்திர விரதன் சித்ர பூடணன் றிண்டேர் வல்ல
சித்திர துவசன் வென்றிச் சித்திர வருமன் வன்றேட்
சித்திர சேனஞ் சீர்சால் சித்ரவிக் கிரம னென்போன்.

தெளிவுரை : *அழகிய மேருமலையை வென்ற திரண்ட தோள்களையுடைய சுகுண பாண்டியனுக்குப் பின் சித்திர விரதனும், சித்திர பூடணனும், வலியதேர்ப் போரில் வல்ல சித்திரத்துவசனும், வெற்றி பொருந்தியசித்திர வருமனும், வலிய தோள்களையுடைய சித்திர சேனனும், சிறப்பு அமைந்த சித்திரவிக்கிரமன் எனப்படுவானும்.*

விளக்கவுரை : *சுகுண பாண்டியன் மரபினர் நான்மாடக்கூடலை ஆண்டு வந்தனர் என்பதாம். இச் செய்யுளில் சுகுண பாண்டியன் முதல் சித்திர விக்கிரமன் ஈருகக் கூறப்பட்டுள்ளது.*

சித்திர விக்கிரம பாண்டியன் வழிவந்தோர்

5. மணிகெழு தேரிராச மார்த்தாண்ட னிராச சூடா
மணியணி முடியி ராச சார்த்தூல வழுதி சிந்தா
மணிநிகா துவிச ராச குலோத்தமன் மடங்கா வென்றி
மணிதிகழ் பொலம்பூ ணாயோ தனப்பிர வீணன் மன்னே.

தெளிவுரை : *மணிகள் பதித்த தேரினையுடை இராச மார்த்தாண்டனும், இராச சூடாமணியும், அழகிய முடியினையுடைய இராச சார்த்தூல பாண்டியனும், சிந்தாமணி போன்ற கொடியினையுடைய துவிசராச குலோத்தமனும், மடங்காத வெற்றியையும் மணிகள் பதிக்கப்பட்டு விளங்கும் பொன்னணிகளையு முடைய ஆயோதனப் பிரவீணன் எனப்படும் போர் வல்லோனும்,*

விளக்கவுரை : *சித்திரவிக்கிரமன் பின்னேர் மதுரையை ஆண்டனர் என்பதாம். சிந்தாமணி - தெய்வத்தன்மை பொருந்திய ஓர் மணி; இது வேண்டுவார் வேண்டுவனவற்றைத் தரவல்ல தென்பர். ஆயோதனம் - போர். பிரவீணன் - வல்லவன். மன், ஓ - அசைகள்.*

ஆயோதனப் பிரவீண பாண்டியன் வழியினர்

6. இயம்பருந் திறலி ராச குஞ்சரன் பரவி ராச
பயங்கரன் கைக்கும் பைந்தா ருக்கிர சேனன் பாரைச்
சயங்கெழு தோண்மே லேந்து சந்துருஞ் சயன்வீ மத்தேர்
வயங்கெழு மன்னன் வீம பராக்ரம வழுதி மாதோ.

தெளிவுரை : *சொல்லுதற்கரிய வெற்றியை யுடைய இராச குஞ்சரனும், பரவிராச பயங்கரனும் கசக்கும் பசுமையான வேப்ப மலர் மாலையை யணிந்த உக்கிர சேனனும், உலகை வெற்றி பொருந்திய தோளின் கண் தாங்கிய சத்துருஞ்சயனும், வெற்றி பொருந்திய வீமரதன் என்னும் வேந்தனும், வீமபராக்கிரம பாண்டியனும்,*

விளக்கவுரை : *ஆயோதனப் பிரவீணன் மரபினர் மதுரையை ஆண்டு வந்தனர் என்பதாம். மாது, ஓ - அசைகள்.*

வீமபராக்கிரம பாண்டியன் மரபினர்

7. பெய்வளை விந்தை சேர்ந்த பிரதாப மார்த்தாண் டப்பேர்த்
தெவ்வடு சிலையான் றேர்விக் கிரமகஞ் சுகன்றே ரார்போர்
வெளவிய சமர கோலா கலனெனும் வாகை வேலான்
அவ்விய மவித்த சிந்தை யதுலவிக் கிரம னென்போன்.

தெளிவுரை : *இடப்பட்ட வளையலையுடைய வீரமகள் அணைந்த பிரதாப மார்த்தாண்ட னென்னும் பெயரினை யுடைய பகைவரைக் கொல்லும் வில்லினை யுடையானும், தேரையுடைய விக்கிரம கஞ்சுகனும், பகைவர் போர் வலியைக் கவர்ந்த சமரகோலாகலன் என்னும் வெற்றி வேலையுடையானும், பொறுமையை ஒழித்த உள்ளத்தை யுடைய அதுல விக்கிரமன் எனப்படுவானும்.*

விளக்கவுரை : *வீமபராக்கிரம பாண்டியன் குலத்தினர் கூடலை ஆண்டு வந்தனர் என்பதாம். தெவ் - பண்பாகு பெயர். தேரார் - பகைவர். அவ்வியம் - பொறாமை. ஒளவியம் என்பது எதுகை நோக்கி அவ்வியமென நின்றது.*

அதுல விக்கிரம பாண்டியன் மரபினர்

8. எழில்புனை யதுல கீர்த்தி யெனவிரு பத்தி ரண்டு
வழிவழி மைந்த ராகி வையகங் காத்த வேந்தர்
பழிதவி ரதுல கீர்த்தி பாண்டியன் றன்பா லின்பம்
பொழிதர வுதித்த கீர்த்தி பூடணன் புரக்கு நாளில்.

தெளிவுரை : *அழகுமிக்க அதுல கீர்த்தியும் என்று இருபத்திரண்டு மைந்தர்கள் வழிவழியாகத் தோன்றி இந்நிலவுலகை ஆண்ட அவ் வேந்தருள் பழி நீங்கிய அதுல கீர்த்தி என்னும் பாண்டியனிடத்து இன்பம் மிகும்படி தோன்றிய கீர்த்தி பூடண பாண்டியன் செங்கோல் செலுத்தி வருங்காலத்தில்,*

விளக்கவுரை : *அதுல விக்கிரம பாண்டியன் வழியினர் மதுரையை ஆண்டு வந்தனர் என்பதாம். சுகுண பாண்டியன் முதல் கீர்த்தி பூடணன் வரை இருபத்திரண்டு பாண்டியர் வழிவழித் தோன்றி உலகத்தை ஆண்டு வந்தவராவார்.*

கீர்த்திபூடண பாண்டியன் காலத்தில் பிரளயம் தோன்றுதல்

9. கருங்கட லேழுங் காவற் கரைகடந் தார்த்துப் பொங்கி
ஒருங்கெழுந் துருத்துச் சீறி யும்பரோ டிம்ப ரெட்டுப்
பொருங்கட கரியு மெட்டுப் பொன்னெடுங் கிரியு நேமிப்
பெருகடி வரையும் பேரப் பிரளயங் கோத்த தன்றே.

தெளிவுரை : *கரிய கடல்கள் ஏழும் ஒன்று சேர்ந்து பொங்கி மேலெழுந்து, வெகுண்டு சீறி ஆரவாரித்துக் காவலாகிய எல்லையைக் கடந்து, விண்ணுலகும் மண்ணுலகும் போர் செய்யும் மதத்தை யுடைய எட்டு யானைகளும் நெடிய பொன்னையுடைய எட்டு மலைகளும் பெரிய அச்சத்தைத் தரும் சக்கரவாள கிரியும் நிலைபெயருமாறு பிரளயமாக ஒன்றோடொன்று கோத்தன.*

விளக்கவுரை : *கீர்த்தி பூடணன் ஆட்சிக் காலத்தில் எழுகடல் களும் பொங்கிப் பிரளயம் தோன்றியது என்பதாம். கடல்கள் கரை கடத்தலால் நேர்ந்த விளைவுகள் இங்குக் கூறப்பட்டுள்ளன. கருங் கடல் - பெரிய கடல் என்றும் பொருள் கொள்ளலாம். உருத்துச் சீறி - ஒரு பொருட் பன்மொழி. அன்று, ஏ - அசைகள்.*

பிரளய வெள்ளத்தால் அழிவுற்றவை

10. அப்பெருஞ் சலதி வெள்ளத் தழிந்தன வழிவி லாத
எப்பெரும் பொழிலு மேழு தீபமு மிவற்றுட் டங்கி
நிற்பன செல்வ வான திணைகளு நீண்ட சென்னிப்
பர்ப்பத வகையு மீறு பட்டன வாக வங்கண்.

தெளிவுரை : *அப்பெரிய கடல் வெள்ளத்துள் மூழ்கி, அழிவில் லாத எத்துணைப் பெரிய பூமியும், ஏழு தீவுகளும், இவைகளிலே தங்கி நிற்பனவும், செல்வனவுமாகிய பொருள்களும், உயர்ந்த முடிகளையுடைய மலைவகைகளும் அழிந்து போயின, அப்பொழுது.*

விளக்கவுரை : *பிரளய வெள்ளத்தால் பூமி, ஏழுதீவுகள் இவற் றுள் இயங்குவன இருப்பன யாவும் அழிந்தன என்பதாம். நிற்பன வான திணை - அசையாப் பொருள்கள் : மலை, மரம் முதலிய பொருள் கள், இயங்குவனவான திணை - மனிதர் விலங்கு பறவை முதலிய அசையும் பொருள்கள். பொழில் - உலகம். அழுந்தின - முற்றெச்சம்.*

பிரளய வெள்ளத்தால் அழியாதவை

11. தேனிழி குதலைத் தீஞ்சொற் சேனெடுங் கண்ணி கோயில்
வானிழி விமானம் பொற்று மரைவிளையாட்டின் வந்த
கானிழி யிடபக் குன்றங் கரிவரை நாகக் குன்றம்
ஆனிழி வரைவ ராக வரைமுத லழிவி லாத.

தெளிவுரை : *தேன் ஒழுகும் இனிய மழலைச் சொல்லையுடைய சேல் போலும் நீண்ட விழிகளை யுடைய உமையம்மையின் திருக்*

கோயிலும் வானினின்றும் இறங்கிய இந்திர விமானமும், பொற்று மரை வாவியும், இறைவன் திருவிளையாட்டினால் வந்து தங்கிய மணம் வீசும் சோலைகளையுடைய இடபமலையும், யானை மலையும், நாகமலை யும், பசுவின் உருத்திரிந்த பசுமலையும், பன்றிமலையும் முதலிய இடங்கள் அந்நீரினால் அழியாதன வாயின.

விளக்கவுரை : *பிரளய வெள்ளத்தால் அழிவுறாதிருந்தவை இந்திர விமானம், பொற்றாமரை வாவி, இடபமலை, யானைமலை, நாக மலை, பசுமலை, பன்றிமலை முதலியன என்பதாம். விண்ணிழி விமானம் : தேவேந்திரன் விருப்பப்படி தேவதச்சனால் நிருமித்துக் கொண்டுவரப்பட்ட விமானம். இவ்வரலாறு இந்திரன் பழிதீர்த்த பட லத்துட் கூறப்பட்டுள்ளது. சேல் நெடுங்கண்ணி - அங்கயற் கண் ணம்மை. முதலழிவிலாத - முதலியன அழிவிலாதனவாயின என்று கொள்க.*

உலகத் தோற்றமும் தமிழ்மன்னர் தோற்றமும்

12\. வெள்ளநீர் வறப்ப வாதி வேதியன் ஞால முன்போல்
உள்ளவா றுதிப்ப நல்கி யும்பரோ டிம்ப ரேனைப்
புள்ளொடு விலங்கு நல்கிக் கதிருடற் புத்தேண் மூவர்
தள்ளரு மரபின் முன்போற் றமிழ்வேந்தர் தமையுந் தந்தான்.

தெளிவுரை : *பிரளய நீர்வற்ற சிவபெருமான முன் இருந்ததன்மை போலவே உலகந் தோன்றுமாறு அருள்புரிந்து, தேவர்களையும் மக்களையும் மற்றைப் பறவைகளையும் விலங்குகளையும் தோற்றுவித்து, ஒளிவடிவமுடைய சந்திரனும் சூரியனும் தீக்கடவுளுமாகிய மூவரின் தள்ளுதற் கரிய மரபில் முன்போலவே மூன்று தமிழ் மன்னர்களையும் தந்தருளினான்.*

விளக்கவுரை : *பிரளய வெள்ளம் வற்றவே முன் போலவே சிவபெருமான தேவர்கள் மக்கள் விலங்கு பறவைகள் சூரியன் சந்திரன் முதலியோரைத் தோற்றுவித்து, மூவேந்தரையும் தோற்று வித்தான் என்பதாம். கதிருடல் புத்தேள் மூவர் - சூரியன், சந்திரன் திக்கடவுள் என்னும் மூவர். இவர் மரபினராக முறையே சோழன், பாண்டியன், சேரர் என்னும் மூவரும் தோன்றினர் என்க. உம்பர், இம்பர் என்பன முறையே விண்ணுலகிலுள்ளாரையும் மண்ணுலகி லுள்ளாரையும் குறித்தனவாம்.*

வங்கியசேகர பாண்டியன் தோற்றம்

13\. அங்கியை மதிமர பென்னு மாழியுட்
டங்கிய கலையெனான் கிரட்டி நன்னெடும்
பொங்கிய நிலாமதி போலத் தோன்றினான்
வங்கிய சேகர வழுதி மன்னனே.

தெளிவுரை : *அங்ஙனமியைந்த சந்திரன் மரபாகிய கடலுள் பொருந்திய அறுபத்து நான்கு கலைகளோடும் விளங்கித் தோன்றிய நிலவினையுடைய சந்திரன் போல, வங்கிய சேகர பாண்டியன் என் னும் வேந்தன் தோன்றினான்.*

விளக்கவுரை : *பிரளயத்தின் முடிவில் சிவபெருமானருளால் தோன்றிய தமிழ் மன்னர் மூவருள் வங்கிய சேகர பாண்டியன் என்பவன், சந்திரன் மரபாகிய கடலுள் அறுபத்து நான்கு கலைகளோடு கூடிய சந்திரன் போலத் தோன்றினன் என்பதாம். மதிமரபு ஆழியென்றார், முதலும் முடிவும் தோன்றாது தொடர்ந்து வருதலின். மதிமரபு, ஆழியென உருவகிக்கப்பட்டது. வங்கியம் - வம்சம். வங்கிய சேகர பாண்டியன் அறுபத்து நான்கு கலைகளும் கற்று அறிவு நிரம்பியவனாதலின் அறுபத்து நான்கு கலைகள் நிறைந்த மதி அவனுக்கு உவமையாகக் கூறப்பட்டது. இத்தகைய மதி, உலகத்தில் இல்லாப் பொருளாதலின், இது,* **இல்பொருளுவமையணியாம்.**

பாண்டியன் நகரமைத்து அரசாட்சி செய்தல்

14. தாளணி கழலினான் றங்க ணாயகன்
கோளணி புரிசைசூழ் கோயில் சூழவோர்
வாளணி கடிநகர் சிறிது வைகவைத்
தாளரி யேறென வவனி காக்குநாள்.

தெளிவுரை : *காலிற் கட்டிய வீரக்கழலையுடைய அவ்வேந்தன், தங்கள் தலைவனாகிய சோமசுந்தரக்கடவுளின் ஒன்பது கோள்களுந் தவழும மதில் சூழ்ந்த திருக்கோயிலைச் சூழ, ஒளி பொருந்திய காவலையுடைய ஒரு நகரைச் சிறிதாக ஆக்கிக் கொண்டு சிங்க வேறு போலப் புவியைப் பாதுகாத்து வரும் நாளில்,*

விளக்கவுரை : *வங்கிய சேகரபாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலைச் சூழ, சிறிய நகரமைத்துக்கொண்டு ஆட்சி புரிந்து வந்தான் என்பதாம்.* **கோளணி புரிசை**—*உயர்வுநவிற்சியணி.*

பாண்டியன் செங்கோற் சிறப்பு

15. செய்யகோன் மனுவழி செலுத்து நீர்மையாற்
பொய்கெழு கலிப்பகை புறந்தந் தோடத்தன்
வையகம் பல்வளஞ் சுரப்ப வைகலும்
மெய்கெழு மக்களீ மிக்க வாலரோ.

தெளிவுரை : *செங்கோலை மனுவறத்தின் வழியே ஓச்சுகின்ற தன்மையால், பொய்மிக்க கலி என்னும் பகைவன் புறங்காட்டி ஓட, தன் நாடு நாள் தோறும் பலவளங்களையுஞ் சுரத்தலால், உண்மை மிக்க மக்கட் கூட்டங்கள் நாள்தோறும் மிக்கன.*

விளக்கவுரை : *வங்கிய சேகர பாண்டியனது செங்கோற் சிறப்பினால் அவனது நாட்டில் பல்வகை வளங்களும் பெருகின; மக்கட் பெருக்கமும் மிக்குயர்ந்தது என்பதாம். பொய் கெழு கலிப்பகை : கலி - வறுமை துன்பம் முதலிய தீமை. இவை பொய் முதலிய தீமைகள் பெருகுதற்குக் காரணமாகும். எனவே, இதனை மக்களின் பகைவனாக உருவகித்தார். செங்கோல் தவறாத மன்னவன் நாட்டில்*

வறுமை முதலிய துன்பங்கள் தாமே நீங்குமாதலால், **புறந்தந்தோட** என்றார். ஆல், அரோ—அசைகள்.

வங்கிய சேகரன் திருக்கோயில் சார்தல்

16. பல்குறு மானுடப் பரப்பெ லாமொருங்
கல்குற விடங்குறை வாக வாய்மதுப்
பில்குறு தாரினன் பிறைமு டித்தவன்
மல்குறு கோயிலின் மருங்க ரெய்தினன்.

தெளிவுரை : *அங்ஙனம் பல்கிய மக்கட்பரப்பு அனைத்தும் ஒருங்கு தங்குவதற்கு இடம் குறைவுபட, வண்டுகள் ஆராயுந் தேன் பிலிற்றும் மாலையை யுடைய பாண்டியன், பிறையை யணிந்த சோம சுந்தரக் கடவுள் வீற்றிருந்து விளங்குந் திருக்கோயிலின் பக்கத்தை அடைந்தனன்.*

விளக்கவுரை: : *வங்கிய சேகரன் மக்களின் குறைநீக்கும் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் கோயிலைச் சார்ந்தான் என்பதாம். பல்குறு, அல்குற, பில்குறு, மல்குறு இவற்றிலுள்ள உறு - துணை வினையாம். மருங்கர் - மருங்கு என்பதன் குற்றியலுகரத்திற்கு* **அர்** *போலியாக வந்துள்ளது.*

வங்கிய சேகர பாண்டியன் இறைவனிடம் முறையிடுதல்

17. கறையணி கண்டனைத் தாழ்ந்து கைதொழு
திறையவ நின்னருள் வலியி னிந்நிலப்
பொறையது வாற்றுவேற் கீண்டிப் போதொரு
குறையதுண் டாயின தென்று கூறுவான்.

தெளிவுரை : *நஞ்சுக்கறையினை அணிந்த திருமிடற்றினையுடைய இறைவனை வணங்கிக் கைகூப்பி, 'தலைவனே! நினது அருள் வலியினால் இந்நிலச் சுமையைத் தாங்கி வந்த எனக்கு இங்கு இப்பொழுது ஒரு குறை உண்டாயிற்று.'' என்று அதனை கூறுவானாயினன்.*

விளக்கவுரை : *பாண்டியன் தனக்கோர் குறையுண்டாகியுள்ள தென்று இறைவனிடம் கூறினன் என்பதாம். பொறையது, குறையது : இவற்றிலுள்ள அது, பகுதிப் பொருள் விகுதி.*

பாண்டியனது வேண்டுகோள்

18. இத்தனை மாக்களு மிருக்கத் தக்கதாப்
பத்தனங் காணவிப் பதிக்க ணாதியே
வைத்தறை செய்திடும் வரம்பு காண்கிலேன்
அத்தமற் றதனையின் றறியக் காட்டென்றான்.

தெளிவுரை : *'' இவ்வளவு மக்களும் இருக்கத் தகுதியுடையதாக, ஒரு நகரினை ஆக்குவதற்கு இந்நகரின் கண் ஆதி காலத்திலிருந்து*

வரையறுத்து வைத்த எல்லையை அறியேன்; ஆதலால், அத்தனே! அவ் வெல்லையை இன்று யான் அறியுமாறு காட்டியருள் வாயாக" என்று இரந்து வேண்டினன்.

விளக்கவுரை : *பாண்டியன் தனது மக்களனைவரும் தங்குதற் கேற்ற நகரமைக்க விரும்பிச் சோமசுந்தரப் பெருமானிடம் பழங் காலத்திலிருந்த நகரெல்லையைக் காட்டியருளுமாறு வேண்டுகின்றான் என்பதாம். பத்தனம் : 'பட்டணம்' என்னும் சொல் எதுகை நோக்கித் திரிந்ததெனக் கொள்க. மற்று - அசை.*

சோமசுந்தரர் சித்தராய்த் தோன்றுதல்

19. நுண்ணிய பொருளினு நுண்ணி தாயவர்
விண்ணிழி விமானநின் றெழுந்து மீனவன்
திண்ணிய வன்பினுக் கெளிய சித்தராய்ப்
புண்ணிய வருட்கட லாகிப் போதுவார்.

தெளிவுரை : *அணுவினும் அணுவாயுள்ள அச் சோமசுந்தரக் கடவுள், வானினின்றும் இறங்கிய இந்திர விமானத்தினின்றும் எழுந்து, பாண்டியனது வலிய அன்பிற்கு எளிய சித்தமூர்த்தியாகி, அறமும் அருளுமாய கடலாகி வருவாராயினர்.*

விளக்கவுரை : *இறைவன் பாண்டியன் முன் சித்தவடிவுடன் தோன்றியருளினர் என்பதாம். அவனன்றியோரணுவும அசையாது என்னும் சான்றோர் வாக்கு, இறைவன் நுண்ணிய பொருளினுள்ளும் நுண்ணியராயுள்ளனர் என்பதைப் புலப்படுத்துதலை யுணர்க. அற வாழி அந்தணன், என்றும் கருணாகரன் என்றும் இறைவன் குறிக் கப்படுதல் ஈண்டுக்கருதல் தக்கது.*

சித்தர் தோற்றம்

20. பாம்பினுற்கடி சூத்திரங் கோவணம் பசுந்தாட்
பாம்பினுற்புரி நூல்சன்ன வீரம்வெம் பகுவாய்ப்
பாம்பினுற்குழை குண்டலம் பாதகிண் கிணிநாண்
பாம்பினுற்கர கங்கணம் பரித்தனர் வந்தார்.

தெளிவுரை : *பாம்பினால் அரைஞாணும் கோவணமும், இல்லாத காலையுடைய பாம்பினால் பூணுநூலும் வெற்றி மாலையும், கொடிய பிளந்த வாயையுடைய பாம்பினால் குழையுங்குண்டலமும் கால் சதங்கை கோத்தகயிறும், பாம்பினால் கைவளையும் தாங்கி வந்தார்.*

விளக்கவுரை : *இறைவன் பாம்பணி சித்தராய்ப் பாண்டியன் முன் தோன்றியளினார் என்பதாம். பசுந்தாட் பாம்பு - இல்லாத காலை யுடைய பாம்பு பசுமை இன்மை குறித்து நின்றது. சன்னவீரம் - ஒருவகை வெற்மாலை.* பரித்தனர் வந்தார் - *தாங்கி வந்தார் எனப் பொருள்படுதலின், பரித்தனர் - முற்றெச்சம்.*

சித்தர் பாம்பிற்கிட்ட பணி

21. வந்த யோகர்மா மண்டப மருங்குநின் றங்கைப்
பந்த வாலவா யரவினைப் பார்த்துநீ யிவனுக்
கிந்த மாநக ரெல்லையை யளந்துகாட் டென்றார்
அந்த வாளரா வடிபணிந் தடிகளை வேண்டும்.

தெளிவுரை; *அங்ஙனம் வந்த சித்த மூர்த்திகள், பெரிய மண்டபத்தின் பக்கத்தில் நின்று, அழகிய திருக்கரத்திற் கட்டிய நஞ்சு பொருந்திய வாயை உடைய பாம்பைப் பார்த்து "நீ இப்பாண்டியனுக்கு இந்தப் பெரிய நகரத்தின் எல்லையை வரையறுத்துக் காட்டுவாயாக" என்று கூறியருளினர். அந்த ஒளி பொருந்திய பாம்பு, அடி வணங்கிச் சித்தமூர்த்திகளை இரந்து வேண்டும்.*

விளக்கவுரை: *பாம்பணி சித்தராகத் தோன்றிய இறைவன், நகர எல்லையைக் காட்டி வருமாறு கங்கணமாக அமைந்த பாம்பிற்குக் கட்டளையிட்டார் என்பதாம். பந்தம் - கட்டு, கங்கணம்*

பாம்பினது வேண்டுகோள்

22. பெரும வின்நக ரடியனேன் பெயரினல் விளங்கக்
கருணை செய்தியென் றிரந்திடக் கருணையங் கடலும்
அருண யாதுநேர்ந் தனையதே யாகெனப் பணித்தான்
உருகெ முருசின வுரகமு மொல்லெனச் செல்லா.

தெளிவுரை: *"பெருமானே! இந்த நகரம் அடியேன் பெயரினல் விளங்குமாறு அருள்புரிவாயாக" என்று இரந்து வேண்ட, அழகிய கருணைக் கடலும் அருளினல் விரும்பி உடன்பட்டு, "அங்ஙனமே ஆகுக" என்று அருளினன். கண்டோர்க்கு அச்சந்தருதலைப் பொருந்திய சினத்தையுடைய அப்பாம்பும் விரைந்து சென்று,*

விளக்கவுரை: *ஆலவாயரவு, தான் எல்லை காட்டும் நகரம், தன் பேரால் வழங்க அருள்புரியும்படி வேண்ட, இறைவன் இசைந்தார் என்பதாம். செய்தி - ஏவலொருமை வினைமுற்று. உரு - உரிச்சொல்; அச்சம் என்னும் பொருள்படும். 'உருவுட்காகும்' என்பது தொல்காப்பியம். ஒல்லென - விரைவுக் குறிப்பு இடைச்சொல். செல்லா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்.*

பாம்பு நகரத்தின் எல்லையைக் காட்டுதல்

23. கிட்டி சைத்தலைச் சென்றுதன் கேழ்கிளர் வாலை
நீட்டி மாநகர் வலம்பட நிலம்படிந் துடலைக்
கோட்டி வாலைவாய் வைத்துவேற் கொற்றவற் கெல்லை
காட்டி மீண்டரன் கங்கண மானது கரத்தில்.

தெளிவுரை : *கிழக்குத் திசையின் கண் சென்று, தனது ஒளி பொருந்தி விளங்கும் வாலைநீட்டி, பெரிய அந்நகருக்கு வலமாக நிலத் திற் படிந்து, உடலை வளைத்து, வாலைத் தனது வாயில் வைத்து, வேற் படை யேந்திய பாண்டிய வேந்தனுக்கு எல்லையைக் காட்டி, மறுபடி யும் இறைவனது திருக்கரத்தில் கங்கணமாகியது.*

விளக்கவுரை : *ஆலவாயரவு பாண்டியனுக்கு நகர எல்லையைக் காட்டி மீண்டது என்பதாம். கிழக்கு+திசை - கீழ்த்திசை என்று வருதற்குரியது, எதுகை நோக்கிக் கீட்டிசை எனத் திரிந்தது.*

பாண்டியன் மதில் அமைத்தல்

24. சித்தர் தஞ்சின கரத்தெழுந் தருளினர் செழியன்
வைத்த வாலவாய் கோலிய படிசுவ ரெடுத்துச்
சுத்த நேமிமால் வரையினைத் தொட்டகழ்ந் தெடுத்து
வைத்த தாமென வகுத்தனன் மஞ்சுசூ ழிஞ்சி.

தெளிவுரை : *சித்த மூர்த்திகள் தமது திருக்கோயிலின் கண் எழுந்தருளினர். வங்கிய சேகர பாண்டியன் படத்தையுடைய பாம்பு வளைந்து எல்லை வரையறுத்தபடி மதிலுக்கு அடிநிலை அமைத்து, 'தூய பெரிய சக்கரவாள மலையை அடியோடு தோண்டி எடுத்து வைத்ததாகும்' என்று கண்டோர் கருதும் வண்ணம் முகில் சூழ்ந்த மதில் கட்டி முடித்தனன்.*

விளக்கவுரை : *ஆலவாயரவு அமைத்துக் காட்டிய எல்லையில் பாண்டியன் வானளாவிய மதில் அமைத்தனன் என்பதாம். நேமிமால் வரை-சக்கரவாளகிரி; சினகரம்-கோயில்; இது அருகன் கோட்டத் திற்கும் வழங்கும். பைத்த - குறிப்புப் பெயரெச்சம். ஆலவாய் - விடத்தையுடைய வாய் என விரிந்து பின் பாம்பைக் குறித்தலின் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம்.*

மதிலுக்கு வாயில் நான்கு அமைத்தல்

25. தென்றி சைப்பரங் குன்றமும் வடதிசை யிடபக்
குன்ற முங்குடக் கேடக நகரமுங் குணபாற்
பொன்ற லங்கிழித் தெழுபொழிற் பூவண நகரும்
என்று நாற்பெரு வாயில்கட் கெல்லையா வகுத்தான்.

தெளிவுரை : *நான்கு பெரிய வாயில்களுக்கும தெற்கின் கண் திருப்பரங்குன்றமும், வடக்கின் கண் இடப மலையும், மேற்கின் கண் திருவேடகப் பதியும், கிழக்கின் கண் தேவருலகத்தை ஊடுருவி மேலெழுந்த சோலைகள் சூழ்ந்த திருப்பூவண நகரும், எக்காலத்தும் எல்லையாகும்படி அம்மதில் வாயில்களை அமைத்தான்.*

விளக்கவுரை : *பாண்டியன் மதிலுக்கு நான்கு மதில்வாயில்களை அமைத்தான் என்பதாம். பொன்தலம் கிழித்தெழு பொழிற்பூவண நகர்* - **உயர்வு நவிற்சியணி.**

ஆலவாய் மதிலும் நகரும்

26. அனைய நீண்மதி லாலவாய் மதிலென வறைவர்
நனைய வார்பொழி னகரமு மாலவாய நாமம்
புனைய லாயதெப் போதுமப் பொன்னகர் தன்னைக்
கனைய வார்கழற் காலினன் பண்டுபோற் கண்டான்.

தெளிவுரை : *அந்த நீண்ட மதிலை ஆலவாய் மதில் என்று கூறுவர். தேனையுடைய நெடிய சோலை சூழ்ந்த அந்த நகரமும் எக் காலத்தும் ஆலவாயென்னும் பெயரைப் பெறுவதாயிற்று, அந்த அழகிய நகரத்தை ஒலித்தலையுடைய நீண்ட வீரக்கழலை யணிந்த காலையுடைய அப்பாண்டியன் முன்போல் ஆக்கினன்.*

விளக்கவுரை : *பாண்டியன் அமைதத மதிலும் நகரமும் ஆலவாய் மதிலெனவும் ஆலவாய் நகரெனவும் பெயர் பெற்றது என்பதாம். நனைய, கனைய - குறிப்புப் பெயரெச்சங்கள்.*

ஆலவாய் நகர அமைப்பு

27. கொடிக ணீண்மதின் மண்டபங் கோபுரம் வீதி
கடிகொள் பூம்பொழி லின்னவும் புதியவாக் கண்டு
நெடிய கோளகை கிரீடம்வா ணிழன்மணி யாற்செய்
தடிகள் சாத்திய கலன்களும் வேறுவே றமைத்தான்.

தெளிவுரை : *கொடிகள் கட்டிய நீண்ட திருமதிலும், திருமண்டப மும், திருக்கோபுரமும் திருவீதியும், மணம் மிக்க பூக்களையுடைய சோலைகளும், இவை போன்ற பிறவும் புதியனவாகச் செய்து சோம சுந்தரக் கடவுள் அணியும்படி நீண்ட கவசமும் முடியும் விளங்கும் ஒளியையுடைய மணிகளாற் செய்து, இன்னும் வேறு வேறு அணி களும் செய்தனன்.*

விளக்கவுரை : *பாண்டியன் ஆலாய் மதிலினுள் நகரத்தை அமைத்ததுடன் சோமசுந்தரருக்குரிய வெவ்வேறு அணிகளும் அமைத்தான் என்பதாம். கோளகை - கவசம். சாத்திய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.*

ஆலவாய் நகரை வளம்பெறச் செய்தல்

28. பல்வ கைப்பெருங் குடிகளின் பரப்பெலா நிரப்பிச்
செல்வ வானவன் புரந்தரன் புரத்தினுஞ் சிறப்ப
மல்லன் மாநகர் பெருவளந் துளம்பிட வளர்த்தான்
தொல்லை நாட்குல சேகரன் போல்வரு தோன்றல்

தெளிவுரை : *பலவகைப்பட்ட சிறந்த குடிகளின் பரப்பு அனைத் தையுங் குடியேற்றிச் செல்வமிக்க குபேரனும் இந்திரனுமாகிய இவர் கள் நகரததைவிட சிறந்தோங்க, வளமிக்க பெரிய அந்நகரின் கண்*

பெரிய செல்வங்கள் நிறைய முன்னுளில் விளங்கிய குலசேகர பாண்டியனைப் போல வந்த வங்கிய சேர பாண்டியன் வளர்த்தான்.

விளக்கவுரை : வங்கிய சேகர பாண்டியன் ஆலவாய் நகரமைத்து மக்கள் அனைவரையும் குடியேற்றி வளம் பொங்க வாழ்ந்து வரலானுன். பண்டு திருநகரம் கண்ட குலசேகர பாண்டியன்போல் வங்கிய சேகரனும் நகரமைத்தான் என்க. வங்கியம் - குலம். ஆதலின் திருநகரம் கண்ட இருவருக்கும் பெயரொற்றுமையும் அமைந்திருத்தல் ஈண்டு கருதத் தக்கது என்பார், 'குலசேகரன்போல் வரு தோன்றல் என்ருர்.

பயிற்சி வினுக்கள்

1. நான்மாடக் கூடல் ஆலவாயாக ஆன வரலாற்றைச் சுருக்கி வரைக ?
2. கீர்த்தி பூடண பாண்டியன் காலத்தில் ஏற்பட்ட பிரளயத்தால் அழிவுற்றனவும் அழிவுருதிருந்தனவும் எவையெவை என்று ஆசிரியர் குறிப்பிடுகின்ருர் ?
3. "மதி மரபென்னும் ஆழியுள் தங்கிய கலையெண்ணுன் கிரட்டி தண்ணெடும் பொங்கிய நிலாமதி போல"த் தோன்றினுன்—யார் ? இப்பகுதியில் அமைந்துள்ள நயத்தைப் புலப்படுத்துக. அணியையும் விளக்குக ?
4. கோளணி புரிசை சூழ் கோயில்—விளக்குக. இதிலமைந்துள்ள அணி யாது ?
5. வங்கிய சேகர பாண்டியன் நாட்டில் மக்கட் கூட்டம் மிக்கதன் காரணத்தை விளக்குக. அதன் பொருட்டு அவன் என்ன செய்தான் ?
6. வங்கிய சேகர பாண்டியன் சிவபெருமானிடத்தில் முறையிட்டது என்ன ?
7. பாண்டியன்முன் தோன்றிய சித்தர் திருக்கோலத்தை விவரிக்க.
8. சித்தர் கங்கணமாகிய பாம்பிற்கிட்ட கட்டளை யாது ?
9. திருவாலவாய்—குறிப்பு எழுதுக.
10. பாண்டியன் மதில், நகர், முதலியன அமைத்த வரலாற்றினைத் தெரிவிக்க.
11. ஆலவாய் மதிலுக்கு நான்கு வாயிலின் எல்லையாக அமைந்தன யாவை ?

2. சுந்தரப் பேரம் பெய்த படலம்

கதைச் சுருக்கம்

வங்கிய சேகர பாண்டியன்மீது விக்கிரம சோழன் படையெடுத்து வருதல்: *வங்கிய சேகர பாண்டியன் செங்கோல் செலுத்தி வருங்காலத்தில் விக்கிரம சோழன் பாண்டியனோடு போர் செய்யக் கருதி, கடல் போன்ற தனது பெரும் படையுடன் போருக்குப் புறப்பட்டான. அப்போது அவனுக்குக் கயபதி, துரகபதி, நரபதி முதலிய வடதிசை மன்னர்கள் பலர் துணையாயினர். இவ்வாறு பல்லியங்கள் முழங்கப் புறப்பட்டுப் பாண்டிய நாடு வந்தடைந்தான்.*

விக்கிரம சோழன் படைவீரர் பாண்டிய நாட்டைப் பாழாக்குதல் : *சோழனது படை வீரர்கள் பாண்டிய நாட்டில் புகுந்து பசு நிறைகளைக் கவர்ந்தும், குளங்களையும் ஏரிகளையும் உடைத்தும், மக்களை வழிப்பறி செய்து கொள்ளையிட்டும், போர் புரிதற்கு அடிகோலினர், இதனை யறிந்த பாண்டியன் சோழனின் படையளவை அறிந்து, அதனை எதிர்க்க முடியாதெனக் கருதி, இறைவன் திருக்கோயிலை அடைந்து முறையிடலானான்.*

வங்கிய சேகர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளிடம் முறையிடல் : *" பெருமானே ! விக்கிரம சோழன் வேறறுநில மன்னர் துணையுடனும் அளவற்ற சேனைகளோடும் அடியேனோடு பொருதற்குப் பாசறையில் தங்கியுள்ளான். அவனுடன் பொருதற்கொத்த சேனையும் என்னிடம் இல்லை. நின்சரணே அரணன்றி வேறு துணையில்லேன் 'என்று முறையிட்டான். அப்பொழுது, பாண்டிய ! நீ முதலில் அவனுடன் எதிர்த்துப் போர் செய்க; பின்னர் நாமும் வந்து உனக்குத் துணையாக நின்று உனக்கு வெற்றி கிடைக்கும்படி செய்வோம்," என்று பாண்டியன் அசரீரி கேட்கப்பெற்று மனமகிழ்ந்து இறைவன் திருவடிகளை வணங்கிக் கோயிலினின்றும் வெளிப்பட்டான். அப்பொழுது ஒரு ஒற்றன் வந்து, " விக்கிரம சோழனுடைய சேனை, இடபமலைக்கு அருகில் வந்து விட்டது " என்றான்.*

சோழ பாண்டியர் படைகள் போர் செய்தல் : *பாண்டியன் தேர் ஏறிப் பலவகை வாததியங்கள் முழங்க நால்வகைச் சேனைகள் சூழப் போருக்குச் சென்றான். திருவாலவாயின் மதிற்புறத்தில் கடல்போல் நிற்கும் சோழனது படையோடு பாண்டியனது படைகளும் ஆரவாரித்து வஞ்சினம்கூறிப் போர் புரியத் தொடங்கின. தேர் வீரருடன் தேர் வீரரும், யானை வீரருடன் யானை வீரரும், குதிரை வீரருடன் குதிரை வீரரும், வில்வீரருடன் வில்வீரரும்,சிங்கத்தோடு சிங்கமும் போர்புரிவதுபோல் போர் புரிந்தனர். பாண்டியனும் சோழனும், சந்திரனும் சூரியனும் எதிர்ப்பது போலப் போரிட்டனர். குதிரைகளின் கனைப்பொலி, யானைகளின் பிளிற்றொலி, தேர்கள் மோதும் ஒலி, படைகள் தாக்கும் ஒலி வீரர்களின் இகழ்வுரைகளின்பேரொலி, அவர்களின் கழல்கள் ஒலிக்கும் பேரொலி, வீர முரசங்களின் பேரொலி முதலிய பலவகை ஒலிகளும் கலந்து போர்க்களமெங்கும் பேரொலி முழக்கம் தோன்றியது.*

இவ்வாறு இரு திறச் சேனைகளும் ஒன்றற்கொன்று பின்னிடாமல் போர் புரிந்தன.

விக்கிரம சோழன் வெற்றிச் சங்கு ஊதல்: அப்பொழுது சோழன் வெகுண்டு வடநாட்டு மன்னர் படையோடும் நெருங்கி எதிர்க்கலானான். அவ்வளவில் பாண்டியனது சேனை சிதைந்து ஓடியது. அது கண்ட சோழன் பாண்டியன் வலிமையிழந்து தோற்றதாகக் கருதி வெற்றி தன்னுடையதே என்று முடிவு செய்து செருக்குடன் வெற்றிச் சங்கினை யெடுத்து ஊதலானான்.

சோமசுந்தரக் கடவுள் பாண்டியனது சேனைக்குத் தலைவனாக வருதல்: அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் வேட மன்னவன் வடிவங் கொண்டு பாண்டியனது சேனைக்குத் தலைவராகி வில்லை வளைத்து, "சுந்தரேசன்" என்று தமது திருப் பெயர் எழுதப் பெற்ற கூரிய அம்புகளைச் சோழனது சேனையின் மீது செலுத்தினார். அவ்வம்புகள் ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான வீரர்களின் உயிர்களைப் பருகின. இதைக் கண்ட சோழன், இக்கணை ஒன்றுக்கு இவ்வளவு வலியேது என்று கருதி அவ்வம்பொன்றை எடுத்துவரச் செய்து பார்க்க, அதில் 'சுந்தரேசன்' என்று வரைந்திருத்தலைக் கண்டான்.

உடனே சோழன், ஆலவாய் அண்ணல் பாண்டியனுக்குத் துணை செய்கின்றார் என்று கருதி, அஞ்சி, படைகளுடன் திரும்பிச் செல்லலுற்றான்.

வடநாட்டு மன்னர் சோழனை அழைத்துவந்து போர் செய்தல்: நாடு திரும்பிய சோழனை அவனுக்குப் போர்த் துணையாக வந்த வடநாட்டு மன்னர்கள் சூழ்ந்து 'நில்! நில்' என்று தடுத்து " நீ போருக்கு தோற்று ஓடுகின்றாயே; உன் ஆண்மை யென்ன? மானமென்ன? இவற்றை யெல்லாம் மறந்து சென்றால், உன் பெருமை என்னவாகும்? ஆதலால், நீ போகாதே" என்று அழைத்து வந்து பாண்டியன் சேனையைவளைத்து அம்பு தொடுக்கலாயினர்.

சோமசுந்தரக் கடவுள் மீண்டு வந்தவர்களை அழித்தல்: வேட வடிவங் கொண்டுவந்த சோமசுந்தரக் கடவுள், பகைவர் எய்த அம்புகளை யெல்லாம் அழித்துப் பற்பல அம்புகளை எய்து, பல்லாயிரக் கணக்கான வீரர்களையும், தேர்களையும், யானைகளையும் அவற்றிலிருந்து போர் செய்தவர்களையும் அழித்தார்.

போர்க்களக் காட்சி: இறைவன் எய்த அம்புகளால் வீரர்களின் தோள்களும், கால்களும், தலைகளும் துணிபட்டன. இறந்தவர்களின் உடல்கள் மண்ணில் விழுந்தன; மாலைகள் அறுந்தன. உயிர் தப்பினோர் ஓடி மறைந்தனர்.

பல தலைகள், சூரியமண்டலத்து வழியாக வீரசொர்க்கம் செல்லுதற்குரிய உயிர் போலத் தாவித் துள்ளியாடும். தலையற்ற உடல்கள் ஆடும்படி குற்றுயிரோடு கூடிய உடல்கள் தாளம் போடும். கையிலிருக்கும் வேலால் தலையற்ற உடல்கள் (கவந்தங்கள்) தம் தலைகளைப் போக்கியவனைத் தாக்கி வீழ்த்தும், அறுபட்ட தலைகள் குரவைப் பாட்டுப்பாடிப் பற்களைக் கடித்துக் கறுவிக் கொண்டு வீழும். இருதலைகள் ஒன்றோடொன்று சேர்ந்து பழைய நட்பினைப் பாராட்டிப்

பாடியாடும். பருந்து, காகம், கழுகு முதலிய பறவைகள் வீரர்களின் உடல்களின் மேல் சிறகுகளை அடித்துக் கொண்டு நிற்றல் வெப்பத்தைப் போக்க விசிறியதைப் போன்றிருந்தன. சில பேயின் பிள்ளைகள் ரத்த வெள்ளத்தில் மிதந்துவரும் தேர்களைக் கவிழ்த்தல், கடலில் செல்லும் மரக்கலங்களைக் கவிழ்க்கும் சுறுமீன்களை யொத்தன. காகங்கள் இறந்தவர்களின் உடல்களை கொத்தியிழுத்தல், மனத்தை தம் வழி இழுக்கும் ஐம்பொறிகளைப் போன்றிருந்தன.

வால் துடுப்பாகவும், இருசெவிகள் முறமாகவும், முத்துக்கள் அரிசியாகவும், கால்கள் உரலாகவும், தந்தங்கள் உலக்கையாகவும் கதுப்பு சமைக்கும் கலமாகவும், குருதி நெருப்பாகவும் மத்தகம் அடுப்பாகவும் விளங்க, யானைகள் மடிந்த போர்க்களம் கொற்றவை சமைக்கும் மடைப் பள்ளியை யொத்திருந்தது. வையை நீரைக் குடித்த குண்டோதரன் போல, ஒருபூதம் பெருகிவரும் ரத்த வெள்ளத்தை இருகைகளாலும் தடுத்துப் பருகியது.

சோழனின் துணை மன்னர்கள் மடிதலும் சோழன் தோற்று ஓடுதலும் : இவ்வாறு வீரர்கள் மடிந்த போர்க்களத்தில் சோழனுக்குத் துணையாக வந்த வடநாட்டு மன்னர்களனைவரும் சுந்தரப் பேரம்பினால் இறந்தனர். இவற்றை யெல்லாம் கண்ட சோழன் வஞ்சினங் கூறிப் போர் செய்த சேனை அழிந்தமைக்கு வருந்தி, தன் நாடு நோக்கி ஓடலானான்.

சிவபெருமான் மறைதலும் பாண்டியன் அரண்மனை யடைதலும் : வில்லேந்திப் போர் செய்த வேட மன்னர், பாண்டியன் முகத்தை நோக்கி அருள்நகை புரிந்து மறைந்தருளினார். பின்னர் வங்கிய சேகர பாண்டியன் வெற்றிச் சங்கை முழங்கி யானையிலேறித் தம் திரு நகரினுட் சென்றான். வில் வீரராகத் தோன்றித் தனக்கு வெற்றி பெற உதவிய சோமசுந்தரக் கடவுளுக்கு நிலையாகப் பூசனைப் பொருள்களை அளித்து இரத்தினாபரணங்கள், மாணிக்கம் இழைக்கப் பட்ட வில், சுந்தரப் பேரெழுதிய அம்பு ஆகியவற்றைச் சாத்தினான். இறைவனருளால் வங்கிய சேகர பாண்டியன் அறந்தழைக்க அரசு புரிந்து வரலாயினான்.

சுந்தரப் பேரம்பெய்த திருவிளையாடல்

1. அங்கண ருரக மணிந்தருள் வடிவ மடைந்தர சகமகிழக்
கங்கண விடவர வங்கொடு கடிநகர் கண்டருண் முறையிதுவாஞ்
சங்கணி குழையினர் பஞ்சவன் வழிபடு தம்பெய ரெழுதியகூர்
வெங்கணை கொடுவள வன்படை முடுகிய வென்றியை யினிமொழிவாம்.

தெளிவுரை : அருட் பார்வையையுடைய இறைவர், பாம்பினை அணிந்தருளிய சித்தமூர்த்திகள் வடிவம் கொண்டருளி வங்கிய சேகர மன்னன் உள்ளம் மகிழ, கங்கணமாகிய நஞ்சையுடைய பாம்பினால் காவலையுடைய நகரின் எல்லையை வரையறுத்துக் காட்டியருளிய திருவிளையாடல் இதுவாகும். அணிந்த சங்கினாலாகிய குழையையுடைய அவ்விறைவர், பாண்டியன் வழிபடுகின்ற தமது திருப்பெயர் தீட்டிய கூரிய கொடிய அம்புகளினால் விக்கிரம சோழன் படையைத் துரத்திய திருவிளையாடலை இனிக் கூறுவாம்.

விளக்கவுரை : *சித்தமூர்த்திகள் வடிவுடன் தமது கங்கணமாகிய பாம்பினால் திருநகரின் எல்லையை வரையறுத்தருளிய சோமசுந்தரக் கடவுள், வங்கிய சேகரன் வேண்டுகோளுக் கிணங்கிச் சுந்தர பேரம்பினால் விக்கிரம சோழன் படையைத் துரத்திய திருவிளையாடலைச் செய்தருளினார் என்பதாம். அங்கணர் - அழகிய நெற்றிக் கண்ணை யுடைய இறைவர். கணர் - கண்ணர் என்பதன் தொகுத்தல் விகாரம். தம்பெயர் - சுந்தரன் என்னும் பெயர். முடுகிய வென்றி - துரத்திய திருவிளையாடல்.*

வங்கிய சேகரன் ஆட்சிச் சிறப்பு

2. வெங்கய னீள்கொடி வங்கிய சேகரன் வெண்குடை நீழலின்வாய்
வங்கமு லாவிய தெண்கடல் ஞால மடைந்தையு மாசறுசீர்ச்
செங்கம லாலய மங்கையும் வாலிய திண்பது மாலயமேல்
நங்கையு மோவற மங்கல மான நயம்பெற வாழ்வுறுநாள்.

தெளிவுரை : *வெவ்விய கயல் எழுதிய நீண்ட கொடியை யுயர்த்திய வங்கிய சேகர பாண்டியனது வெண்கொற்ற குடையின் நிழலின் கண் மரக்கலங்கள் உலாவும் தெளிந்த கடல் சூழ்ந்த* **நிலமகளும்,** *குற்றமற்ற சிறப்பினையுடைய செந்தாமரை மலரைக் கோயிலாக உடைய* **திருமகளும்,** *வெண்மையாகிய திண்ணிய தாமரை மலராகிய கோயிலின் கண் வீற்றிருக்கும்* **நாமகளும்** *நீங்குதலில்லாமல் அந்நாட்டிலுள்ளார் மங்கலமான நன்மைகளைப் பெறுமாறு வாழும் நாளில்.*

விளக்கவுரை : *வங்கிய சேகரன் ஆட்சிச் சிறப்பினால் பாண்டிய நாடு நிலவளத்தாலும் கல்விநலத்தாலும் செல்வச் சிறப்பாலும் பிறவற்றாலும் பொலிந்து விளங்கியது என்பதாம். வங்கம் - மரக்கலம். செங்கமலாலய மங்கை - திருமகள். வாலிய திண் பதுமாலய நங்கை - சரசுவதி. வாலிய - வெண்ணிறமான; குறிப்புப் பெயரெச்சம். ஓவு அற - ஒழிவில்லாமல்.*

விக்கிரம சோழன், பாண்டியன் மீது படையெடுக்க எண்ணுதல்

3. வேழ மறப்படை சூழ வெதிர்த்தவர் வீறு கெடுத்தடியிற்
றாழ வடர்த்திகல் வாகை தொடுத்தலர் தார்புனை விக்கிரமச்
சோழன் மதிக்குல நாயக னைப்பொரு துள்கரு தித்தொலையா
ஆழ்கட லுக்கிணை யாமனி கத்தொடு மாடம ருக்கெழுவான்.

தெளிவுரை : *கொலைத் தொழிலையுடைய யானைப்படை சூழ எதிர்த்த பகைவர், தனது அடியில் வீழ்ந்து வணங்குமாறு அவர் தருக்கை யொழித்து வென்று, வெற்றிக்குரிய வாகை மலரால் தொடுத்து விளங்கிய மாலையை யணிந்த விக்கிரம சோழன், சந்திர மரபில் தோன்றிய வங்கிய சேகர பாண்டியனைப் பொருது வெல்லும் வஞ்சினத்தை எண்ணி, அழியாத ஆழ்ந்த கடலுக்கு ஒப்பாகிய படையோடும் அடுதலைச் செய்யும் போருக்கு எழுவானாயினன்.*

விளக்கவுரை : *பகை மன்னர்களை வென்று வாகைமாலை சூடி வரும் விக்கிரம சோழன் என்பவன், பாண்டியனையும் வெல்லக் கருதி*

போருக்கு எழுந்தான் என்பதாம். அடர்த்து - வென்று. மதிக்குல நாயகன் - வங்கிய சேகரன். பொரு சூள் - போர் செய்தற்குக் காரணமாகிய சபதம். இவனை இன்னவாறு வென்றெழிப்பேன் என்று சொல்லிப் புறப்படுதல். அனிகம் - சேனை. ஆடமர்: ஆடு - முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

விக்கிரம சோழன் போருக்குப் புறப்பட்டு வருதல்

4 கயபதி காய்சின நரபதி பாய்துர கதபதி யேமுதலா
வயமிகு தோள்வட திசையின ராதியர் வலிகெழு சேனையினோ
டியமிடி யேறிமி ழிசையென வாய்விட விரதம தேறிநடாஅய்ப்
பயன்மலி காவிரி நதியரு கேயுறை பதிகொடு மேயினனால்

தெளிவுரை: கயபதியும் வருத்துஞ் சினத்தையுடைய நரபதியும், பாய்ந்து செல்லுந் துரகபதியும் முதலாக வெற்றிமிக்க தோள்களையுடைய வடதிசை மன்னர்களின் வலிமை மிக்க படையோடு பல்லியங்கள் இடியேறு ஒலிக்கும் ஒலிபோல ஒலிக்க, தேரில் ஏறி அதனைச் செலுத்தி, பயன்மிக்க காவிரியாற்றின் அருகேயுள்ள, தான் உறையும் பதியினின்று புறப்பட்டு வந்தனன்.

விளக்கவுரை: விக்கிரம சோழன் வடநாட்டு மன்னர் துணைவலியுடன் சோழ நாட்டினின்றும் தேரேறிப் போருக்குப் புறப்பட்டான் என்பதாம். கயபதி-யானைப் படையின் தலைவன். நரபதி-காலாட் படையின் தலைவன். துரகபதி-குதிரைப் படையின் தலைவன். இரதமது; அது-பகுதிப் பொருள் விகுதி. நர அதிபர் - நராதிபர்; வடமொழித் தீர்க்கசந்தி, நடாஅய்-சொல்லிசை யளபெடை. பதிகொடு மேயினன்-நகரிலிருந்து புறப்பட்டான்.

விக்கிரம சோழனின் வெட்சிப் போர்

5 சிலைந்தெழு செம்பியன் வெம்படை மள்ளர் செயிர்த்து மதிக்கடவுட்
குலத்தவ னாட்டினி ருந்தெழி லானிரை கொண்டு குறும்புசெய்து
மலர்ந்தட மேரி யுடைத்து நகர்க்கு வரும்பல பண்டமுமா
றலைத்து முடுக்கி நடுக்கம் விளைத்து மமர்க்கடி யிட்டனரால்.

தெளிவுரை: ஆரவாரித்து எழுந்த சோழனுடைய கொடிய படைவீரர், சினந்து திங்கள் புத்தேள் மரபினனாகிய பாண்டியன் நாட்டில் தங்கி அழகிய பசுநிரைகளைக் கவர்ந்து, தீமைபுரிந்தும், மலர் நிறைந்த குளங்களையும் ஏரிகளையும் உடைத்தும், நகருக்குள் வருகின்ற பல பொருள்களையும் வழிப்பறித்து அவை கொண்டு போவோரைத் துரத்தி அவருக்கு துன்பம் விளைத்தும் இங்ஙனமாகப் போர் புரிதற்கு அடிகோலினர்.

விளக்கவுரை: விக்கிரம சோழன், பாண்டிய் நாட்டின் மீது தொடங்கும் வெட்சிப் போராகப் பசுநிரை கவர்தல் முதலிய கொடுஞ் செயல்களைச் செய்விக்கலானான் என்பதாம். பகைவர நாட்டில் போர் தொடங்க விரும்பும் அரசன் முதற்கண் ஆநிரை கவர்தல்

என்னும் பண்டைய மரபின்படி சோழன் போர் தொடங்கினுன் என்க. சிலேத்தல்-ஆரவாரித்தல், குறும்பு-தீமை, அடியிடல்-தொடங்குதல்.

பாண்டியன் பரமனிடம் முறையிட எண்ணுதல்

6. மாற னறிந்தினி யென்செய்து நேரியன் வன்படை யோவளவின்
றேறி யெதிர்ந்தம ராட லெனக்கரி திக்குறை யைப்பிறையோ
டாறணி பூரண சுந்தர னெந்தை யடித்தல முன்குறுகாக்
கூறியி ரந்து வரம்பெறு கென்றிறை கோயி லடைந்தனனல்.

தெளிவுரை : *அதனைப் பாண்டியன் அறிந்து, 'இனி யான் யாது செய்வேன் ? சோழனது வலிய படையோ அளவில்லாதது ; ஆதலால், மேற்சென்று எதிர்த்துப்போர் புரிதல் எனக்கு முடியாததொன்று ; இந்தக் குறைபாட்டைச் சந்திரனோடு கங்கையு மணிந்த எங்கும் நிறைந்த சோமசுந்தரக் கடவுளாகிய எம் தந்தையினது திருவடிகளின் முன் பெய்தி, சொல்லிக் குறையிரந்து வரம் பெறுவேன்' என்று கருதி அவ்விறைவன் திருக் கோயிலே அடைந்தான்.*

விளக்கவுரை : *பாண்டியன் வலிமிக்க சோழனோடு போர் புரிதல் இயலாதெனக் கருதிச் சோமசுந்தரக் கடவுளிடம் குறையிரந்து வரம் பெறச் சென்றான் என்பதாம். மாறன் - பாண்டியன், நேரியன் - சோழன், செய்து - செய்வேன் ; பெறுகு-பெறுவேன், இவை இரண்டும் து, கு-விகுதிபெற்ற தன்மை ஒருமை எதிர்கால வினை முற்றுக்கள். குறுகா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.*

பாண்டியன் குறையிரந்து கூறல்

7. அடைந்து பணிந்தரு ளுயக னேயடி யேனெடு விக்கிரமன்
தொடர்ந்தம ராட வயற்புலமன்னவர் தொகையொடு பாசறைவாய்ப்
படர்ந்திறை கொண்டன னேபொர வொத்த பதாதி யெனக்கிலேயே
மிடைந்து வரும்படை மிக்க விடத்தரண் வேறுள தோவிறைவா.

தெளிவுரை : *அங்ஙனம் அடைந்து வணங்கி, 'அடியார் வேண்டியவற்றை அருளும் பெருமானே ! விக்கிரம சோழனென்பான் அடியேனுடன் எதிர்த்துப் போர் புரிய வேற்றுநில மன்னரின் தொகுதியோடும் பாசறையின் கண் வந்து தங்கினன் ; அவனோடு பொருதற்குத் தகுதியுடைய சேனை என்னிடத்தில் இல்லையே ; நெருங்கிவரும் படை மிகைத் தெழுந்தபொழுது, இறைவா ! எனக்கு அரணுவது வேறு உண்டோ ? இல்லை.*

விளக்கவுரை : *பாண்டியன் இறைவனிடம், 'நின் சரணே அரணன்றி அடியேற்கு வேறு புகலிடமில்லை' என்று குறையிரந்தான் என்பதாம். சோழன் படைவலி மிக்குடையனுயிருத்தலே அறிந்த பாண்டியன், தன்னிலேயுணர்ந்து இறைவனிடம் முறையிடலானுன் என்க. அயற்புலம் - வேற்றுநாடுகள். பதாதி - சேனைகள். அரண் - காவல். இறைகொண்டனன் - தாங்கினன். பாசறை - பகைமேற் சென்றோர் உறைவிடம்.*

சோமசுந்தரக் கடவுள் அபயமளித்தல்

8. என்னை யினிச்செயு மாறென மாற னிரந்து மொழிந்திடலும்
முன்னவன் வானிடை நின்றச ரீரி மொழிந்தருள் வான்முதனீ
அன்னவ னோடம ராடுபி னமு மடைந்துத வித்துணையாய்
நின்னது வாகை யெனப்பொரு கின்றன நீயினி யஞ்சலென.

தெளிவுரை : 'இனி என்னுற் செய்யக் கடவது யாது?' என்று பாண்டியன் குறையிரந்து கூறலும், முதல்வனுகிய சோமசுந்தரக் கடவுள் விண்ணிலே நின்று அசரீரியாகக் கூறியருளுவான் : 'முதற்கண் நீ அவனுடன் எதிர்த்துப் போர் செய் ; பின்னர் நாமும் அங்கு வந்து உனக்கு உதவிபுரியுந் துணையாகி வெற்றி உன்னுடைய தென்று கூறும்படி போர் புரிவோம் ; நீ இனி அஞ்சுத லொழிக' என்றருள.

விளக்கவுரை : குறையிரந்த பாண்டியனுக்குச் சோமசுந்தரக் கடவுள் தாம் போர்த்துணை செய்துதவுவதாகக் கூறி அபயமளித்தார் என்பதாம். நின்னது வாகை - உன்னுடையது வெற்றி. நீயினியஞ்சல்- எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. பொருகின்றனம் - இயல்பினுல் நிகழ்காலம் எதிர்காலப் பொருளில் வந்துளது.

ஒற்றன் கூற்று

9. சிந்தை களித்திரு கண்க டுளித்திரு செங்கை குவித்திறைவன்
அந்தி மதிச்சடை யந்தண னைத்தொழு தன்று புறப்படமுன்
வந்தன னொற்றுவ னந்தி வரைக்கயல் வந்தது விக்கிரமன்
வெந்தறு கட்படை யென்றரச சற்கு விளம்பின னப்பொழுதே.

தெளிவுரை : பாண்டியன் அம்மொழியைக் கேட்டலும், மன மகிழ்ந்து இரண்டு கண்களிலும் ஆனந்த நீர் பெருக்கி, இரண்டு கரங்களையும் கூப்பி, பிறைமதியினை அணிந்த சடையையுடைய அந்தணனுகிய பெருமானை வணங்கி, அப்போது திருக்கோயிலினின்றும் வெளிப்பட, ஒற்றன் ஒருவன் அவனுக்கு முன் வந்து, 'விக்கிரம சோழனது கொடிய அஞ்சாமையையுடைய படை, இடப மலைக்கு அருகில் வந்தது' என்று கூறினன். அப்பொழுதே.

விளக்கவுரை : பாண்டியன் இறைவன் திருக்கோயிலில் அசரீரியுரைத்த மொழிகேட்டு மகிழ்வுடன் திரும்புகையில் ஒற்றனொருவன் எதிர்ப்பட்டு, சோழன்படை இடபமலையருகில் வந்துவிட்ட செய்தியைத் தெரிவித்தான் என்பதாம். இறைவன் - பாண்டியன். ஒற்றுவன் - ஒற்றன் ; வேவுபார்ப்பவன். நந்திவரை - இடபமலை.

பாண்டியன் நால்வகைப் படையோடும் போர்க்களம் சேர்தல்

10. அரச னியம்பல வதிர வலம்புரி யலற வலங்குளைமான்
இரத மணைந்திட விசைகொடு சிந்தைபி னிடவல வன்கடவப்
புரசை நெடுங்கரி திரையெறியுங்கடல் பொருபரி விண்டொடுதேர்
விரைசெய் நறுந்தொடை விருதர்க ணம்புடை விரவ நடந்தனனுல்.

தெளிவுரை : பாண்டியன் பலவகை வாத்தியங்கள் ஒலிக்கவும், வலம்புரிச் சங்கம் முழங்கவும், அசைகின்ற தலையாட்ட மணிந்த குதிரைகள் பூட்டிய தேரில் ஏற, மனவேகமும் பின்னிடுமாறு விசையுடன் பாகன் செலுத்த, கழுத்திடு கயிற்றையுடைய பெரியயானையும் அலைவீசுங் கடலை யொக்கும் குதிரையும், வானை அளாவுந் தேரும் மணம் வீசும் நறிய மாலையை யணிந்த வீரர் கூட்டமுமாகிய நாற்படையும் அயலிலே சூழ்ந்து வரச் சென்றனன்.

விளக்கவுரை : ஒற்றனுரைத்த மொழிகேட்ட பாண்டியன் சோழன் படையைத் தடுத்து எதிரூன்றும் பொருட்டு நால்வகைப் படையோடும் சென்றான் என்பதாம். அலங்குளை - அசைகின்ற பிடரிமயிர். உளை - தலையாட்டமுமாம். விருதர் - வீரர்.

சோழன் படையினைப் பாண்டியன் படை எதிர்த்தல்

11. அளந்து சூழ்திரு வால வாய்மதி லின்பு றத்தக ழாழிபோல்
வளைந்த சோழ னெடும்ப டைக்கெதிர் வஞ்சிவேய்ந்தெழு பஞ்சவன்
கிளர்ந்த சேனை யதிர்ந்து கிட்டின கிட்டி யல்விரு படைஞருங்
களஞ்சி றந்திட வஞ்சி னங்கொடு கைவ குத்தமர் செய்வரால்.

தெளிவுரை : வரையறுக்கப் பட்டுச் சூழ்ந்த திருவாலவாயின் மதிற்புறத்திலே தோண்டிய கடல்போல் முற்றிய சோழனது பெரிய படைக்கு எதிரே வஞ்சிமாலை யணிந்து போருக்கெழுந்த பாண்டியனது ஊக்கத்துடன் எழுந்த படைகள் ஆரவாரித்து நெருங்கின; அங்ஙனம் நெருங்கி அவ்விரு திறத்துப்படை வீரரும் போர்க் களஞ் சிறக்க, வஞ்சினங் கூறிப்படை வகுத்துப் போர் புரிவாராயினர்.

விளக்கவுரை : சோழனது படை மதிற்புறத்திருத்தலையறிந்த பாண்டியன், தனது படையுடன் நெருங்கிப் போர்புரிய லாயினன் என்பதாம். திருவாலவாய் மதிற்புறத்தில் சோழன் படையுடன் முற்றியிருப்பது, '' மறத்துறை மலிந்துமண்டி மாற்றூர், விறற் கொடி மதிலின் புறத்திறுத் தன்று' என்றும் புறத்துறை துறையின் பாற்படும். பகைவர் மிகைத் தெழுங்கால் தம்மாண்மையை எடுத்துரைத்துப் பொரத் தொடங்குதல் வீரர்க்கியல்பு இதனை நெடுமொழி வஞ்சி என்பர். 'ஒன்னுதார் படைகெழுமித் தன்னுண்மை எடுத்துரைத் தன்று' என்னும் நெடுமொழி வஞ்சித் துறையை ஒப்புநோக்குக. இங்ஙனம் பாண்டியன் படைவீரர் பொருதனர் என்க. வஞ்சி வேய்ந்தெழு பஞ்சவன்: வஞ்சி வேய்தல், மண்ணசையால் மேற்செல்வோர்க்குரியதாம். ஈண்டு மண்ணசையால் வந்த சோழனை எதிரூன்றிய பாண்டியன், வஞ்சி வேய்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. எதிரூன்றலும் வஞ்சித்திணை என்பதே தொல்காப்பியர் கருத்தாகும். கைவகுத்து-படைவகுத்து.

தேர், யானை, குதிரைப் படைவீரர் போரிடல்

12. சைய மொத்தெழு தேரி ஞரொடு சைய மொத்தெழு தேரரும்
மையன் மைக்கரி வீர ரோடெதிர் மையன் மைக்கரி வீரருங்
கொய்யு ளைப்பரி வயவ ரோடிகல் கொய்யு ளைப்பரி வயவருங்
கைய முற்படை வீசி மின்விடு காரெ னப்பொரு வாரரோ.

தெளிவுரை: மலையைப் போன்று எழுந்த தேரினையுடைய வீரருடன் தேர் வீரரும், மதமயக்கத்தையுடைய கரிய யானை வீரருடன் யானை வீரரும், கொய்யப்பட்ட பிடரி மயிரையுடைய குதிரை வீரருடன் மாறுபட்டெழுந்த குதிரை வீரரும், கைகளால் நெருப்புச் சிந்தும் படைக்கலங்களை வீசி, மின்னலை வீசும் மேகம் போல நின்று போர் புரிவாராயினர்.

விளக்கவுரை: தேர், யானை, குதிரைகளில் உள்ள படைவீரர் தம்மொத்த பகைவரோடு கடும்போர் புரிந்தனர் என்பதாம். சையம்-மேற்கிலுள்ள மலை என்பர். தேர் யானை குதிரைகளுக்கு ஏற்ற அடைமொழி தரப்பட்டிருத்தல் கருதத் தக்கது.

வில் வேல் வாள் வீரர் பொருதல்

13. முடங்கு வெஞ்சிலை வில்ல ரோடு முடங்கு வெஞ்சிலை வில்லரும்
விடங்க லுழ்ந்திடு வேல ரோடு விடங்க லுழ்ந்திடு வேலரும்
இடங்கை தோல்வல வாள ரோடு மிடங்கை தோல்வல வாளரும்
மடங்க லேறு மடங்க லேறு மலைப்ப தென்ன மலைப்பரால்.

தெளிவுரை: வளைந்த கொடிய வில்லையுடைய வீரருடன் வில் வீரரும், நஞ்சினை யுமிழும் வேலினையுடைய வீரருடன் வேல் வீரரும், இடக் கையிற் கேடகமும் வலக் கையில் வாட்படையுமுடைய வாள் வீரருடன் அவற்றையுடைய வாள் வீரரும், சிங்கவேறும் சிங்கவேறும் போர் புரிவது போலப் போர் புரிவர்.

விளக்கவுரை: வில் வேல் வாள்கள் வீரர் தம் மொத்த பகை வீரரோடு கொடும்போர் புரிந்தனர் என்பதாம். சிலை வில்லர் - வில் வீரர் என்னும் பொருளது. மடங்கல் - மடங்கிய பிடரி மயிருடையது; சிங்கம். தோல் - கேடகம்.

சோழ பாண்டியர் போர்

14. அரவி னன்னில மம்பு யம்பொறை யாற்று மீனவ னாற்றல்கூர்
புரவி யின்னிரை வைய மேல்கொடு போந்த நேரியர் வேந்தனோர்
விரவி மின்னிய முரசி யம்ப மிடைந்து வெஞ்சம ராடுமா
றிரவி தன்னொடு மதிய வன்பொர வேகி னானிக ராகுமால்.

தெளிவுரை: அனந்தன் என்னும பாம்பினைப் போல நல்ல நிலவுலகத்தை அழகிய தோளினுற்றாங்கும் பாண்டியன், வலிமிக்க குதிரைகள் வரிசையாகப் பூட்டப்பட்ட தேரில் ஏறிப் போருக்கு வந்த சோழ மன்னன் எதிர் சென்று கலந்து, விளங்கிய போர்முரசு ஒலிக்க, நெருங்கி வெவ்விய போர் புரியுந் தன்மை, சூரியனோடு சந்திரன் போர் புரியச் சென்று புரிந்ததை ஒக்கும்.

விளக்கவுரை: வங்கிய சேகர பாண்டியன் தன்னோடு பொருதற் கெழுந்த விக்கிரம சோழனுக்கு எதிர்சென்று முரசொலிக்கக் கடும் போர் புரிந்தான் என்பதாம். அரவின்: இன் ஐந்தாம் வேற்றுமை உருபு, ஒப்புப் பொருளில் வந்தது. வையம் - தேர். நேரியர்-சோழர்;

நேரி என்னும் மலைக்குரியராதலின். இம்மலை சோழ நாட்டிலுள்ளது. சந்திர குலத்தவனாகிய வங்கியசேகர பாண்டியன், சூரியகுலத்தவனாகிய விக்கிரம சோழனோடு போர் புரியச் சென்றது, சந்திரன் சூரியனோடு போர் புரியச் சென்றதை ஒத்திருந்தது என்றார். சூரியன் ஒளிமுன், சந்திரன் ஒளியிழத்தல் இயல்பாதல் போல, சோழனோடு பொரவெழுந்த பாண்டியன் தோல்வியடைதல் தெளிவு என்பதை இவ்வுவமை குறிப்பால் புலப்படுத்துதலும் ஈண்டு உணரத் தக்கது.

நால்வகைப் படைகளின் போர் முழக்கம்

15. துள்ளு மாவொலி தான யாறு துளும்பு மாவொலி தூண்டுதேர்
தள்ளு மாவொலி படையொடும்படை தாக்கு மாவொலி பொருநரார்த்
தெள்ளு மாவொலி மள்ளர் பைங்கழ லேங்கு மாவொலி வீங்கியந்
தெள்ளு மாவொலி வேறு பாடு திரிந்து கல்லென லாயதே.

தெளிவுரை: *தாவிச் செல்லுங் குதிரைகளின் கனைப் பொலியும், மத நீரை ஆறு போலப் பெருக்கும் யானைகளின் பிளிற்றொலியும், தூண்டப்படுங் குதிரைகளால் இழுக்கப் படுந்தேர்களின் ஒலியும், படைகளோடு படை தாக்கும் பேரொலியும், வீரர்கள் ஆரவாரித்து ஒருவரை ஒருவர் இகழ்ந்து கூறும் பேரொலியும், அவ்வீரர்கள் கட்டிய பசிய வீரக்கழல்கள் ஒலிக்கும் பேரொலியும், மிக்க இயங்கள் ஒலிக்கும் பேரொலியும் தம்முள் வேறுபாடு இன்றி ஒன்று கலந்து எங்கும் கல்லென்னும் ஒலியாயிற்று.*

விளக்கவுரை: *சோழ பாண்டியர் சேனைகள் பொரும் போர்க் களத்தில் குதிரைகளின் கனைப் பொலியும் யானைகளின் பிளிற்றொலியும், தேர்களின் ஒலியும், படையொலியும் வீரர்களின் ஆர்ப்பொலியும் அவர் கழலொலியும், வாத்தியங்களின் ஒலியும் கூடிக் கல்லென்னும் பேரொலி தோன்றியது என்பதாம். இச்செய்யுளில் குதிரை, யானை, பெருமை என்னும் பொருள்களில் வந்துள்ள மா என்னும் ஓரெழுத்தொரு மொழி, குறித்த பொருளை விளக்கும் பொருட்டுத் தன்னுடன் வந்துள்ள சிறப்புச் சொல்லால் அவ்வப் பொருளை விளக்கி நிற்றலைக் காணக. 'வினைசார் பினமிடம் மேவி விளங்காப் பல பொருள் ஒரு சொல் பணிப்பர் சிறப்பெடுத்தே' (நன். சூ. 360) என்பது விதியாகும். இச்செய்யுள்* **சொற் பொருள் பின் வருநிலையணி,** *ஒலி என்னும் சொல் மீண்டும் வந்து அப்பொருளையே தருதலால் என்க.*

போர்க்களத்தின் யானைகளின் வீழ்ச்சி

16. துடித்த வாளர வென்ன வீசிய தூங்கு கையின வீங்குநீர்
குடித்த காரொடு கார்ம லைந்திடு கொள்கை போல வுடன்றுடன்
றிடித்த வாயின வசனி யேறி னிருப்பு லக்கை யெடுத்தெறிந்
தடித்த சோரியொ டாவி சோர விழுந்த வெஞ்சின வானையே.

தெளிவுரை: *துடிக்கும் ஒள்ளிய பாம்பு போல வீசிய தொங்குகின்ற துதிக்கையை யுடையனவாகி, மிக்க நீரைப் பருகிய முகிலோடு*

முகில் போர் புரியுந் தன்மை போல, மாறுபட்டு, மாறுபட்டு இடியேறு போல முழங்கின வாயினையுடையனவாகி, இருப்புலக்கை எடுத்து வீசி அடித்தலால் வருங்குருதியோடு உயிரும் சோர, கொடிய சினத்தையுடைய யானைகள் விழுந்தன.

விளக்கவுரை : *போர்க் களத்தில் யானைகள் பலவாறு போரிட்டுப் புண்பட்டு வீழ்ந்தன; உயிர் துறந்தன என்பதாம். அடித்த-பெய ரெச்சம். காரணப் பொருளில் வந்தது. விழுந்த-பலவின்பால் வினை முற்று.*

வீரர்கள் போர் செய்யும் சிறப்பு

17. எய்த வாளி விலக்கு வார்பிறி தெய்யும் வாளித மார்புதோள்
செய்த போதவ ராண்மை கண்டு சிரித்து வென்றி வியப்பரால்
வைத வாவடி வேலெ றிந்திட வருவ தைக்குறி வழியினுற்
கொய்த தார்மற வாளெ றிந்து குறைத்து வேறு படுத்துவார்.

தெளிவுரை : *பகைவர் எய்த அம்பினை விலக்குவாராகிய வீரர், மீண்டும் அவர் எய்த வேறுகணை தமது மார்பினைத் துளைத்தபோது, அவரது ஆண்மையினைக் கண்டு மகிழ்ந்து, அவர் வெற்றியை வியந்து பாராட்டுவர்; கூர்மை நீங்காத வடித்த வேற்படையினைப் பகைவர் வீச, வருகின்ற அவ்வேற்படையை குறிவைக்கும் நெறியினால் கொய்த மாலையை அணிந்த வீரவாளை வீசித் துண்டித்து அழிப்பர்.*

விளக்கவுரை : *வில்வீரரும் வேல்வீரரும் தத்தம் பகைவர்களே பாராட்டுமாறு போர் புரிந்தனர் என்பதாம். ஆண்மை மிக்க வீரர்கள் பகைவர் தமக்கு ஊறு செய்யினும் அவரது வீரச் செயலை வியந்து பாராட்டுவர் என்பது, வாளி மார்பினைத் துளைத்த பொழுது சிரித்து வியந்தார் என்பதனாற் புலனும். வை-கூர்மை; உரிச்சொல்.*

பாண்டியன் சேனை தோற்றல்

18. பின்னி டாதிரு படையு மொத்தம ராடு மெல்லை பெரும்படைச்
சென்னி தன்றுணை யான வுத்தர தேய மன்னவர் படையொடுந்
துன்னி ஞால முடிக்கு நாளெழு சூறை தள்ள வதிர்ந்தெழும்
வன்னி யென்ன வுடன்றெ திர்ந்தனன் வழுதி சேனை யுடைந்ததே.

தெளிவுரை : *இங்ஙனம் புறங்காட்டாமல் இருதிறத்துச் சேனை களும் ஒத்துப் போர் புரியும்போது பெரிய படையினையுடைய சோழன் தனக்கு உதவியாகிய வடநாட்டு வேந்தர் படையோடு நெருங்கி* **உலகத்தை அழிக்கும் நாளில் எழுந்த ஊழிக்காற்று உந்துவதால் முழங்கி எழுந்த ஊழித் தீயைப்** *போல் வெகுண்டு எதிர்ந்தான். அவ்வளவில் பாண்டியன் சேனை சிதைந் தோடியது.*

விளக்கவுரை : *சோழ பாண்டியர் சேனைகள் சமமாகப் போர் செய்து கொண்டிருக்கும்போது, விக்கிரம சோழன் வடநாட்டு மன்னர் படையுடன் வந்தெதிர்த்த அளவில் பாண்டியன் சேனை தோற்று ஓட லாயிற்று என்பதாம். விக்கிரம சோழன் வடநாட்டு மன்னர் படை*

யுடன் எதிர்த்ததற்கு, 'ஞாலமுடிக்கு நாளெழு சூறைதள்ள அதிர்ந்தெழும் வன்னி'யை உவமை கூறியுள்ளார். ஞாலம் முடிக்கும் நாள் - ஊழிக் காலம். சூறை - பெருங்காற்று.

சோழனது வெற்றி முழக்கம்

19. மின்ன லங்கிலை வாளொா டுஞ்சிலை வில்லி ழுந்தனர் வீரரே
பன்ன லம்புனை தேரொா டுங்கரி பரியி ழுந்தனர் பாகரே
தென்ன வன்பொரு வலியி ழுந்தன னென்று செம்பியன் வாகையுந்
தன்ன தென்று தருக்கு மேல்கொடு சங்கெ டுத்து முழக்கினுன்.

தெளிவுரை : *பாண்டியன் படைவீரர் மின்போல விளங்கும் தகட்டு வடிவமாகிய வாட்படையோடு ஒலித்தலை யுடையவில்லையும் இழந்தனர்; பாகர்கள் பலவகை நலம்பெற அலங்கரிக்கப்பட்ட தேரொடு யானைகளையும் குதிரைகளையும் இழந்தார்கள்; விக்கிரம சோழன், பொருதற்குரிய வலியை இழந்துவிட்டனன் பாண்டியன் என்றும், அதனுல் வெற்றியும் தன்னுடைய தென்றுங் கருதிச் செருக்கினை மேற்கொண்டு வெற்றிச் சங்கை எடுத்து ஊதினுன்.*

விளக்கவுரை : *சோழன் வடவர் படையுடன் திடீரென்று தாக்கியதனுல் பாண்டிய படைவீரர் பலவாறு தோற்ருேடவே பாண்டியனும் வலிமை யிழந்து விட்டதாகக் கருதிய சோழன் வெற்றிச் சங்கை ஊதலானுன் என்பதாம்.*

இறைவன் வேட மன்னராய் வருதல்

20. அந்த வேலையின் முன்ன ருந்தம தருளெ னக்குளிர் கடிபுனற்
பந்தர் நீழ லளித்து மோடை படுத்தி யும்பகை சாயவே
வந்த வேடர வண்ண மேயொரு மான வேடர சாய்வலஞ்
சிந்த வாகுல மூழ்கு மீனவன் சேனை காவல ராயினுர்.

தெளிவுரை : *அப்பொழுது, முன்னேயும் தமது அருள் போலக் குளிர்ந்த மணமுள்ள நீரைப் பந்தர் நிழலின் கண் கொடுத்தும், சோழனை மடுவில் வீட்டியும், பகைவர் புறங் கொடுக்குமாறு வந்த திருவேடத்தையுடைய அச் சோமசுந்தரக் கடவுள், அப்பொழுதே ஒரு பெருமையை யுடைய வேட மன்னராய் வந்து, வெற்றி அழிந்ததால் துன்பக் கடலுள் மூழ்கிய பாண்டியனது சேனைக்குத் தலைவர் ஆயினர்.*

விளக்கவுரை : *தோல்வியுற்று வருந்துகின்ற பாண்டியனது சேனைக்குச் சோமசுந்தரக் கடவுள், முன் அவனிடம் கூறியவாறு படைத் தலைமைபூண்டு போரை மீண்டும் தொடங்கலானுர் என்பதாம். அன்பர்க்கிரங்கி அருள் புரியுமியல்பினரான அப்பெருமான், முன்னர் பல திருவிளையாடல்களைச் செய்து அடியார்க்குதவியது போலவே இப்பொழுது பாண்டியன் வேண்டுகோளுக் கிரங்கி, வேட மன்னராய் உதவ வந்தனர் என்க.* **வேடர்** - *வேடத்தை யுடையவர்; வேட்டுவக் குலத்தினர் என்று இருபொருளும் கொள்ளத் தக்கவாறு அமைந்திருத்தல் காண்க.*

வேட மன்னர் சுந்தரப் பேரம்பு தொடுத்தல்

21. குன்றவில் வேடன் சாபங் குழைவித்துச் சுந்த ரேசன்
என்றதன் ஞமந் தீட்டி யிட்டகூர்ங் கணைக ளேண்டி
வென்றன மென்று வாகை மிலைந்துவெண் சங்க மார்த்து
நின்றவன சேனை மீது நெறிப்படச் செலுத்தா நின்றான்.

தெளிவுரை : *மேருமலையை வில்லாகவுடைய இறைவனாகிய வேடன், வில்லை வளைத்துச் சுந்தரேசன் என்ற தனது திருப்பெயர் தீட்டிய கூரிய அம்புகளை, வென்று விட்டோமென்று கருதி வெற்றி மாலைச் சூடி வெள்ளிய சங்கினை முழக்கி நின்ற விக்கிரம சோழன் சேனையின் மேல் வரிசைப் படத்தொடுத்து விடா நின்றான்.*

விளக்கவுரை : *பாண்டியனுக்கு படைத் தலைவராய் வந்த வேட மன்னன், வெற்றிச் செருக்குடனிருக்கும் சோழன் சேனையின் மேல் சுந்தரேசன் என்று தன் பெயர் தீட்டிய அம்புகளை வரிசையாகத் தொடுக்கலானான் என்பதாம். குன்றம் - மேருமலை. சாபம்-வில்.*

சுந்தரப் பேரம்பின் வலிகண்டு சோழன் வியத்தல்

22. அம்முனை வாளி யொவ்வொன் றடல்புனை நூற்று நூறு
தெம்முனை வீரர் தம்மைச் செகுத்துயி ருண்ண நோக்கி
இம்முனை வாளி யொன்றுக் கித்துணை வலியா தென்னா
வெம்முனை மறவேற் சென்னி வியந்தனு மான மெய்தா.

தெளிவுரை : *அந்தக் கூரிய கணை ஒவ்வொன்றும் வெற்றி புனைந்த பகைவன் போர் முனையிலுள்ள பதினாயிர வீரர்களைக் கொன்று உயிரைப் பருக, அதனைப் பார்த்து, 'இந்தக் கூரிய அம்பு ஒன்றுக்கு இவ்வளவு வலி ஏது?' என்று வெவ்விய கூர்மையுடைய கொலைத தொழில் பொருந்திய வேலினை யேந்திய சோழன் வியந்து அனுமான முற்று.*

விளக்கவுரை : *வேட மன்னன் எய்த அம்புகள் ஒவ்வொன்றும் பதினாயிரக் கணக்கான வீரர்களை அழித்தலைக் கண்ட சோழன் வியந்து அனுமானிக்கலானான் என்பதாம். நூறறு நூறு-பதினாயிரம். அனுமானம் - புகையைக் கண்டு நெருப்பு உண்டு என அறிதல் போல்வது. வீரர்கள் பலராக அழிதலைக் கண்ட சோழன், அவ்வம்பின் பேராற்றலை அனுமானித்தான் என்க.*

சோழன் நாடு திரும்புதல்

23. அன்னகூர் வாளி தன்னைக் கொணர்கென வதனை வாசித்
தின்னது சுந்த ரேச னெனவலரந் திருப்ப தீது
தென்னவற் கால வாயான் றுணைசெய்த செயலென் றஞ்சிப்
பொன்னிநா டுடையான் மீண்டு போகுவான் போகு வானை.

தெளிவுரை : *'அந்த அம்பினைக் கொண்டு வரக்கடவை' என ஒருவனை ஏவி, அவனால் கொண்டுவரப்பட்ட அந்த அம்பினைப் படித்து*

'இது சுந்தரேசன் என்று எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இது பாண்டியனுக்கு ஆலவாய் அண்ணல் துணைபுரிந்த செய்தியாகும்' என்று கருதிப் பயந்து, காவிரி நாடனாகிய சோழன் திரும்பிப் போவானாயினன். அங்ஙனம் போகும் அவனை,

விளக்கவுரை : விக்கிரம சோழன் ஆற்றல் மிக்க அவ்வம்பினைக் கொணர்வித்து, அது சுந்தரேசன் என்ற பெயருடனிருத்தலைக் கண்டு, பாண்டியனுக்குச் சோமசுந்தரக் கடவுள் துணை புரிகின்றான் என்று உணர்ந்து, சோழன் தன் நாடு திரும்பலாயினன் என்பதாம். ஆலவாயான் - சோமசுந்தரக் கடவுள். பொன்னி நாடுடையான் - விக்கிரம சோழன். மீண்டு - புறங்காட்டி.

துணை வந்த வேந்தர் சோழனைப் பழித்தல்

24. செருத்துணை யாகி வந்த வுத்தர தேயத் துள்ளார்
துருக்கரொட் டியர்வே றுள்ளார் யாவருஞ் சூழ்ந்து நில்லென்
றுருத்தனர் வைது நீபோர்க் குடைந்தனை போதி யீதுன்
கருத்தெனி னாண்மை யாவர் கண்ணதுன் மான மென்னாம்.

தெளிவுரை : போர்த்துணையாகி வந்த வட நாட்டிலுள்ளவராகிய துருக்கரும், ஒட்டியரும், இவரொழிந்த ஏனையோருமாகிய அனைவருங் கூடி, 'நிற்பாயாக' என்று கூறிச் சினந்து வைது, 'நீ போருக்குத் தோற்றுப் போகின்றாய்' இது உனது கருத்தானால் ஆண் தன்மை யாரிடத்தது? உனது பெருமை என்னாகும்?

விளக்கவுரை : விக்கிரம சோழனுக்குப் படைத் துணையாக வந்த மன்னர், சோழன் திரும்பிச் செல்லுதலை அறிந்து, அவனை அணுகி இடித்துரைக்கலாயினர் என்பதாம். உருத்தனர், உடைந்தனை - முற்றெச்சங்கள். போதி - முன்னிலை ஒருமை வினைமுற்று; இகரவிகுதி நிகழ் காலம் காட்டுகின்றது. த் - எழுத்துப்பேறு.

துணைபுரிய வந்தோர் பாண்டியனோடு போர் செய்தல்

25. செல்லலை வருதி யென்னாச் செயிர்த்தெழுந் திடியி னார்ந்துக்
கல்லெழு வனைய திண்டோட் கௌரியன் படைமேற் சென்று
வில்லிற வலித்து வாங்கி வேறுவே றாகி நின்று
சொல்லினுங் கடிய வாளி தொடுத்தனர் விடுத்தார் தூர்த்தார்.

தெளிவுரை : 'ஆதலால், நீ செல்லற்க; வருவாயாக' என்று கூறிச் சினந்தெழுந்து இடிபோல ஆரவாரித்துக் கல்தூணை யொத்த திண்ணிய தோளையுடைய பாண்டியன் சேனைமேற் சென்று வில் முறியுமாறு இழுத்து வளைத்துத் தனித்தனி ஒவ்வோரிடத்தில் நின்று முனிவர் சாப மொழியினும் விரைந்து செல்லும் வாளிகளைத் தொடுத்து விடுத்துத் தூர்த்தனர்.

விளக்கவுரை : சோழனுக்குத் துணைவந்த மன்னர், சோழனைத் திரும்ப அழைத்துக் கொண்டு பாண்டியன் சேனை மேற் சென்று மிகக் கொடிய அம்புகளை வெகு வேகமாகத் தொடுக்கலாயினர் என்பதாம்.

செல்லலை - எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று. வருதி - ஏவலொருமை வினைமுற்று. தொடுத்தனர், விடுத்தனர், தூர்த்தார் - முற்றெச்சங்கள். 'சொல்லினும் கடிய வாளி' என்னும் தொடர், 'சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்' என்னும் கம்ப ராமாயணச் செய்யுட்டொடரை நினைவூட்டுகின்றது.

துணை வேந்தரம்புகளை வேட மன்னர் அழித்தல்

26. வடுத்தவா மருமச் செம்புண் மறமக ளுருகி நின்ற
கடுத்தவா மிடற்று முக்கட் கண்ணுதற் சாமி தான்முன்
எடுத்தவா டகவி லென்ன விருஞ்சிலை வாளி யொன்று
தொடுத்தவா டவர்தாம் விட்ட சுடுசரந் தொலைத்துப் பின்னும்.

தெளிவுரை : *வடு நீங்காத மார்பின் கண் செம்புண்ணையுடைய வேடத் திருவுருவங் கொண்டு நின்ற, நஞ்சு நீங்காத திருமிடற்றையும் மூன்று கண்களையுமுடைய சோமசுந்தரக் கடவுள், தான் திரிபுரமெரித்த காலத்தில் எடுத்த மேரு வில்லைப் போலும் பெரிய வில்லில் ஒரு அம்பினைத் தொடுத்து விடுத்து, அந்த வீரர் விட்ட கொடிய கணைகளை அழித்து மீண்டும்.*

விளக்கவுரை : *வேடராக வந்த சோமசுந்தரக் கடவுள் ஒற்றை அம்பினால் பகை மன்னர் விட்ட அம்புகளை எல்லாம் அழித்தொழித்தனர் என்பதாம். கடு - விடம். முக்கட்சாமி - சிவபெருமான். ஆடக வில் - மேரு மலையாகிய வில்; இது திரிபுரம் எரிக்கச் சென்ற ஞான்று எடுத்துச் சென்றதென்பர். ஆடவர் - வீரர்.*

பப்பத்து அம்புகளைத் தொடுத்தல்

27. பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துமான் றேரைச் சாய்த்தான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துவெங் களிற்றை மாய்த்தான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துவாம் பரியைக் கொன்றான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துமா னுடரை வென்றான்.

தெளிவுரை : *பத்துக் கணைகளை விடுத்து, குதிரை பூட்டிய ஆயிரந் தேரை அழித்தான்; பத்து அம்புகளை ஏவி, ஆயிரங் கொடிய யானைகளைக் கொன்றான்; பத்து வாளிகளைத் தூண்டி, ஆயிரந் தாவுங் குதிரைகளை மாய்த்தான்; பத்துப் பாணங்களைச் செலுத்தி, ஆயிரம் வீரர்களைக் கொன்றான்.*

விளக்கவுரை : *வேடராக வந்த சோமசுந்தரப் பெருமான் பப்பத்து அம்புகளாக எய்து ஆயிரக்கணக்கான தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் வீரர்களையும் அழித்தொழித்தான் என்பதாம். மான் - குதிரை; னகரம் சாரியை. மானுடர் - வீரர்.*

அம்புகளை நூறு நூருக எய்து அழித்தல்

28. நூறம்பு தொடுத்து நூற்று நூறுவெம் பரிமே லெய்தான்
நூறம்பு தொடுத்து நூற்று நூறுவெங் கரிமேற் பெய்தான்
நூறம்பு தொடுத்து நூற்று நூறுதேர் சிதைய விட்டான்
நூறம்பு தொடுத்து நூற்று நூறுசே வகரை யட்டான்.

தெளிவுரை : *வெவ்விய பதினுயிரங் குதிரைகள் மேல் நூறு கணைகளை வில்லிற் பூட்டி விடுத்து அவற்றை அழித்தான்; கொடிய பதினுயிரம் யானைகளின் மேல் நூறு வாளிகளை வில்லிற் பூட்டிப் பொழிந்து அவற்றை அழித்தான்; பதினுயிரந் தேர் சிதையுமாறு நூறு அம்புகளை வில்லில் தொடுத்து விட்டான்; நூறு பாணங்களை ஏவிப் பதினுயிரம் வீரர்களைக் கொன்றான்.*

விளக்கவுரை : *வேட மன்னன் நூறு நூறு அம்புகளை எய்து பகை மன்னரது பதினுயிரக்கணக்கான நால்வகைச் சேனையும் மாய்த்தான் என்பதாம். நூற்று நூறு - பதினுயிரம்; பண்புத் தொகை.*

அம்புகளை ஆயிரம் ஆயிரமாக விட்டு அழியச் செய்தல்

29. ஆயிரம் வாளி யானூ றுயிரம் பரியைக் கொன்றான்
ஆயிரம் வாளி யானூ றுயிரங் கரியை வென்றான்
ஆயிரம் வாளி யானூ றுயிரந் தேரைச் சாய்த்தான்
ஆயிரம் வாளி யானூ றுயிரம் பேரைத் தேய்த்தான்.

தெளிவுரை : *ஆயிரம் கணைகளினால் நூறுயிரம் குதிரைகளைக் கொன்றான்; ஆயிரம் வாளிகளால் நூறுயிரம் யானைகளை அழித்தான்; ஆயிரம் அம்புகளினால் நூறுயிரந் தேர்களை உடைத்தான். ஆயிரம் பாணங்களால் நூறுயிரம் வீரர்களைத் தொலைத்தான்.*

விளக்கவுரை : *வேடராக வந்த சிவபெருமான் ஆயிரக்கணக்கான அம்புகளைவிட்டு நூறுயிரக் கணக்கில் நால்வகைப் படைகளையும் கொன்றொழித்தான் என்பதாம்.*

சேனைகள் அழிதல்

30. தடிந்தன தோளுந் தாளுந் தகர்ந்தன சென்னி மண்ணிற்
படிந்தன மடிந்தோர் யாக்கை பரிந்தன தும்பைத் தாமம்
மடிந்தன மையல் யானை மாண்டன தாண்டும் பாய்மான்
ஒடிந்தன கொடிஞ்சி மான்றே ரொதுங்கின வொழிந்த சேனை.

தெளிவுரை : *வீரர்களின் தோள்களும் கால்களும் அறுபட்டன; தலைகள் உடைபட்டன; இறந்தவர்களின் உடல்கள் மண்ணிற் கிடந்தன; தும்பை மாலைகள் அறுந்தன; மத மயக்கத்தையுடைய யானைகள் மடிந்தன; தாவும் குதிரைகள் இறந்தன; மொட்டினையுடைய குதிரை பூண்ட தேர்கள் நொறுங்கின; எஞ்சிய சேனைகள் ஓடி மறைந்தன.*

விளக்கவுரை : *வேட மன்னர் எய்த அம்புகளால் உறுப்பிழந்த வரும் உயிர் துறந்தவரும் ஒழிந்த சேனைகள் ஓடி மறைந்தன என்ப தாம். வீரம் காட்டிப் பொரும் வீரர்கள் தும்பைமாலை யணிதல்மரபாம்.*

போர்க்களத்தில் கவந்தங்கள் ஆடுதல்

31. ஆவிமுன் னேகத் தாமு மருக்கமண் டலத்தா றேகந்
தாவுவ வென்ன வாடுந் தலைபல ²சிலைவாள் பட்டுக்
கூவிளி யெடுத்து வீழுங் குறைத்தலை யாடப் பாதிச்
சாவுட னின்று கைகள் கொட்டுவ தாள மென்ன.

தெளிவுரை : *உயிர் முன்னே செல்லத் தாமுஞ் சூரிய மண்டலத் தின் வழியாகப் போவதற்குத் தாவுதல் போல, பல தலைகள் ஆடா நிற்கும் ; வாளிகளும் வாளும் பட்டுக்கூவும் ஓசையைச் செய்து வீழ் கின்ற கவந்தங்கள் ஆடாநிற்க, குற்றுயிரோடு கூடிய உடல்கள், தாளம் போடுதல் போலக் கைகளைக் கொட்டுவன.*

விளக்கவுரை : *சோழனது படைகள் அழிந்த போர்க்களத்தில் தலைகள் தாவி விழுந்தன ; கவந்தங்கள் ஆடின ; குற்றுயிரோடு கூடிய உடல்கள் கை கொட்டின என்பதாம். கூவிளி - கூவும் ஓசை. குறைத் தலை - தலையற்ற உடல் ; கவந்தம். போரில் உயிர் துறந்தோர் சூரிய மண்டல வழியாக வீரசுவர்க்கம் எய்துவர் என்பர்.*

கவந்தங்களின் செயல்

32. தறைவிழத் தனது சென்னி வீட்டினூர் தம்மை நின்ற
குறையுடல் கைவேல் குத்தி நூக்குவ குரவை பாடி
எறிபடு தலைகள் வாய்மென் றெயிறது கறித்து வீழ்ந்து
கறுவின மார்பந் தட்டி நிற்பன கவந்த யாக்கை.

தெளிவுரை : *தனது தலை தரையில் வீழ, அறுத்து வீழ்த்தினவரை வீழாது நின்ற கவந்தம், கையிலுள்ள வேலாற் குத்தித் தள்ளுவன ; அறுபட்ட தலைகள் குரவைப் பாட்டுப் பாடி வாயினை மென்று பல்லைக் கடித்து வீழ்ந்து சினந்தன ; குறையுடல்கள் மார்பைத் தட்டி நிற்பன.*

விளக்கவுரை : *போர்க் களத்தில் கவந்தங்களும், அறுபட்ட தலைகளும் பல்வேறுச் செயல்களைச் செய்தன என்பதாம். குரவை - குரவைப் பாட்டு; கை கோத்தாடுவோர் பாடும் பாட்டு. எயிறது; அது - பகுதிப் பொருள் விகுதி. தறை - தரை, எதுகை நோக்கித் தரை, தறையெனத் திரிந்து நின்றது.*

அறுபட்டு வீழ்ந்த தலைகளின் செயல்கள்

33. ஒருவழிப் பட்டு வீழு மிருதலை யொன்றற் கொன்று
மருவிய கேண்மை யாகி வாலெயி றிலங்க நக்குப்
பிரிவற வந்தாய் நீயு மென்றெதிர் பேசிப் பேசிப்
பரிவுற வொழிந்து மோந்து பாடிநின் றுடல் செய்த.

தெளிவுரை : ஓரிடத்தில் அறுபட்டு வீழ்கின்ற இரண்டு தலைகள், ஒன்றற்கொன்று நட்பினைப் பொருந்தியனவாய், வெள்ளிய பற்கள் விளங்கச் சிரித்து, 'பிரிவின்றி நீயும் வந்தாய்' என்று எதிரெதிரே பேசி, அன்புமிக வேறு செய்திகளையும் கூறி, ஒன்றை யொன்று மோந்து பாடி நின்று ஆடின.

விளக்கவுரை : போர்க்களத்தில் ஓரிடத்தில் அறுபட்டு வீழ்ந்த இரு வீரர்களின் தலைகள் சிரித்துப் பேசிப் பாடியாடின என்பதாம். செய்த - பலவின்பால் வினைமுற்று.

போர்க்களத்தில் பறவைகள்

34. மாகவா றியங்கு சேனம் வல்லிருட் குவையி னன்ன
காகம்வன் கழுகு வெம்போர்க் களனிடை யவிந்து வீழ்ந்தோர்
ஆகமேற் சிறக டிக்கொண் டசைவன வேடை நீக்கப்
பாகநின் றால வட்டம் பணிப்பன போன்ற வன்றே.

தெளிவுரை : வானின் வழியே உலாவும் பருந்துகளும், செறிந்த இருளின் திரட்சியை ஒத்த காக்கைகளும், வலிய கழுகுகளும், கொடிய போர்க்களத்தின்கண் இறந்து வீழ்ந்தவர்களின் உடல்களின் மேல் சிறகுகளை அடித்து அசைதல், வெப்பத்தைப் போக்கப் பக்கத்தில் நின்று விசிறியை அசைத்தலை ஒக்கும்.

விளக்கவுரை : பறவைகள் போர்க்களத்தில் இறந்தவர் உடல் களின்மேல சிறகடித்து வீழ்ந்தன என்பதாம். அங்ஙனம் இறந்தவர் உடல்களைத தின்னும் பொருட்டுச் சிறகடிக்கும் பறவைகளை, களத்தில் கிடக்கும் வீரர்களின் வெப்பத்தைப் போக்கத் தம் சிறகாகிய விசிறி யால் வீசுவதாக ஆசிரியர் கூறியுள்ள நயம் அறியத்தக்கது. மாகம் - ஆகாயம். சேனம் - பருந்து. அடிக்கொண்டு - அடித்துக்கொண்டு. வேடை - வெப்பம். பணிப்பன - அசைப்பன.

போர்க்கள வருணனை

35. வெள்ளமாச் சோரி யீர்ப்ப மிதக்கின்ற தேர்கள் வெம்பேய்ப்
பிள்ளைகண் மூழ்கிக் கீழ்போய் மறித்தெனப் பெயர்ந்து வீழ்வ
தெள்ளுநீர்க் கடலின் மீதூர் சிதைக்கல நிரையுந் தாக்கித்
துள்ளிமற் றவற்றைச் சாய்க்குஞ் சுறவமும் போன்ற வன்றே.

தெளிவுரை : பெரிய குருதி வெள்ளம் இழுக்க, மிதந்து செல்லுந் தேர்களும் கொடிய பேயின் பிள்ளைகளும் அப்பிள்ளைகள் முழுகிக் கீழ வழியே சென்று தாக்குதலால், அத்தேர்கள் செல்லு நிலை பெயர்ந்து வீழ்தலும் தெளிந்த நீரையுடைய கடலின் மேல் ஓடா நின்ற வரிசை யாகிய பாய் மரததையுடைய மரக்கலங்களையும் மேலெழுந்து தாக்கு தலால், அம்மரக்கலங்களை வீழ்த்தும் சுறு மீன்களையும அவற்றால் அவை வீழ்தலையும் ஒத்தன.

விளக்கவுரை : போர்க்களத்தில் குருதி ஆறு ஓடுகிறது. அதில் தேர்கள் மிதந்து செல்லுகின்றன. பேய்ப் பிள்ளைகள் குருதி வெள்

ளத்தில் முழுகுகின்றன. அவை மேலெழுங்கால் தேர்கள் நிலை பெயர்ந்து வீழுகின்றன என்பதாம். இதனைக் கடலில் செல்லும் மரக் கலங்கள் சுறுமீன் தாக்குதலால், கவிழ்தலோடு ஆசிரியர் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். தேர்கள் மரக்கலங்களையும், பேய்ப் பிள்ளைகள் சுறு மீன்களையும் தேர்கள் மறிந்து வீழ்தல் மரக்கலங்கள் சாய்தலையும் ஒத்தன என்று கொள்க. மறித்தென-செய்தென என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்.

போர்க்களத்தில் பிணங்களின் நிலை

36. கத்திநின் றொருபா லீர்ப்பக் கருங்கொடி சேனந் துண்டங்
கொத்திநின் றொருபா லீர்ப்பக் குடவயிற் றழல்கட் பூதப்
பத்திநின் றொருபா லீர்ப்பப் பட்டவ ராகங் கூளி
பொத்திநின் றொருபா லீர்ப்ப வைம்பொறி போல மன்னோ.

தெளிவுரை: மனத்தைத் தம் வழி இழுக்கும் ஐம்பொறிகள் போல, மடிந்தவர் உடல்களைக் கரிய காகங்கள் கத்தி நின்று ஒருபக்கம் இழுக்க, பருந்துகள் மூக்கினாற் கொத்தி நின்று ஒரு பால் இழுக்க, குடம் போன்ற வயிற்றையும் எரிகின்ற கண்களையும் உடைய பூத வரிசைகள் ஒரு பக்கம் இழுக்கப் பேய்கள் மொய்த்து நின்று ஒருபால் இழுப்பன.

விளக்கவுரை: போர்க்களத்தில் இறந்து கிடக்கும் பிணங்களைக் காக்கைகள் பருந்துகள், பூதங்கள் பேய்கள் முதலிய ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இழுத்தன என்பதாம. இவை மனத்தைத் தத்தம் வழியே இழுக்கும் மெய் வாய்கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளைப் போன்றிருந்தன என்று கூறியுள்ள நயம் அறியத்தக்கது. துண்டம் - மூக்கு. குடவயிறு - குடம்போன்ற வயிறு. கூளி - பேய்.

போர்க்கள வேள்வி

37. துடுவைவான் முறங்கா றன்றூந் துணைச்செவி யரிசி கோட்டின்
உடுவைநேர் மணியின் குப்பை யுரலடி யுலக்கை திண்கோ
டடுகலங் கடந்தீச் சோரி மத்தக மடுப்பென் றியானைப்
படுகளம் விசயச் செல்வி யடுமடைப் பள்ளி மானும்.

தெளிவுரை: வாலைத் துடுப்பாகவும் காற்றைத் திரட்டும் இரண்டு செவிகளையும் முறமாகவும் தந்தங்களிலுள்ள நாண்மீனை ஒத்த முத்துக் குவியலை அரிசியாகவும் அடியை உரலாகவும் திண்ணிய கொம்பை உலக்கையாகவும் கதுப்பைச் சமைக்கும் கலமாகவும் குருதியை நெருப்பாகவும் மத்தகத்தை அடுப்பாகவும் கொண்டு யானைகள் மடிந்த போர்க்களம், வீரத் திருமகள் சமைக்கும் மடைப்பள்ளியை ஒக்கும்.

விளக்கவுரை: போர்க்களத்தில் யானைகள் தத்தம் உறுப்புக்கள் சிதைய இறந்து கிடந்தன என்பதாம். இப்போர்க்களத்தை வீரத் திருமகள் சமைக்கும் மடைப்பள்ளியாக ஆசிரியர் உருவகித்துள்ளார். இது களவேள்வி என்னும் புறத்துறையாகும். துடுவை - துடுப்பு; அகப்பை. கடம் - கதுப்பு. அடுகலம் - சமைக்கும் பாத்திரம்.

போர்க்களத்தில் குருதி வெள்ளம்

38. பிணத்தினைக் கோலிப் புண்ணீ ராற்றினைப் பெருக்கி யுண்பேய்க்
கணத்தினை யுதைத்து நூக்கிக் கரையுடைத் தொருவன் பூதம்
நிணத்தொடும் வருமந் நீத்த நேர்பட விருந்து கையால்
அணைத்துவாய் மடுக்கும் வைகை யருந்திய பூத மென்ன.

தெளிவுரை: ஒரு வலிய பூதமானது, வையை நீர்ப் பெருக்கை இரண்டு கரங்களாலுந் தடுததுக் குடித்த குண்டோதரனென்னும் பூதமபோல், பிணங்களை அணையாகக் கோலி, சோரியாற்றினைப் பெருக்கி உண்ணுகின்ற பேய்க் கூட்டததை உதைததுத் தள்ளி, அவ்வணையை உடைத்து நிணங்களோடும வாராநின்ற அச்சோரிப் பெருக்கினை நேர்முகமாக இருந்து இரண்டு கைகளாலும் தடுத்துப் பருகும்.

விளக்கவுரை: போர்க்களததில் ஓடுகின்ற குருதி வெள்ளத்தைப் பேய்களும் பூதங்களும் பருகின என்பதாம். பேய்க் கூட்டம் பிணங் களை அணையாக அமைத்துக் குருதியாறறினைப பெருக்கி உண்பதாக வும், ஒரு பூதம் அவ்வணையை உடைத்து வருகின்ற வெள்ளத்தைப் பருகிய தாகவும் ஆசிரியர் கூறுகின்றார். அப்பூதத்திற்கு வையை நீர் அருநதிய குண்டோதரனை உவமை கூறியிருபபதும கருதத் தக்கது. நூக்கி - தள்ளி. புணணீர் - இரத்தம்.

துணை வந்த மன்னர் அழிவு

39 புரத்தினு ளுயர்ந்த கூடற் புண்ணிய னெழுதி யெய்த
சரத்தினி லவிந்தார் சென்னிக் குற்றுழிச் சார்வாய் வந்த
ஆரத்தினை யறுக்கும் வைவே லயற்புல வேந்தர் நச்சு
மரத்தினை யடுத்த சந்துங் கதழெரி மடுத்த தென்ன.

தெளிவுரை: முத்தி தரும் நகரங்களுள் உயர்ந்த கூடலில் விற் றிருக்கும் அறவடிவினனாகிய சோமசுந்தரக் கடவுள் தன் பெயர் எழுதி விடுத்த வாளிகளால் சோழனுக்கு இடையூறு நேர்ந்துழி, உதவியாகிக் காக்க வந்த, ஆரத்தை அறுக்கும் கூறிய வேற்படையையுடைய மறு புல மன்னர் அனைவரும் நஞ்சு மரத்தை அடுத்த சந்தன மரங்களும் விரைந்து பற்றும் நெருப்பினால் எரியுண்டாற் போல இறந்து பட்டனர்.

விளக்கவுரை: அப்போர்க்களத்தில் விக்கிரம சோழனுக்கு உதவி யாக வந்த வடநாட்டு மன்னர் அனைவரும் அழிந்தனர் என்பதாம். இவ்வாறு அழியலுற்ற மன்னர்க்கு, நச்சு மரத்தினை அழித்த றபொருட்டு எரித்த தீயினால், அம்மரத்தைச் சார்ந்ததனால் அழிக்கப் பட்ட சந்தன மரங்கள் உவமையாக்கப் பட்டுள்ளன. புரத்தினுள்: காசி, அயோத்தி, மதுரை, மாயை காஞ்சி, அவந்தி, துவாரகை என் னும் முத்தி தரும் நகரங்கள் ஏழனுள். நச்சு மரம் - எட்டி மரம். சந்து - சந்தன மரம். இங்கு, 'மனத்தான் மறுவிலரேனும் தாம் சேர்ந்த, இனத்தாலிகழப்படுவர்'- புனத்து, வெறி கமழ் சந்தனமும் வேங்கையும் வேமே, எறிபுனம் தீப்பட்டக் கால்.' என்னும் நாலடிச் செய்யுள் இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

களத்தில் பேய்களும் பருந்து முதலியனவும்

40. மாசறு காட்சி யான்றன் வாளியா லவிந்தார் தம்மை
மூசுவண் டென்னச் சூழ்ந்து மொய்த்தன பைத்த கூளி
காய்சினச் சேனங் காகங் கழுகினம் பற்றி யீர்த்துப்
பூசலிட் டொன்றோ டொன்று போர்செய்வான் றொடங்கிற் றம்ம.

தெளிவுரை: *குற்றமற்ற இயற்கை அறிவினையுடைய இறைவன் வாளிகளால் இறந்தவர்களை, பரந்த பேய்கள் மலரில் மொய்க்கும் வண்டுகள் போலச் சூழ்ந்து மொய்த்தன; மிக்க சினத்தையுடைய பருந்துகளும் காகங்களும் கழுகுக கூட்டங்களும் பிடித்து இழுத்து கலகம் விளைத்து ஒன்றோடொன்று போர் புரிதற்குத் தொடங்கியது.*

விளக்கவுரை: *சோமசுந்தரப் பெருமான் ஏவிய அம்புகளால் இறந்து கிடப்போரைப் பேய்கள் சூழ்ந்து கொண்டன; பருந்து முதலிய பறவைகள் தம்முள் தம் இரையைக் கைப்பற்றப் போர் புரியலாயின என்பதாம். வினையி னீங்கி விளங்கிய அறிவனுதலின், இறைவன் மாசறு காட்சியான் எனப்பட்டான். காட்சி - ஞானம்; அறிவு. செய்வான் - 'வான்' ஈற்று எதிர்கால வினையெச்சம். அம்மா - இடைச் சொல்.*

சோழனது தோல்வி

41. வெஞ்சின மறக்கோ னம்பி விடுகணை வெள்ளத் தாழ்ந்து
வஞ்சின முறுதன் சேனை மடிந்தது கண்டு மாழாந்
தெஞ்சின படையுஞ் சூழ வேதிலார் நகையுஞ் சூழத்
துஞ்சின மறமுஞ் சூழச் சோழனு முடைந்து போனான்.

தெளிவுரை: *கொடிய சினத்தையுடைய வேடர் தலைவனாகிய நம்பி விடுத்த அம்பு வெள்ளத்து மூழ்கி, வஞ்சினங் கூறிப் போருக்கு உற்ற தனது சேனை இறந்தொழிந்தமை கண்டு மயங்கி எஞ்சிய சேனையுந் தன்னைச் சூழ, பகைவர் நகையும் சூழ, வீர மின்மையுஞ் சூழ சோழனும் தோற்றுப் போயினான்.*

விளக்கவுரை: *விக்கிரம சோழன், தனது சேனைகள் அழிந்து விட்டதால், தோற்றோடலானான் என்பதாம். மாழாந்து - மயங்கி. விக்கிரம சோழன் தோற்றோடுங்கால் அவனைச் சூழ்ந்து சென்றவை. எஞ்சிய சேனை, பகைவர்களின் நகைப்பு, தனது வீரமின்மை என்பன வாம். துஞ்சின மறம் - வலியின்மை; தோல்வி.*

வேடர் தலைவன் மறைவு

42. வில்லொடு மேக மன்ன வெஞ்சிலை வேட வேந்தன்
மல்லொடு பயின்ற தென்னன் மலர்முகச் செவ்வி நோக்கி
அல்லொடு மதிவந் தென்ன வருணகை சிறிது பூத்துச்
செல்லொடு பகைபோற் கொண்ட திருவுரு மறைந்து போனான்.

தெளிவுரை : *வில்லோடு கூடிய முகில் போன்ற கொடிய வில்லை யுடைய வேட மன்னன் மற்போரிற் பயின்ற பாண்டியனது தாமரை மலர் போன்ற முகத்தின் பொலிவைப் பார்த்து இருளோடு சந்திரன் வந்தாற்போலஅருளோடு கூடிய புன்னகை சிறிது அரும்பி, இடியுடன் பகை கொண்டாற் போலக் கொண்ட திருவுருவம் மறைந்தருளினன்.*

விளக்கவுரை : *வங்கிய சேகர பாண்டியனுக்குப் போரில் வெற்றி கிட்டச் செய்த வேடர் தலைவன் தன்னுருவத்தை மறைத்து நீங்கினன் என்பதாம். வில்லைக் கையிற்கொண்ட வேட மன்னனுக்கு இந்திர வில்லோடு கூடிய மேகம உவமையாயிற்று. வேட மன்னன் கரிய திருவுருவோடு வந்து புன்னகை புரிந்தமையை 'அல்லொடு மதி வந்தன்ன' என்றார். அல் - இருள். 'செல்' என்பதற்கு மேகம் என்பது பொருள். ஆயினும் இங்கு, 'இடி' எனப் பொருள் கொள் ளப்பட்டுள்ளது. மேகம் முன்னும் கூறப்பட்டமையின் சோமசுந்தரக் கடவுள் கொண்டிருந்த வேட வடிவம் மிகுந்த அச்சத்தை தருவது என்பார், 'செல்லொடு பகை போற்கொண்ட திருவுரு' என்றார்.*

பாண்டியன் தலைநகர் திரும்பல்

43. பாடுவா யளிதே னூட்டும் பைந்தொடைச் செழியன் வென்றிக்
கோடுவாய் வைத்திட் டார்த்துக் குஞ்சர முகட்டி லேறித்
தோடுவாய் கிழிக்குங் கண்ணார் மங்கலந் துவன்றி யேந்த
நீடுவார் திரைநீர் வேலி நீண்மதி னகரிற் புக்கான்.

தெளிவுரை : *இசைபாடும் வண்டுகளின் வாயில் மதுவை ஊட்டும் பசிய மாலையை யணிந்த பாண்டியன் வெற்றிச சங்கை வாயில் வைத்து முழக்கி, யானையின் மததகத்தில் ஏறி, தோட்டின் வாயைக் கிழிக்கும் கண்ணையுடைய மகளிர் நெருங்கி அட்ட மங்கலங்களையும் ஏந்த, நீண்ட பெரிய அலைகளையுடைய நீரையே வேலியாகவுடைய நீண்ட மதிலாற் சூழப்பட்ட நகரின்கட் சென்றனன்.*

விளக்கவுரை : *வேட மன்னன் அருளால் வெற்றி பெற்ற பாண்டி யன் வெற்றிச் சங்கினை முழக்கி, யானையிலேறி நகரினுட் சென்றனன் என்பதாம். பாண்டியன் பாடும் பரிசிலர்க்குச் சிறப்புச் செய்து பரிசளிக்கும் இயல்புடையவன் என்பது, 'பாடுவாய் அளி தேனூட்டும் பைந்தொடை செழியன்' என்பதனல் குறித்தவாறும். கோடு - சங்கு.*

சோமசுந்தரக் கடவுளுக்குச் சிறப்பு விழாச் செய்தல்

44. சிலைவிற்சே வகஞ்செய்து வாகை வாங்கித்
திருவளித்த சேவகற்குச் சிறந்த பூசை
நிலைவித்தாய் மணிப்பொலம்பூ ணிறுவிச் சாத்தி
நிழல்விரிக்கும் வெயின்மணியா னெடிய மேரு,
மலைவிற்ரு னென்னவரிச் சிலையு நாமம்
வரைந்தகடுங் கூர்ங்கணையும் வனைந்து சாத்தி,
அலைவித்தாழ் கடலுலகுக் ககலச் செங்கோ
லறம் பெருக்கும் வங்கியசே கரனு மண்ணல்,

தெளிவுரை : ஒலித்தலையுடைய வில்லாற் போர் செய்து, வெற்றி பெற்றுத் தனக்கு அரசியல் திருவினை அளித்த வீரனாகிய சோமசுந்தரக் கடவுளுக்குச் சிறந்த பூசை நிலைபெறச் செய்து, ஆராய்ந்த மணிகள் அழுத்திய பொன்னாலாகிய அணிகளைச் செய்து சாத்தி, ஒளி பரப்புஞ் சிவந்த மணிகளால நீண்ட மேருமலையாகிய வில் இதுதான் என்று கண்டோர் கருதக் கட்டமைந்த வில்லையும் சுந்தரேசன் என்னும் திருப்பெயர் திட்டிய கடிய கூரிய கணையையும் செய்து சாத்தி, இந்தக் கடல் சூழ்ந்த உலகத்திற்குத் துன்பமொழிய வங்கிய சேகரன் என்னும் பெருமை பொருந்திய பாண்டியன் செங்கோலினால் அறம் தழைத தோங்கச் செய்து வந்தான்.

விளக்கவுரை : வங்கிய சேகர பாண்டியன் தனது வெற்றிக்குக் காரணரான சோமசுந்தரக் கடவுளுக்குப் பூசைகளை நிலைபெறச் செய்ததோடு, அணிகளும், வரி வில்லும் சுந்தரேசப் பெயர் எழுதிய அம்பும் செய்தமைதது வழிபட்டுச் செங்கோல் செலுதத்தி வரலானான். பாணடியன், தனது வழிபாட்டிற்கு இரங்கிப் பெருமான் அருள் புரிந்ததை யாவரும் அறிந்து உய்யும் வண்ணம் இவ்வாறு செய்தான் என்க. சிலைவில் - மலைபோன்ற வில். சேவகம் - வீரம்.

பயிற்சி வினாக்கள்

1. விக்கிரம சோழன் வங்கிய சேகர பாண்டியன் மீது அமர்க்கு அடியிட்ட செய்தியை விளக்குக.
2. வங்கிய சேகரன் சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்ட தென்ன ? அப்பொழுது அவன் கேட்ட அசரீரியுரை யாது ?
3. நின்னது வாகை யெனப் பொருகின்றனம்—இடஞ் சுட்டுக.
4. பாண்டியன் படையும் சோழன் படையும் போர் புரிந்த திறத்தை விவரிக்க.
5. இரவிதன்னொடு மதியவன் பொரவேகினானிகராகும் —எது ? இத்தொடர் குறிக்கும் பொருளையும் தெரிவிக்க.
6. போர்க்களம் ‘ கல் ’லென்னும் பேரொலியுடன் விளங்கக் காரணமான ஒலிகள் யாவை ?
7. வங்கிய சேகர பாண்டியன் சேனைக்குத் தலைவராகச் சோமசுந்தரக் கடவுள் எந்நிலையில் வந்து சேர்ந்தார்?
8. வேட மன்னர் படைத் தலைமை பூண்டதும் விக்கிரம சோழன் மீண்டு போனதும் ஏன் ?

9. 'ஈது தென்னவற் காலவாயான் துணை செய்த செயல்'—இடஞ் சுட்டுக.

10. நாடு திரும்பிய சோழன் மீண்டும் போருக்கு வந்த காரணத்தைத் தெரிவிக்க.

11. வேட மன்னர் சோழனுக்குத் துணை வந்தவரோடு அம்பெய்து போர் செய்த சிறப்பைப் புலப்படுத்துக.

12. போர்க்களக் காட்சிகளை ஆசிரியர் எங்ஙனம் வருணித்துள்ளார் ?

13. கவந்தங்களின் செயல், அறுபட்ட தலைகளின் செயல் களை விவரிக்க.

14. போர்க்களம் ஐம்பொறி போன்றிருந்ததையும், விசயச் செல்வி அடுமடைப் பள்ளி போன்றிருந்ததையும் விளக்குக.

15. நச்சு மரத்தினையடுத்த சந்தும் கதழெரி மடுத்தது—இவ்வுவமையை உவமேயத்தோடு பொருத்தி விளக்குக.

16. விக்கிரம சோழன் போர்க்கு உடைந்து ஓடுங்கால் அவனைச் சூழ்ந்து சென்றவை யாவை ?

17. வேடவடிவுடன் வந்த இறைவன் மறைந்தது எங்ஙனம் வருணிக்கப் பட்டுள்ளது ?

18. பாடுவாயளி தேனூட்டும் பைந்தொடைச் செழியன்—இத்தொடர் குறிக்கும் பொருள் யாது ?

19. வங்கிய சேகரன் சோமசுந்தரப் பெருமானுக்குச் செய்த சிறப்புகள் யாவை? அவன் அங்ஙனம் செய்த தற்குக் கூறப்படும் காரணம் என்ன ?

3. சங்கப் பலகை தந்த படலம்

கதைச் சுருக்கம்

கலைமகள் பெற்ற சாபம் : வங்கிய சேகர பாண்டியன் மதுரையை அரசாண்டு வருங்காலத்தில் காசிமா நகரில் பிரமதேவன் பத்து அசுவ மேத யாகங்களைச் செய்து முடித்து யாக முடிவில் நீராடும் பொருட்டு சரசுவதி, சாவித்திரி, காயத்திரி என்னும் மனைவியர் மூவரோடும் கங்கையை நோக்கிச் செல்லலானான். வழியில் சரசுவதி வான்வழிச் சென்ற ஓர் விஞ்சை மாது பாடிய இன்னிசையைக் கேட்டு அதில் ஈடுபட்டு நின்றாள். பிரமன் கங்கைக் கரையை அடைந்து சரசுவதியின் வரவு தாழ்த்தலினால் மற்றை மனைவியரோடு நீராடிக் கரையேறினான். அப்பொழுது அங்கு வந்த சரசுவதி "என்னையன்றி நீங்கள் நீராடியது ஏன்?" என்று கோபித்தாள். பிரமன் "குற்றம் உன்மேல் இருக்க நீ நம்மை கோபிப்பது என்னை? இத்தீங்கை நீ எண்ணிலாத மனிதப் பிறப்பெடுத்து நீக்கக் கடவாய்" என்று சபித்தான். கேட்ட சரசுவதி "நடுங்கி மனிதப் பிறப்பின் துன்பத்தை அறியாத உமக்கு உயிர்த் துணையாகும் யான் மனிதப் பிறப்பெடுத்து மயங்குவதா?" என்று சொல்லி வருந்தினாள்.

அப்பொழுது பிரமன் கலைமகளைப் பார்த்து, "பெண்ணே! உனது வடிவமாகிய முதலெழுத்து ஐம்பத்தொன்றினுள்ளே ஆகாரம் முதல் ஹாகாரம் வரையில் உள்ள நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டுப் புலவர்களாகி நிலவுலகில் பல்வேறு இடங்களில் பிறப்பனவாக அவ்வெழுத்துக்கள் அனைத்திலும் ஏறி நின்று அவ்வவற்றின் தன்மையை அடைந்து வெவ்வேறாக இயக்குகின்ற அகரததிற்கு முதல்வர் சோமசுந்தரக்கடவுளே. ஆதலால், அவர்தாம் ஒரு புலவராய்த் திருவுருவெடுத்துச் சங்கப் பலகையில் ஏறி நின்று நாற்பத்தொன்பதாம் புலவராகி அப்புலவருடைய உள்ளததில் நின்று அவரவர்க்கு அறிவைத் தோற்றுவித்து அவர் புலமையைக் காத்தருளுவார்" என்றான்.

புலவர் நாற்பத்தெண்மர் தோற்றம் : பிரமனது ஆணைப்படி ஆகாரம் முதலிய நாற்பத்தெட்டு எழுத்துக்களும் வெவ்வேறு மக்களாகத் தோன்றின. அவர்கள் சமஸ்கிருத மொழியையும் மற்றைய பதினெட்டு மொழிகளையும் ஆராய்ந்தறிந்து பலவகைக் கலைகளையும் கற்றுத் தெளிந்து தமிழிலே தலைமைப் புலமை அடைந்தார்கள். அவர்கள் பொன், மணி ஆபரணங்களன்றி உருத்திராக்க மாலைகளையும் அணிந்தனர். திருவெண்ணீறு பூசிக் கொண்டனர், பாமாலையாலன்றி பூமாலையாலும் சிவ பூஜை செய்தார்கள். இவர்கள் நாடுகள்தோறும் சென்று சென்று அங்குள்ளவர்களைத் தம் புலமையால் வென்று பொருநை யாற்று வளம்கொழிக்கும் பாண்டிய நாடடைந்து, தலைநகரமாகிய மதுரையை நோக்கி வரலாயினர்.

இறைவன் புலவர் வடிவுடன் நாற்பத்தெண்மரை மதுரைக்கு அழைத்தல் : அப்போது சோமசுந்தரக் கடவுள் கல்வி, கேள்விகளில்

வல்ல ஓர் புலவராகி நாற்பத்தெண்மரின் எதிரே சென்று "நீங்கள் யாவர்? எங்கிருந்து வருகின்றீர்கள்?" என்று கேட்டருள அவர்கள் "நாங்கள் புலவர்கள்; பொருநை சூழ்ந்த பாண்டிய நாட்டினின்றும் வருகின்றோம்" என்றனர். அப்பொழுது புலவராகிய ஞானமூர்த்தி, "நீங்கள் மதுரைக்கு வந்து அருள் வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கல் வேண்டும் என்று சொல்லி, அவர்களை அழைத்துக் கொண்டு சோமசுந்தரப் பெருமானை வணங்க வைத்து மறைந்தருளினர்.

புலவர்கள் வியந்து இது நம் பெருமான் அருட் செயல் எனத் தெளிந்து, சோமசுந்தரக் கடவுளை வெவ்வேறு செய்யுட்களினால் துதித்து வணங்கிப் பின் வங்கிய சேகர பாண்டியனைப் போய்க் கண்டனர்.

பாண்டியன் புலவர்களை ஆதரித்தல்: வங்கிய சேகர பாண்டியன் தன்பால் வந்த புலவர்களின் கல்வி அறிவு ஒழுக்கங்களைக் கண்டு மகிழ்ந்து வரிசைகள் பல செய்து சோமசுந்தரக் கடவுளின் திருக் கோயிலுக்கு வடமேற் திசையில் ஒரு சங்க மண்டபம் அமைத்து அதில் அவர்களை இருக்கச் செய்தான். அது கண்ட முன்னைப் புலவர்கள் மனம் புழுங்கி, அச்சங்கப் புலவர்களோடு வாதம் செய்து தோற்றார்கள். இவர்களைப் போலவே வெளிநாட்டுப் புலவர்களும் சங்கப் புலவர்களிடம் வாது செய்து தோற்றுப் போனார்கள்.

புலவர்கள் சங்கப் பலகை பெற்றமை: சங்கப் புலவர்கள் ஒருநாள் சோமசுந்தரக் கடவுளை வணங்கி 'எம்பெருமானே! புலவர்கள் பலரும் தொடர்ந்து வந்து எம்முடன் வாதம் செய்கின்றனர்., எனவே, அவர்கள் புலமையை உள்ளபடி ஆராய்ந்து அளக்கும் கருவியாக ஒரு சங்கப் பலகை அடியேங்களுக்குத் தந்தருளும்' என்று வேண்டினர். அப்பொழுது சிவபெருமான் ஒரு புலவர் வடிவங்கொண்டு ஒரு பலகையுடன் எழுந்தருளி வந்து, 'புலவர்களே! இப்பலகை ஒரு முழச் சதுரமுடையது, சந்திரனைவிட ஒளியுடையது, மந்திரவலியுடையது. அறிவிற் சிறந்த நும் போன்றாற்கெல்லாம் ஒவ்வொரு முழம் வளர்ந்து இருக்கை அளிக்க வல்லது. இது உங்களுக்கு அளவுகோலாக இருக்கும்' என்று சொல்லிக் கொடுத்தருளினர்.

சங்கப் பலகையில் புலவர்கள் ஏறியிருத்தல்: சங்கப் புலவர்கள் பலகையை வாங்கிக் கொண்டு திருக்கோயிலை வலம் வந்து, சங்க மண்டபத்தில் புகுந்து அப்பலகைக்கு பூமாலைகளைத் தொங்கவிட்டு சந்தனக் குழம்புவெண மலர் வெள்ளாடை புனைந்து, தூபதீபம் காட்டிப் பூஜை செய்து வணங்கினர். பின்னர் சங்கப் பலகையில் நக்கீரர் முதலில் ஏறியிருக்க, பின்னர் கபிலரும் பரணரும் ஏறினர். மற்றைப் புலவர் அனைவரும் இவ்வாறே ஏறி ஏறி ஒன்று சேர்ந்து வீற்றிருந்தனர். அப்பலகை ஒன்றே அவர்கள் எல்லோருக்கும் ஒவ்வொரு முழம் வளர்ந்து இடம் கொடுத்தது.

புலவர்களின் பெருமையும் மயக்கமும்: தெய்வப் பலகை பெற்ற சங்கப் புலவர்கள் நூல்களில் அமைந்த பொருள்களை விளக்கக் கூறுகின்ற உதாரணம், எழுவகை மதம் முதலியவற்றைக் கேட்டுத் தெளிந்த கிளியும், நாகணவாய்ப் பறவையும் வெளியே வந்து வாதம் செய்வோர்

வந்தால், அவர்கள் கொள்கையை மறுத்து தம் கொள்கையை நிலை நாட்டும்.

இறைவன் தலைமை தாங்கிப் புலவர்களின் மயக்கம் தீர்த்தல்: அச்சங்கப் புலவர்கள் தங்கள் புலமையினால் எண்ணிலாத செய்யுட்களைச் செய்து வந்தனர். அவர்கள் பாட்டுக்கள் அனைத்தும் சொற்பொருள் வளங்களிலும் குறிப்பில் தோன்றும் பொருள் வளத்திலும் ஒற்றுமையுடையனவாகி மயங்கிக் கிடந்தன. அப்பொழுது புலவர்கள் "இது என்னுடைய பாடல்; அது உம்முடைய பாடல்," என்று சொல்லி மாறுபாடு கொண்டனர். அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் அப்புலவர்களின் முன் ஒரு புலவராய்த் தோன்றி, "புலவர்களே! உங்கள் செய்யுட்களைக் கொண்டு வாருங்கள்" என்று அருளிச்செய்ய, அவர்கள் அவற்றைக் கொண்டுவந்து திருமுன் வைததனர். சொல்லும் பொருளுமாய் விளங்குகின்ற இறைவன் அவற்றை ஆராய்ந்து அவ்வப் புலவர்களின் பாடலை அவ்வவர்களின் கையில் கொடுத்தருளினார். சங்கப் புலவர்கள் அவற்றைப் பெற்று மகிழ்ந்து, 'நீர் எங்களோடு ஒரு புலவராய் எழுந்தருளுக' என்று வேண்டிக்கொண்டு, சங்கப் பலகையில் இருக்கச் செய்தனர். இறைவனாகிய புலவர் அவர்களுக்கு நடு நாயகமாய் வீற்றிருந்தார்.

வங்கிய சேகரன் சிவபதம் அடைதல்: இறையனாரோடும் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் பற்பல தமிழ் நூல்களைச் செய்து விளங்கும் காலத்தில் வங்கிய சேகர பாண்டியன் தன் மகன் வங்கிய சூடாமணிக்கு முடி சூட்டி விட்டுச் சிவபெருமானின் திருவடி நிலை அடைந்தான்.

சங்கப் பலகை தந்த திருவிளையாடல்

1. வேடுரு வாகி மேரு வில்லிதன் னுமக் கோலெய்
தாடம ராடித் தென்ன னடுபகை துரந்த வண்ணம்
பாடினஞ் சங்கத் தார்க்குப் பலகைதந் தவரோ டொப்பக்
கூடிமுத் தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை சொல்வாம்

தெளிவுரை : மேருமலையை வில்லாக வுடைய சோமசுந்தரக் கடவுள் வேட்டுவத் திருமேனி கொண்டு தனது திருப்பெயர் தீட்டிய கணைகளை விடுத்து வெற்றியையுடைய போர் புரிந்து பாண்டியனது கொல்லும் பகையாகி அந்தச் சோழனைத் துரத்திய திருவிளையாடலைக் கூறினோம். இனி அவ் விறைவனே சங்கப் புலவர்க்குப் பலகை அளித்தருளி, அவரோடு வேற்றுமையின்றிக் கூடியிருந்து முத்தமிழாகிய செல்வத்தைப் பொலிவு பெறச் செய்த திருவிளையாடலைக் கூறுவோம்.

விளக்கவுரை : சுந்தரப் பேரம்பெய்த திருவிளையாடலின் பின், சோமசுந்தரக் கடவுள் சங்கப் பலகை தந்த திருவிளையாடலைக் கூறிய வாறு என்பதாம். நாமக்கோல - சுந்தரப் பேரம்பு ; திருப் பெயர் எழுதிய அம்பு. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ. வேடுரு என்பது எதுகை நோக்கி இரட்டாதிருத்தலை உணர்க. தமிழின் செல்வம் - அல்வழியில் 'இன்' சாரியை வந்தது.

பிரமன் அசுவமேத யாகம் செய்தல்

2. வங்கிய சேக ரன்கோல் வாழுநாண் மேலோர் வைகற்
கங்கையந் துறைசூழ் கன்னிக் கடிமதிற் காசி தன்னிற்
பங்கய முளரிப் புத்தேள் பத்துவாம் பரிமா வேள்வி
புங்கவர் மகிழ்ச்சி தூங்க மறைவழி போற்றிச் செய்தான்

தெளிவுரை : *வங்கிய சேகர பாண்டியனது செங்கோல் நன்கு நடைபெறும் நாளில், முன் ஒரு நாளில் கங்கையின் அழகிய துறை சூழ்ந்த அழியாத காவலையுடைய மதில் சூழ்ந்த காசிப்பதியின் கண் தாமரை மலரை இருக்கையாகவுடைய பிரமன் தாவுகின்ற துரங்க வேள்வி பத்தினை தேவர்கள் மகிழ்கூர வேத விதிப்படி பேணிச் செய் தான்.*

விளக்கவுரை : *பிரமதேவன் காசிமா நகரில் அசுவமேத யாகங்கள் பத்தினை முறைப்படி செய்தான் என்பதாம். கன்னிக் கடிமதில் - அழி வில்லாமையும் காவல் பொருந்தியதுமாகிய மதில். கடி-உரிச் சொல். பரிமா வேள்வி - அசுவமேத யாகம். பங்கய முளரி, பரிமா - இரு பெய ரொட்டு. வாம்பரி : வாவும் என்னும் செய்யுமென் எச்சத்தின் ஈற்று உயிர்மெய் கெட்டது. இந்தப் பத்து அசுவமேத யாகம் செய்த இடம் காசியில் கங்கைக் கரையிலுள்ள தசாசுவமேத கட்டமாகும். இது அறுபத்து நான்கு தீர்த்த கட்டங்களில் ஒன்றாகும்.*

யாக முடிவில் பிரமன் தன் தேவியர் மூவருடன் கங்கைக்கு நீராடச் செல்லல்

3. நிரப்பிய வழிநா ளன்னீ ராடுவா னீண்ட வீணை
நரப்பிசை வாணி, சாவித் திரியெனு நங்கை, வேத
வரப்பிசை மநுவாங் காயத் திரியெனு மடவா ரோடும்
பரப்பிசைக் கங்கை நோக்கிப் படருவான் படரு மெல்லை

தெளிவுரை : *அவற்றை செய்த முடித்த பின்னுள் நல்ல நீரின் கண ஆடுதற் பொருட்டு நரம்பின் இசை பொருந்திய நெடிய வீணையை யுடைய கலைமகளும் சாவித்திரி என்னும் நங்கையும் வேத வரம்பாக அமைந்த மந்திர வடிவாகிய காயத்திரியுமாகிய இம்மூன்று மனைவிக ளோடும் புகழைப் பரப்புகின்ற கங்கை யாற்றினை நோக்கிச் செல் வானாயின். அங்ஙனம் செல்லும்போது,*

விளக்கவுரை: *பிரமதேவன் யாகங்களைச் செய்து முடித்து மனைவி யருடன் கங்கைக்கு நீராடச் சென்றான் என்பதாம். வழிநாள்-பின்னுள். நரம்பு, வரம்பு - இம்மென்றொடர்க் குற்றுகர மொழிகள் வன்றொட ராயின. மநு - மந்திரம்.*

நாமகள் தவிர மற்ற இருவருடன் பிரமன் நதிக்கரையை அடைதல்

4. நானவார் குழலி ஞரம் மூவரு ளுவின் செல்வி
வானவா றியங்கும் விஞ்சை மாதரா ளொருத்தி பாடுங்
கானவா றுள்ளம் போக்கி நின்றனள் கமல யோனி
யானவா லறிவ னேகி யந்நதிக் கரையைச் சேர்ந்தான்

தெளிவுரை : *மயிர்ச் சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய அந்த மூன்று மகளிருள் நாமகள், வானின் வழியே செல்லுதலையுடைய ஒரு விஞ்சை மகள் பாடுகின்ற இசை நெறியில் உள்ளத்தைச் செலுத்தி நின்றாள். தாமரையிற்றோன்றினவனாகிய தூய அறிவினையுடைய பிரமன் சென்று அந்நதிக் கரையினை அடைந்தான்.*

விளக்கவுரை : *பிரமதேவனுடன் கங்கைக்குச் சென்ற அவன் மனைவியர் மூவருள் ஒருத்தியாகிய நாமகள் வழியில் ஓர் வித்தியாதரப் பெண்ணின் இசையில் ஈடுபட்டு நிற்கவே, பிரமன் காயத்திரி சாவித்திரி என்னும் இருவருடன் கங்கைக் கரையை அடைந்தான் என்பதாம். நானம் - மயிர்ச் சாந்து ; இயற்கை மணம் என்றுமாம். வானம் ஆறு - ஆகாய வழி. கானம் ஆறு - இசை வழி. கமல யோனி - திருமாலின் உந்திக் கமலத்துதித்த பிரமன். வாலறிவன் - தூய அறிவினையுடையவன் ; பிரமன்.*

நாமகள் பிரமனைச் சினத்தல்

5. நாமகள் வரவு தாழ்ப்ப நங்கைய ரிருவ ரோடுந்
தாமரைக் கிழவன் மூழ்கித் தடங்கரை யேறு மெல்லைப்
பாமகள் குறுகி யென்னை யன்றிநீ படிந்த வாறென்
ஞமென வெகுண்டாள் கேட்ட வம்புயத் தண்ணல் சொல்வான்

தெளிவுரை : *வாணியின் வரவு தாழ்த்தலினால் மற்றை இரண்டு மடந்தையரோடும் தாமரை மலரில் இருக்கும் பிரமன் நீராடிப் பெரிய கரையில் ஏறுங்கால், கலைமகள் சென்று 'என்னையல்லாது நீ நீராடியது என்னை?' என்று சினந்தாள். அதனைக் கேட்ட பிரமன் கூறுவான்.*

விளக்கவுரை : *தன்னைவிட்டுக் கங்கையில் நீராடிய பிரமனை நாமகள் சினந்தாள் என்பதாம். நங்கையர் இருவர் - காயத்திரி, சாவித்திரி என்போர். பாமகள் - நாமகள் ; சரசுவதி. அம்புயத் தண்ணல் - பிரமன். அண்ணல் - ஆண்பாற் சிறப்புப் பெயர். பண் பாகு - பெயருமாம்.*

பிரமன் நாமகளைச் சபித்தல்

6. குற்றநின் மேல தாக நம்மைநீ கோபங் கொள்வ
தெற்றென விளைய தீங்கை யெண்ணறு மாக்க டோற்றம்
உற்றனை யொழித்தி யென்று வுரைத்தனன் சாப மேற்கும்
பொற்றொடி மடந்தை யஞ்சிப் புலம்புகொண்ட வலம் பூண்டாள்

தெளிவுரை : *'குற்றம் நின் கண்ணதாக எம்மை நீ வெகுள்வது எத்தன்மைத்து?' என்று கூறி, 'இந்தக் குற்றத்தை "நாற்பதெட்டு மக்களாகத் தோன்றி ஒழிப்பாயாக' என்று சாபங் கூறினன். அச் சாபத்தை ஏற்கும் பொன்னலாகிய வளையை அணிந்த கலைமகள் அஞ்சிப் புலம்பித் துன்பமுற்றாள்.*

விளக்கவுரை : *காரணமின்றித் தன்னைச் சினந்த நாமகளைப் பிரமதேவன் சபித்தான் என்பதாம். மேலது - குறிப்பு வினைமுற்று. எண் அறுமாக்கள் தோற்றம் - நாற்பத்தெட்டு மக்கள் பிறப்பு; அளவற்ற எண்ணிக்கையையுடைய மானுடப் பிறவி என்றுமாம். இனைய திங்கு- வரவு தாழ்த்த குற்றமும், கோபம் கொண்ட குற்றமும். உரைத்தனன் - சபித்தனன் என்க. உற்றனை ஒழித்தி. உற்றனை - முற்றெச்சம். ஒழித்தி - முன்னிலை ஒருமை எதிர்கால வினை முற்று. த் - எழுத்துப் பேறு.*

நாமகள் வருத்தமும் பிரமன் கூற்றும்

7. ஊனிட ரகன்றோ யுன்ற னுயிர்த்துணை யாவே னிந்த
மானிட யோனிப் பட்டு மயங்குகோ வென்ன வண்டு
தேனிடை யழுந்தி வேதஞ் செப்பும்வெண் கமலச் செல்வி
தானிட ரகல நோக்கிச் சதுர்முகத் தலைவன் சாற்றும்.

தெளிவுரை : *'உடம்பெடுத்தலாலுளதாகிய துன்பம் நீங்கியோய்! உனது அரிய உயிர்த்துணை ஆகும் யான், இந்த மனிதப் பிறப்பின் பாற்பட்டு மயங்குவேனோ?' என்று கூற, வண்டுகள் தேனில் மூழ்கி வேதம் பாடுவதற்கிடமாயுள்ள வெண்டாமரை மலரை இருக்கையாக வுடைய அக் கலைமகளின் துன்பம் நீங்க நோக்கி, நான் முகனாகிய நாயகன் கூறுவான்.*

விளக்கவுரை : *பிரமனிட்ட சாபத்திற்கு அஞ்சி நடுங்கிய நாமகள் 'உமது உயிர்த் துணைவியாகிய யான் மானிடப் பிறப்பெடுத்து மயங்குதல் தக்கதோ?' என்று வருந்திக் கூறினாள். ஊனிடரகன்றவன் - பிரமன். இவன் பிறப்பற்றவன் என்னும் கருத்துடன் கூறியவாறாகும். ஊன் - ஆகு பெயர். 'மானிடப் பிறப்பின் துன்பத்தை அறியாதவனாகிய நீ, உன் மனைவியாகிய என்னை அத்தகைய துயருள் ஆழ்த்துதல் முறையன்று' என்று நாமகள் வருந்திக் கூறினாள் என்று கொள்க. வெண் கமலச் செல்வி - நாமகள். இவள் தங்கியுள்ள வெண் கமலத்து வண்டும் வேதம் செப்புமெனவே நாமகள் வேதம் செப்புகின்றவள் என்பது தானே பெறப்படுமென்க. மயங்குகோ - மயங்குவேனோ.*

பிரமன் மதுரையில் நாற்பத்தெட்டு புலவர்கள் பிறக்க அருளுதல்

8. முகிழ்தரு முலைநின் மெய்யா முதலெழுத் தைம்பத் தொன்றிற்
றிகழ்தரும் ஆகா ராதி ஹாகார மீருச் செப்பிப்
புகழ்தரு நாற்பத் தெட்டு நாற்பத்தெண் புலவ ராகி
அகழ்தரு கடல்சூழ் ஞாலத் தவதரித் திடுவ வாக.

தெளிவுரை : 'அரும்பு போலும் முலையையுடைய மாதே! நினது வடிவமாகிய ஐம்பத்தொரு முதலெழுத்துக்களில் விளங்கா நின்ற ஆகாரம் முதல் ஹாகாரம் இறுதியாகக் கூறிப் புகழப்பட்ட நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டுப் புலவர்களாகித் தோண்டிய கடல் சூழ்ந்த நிலவுலகில் அவதரித்திடுவனவாக.

விளக்கவுரை : பிரமன் தனது சாபத்திற்கு வருந்திய நாமகளை நோக்கி, இரங்கி, 'உன் உடலாகிய முதலெழுத்துக்கள் ஐம்பத்தொன்றில் ஆகார முதல் ஹாகார மிறுதியாகவுள்ள நாற்பத்தெட்டும், நாற்பதெட்டுப் புலவர்களாய்ப பூமியில் தோன்றக் கடவன' என்றூர் என்பதாம். வடமொழி உயிர எழுத்துக்களில் அகரம் நீங்கலாக ஆகாரம் முதலிய பதினைந்தும், மெய்யெழுத்துக்களில் ககரம் முதலிய முப்பத்து மூன்றும் ஆக நாற்பத்தெட்டு எழுத்துக்கள் என்க. மெய்கள் முப்பத்து மூன்று ஒழிந்தன கூட்டெழுத்துக்களாதலின் அவை விலக்கப்பட்டன என்க. முகிழ்தரும் - மொட்டுப் போன்ற. முலை - சினையாகு பெயர், விளியேற்றது. முதலெழுத்து உயிரும் மெய்யும். வடமொழி முதலெழுத்துக்கள் ஐம்பத்தொன்று என்றும் ஐம்பதது மூன்று என்றும் கூறுவர்.

நாற்பத்தொன்பதாவது புலவராகச் சோமசுந்தரக் கடவுள் தோன்றுவர் எனல்

9. அத்தகு வருண மெல்லா மேறிநின் றவற்ற வற்றின்
மெய்த்தகு தன்மை யெய்தி வேறுவே றியக்கந் தோன்ற
உய்த்திடும் அகாரத் திற்கு முதன்மையா யொழுகு நாதர்
முத்தமி ழால வாயெம் முதல்வரம் முறையான் மன்னோ.

தெளிவுரை : 'அத்தகைய எழுத்துக்கள் அனைத்திலும் ஊர்ந்து நின்று அவ்வவ் வெழுத்துக்களின் மெய்யாய தன்மையைப் பொருந்தி வேறு வேருக இயங்குமாறு செலுத்தும் அகரததிற்கு தலைமையாய் ஒழுகும் இறைவர், மூன்று தமிழையுமுடைய ஆலவாயின் கண அமர்ந்த எமது சோமசுந்தரக் கடவுள்; அம்முறையினுல்,

விளக்கவுரை : ஆகார முதல் ஹாகாரம் இறுதியான நாற்பத தெட்டு எழுத்துக்களிலும் ஏறி நின்று அவ்வவற்றின் தன்மையை அடைந்து வெவ்வேருக இயக்குகின்ற அகரத்திற்குத் தலைவர் சோம சுந்தரக் கடவுளே யாவர் என்பதாம். வருணம் - எழுத்து. இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றிலும் அவ்வவற்றின் தன்மையாய் நிற்றலை அந்தர்யாமித்துவம் என்பர். அதுபோலவே, அகரமும் உயிர்க் கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து, அவ்வவற்றின் தன்மையாக நிற்கும் என்பது அறிஞர் கோட்பாடாகும். எனவே, அகரம் தனித்தும், உயிரெழுத்து மெய்யெழுத்துக்களுடன் கலந்தும் வடிவு தோன்றுமல் நிற்பது போல, இறைவன் தனித்தும் உயிர்களிலும் பிறவற்றிலும் கலந்தும் தன் வடிவு தோன்றுமலும் நிற்றலால் 'அகரத்திற்கு முதன்மையாய் ஒழுகு நாதர்' என்றூர். இதனையே திருவள்ளுவரும், 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்றூர். தொல்காப்பியர், 'மெய்யினியக்

கம் அகரமொடு சிவனும்' என்று கூறி, அகரமொழிந்த ஏனை உயிர்க் கண்ணும் அகரம் கலந்திருத்தலை உய்த்துணர வைத்துள்ளாரென்க. மன், ஓ - அசைகள். 'அகரவுயிர் போலறிவாகி எங்கும் - நிகரிலிறை நிற்கும் நிறைந்து' என்னும் திருவருட் பயன் செய்யுளும் இங்குக் கருதத்தக்கது.

சோமசுந்தரக் கடவுள் சங்கப் புலவர் ஆவர் எனல்

10. தாமொரு புலவராகித் திருவுருத் தரித்துச் சங்க
மாமணிப் பீடத் தேறி வைகியே நாற்பத் தொன்ப
தாமவ ராகி யுண்ணின் றவரவர்க் கறிவு தோற்றி
ஏமுறப் புலமை காப்பா ரென்றனன் கமலப் புத்தேள்

தெளிவுரை : *'தாமும் ஒரு புலவராகத் திருமேனி தாங்கி, சங்கத்தின் பெருமை பொருந்திய மணிகள் அழுத்திய தவிசில் ஏறி ஒருசேர வீற்றிருந்து, நாற்பத்தொன்பதாவது புலவர் எனனும் எணணை யுடையராய், அகத்தின் கண் நின்று அந்நாற்பத்தெண்மருக்கும் அறிவை விளக்கி அரணகப் புலமையைக் காத்தருளுவர்' என்று பிரமன் கூறினன்.*

விளக்கவுரை : *"அகர முதல்வராகிய சோமசுந்தரக் கடவுள் ஒரு புலவராகிச் சங்கப் பலகையில் ஏறியிருந்து நாற்பத்தொன்பதாம் புலவராகி அவரவருக்கு அறிவைத் தோற்றுவித் தருளுவார்" என்று பிரமன் கூறினர் என்பதாம். சங்கப்பீடம் - சஙகப் பலகை. தாம் - சோமசுந்தரக் கடவுள். தாம ஒரு புலவர் - இறையனார் என்னும் புலவர். உள் நின்று - புறத்தில் நின்றது போலவே அகத்தும் நின்று. ஏமுற - அரணக.*

நாற்பத்தெண்மரும் புலமையில் தலைசிறந்து விளங்குதல்

11. அக்கர நாற்பத் தெட்டு மவ்வழி வேறு வேறு
மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்கவா ரியமு மேனைச் சொற்பதி னெட்டு மாய்ந்து
தக்கதென் கலைநுண் டேர்ச்சிப் புலமையிற் றலைமை சார்ந்தார்

தெளிவுரை : *நாற்பத்தெட்டு எழுத்துக்களும் அங்ஙனமே வெவ்வேறு மக்களாகத் தோன்ற அவர்கள் பல மாட்சிமைப்பட்ட கலைகளின் வகைகளைத் தெளிந்து, ஆரிய மொழியையும், மற்றைய பதினெட்டாகத் தொகுக்கப்பட்ட மொழிகளையும் ஆராய்ந்து, பெருமை வாய்ந்த தமிழ்க் கலையின் நுண்ணிய தேர்ச்சிப் புலமையில் தலைமை பெற்றனர்.*

விளக்கவுரை : *புலவர்கள் நாற்பத்தெண்மரும் பலவகைக் கலைகளிலும் வல்லவராய் ஆரிய மொழியையும் மற்றும் பதினெண் மொழிகளையும் ஆராய்ந்தும், தமிழ் மொழிப் புலமையில் தலைமை பெற்றும் விளங்கினர் என்பதாம். பதினெண் மொழிகள் :—தமிழ், சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம்,*

கடாரம், கௌடம், குசலம் என்பன. ஆரியத்தையும் தமிழையும் சிறப்புப் பற்றிப் பிரிதத்துக் கூறினர் என்க. பன்மாண் கலைகளின் வகைமை - பலவகைப்பட்ட அறுபதது நன்கு கலைகளின் வேறுபாடு. அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் ஆகியவற்றைப் பதினெண் மொழிகள் என்று கூறுவாருமுளர். இப்புலவர்களைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது திருத் தொண்டத் தொகையில், 'பொய்யடிமையில்லாத புலவர்க்கு மடியேன்' என்று கூறியுள்ளார்.

புலவர்களின் பக்திச் சிறப்பு

12. கழுமணி வயிரம் வேய்ந்த கலன்பல வன்றிக் கண்டிக்
கொழுமணிக் கலனும் பூணுங் குளிர்நிலா நீற்று மெய்யர்
வழுவறத் தெரிந்த செஞ்சொன் மாலையா லன்றி யாய்ந்த
செழுமலர் மாலை யானுஞ் சிவார்ச்சனை செய்யு நீரார்.

தெளிவுரை: அவர்கள் சாணைபிடித்த மணிகளாலும் வயிரங்களாலும் பல கலன்களை அல்லாமல், உருத்திராக்க மாலையாகிய கொழுவிய மணிக்கலனையும் அணியும் தண்ணிய நிலாப்போலுந் திருநீறு தரித்த மேனியை யுடையார்; குற்றமற ஆராய்ந்த செவ்விய சொற்களால் தொடுக்கப்பட்ட பாமாலையல்லாமல் ஆராய்ந்தெடுத்துத் தொடுதத புதிய மலர் மாலையினாலும் சிவ வழிபாடு செய்யுந் தன்மையை யுடையார்.

விளக்கவுரை : பல கலைகளிலும் மொழிகளிலும் சிறந்து விளங்கிய புலவர்கள் நாற்பத்தெண்மரும் சிவ பக்தியிற் சிறந்து விளங்கினார்கள் என்பதாம். சிவ சின்னங்களாகிய உருத்திராக்க மணிதல், திருநீறணிதல் முதலியவற்றுடன் பாமாலை புனைந்தும் சிவ வழிபாடு செய்தனர் என்க. 'கற்றதனாலாய பயனென்கொல்' வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்' என்னும் திருக்குறளும் இங்குக் கருதத் தக்கது. 'அருச்சனை பாட்டேயாகும்' என்பவாதலின், புலவர்கள் பாமாலை புனைந்து ஏத்தினர் என்றவாறுகும். கழுமணி - சாணைபிடித்த மாணிக்கம்.

சோமசுந்தரக் கடவுள் மதுரையை நோக்கி வருதல்

13. புலந்தொறும் போகிப் போகிப் புலமையால் வென்று வென்று
மலர்ந்ததண் பொருனை நீத்த வளங்கெழு நாட்டில் வந்து
நிலந்தரு திருவி னுன்ற நிறைநிதிச் செழியன் செங்கோல்
நலந்தரு மதுரை நோக்கி நண்ணுவார் நண்ணு மெல்லை.

தெளிவுரை : நாடுகள் தோறுஞ் சென்று சென்று, புலமைத் திறத்தால் அங்குள்ளவர்களை வென்று, வென்று பரந்த தண்ணிய பொருநை வெள்ளத்தால் வளம்மிக்க பாண்டிய நாட்டின் கண் வந்து மாற்றாரது நிலத்தைத் தனக்கு நல்கும் போர்த் திருவினால் மிகவும் நிறைந்த நிதியினையுடைய பாண்டியனது செங்கோலால் நன்மை பொருந்திய மதுரையை நோக்கி வருவாராயினர். அங்ஙனம் வரும்பொழுது,

விளக்கவுரை : *கலைகளிலும் சிவ பக்தியிலும் சிறந்து விளங்கிய நாற்பத்தெட்டுப் புலவர்களும் பல்வேறு நாடுகளுக்கும் போய் அங்கங்குள்ளவரோடு வாதிட்டுத் தம் புலமையால் வெற்றி பெற்றுப் பாண்டிய நாடு அடைந்து வங்கிய சேகர பாண்டியன் செங்கோலால் நலமுற்று விளங்கிய மதுரைமா நகரை நோக்கி வருவராயினர் என்பதாம். தொல்காப்பியப் பாயிரவுரையில் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பதற்கு, 'மாற்றாரது நிலத்தைக் கொள்ளும் போர்த் திருவினையுடைய பாண்டியன்' என நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். அவ்வுரை வங்கிய சேகரனுக்கும் பொருந்துமாறு அமைத்துள்ள நயம் காண்க. நிலம்தரு திரு என்பதற்கு வேற்று நாட்டு மன்னவர் திரையாகக் கொண்டு வந்து தருகின்ற செல்வம் என்றும் பொருள் கொள்ளலாம் பொருனை - தாமிரவருணியாறு.*

சோமசுந்தரக் கடவுள் திருவடிகள் நிலத்திற்றோய நடந்து வருதல்

14. **பற்பல கலைமாண் டேர்ச்சிப் பனுவலின் பயனாய் நின்ற**
அற்புத மூர்த்தி யெந்தை யாலவா யடிக ளங்கோர்
கற்பமை கேள்வி சான்ற கல்வியின் செல்வ ராகிச்
சொற்பதங் கடந்த பாத மிருநிலந் தோய வந்தார்.

தெளிவுரை : *பலவகைப்பட்ட கலைகளையுடைய மாட்சிமைப்பட்ட தேர்ச்சியை யுடைய மறையின் பயனாய் நிலைபெற்ற ஞான மூர்த்தியும் எமது தந்தையுமாகிய மதுரைப் பிரானாகிய சோமசுந்தரக் கடவுள், அங்குக் கற்றலும் அமைந்த கேள்வியும் நிறைத்த ஒரு புலவராகி, சொல்லளவைக் கெட்டாத திருவடிகள் இப்பெரிய நிலத்தில் தோய நடந்து வந்தார்.*

விளக்கவுரை : *புலவர்கள் நாற்பத்தெண்மரும் மதுரையை நோக்கி வரும்போது சோமசுந்தரக் கடவுளும் கல்வி கேள்விகளிற் சிறந்த புலவராகி நடந்து வரலானார் என்பதாம். சோமசுந்தரக் கடவுள் ஞானமே திருமேனியாக உடையவராதலின், 'அற்புத மூர்த்தி' எனப் பட்டார். கற்பு - கல்வி. கல்வியின் செல்வர், இன்சாரியை அவ்வழியில் வந்தது. 'பாதாள மேழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்' என்று கூறும் திருவாசகக் கருத்து 'சொற்பதம் கடந்த பாதம்' என எடுத்தாளப்பட்டுள்ளது என்க ஆகம அளவைக் கெட்டாத திருவடிகள் என்றவாறுகும். சொற்பதம் கடந்த - சொல்லுக்கும் பொருளுக்கும் எட்டாத என்றும் பொருள் கொள்ளுதலுமாம்.*

புலவர்களும் சோமசுந்தரக் கடவுளும் சந்தித்தல்

15. **அவ்விடை வருகின் றாரை நோக்கிநீ ராரை நீவிர்**
எவ்விடை நின்றும் போது கின்றனி ரென்ன வன்னார்
வெவ்விடை யனையீர் யாங்கள் விஞ்சைய ரடைந்தோர் பாவம்
வெளவிடு பொருனை நாட்டின் வருகின்றே மென்ன லோடும்.

தெளிவுரை : அங்கு வருகின்றவரை நோக்கி, 'நீவிர் யாவர்? நீவிர் எங்கிருந்து வருகின்றீர்?' என்று கேட்க, அப்புலவர்கள், 'பெருமிதமுடைய இடபம் போல்வீர்! யாங்கள் புலவர்களாவோம்; அடைந்தாரது பாவத்தைப் போக்கும் பொருநை சூழ்ந்த பாண்டிய நாட்டின் கண்ணே வந்து கொண்டிருக்கின்றோம்' என்று கூறிய அளவில்,

விளக்கவுரை : புலவராக வந்த சோமசுந்தரக் கடவுள் நாற்பத்தெண்மரையும் சந்தித்து அளவளாவினர் என்பதாம். விஞ்சையர் - புலவர்கள். ஆரை - யார். ஐ - முன்னிலையில் வந்த அசை. வெவ்விடை - விருப்பம் தருகின்ற காளை.

சங்கப் புலவர்கள் இறைவனை மதுரைக்கு வருமாறு அழைத்தல்

16. தனிவரு புலவர் நீவிர் தண்டமி ழால வாயெங்
கனிவரு கருணை மூர்த்தி கனைகழ லிறைஞ்சல் வேண்டும்
இனிவரு கென்ன நீரே யெங்களுக் களவில் கோடி
துனிவரு வினைக டீர்க்குஞ் சுந்தரக் கடவு ளென்றார்.

தெளிவுரை : தனியே வந்த புலவராகிய இறைவர், 'நீங்கள் தண்ணிய தமிழையுடைய திருவால வாயில் எழுந்தருளிய எமது கனிந்த அருளையுடைய சோமசுந்தரக் கடவுளின் ஒலிக்கும் வீரக்கழலணிந்த திருவடியை வணங்க வேண்டும்; ஆதலால் இப்பொழுதே வரக்கடவீர்' என்று கூறியருள, 'எங்களுக்கு அளவிறந்த கோடி துன்பத்தைத் தரும் வினைகளைப் போக்கி யருளும் சோமசுந்தரக் கடவுள் நீரே' என்று அப்புலவர்கள் கூறினார்கள்.

விளக்கவுரை : 'நீங்கள் மதுரைக்கு வந்து நமது சோமசுந்தரக் கடவுளை வணங்க வேண்டும்' என்று அழைத்த புலவரை நோக்கி நாற்பத்தெண்மரும் 'நீரே எமக்கு அச் சோமசுந்தரக் கடவுளாவீர்' என்றனர் என்பதாம். சோமசுந்தரக் கடவுளை வணங்கும் பொருட்டு எதிர் வந்து அழைத்த பேருதவியினை எண்ணிய புலவர் இவ்வாறு குறித்தார் என்று கொள்க. தனிவரும் புலவர்-சோமசுந்தரக் கடவுள். துனிவரும் வினைகள் - துன்பத்தைத் தரும் இருவினைகள். கனை கழல் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

இறைவன் புலவர்களை மதுரைக்கு அழைத்துச் சென்று மறைதல்

17. மறையினா றொழுகும் பன்மாண் கலைகள்போன் மாண்ட கேள்வித்
துறையினா றொழுகுஞ் சான்றோர் சூழமீண் டேகிக் கூடற்
கறையினார் கண்டத் தாரைப் பணிவித்துக் கரந்தா ரொற்றைப்
பிறையினார் மகுடந் தோற்றா துறினாராய் வந்த பெம்மான்.

தெளிவுரை : வேதத்தின் வழியே ஒழுகும் பல மாட்சிமைப்பட்ட கலைகள் போல மாட்சிமைப்பட்ட கேள்வித் துறையின் வழியே ஒழுகும் புலவர் தம்மைச் சூழ்ந்துவர ஒற்றைப் பிறை பொருந்திய சடைமுடியை வெளிப்படுத்தாது புலவராய் வந்த சோமசுந்தரக் கடவுள்

திரும்பிச் சென்று கூடலி லெழுந்தருளிய நஞ்சக்கறை பொருந்திய திருமிடற்றையுடைய இறைவனை வணங்குவித்து மறைந்தருளினர்.

விளக்கவுரை: தனி வந்த புலவராகிய இறைவர் தம்மைச் சூழ்ந்து வந்த புலவர்களைச் சோமசுந்தரக் கடவுளை வணங்கச் செய்து மறைந்தருளினர் என்பதாம். மறையினறு ஒழுகும் பன்மாண் கலைகள்- அறுபத்து நான்கு கலைகள்; சிட்சை, வியாகரணம் சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறு சாத்திரங்களுமாம்.

புலவர்கள் பாண்டியனைச் சந்தித்தல்

18. விம்மித மடைந்து சான்றோர் விண்ணிழி விமான மேய
செம்மலை வேறு வேறு செய்யுளாற் பரவி யேத்திக்
கைம்மலை யுரியி னார்தங் காரெழு திறைஞ்சி மீண்டு
கொய்ம்மலர் வாகைச் செவ்வேற் செழியனைக் குறுகிக் கண்டார்.

தெளிவுரை: புலவர்கள் வியப்புற்று வானினின்றும் இறங்கிய இந்திர விமானத்தில் எழுந்தருளிய இறைவரை வெவ்வேறு செய்யுட்களாலே துதித்துப் புகழ்ந்து, யானைத் தோலைப் போர்வையாகவுடைய அவ்விறைவர் திருவடிகளைத் தொழுது வணங்கித் திரும்பி, கொய்த வாகை மலர் மாலை சூடிய சிவந்த வேலையுடைய பாண்டியனைச் சென்று கண்டனர்.

விளக்கவுரை: புலவர்கள் நாற்பத்தெண்மரும் சோமசுந்தரக் கடவுளை வணங்கித் துதித்து பின் வங்கிய சேகர பாண்டிய மன்னனைக் கணடனர் என்பதாம். சான்றோர் - அறிவால் நிறைந்த புலவர். கைம்மலை - யானை. செவ்வேற் செழியன் வங்கிய சேகர பாண்டியன்.

பாண்டியன் புலவர்களின் பெருமையை யுணர்ந்து உபசரித்தல்

19. மறமலி நேமிச் செங்கோன் மன்னவன் வந்த சான்றோர்
அறமலி கேள்வி நோக்கி யவைக்களக் கிழமை நோக்கித்
திறமலி யொழுக்க நோக்கிச் சீரியர் போலு மென்னு
நிறைமலி யுவகை பூத்த நெஞ்சின னிதனைச் செய்தான்.

தெளிவுரை: வெற்றி மிக்க சக்கரத்தையும் செங்கோலையுமுடைய வங்கிய சேகர பாண்டியன், வந்த புலவர்களின் அறம் நிறைந்த கல்வியை நோக்கியும், அவைக்களத்தில் இருத்தற்குரிய தகுதியை நோக்கியும், வகையமைந்த ஒழுக்கத்தை நோக்கியும் சிறந்தவர்கள் என்று கருதி நிறைதல் மிக்க மகிழ் பூத்த உள்ளமுடையனாய் இதனைச் செய்வானாயினன்.

விளக்கவுரை: வங்கிய சேகர பாண்டியன் தன்னிடம் வந்த புலவர் நாற்பத்தெண்மரது கல்வி, ஒழுக்கம் தகுதி முதலியவற்றைக் கண்டு அவர்கள் பெருமையை உணர்ந்து உபசரிப்பானாயினன் என்பதாம். 'குடிப் பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை, நடுச் சொல்லு நல்லணியாக்கம் கெடுக்கும், அழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டும், இழுக்கா அவையின்கண் எட்டு' என்னும்

புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுள் குறிப்பன, அவைக்களத்தில் இருத்தற்குரியார்க்கு வேண்டிய தகுதிகளாம். இத்தகுதிகள் யாவும் வந்த புலவர் நாற்பத்தெண்மரிடமும் பொருந்தியிருக்கக் கண்ட பாண்டியன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் என்பதாம்.

சங்க மண்டபம் அமைத்து அதில் புலவர்களை இருக்கச் செய்தல்

20. திங்களங் கண்ணி வேய்ந்த செக்கரஞ் சடில நாதன்
மங்கலம் பெருகு கோயில் வடகுட புலத்தின் மாடோர்
சங்கமண் டபமுண் டாக்கித் தகைமைசால் சிறப்பு நல்கி
அங்கமர்ந் திருத்தி ரென்ன விருத்தினு னறிஞர் தம்மை.

தெளிவுரை : சந்திரனாகிய அழகிய மாலையை யணிந்த சிவந்த அழகிய சடையையுடைய சோமசுந்தரக் கடவுளின் மங்கலம் மிக்க திருக்கோயிலின் வடமேற்றிசைப் பக்கத்தில் ஒரு சங்க மண்டபம் எடுத்து, தகுதி நிறைந்த பலவரிசைகளை அளித்து அங்கே தங்கியிருப்பீராக என்று அப்புலவர்களை இருத்தினான்.

விளக்கவுரை : புலவர்களின் சிறப்பையுணர்ந்த பாண்டியன், திருக்கோயிலின் வடமேற்றிசைப் பக்கத்தில் சங்க மண்டபம் கட்டுவித்து அவர்களை இருக்கச் செய்தான் என்பதாம். சிறப்பு - வரிசை.

சங்கப் புலவர்கள் பழைய புலவர்களை வெல்லுதல்

21. வண்டமிழ் நாவி னூர்க்கு மன்னவன் வரிசை நல்கக்
கண்டுளம் புழுங்கி முன்னைப் புலவரக் கழகத் தோரை
மண்டினர் மூண்டு மூண்டு வாதுசெய் தாற்றன் முட்டிப்
பண்டைய புலனுந் தோற்றுப் படருழந் தெய்த்துப் போனூர்.

தெளிவுரை : வளவிய தமிழையுடைய செந்நாப் புலவர்கட்குப் பாண்டியன் பலவரிசைகளை அளிக்க, அதனைப் பழைய புலவர்கள் கண்டு உள்ளம் வெந்து அச்சங்கப் புலவரை நெருங்கிச் சென்று சென்று வாது புரிந்து தங்கள் ஆற்றல் குன்ற முன்னுள்ள புலமையையும் இழந்து துன்புற்று மனமிளைத்துச் சென்றனர்.

விளக்கவுரை : பழைய புலவர்கள், சங்கப் புலவர்களோடு வாதிட்டுத் தோற்று வருந்திச் சென்றனர் என்பதாம். பாண்டியன் சங்கப் புலவர்களுக்குப் பலவித வரிசைகளைச் செய்தலைக் கண்டு பழைய புலவர்கள் பொறாமைப்பட்டு வாதிடலானூர் என்று கொள்க. ஆற்றல் முட்டி - வலிமை குறைய. பழைய புலமை பொறாமையால் இழுக்குற்றது என்க. மண்டினர் - முற்றெச்சம்.

சங்கப் புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை அடைதல்

22. இனையர்போல் வந்து வந்து மறுபுலத் திருக்குங் கேள்வி
வினைஞரு மதமேற் கொண்டு வினுய்வினுய் வாதஞ் செய்து
மனவலி யிளைப்ப வென்று வைகுவோ ரொன்றை வேண்டிப்
புனையிழை பாக நீங்காப் புலவர்மு னண்ணி னூரே.

தெளிவுரை : *இந்தப் புலவர்கள் போலவே வேற்று நாட்டிலுள்ள நூற் கேள்வி வல்ல புலவர்களும் வந்து வந்து தருக்கினை மேற் கொண்டு பலமுறை வினவி வாதிட்டு, மனத்தின் திட்பங்கெட அவர் களை வென்று தங்கியிருக்கும் அக்கழகத்தார் ஒரு பொருளைக் கருதி உமையம்மை இடப் பாகத்தில் நீங்காத புலவராகிய சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்றனர்.*

விளக்கவுரை : *பாண்டிய நாட்டுப் பழைய புலவர் தோற்றது போலவே, வேற்று நாட்டுப் புலவரும் வாதிட்டுத் தோற்றுச் செல்வ தைக் கண்ட சங்கப் புலவர் சோமசுந்தரர் திருமுன் சென்றனர் என்பதாம். மதமேற்கோடல் - தம் கொள்கை விடாமை. ஒன்று - ஒரு பொருள் ; அது புலவரைச் சீர்தூக்கும் கருவியாகிய சங்கப் பலகை.*

புலவர்கள் சங்கப் பலகையருளுமாறு இறைவனை வேண்டல்

23. முந்துநூன் மொழிந்தார் தம்மை முறைமையால் வணங்கி
வந்துவந் தெவரும் வாதஞ் செய்கின்றார் வரிசை யாக [யெம்மை
அந்தமில் புலமை தூக்கி யளப்பதா வெம்ம னோர்க்குத்
தந்தருள் செய்தி சங்கப் பலகையொன் றென்று தாழ்ந்தார்.

தெளிவுரை : *முதனூலாகிய வேதாகமங்களை அருளிச் செய்த இறைவனை முறைப்படி வணங்கி, 'எம்மோடு தொடர்ச்சியாக வந்து வந்து எவரும் வாதிக்கின்றனர். ஆதலால், முடிவில்லாத புலமை யைச் சீர்தூக்கி அளக்குங் கருவியாக எமக்கு ஒரு சங்கப் பலகை அளித்தருளுவாயாக' என்று வேண்டி வணங்கினர்.*

விளக்கவுரை : *புலவர்கள் நாற்பத்தெண்மரும் சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தம்மோடு வாதிட வரும் புலவர்களின் புலமை யைச் சீர்த்தூக்கும் கருவியாகிய சங்கப் பலகை ஒன்று அருளுமாறு வேண்டிக் கொண்டனர் என்பதாம். முந்துநூல் - முதனூல். 'வினையி னீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்' என்பது தொல்காப்பியச் சூத்திரம். தூக்கி - ஆராய்ந்து.*

சிவபெருமான் சங்கப் பலகையுடன் தோன்றுதல்

24. பாடிய பாணற் கன்று வலியவே பலகை யிட்டார்
பாடிய புலவர் வேண்டிற் பலகைதந் தருளார் கொல்லோ
பாடிய புலவ ராகும் படியொரு படிவங் கொண்டு
பாடிய புலவர் காணத் தோன்றினார் பலகை யோடும்.

தெளிவுரை : *தம்மைப் பாடிய பாணபத்திரனுக்கு அன்று வலிந்து பலகை அருளிய சோமசுந்தரக் கடவுள், பாடிய புலவர்கள் தாமே ஒரு பலகையை வேண்டினால் அதனைத்தாரா திருப்பரோ?' பாடுகின்ற புலவராம் வண்ணம் ஒரு திருவுருவந்தாங்கிப் பாடிய அப்புலவர்கள் காணப் பலகையுடன் வெளிவந்தனர்.*

விளக்கவுரை : *சோமசுந்தரக் கடவுள், சங்கப் பலகை அருள வேண்டிய புலவர் முன், சங்கப் பலகையுடன் தோன்றினர் என்பதாம். பாணபத்திரனுக்குப் பலகை அருளிய வரலாறு, பலகையிட்ட படலத்தில் கூறப்பட்டதென்க. வலியவே - கேளாமலே. இட்டார் - வினையாலணையும் பெயர். அருளார் கொல்லோ : கொல் - அசை. அருளாரோ - அருளுவார் என்பதாம். ஓ - எதிர்மறை. இச்செய்யுள்* ***சொற் பொருள் பின்வருநிலை அணியாகும்.***

இறைவன் சங்கப் பலகையின் பெருமையைக் கூறிப் புலவர்களிடம் கொடுத்தல்

25. **சதுரமா யளவி ரண்டு சாணதிப் பலகை யம்ம**
மதியினும் வாலி தாகு மந்திர வலிய தாகும்
முதியநும் போல்வார்க் கெல்லா முழம்வளர்ந் திருக்கை நல்கும்
இதுநுமக் களவு கோலா யிருக்குமென் றியம்பி யீந்தார்.

தெளிவுரை : *சதுர வடிவினதாய், இரண்டு சாண் அளவுள்ளதாகிய இந்தப் பலகை, சந்திரனிலும் வெள்ளியதாகும் ; மந்திர வலியை யுடையதாகும் ; அறிவால் முதிய நும்போன்றோர்க்கெல்லாம் ஒவ்வொரு முழமாக வளர்ந்து இருக்கை யளிக்கும் ; இப் பலகை ' உங்களுக்கு ஒரு அளவு கருவியாக இருக்கும் ' என்று கூறி அதனைத் தந்தருளினர்.*

விளக்கவுரை : *சங்கப் புலவர்முன் புலவராய்த் தோன்றிய சோமசுந்தரக் கடவுள் சங்கப் பலகையைப் புலவர்களிடம் கொடுத்து அதன் பெருமையைக் கூறினர் என்பதாம். அப்பலகை சதுரவடிவினது; வெண்ணிறமுடையது; இரண்டு சாண் அளவினது; மந்திர வலியுடையது; சிறந்த புலவர் வரின் ஒவ்வொரு முழமாக வளர்ந்து இருக்கை அளிக்கும் இயல்பினது என்றார் என்க. இறைவனருளால் மெய்ப்புலவர் இருத்தற்கு அவ்வப்போது, ஒரு முழம் வளர்ந்து இடம் கொடுத்தலாலும் ஏனையோர்க்கு இடந்தராமையாலும் ' மந்திரவலியது ' என்றார். சாணது - குறிப்பு வினைமுற்று. அம்ம - வியப்பிடைச் சொல்.*

புலவர்கள் சங்கப் பலகையைப் பெற்றுச் சங்க மண்டபம் சேர்தல்

26. நாமக ளுருவாய் வந்த நாவலர் தமக்கு வெள்ளைத்
தாமரை யமளி தன்னைப் பலகையாத் தருவ தென்னக்
காமனை முனிந்தார் நல்கக் கைகொடு களிறு தாங்கும்
மாமணிக் கோயி றன்னை வலந்துதங் கழகம் புக்கார்.

தெளிவுரை : *கலைமகள் வடிவாக வந்த அப் புலவர்களுக்கு வெண்டாமரையாகிய தவிசினை ஒரு பலகையாகச் செய்து தருவது போல, மன்மதனை எரித்த இறைவர் தந்தருள, அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு யானைகள் சுமக்கும் பெரிய மணிகள் அழுத்திய திருக்கோயிலை வலம்வந்து தமது அவையிற் புகுந்தனர்.*

விளக்கவுரை : *சங்கப் புலவர்கள் இறைவனளித்த சங்கப் பலகையினைப் பெற்றுச் சென்று சங்க மண்டபம் சேர்ந்தனர் என்பதாம். நாவலர் - சங்கப் புலவர்கள். வெள்ளைத் தாமரை அமளி - வெண்டாமரை ஆசனம். களிறு தாங்கும் மாமணிக் கோவில் - விண்ணிழி விமானக் கோவில். தருவது - காலங் காட்டுந் தொழிற் பெயர். இச் செய்யுள் உவமையணி.*

சங்கப் பலகையைப் பூசித்துப் புலவர்கள் அதன் மேல் ஏறுதல்

27. நாறுபூந் தாம நாற்றி நறும்பனி தோய்ந்த சாந்தச்
சேறு வெண் மலர்வெண் டூசு செழும்புகை தீப மாதி
வேறுபல் வகையாற் பூசை வினைமுடித் திறைஞ்சிக் கீரன்
ஏறினன் கபில னோடு பரணனு மேறி னானே.

தெளிவுரை : *மணமுள்ள பூமாலைகளைத் தொங்கவிட்டு நறிய பனி நீர் அளாவிய சந்தனக் குழம்பும், வெண்மலரும், வெள்ளாடையும், செழிய தூபமும் முதலிய வேறு பல வகையாலும் பூசை வினை முடித்து, வணங்கி நக்கீரன் முன்னர் ஏறினான்; கபிலனோடு பரணனும் ஏறினான்.*

விளக்கவுரை : *இறைவன் அருளிய சங்கப் பலகையைப் புலவர்கள் முறைப்படி பூசித்து வணங்கி நிற்க அவருள்ளும் முதன்மை வாய்ந்தவரான நக்கீரர், கபிலர், பரணர் முறையே அதில் ஏறினர் என்பதாம்.*

சங்கப் பலகை புலவர்க்கெல்லாம் இடமளித்தல்

28. இருங்கலை வல்லோ ரெல்லா மிம்முறை யேறி யேறி
ஒருங்கினி திருந்தார் யார்க்கு மொத்திடங் கொடுத்து நாதன்
தருஞ்சிறு பலகை யொன்றே தன்னுரை செய்வோர்க் கெல்லாஞ்
சுருங்கிநின் றகலங் காட்டித் தோன்றுநூல் போன்ற தன்றே.

தெளிவுரை : *பெரிய நூல் வல்லோரனைவரும் இங்ஙனமே ஏறி யேறி ஒரு சேர வீற்றிருந்தனர்; இறைவன் தந்தருளிய சிறிய பலகை யொன்றே அனைவரக்கும் ஒக்க இடங் கொடுத்து, தன் உரை காண்பாரனைவருக்கும் எழுத்தாற சுருங்கி நின்று பொருள் விரிவு காட்டித் தோன்றும் நூலை ஒத்தது.*

விளக்கவுரை : *சங்கப் பலகை மற்றும் புலவர்கள் ஏறியிருத்தற்கு இடங் கொடுத்தது என்பதாம். அளவாற் சுருங்கியிருக்கும் பலகை புலவர்கள் ஏற ஏற இடங் கொடுத்து விரிதலுக்கு எழுத்தாற் சுருங்கி நின்று உரையாசிரியர பொருள் விரித்தற்கேற்ப விரிந்து தோன்றும் நூல் உவமையாம். அகலம் - விரிவுரை. அன்று, ஏ - அசைகள்.*

சங்கப் புலவர்களின் பெருமை

29. மேதகு சான்றோர் நூலின் விளைபொருள் விளங்கத் தம்மில்
ஏதுவு மெடுத்துக் காட்டு மெழுவகை மதமுங் கூறும்
போதவை தெளிந்த கிள்ளை பூவையே புறம்பு போந்து
வாதுசெய் வார்கள் வந்தான் மறுத்துநேர் நிறுத்து மன்றே.

தெளிவுரை : *மேம்பட்ட அப்புலவர்கள் நூல்களில் அமைந்த பொருள் விளங்கத் தம்முள் ஏதுவும் உதாரணமும் எழுவகை மதமும் கூறும்போது அவற்றைக் கேட்டுத் தெளிந்த கிளியும் நாகணவாய்ப் பறவையுமே வெளியே வந்து, வாதஞ் செய்வார்கள் வந்தால் அவர்கள் கொள்கையை மறுத்துத் தங்கொள்கையை நிலைநாட்டும்.*

விளக்கவுரை : *சங்கப் புலவர் தாம் கூறும் நூற்பொருள் விளங்க ஏது, எடுத்துக் காட்டு, எழுவகை மதம் முதலியவற்றைக் கூறித் தம் பெருமையை நிலைபெறச் செய்தனர் என்பதாம். புலவர்கள் கூறுவனவற்றைக் கேட்டிருந்த கிளி நாகணவாய்ப் பறவைகளும் அவற்றைப் பயின்று வாதிடுவோர் முன் எடுத்துரைத்தன எனப்படுவதால் அப்புலவர்கள் பெருமையையே விளக்கிய வாறாகும். ஒருவர் தாம் கூறும் பொருளை நிலைபெறச் செய்தற்கு ஏதுவும் எடுத்துக் காட்டும் கூறுதல் மரபாகும். எழுவகை மதங்கள் : உடன்படல், மறுத்தல், பிறர் தம் மதம் மேற்கொண்டு களைதல், தான் நாட்டித் தனாது நிறுப்பு, இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு, பிறர் நூற் குற்றங்காட்டல், பிறிதொடு படான் தன் மதங்கொளல் என்பனவாம்.*

சங்கப் புலவர் பாட்டியற்றி வாழ்தல்

30. ஆய வாறெண் புலவரு மாய்ந்துணர்
பாய கேள்விப் பயன்பெற மாட்சியாற்
றூய பாட றொடங்கினர் செய்துகொண்
டேய வாறிருந் தாரந்த வெல்லைவாய்.

தெளிவுரை : *அந்நாற்பத்தெட்டுப் புலவர்களும் தாம் ஆராய்ந்து பரந்த நூற் கேள்வியின் பயன் விளங்க மாண்புடனே தூயபாடல்களைத் தொடங்கிப் பாடிக்கொண்டு தம்மிச்சை வழியே இருந்தனர். அப்பொழுது.*

விளக்கவுரை : *சங்கப் புலவர் நாற்பத்தெண்மரும் தம் புலமை தோன்றப் பாடலியற்றி வாழலாயினர் என்பதாம். ஏயவாறு - தம் மிச்சை வழியே; இறைவனருளியவாறு என்றும் பொருள் கொள்ளலாம்.*

புலவர்களியற்றிய பாக்களின் சிறப்பு

31. பலருஞ் செய்த பனுவலு மாண்பொருண்
மலருஞ் செல்வமுஞ் சொல்லின் வளமையுங்
குலவுஞ் செய்யுட் குறிப்புமொத் தோன்றியே
தலைம யங்கிக் கிடந்தவத் தன்மையால்.

தெளிவுரை : *அப்புலவர் பலருஞ் செய்த பாட்டுக்கள் அனைத்தும் உரைகாண்போர் அறிவிற் கேற்றவாறு விரியும் மாட்சிமையுடைய பொருள் விழுப்பமும் சொல்வளப்பமும் செய்யுளிலே குறிப்பிற்றேன் றும் பொருளும் ஒரு நிகரவாகப் பொருந்துதலால் வேறுபாடு அறிய முடியாது கிடந்தன; அதனால்,*

விளக்கவுரை : *சங்கப் புலவர்கள் இயற்றிய பாடல்களனைத்தும் சொற்பொருள் வளத்தால் வேறுபாடு அறிய முடியாது திகழ்ந்தன என்பதாம். பனுவல் - பாட்டு. குறிப்பு - நோக்கு என்பர். கிடந்த - பலவின்பால் வினைமுற்று.*

புலவர்களுக்குள் தோன்றிய மாறுபாடு

32. வேறு பாடறி யாது வியந்துநீர்
கூறு பாட லிதுவென் றுங் கோதிலென்
தேறு பாட லிதுவென் றுஞ் செஞ்செவே
மாறு பாடுகொண் டார்சங்க வாணரே.

தெளிவுரை : *வேறுபாடு உணராமல் தம்முள் வியப்புற்று, 'நீர் கூறிய பாடல் இதுதான்' என்றும்; 'குற்றமில்லாத எனது தெளிநத பாடல் இதுதான்' என்றும், சங்கப் புலவரகள் ஒருவருக் கொருவர நேரே மாறுபாடு கொண்டனர்.*

விளக்கவுரை : *சங்கப் புலவர்கள், தாமியற்றிய பாடல்கள் ஒவ்வொன்றும் சிறந்து விளங்குதலால, தாம் தாம் இயற்றியவற்றை யும் அறிய முடியாமல் தமக்குள் மாறு கொண்டனர் என்பதாம். செஞ்செவே - செவ்வையாக; நன்ருக. வாணர் - 'வாழ்நர்' என்பதன் மரூஉ.*

இறையனுர் புலவர்களுக் கிடையில் புலவராய்த் தோன்றுதல்

33. மருளு மாறு மயக்கற வான்பொருள்
தெருளு மாறுஞ் செயவல்ல கள்வர்சொற்
பொருளு மாமது ரேசர் புலவர்முன்
அருளு நாவல ராய்வந்து தோன்றினர்.

தெளிவுரை : *மயங்குமாறும் அம்மயக்கம் நீங்க உண்மைப் பொருள் தெளியுமாறும் செய்தற்கு வல்ல கள்வரும்* **சொல்லும் பொரு ளுமாம் மதுரேசருமாகிய** *சோமசுந்தரக் கடவுள் அப்புலவர்கள் முன் அருளுகின்ற ஒரு புலவராய் வந்து தோன்றினர்.*

விளக்கவுரை : *சங்கப் புலவர்கள் மாறுபாடு நீங்குமாறு சோம சுந்தரக் கடவுள் அவர்கள் முன் புலவராய்த் தோன்றினர் என்பதாம்.*

இறைவர் முன் புலவர்கள் தத்தம் பாடல்களை வைத்தல்

34. வந்த நாவலர் வந்திக்கு நாவலர்
சிந்தை யாகுலஞ் செய்ய மயக்குறும்
பந்த யாப்பைக் கொணர்கெனப் பாவலர்
எந்தை யீங்கிவை யென்றுமுன் னிட்டனர்.

தெளிவுரை : *அங்ஙனம் வந்த நாவலராகிய இறைவர், தம்மை வணங்கும் புலவர்களின் மனம் வருந்த, மயக்கும் தளையமைந்த செய்யுட்களைக் கொண்டு வருவீராக என்று கட்டளையிட அப்புலவர்கள், 'எமது தந்தையே இங்குள்ள இவையே' என்று அவற்றைக் கொண்டு வந்து திருமுன் வைத்தனர்.*

விளக்கவுரை : *இறையனாராகிய புலவர்முன் சங்கப் புலவர்கள் தத்தம் பாடல்களை வைத்தனர் என்பதாம். வந்த நாவலர் - சோமசுந்தரக் கடவுள், ஆகுலம் - வருத்தம். பந்த யாப்பு - தளையமைந்த செய்யுள்.*

இறையனார் அவரவர் பாடல்களை எடுத்துக் கொடுத்தல்

35. தூய சொல்லும் பொருளின் றொடர்ச்சியும்
ஆய நாவல ரவ்வவர் தம்முது
வாய பாடல் வகைதெரிந் தவ்வவர்க்
கேய வேயெடுத் தீந்தன ரென்பவே.

தெளிவுரை : *தூய சொல்லும் தொடர்ந்த பொருளுமாகிய அந்நாவலர் பெருமான், அவ்வப் புலவர்களின் பொருள் முதிர்ச்சி வாய்ந்த பாடல்களின் வேறுபாடுகளை அறிந்து அவ்வவர்களுக்கு மனம் பொருந்துமாறு எடுத்து அளித்தனர்.*

விளக்கவுரை : *சிவபெருமான் சங்கப் புலவர்கள் செய்யுட்களை ஆராய்ந்து அவ்வவர் செய்யுட்களை அவரவர் கையில் கொடுத்தருளினார் என்பதாம். இறைவன் சொல்லும் அவற்றின் பொருளின் தொடர்ச்சியுமாய் விளங்குபவன் என்பது பலவிடங்களில் உணர்த்தப் பட்டுள்ளது போலவே ஈண்டும் கூறப்பட்டுள்ளது என்க.* **முது வாய பாடல்** *- முதிர்ந்த (தேர்ந்த) வாயிடத்திலிருந்து தோன்றிய பாடல் என்று பொருள் கொள்ளலும் ஆம். என்ப - அசை.*

இறைவனாரையும் சங்கப் பலகையில் இருத்தல்

36. வாங்கு சங்கப் புலவர் மனங்களித்
தீங்கு நீரெம ரோடு மொருத்தராய்
ஓங்கி வாழ்திரென் றெல்லெனத் தங்களைத்
தாங்கு செம்பொற் றவிசி லிருத்தினார்.

தெளிவுரை: *அவற்றை வாங்கிய சங்கப் புலவர்கள் மன மகிழ்ந்து, 'நீர் எம்முடன் ஒருவராய் இங்குச் சிறந்து வாழ்வீராக' என்று கூறி, விரைந்து தங்களைத் தாங்குகின்ற சிவந்த பொன்னு லாகிய பலகையில் இருத்தினார்கள்.*

விளக்கவுரை: *புலவர்கள் இறையனாரையும் தம்முடனிருக்க வேண்டிச் சங்கப் பலகையில் இருக்கச் செய்தனர் என்பதாம். எமரொடு - எம்மவரோடு, ஒல்லென - விரைவுக் குறிப்பு,*

புலவர்கள் நடுவில் இறையனார் வீற்றிருத்தல்

37. பொன்னின் பீடிகை யென்னும்பொன் னாரமேல்
துன்னு நாவலர் சூழ்மணி யாகவே
மன்னி னார்நடு நாயக மாமணி
என்ன வீற்றிருந் தார்மது ரேசரே.

தெளிவுரை: *பொற்பலகை என்னும் பொன்னாரத்தில் பொருந் திய நாற்பத்தெண் புலவரும், சுற்றிலும் பதித்த மணிகளாக இருந் தனர்; சோமசுந்தரக் கடவுள பெருமை பொருந்திய நடுநாயகமணி என்னுமாறு வீற்றிருந்தனர்.*

விளக்கவுரை: *இறையனார் சங்கப் புலவர்கள் விரும்பியவாறு சங்கப் பலகையில் தலைவராக வீற்றிருந்தார் என்பதாம். நாயகமணி - தலைமை மணி.*

புலவர்கள் வாழ்க்கை

38. நதிய ணிந்தவர் தம்மொடு நாற்பத்தொன்
பதின்ம ரென்னப் படும்புல வோரெலாம்
முதிய வான்றமிழ் பின்னு முறைமுறை
மதிவி ளங்கத் தொடுத்தவண் வாழுநாள்.

தெளிவுரை: *கங்கையை தரித்த இறைவரோடும் நாற்பத் தொன்பதின்மரென்று கூறப்படும் புலவர்களனைவரும் மீண்டும் தொன்மையுஞ் சிறப்புமுடைய தமிழ்ப் பாக்களை முறை முறையாகக் கற்போர்க்கு அறிவு விளங்கத் தொடுத்து அங்கு வாழும்போது,*

விளக்கவுரை: *சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் அருந்தமிழ்ப் பாக்கள் பலவற்றை இயற்றியளித்து வாழ்ந்து வந்தனர் என்பதாம். மதிவிளங்க - தம் புலமை விளங்குமாறு எனறும் பொருள் கொள்ளல் பொருந்தும். வான்தமிழ் - பெரிய முத்தமிழ். தொடுத்து - நூல்கள் செய்து.*

வங்கிய சேகரன் சிவபதம் அடைதல்

39. வங்கிய சேகரன் வங்கிய சூடா மணிதன்னைப்
பொங்கிய தேசார் முடிபுனை வித்துப் புவிநல்கி
இங்கியல் பாச வினைப்பகை சாய விருந்தாங்கே
சங்கியல் வார்குழை யானடி யொன்றிய சார்புற்றான்.

தெளிவுரை : வங்கிய சேகர பாண்டியன், வங்கிய சூடாமணிக்கு விளங்கிய ஒளி நிறைந்த முடிசூட்டி, புவியாட்சியை அளித்து, இம்மையில் அமைந்த வினைப் பாசம் என்னும் பகைமை கெட இருந்து, மறுமையிற் சங்கினாலமைந்த நீண்ட குழையினையுடைய சிவபெருமான் திருவடியிற் கலத்தலாகிய வீடு பேற்றை அடைந்தனன்.

விளக்கவுரை : மதுரேசர் அருளால் குறைவற வாழ்ந்த வங்கிய சேகர பாண்டியன் தன் மகன் வங்கிய சூடாமணிக்கு அரசாட்சியை அளித்துவிட்டுச் சிவபதமடைந்தான் என்பதாம் வங்கிய சூடாமணி தன்னை - ஐயுருபைக் குவ்வுருபாகத் திரிக்க. உருபு மயக்கம். பாச வினை - வினைக்கயிறு. சார்பு - வீடுபேறு.

பயிற்சி வினாக்கள்

1. சங்கப் புலவர்கள் நாற்பத்தெட்டுப் பேராகத் தோன்றிய வரலாற்றைத் தெரிவிக்க.
2. "யான் இந்த மானிட யோனிப்பட்டு மயங்குகோ" - இடஞ்சுட்டி விளக்குக.
3. அத்தகு வருணமெல்லாம் ஏறி நின்று அவற்றவற்றின் மெய்த்தகு தன்மையெய்தி வேறு வேறு இயக்கம் தோன்ற உய்த்திடு மகாரத்திற்கு முதன்மையாய் யொழுகுநாதர்-இப்பகுதியை நயந்தோன்ற விளக்கி வரைக.
4. நாற்பத் தெண்மரின் பக்திச் சிறப்பையும் புலமைச் சிறப்பையும் புலப்படுத்துக.
5. மறையினூறு ஒழுகும் பன்மாண் கலைகள் போல் - இந்த உவமை எதனை விளக்க வந்தது ?
6. புலவர்க்குரிய அவைக்களக் கிழமை யாவை ?
7. புலவர்கள் சோமசுந்தரக் கடவுளிடம் சங்கப் பலகை தருமாறு வேண்டியதேன் ?
8. சங்கப் பலகையின் பெருமையை விளக்குக.
9. உரை செய்வோருக் கெல்லாம் சுருங்கி நின்று அகலம் காட்டித் தோன்றும் நூல்-இவ்வுவமையை விளக்கி உவமேயத்தோடு பொருத்துக.
10. சங்கப் புலவர்களின் வாதத் திறமையைப் பரஞ்சோதி முனிவர் எங்ஙனம் புலப்படுத்தியுள்ளார்?
11. சங்கப் புலவர்களுக்கிடையில் ஏற்பட்ட மயக்கம் யாது ? அதை இறையனார் எங்ஙனம் தீர்த்தார் ?

4. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

கதைச் சுருக்கம்

நந்தவனத் திருப்பணி செய்த வங்கிய சூடாமணி: *மதுரையை ஆண்ட மன்னர் மன்னனாகிய வங்கிய சூடாமணி என்னும் பாண்டியன் சோமசுந்தரக் கடவுளை மலர்களால் அருச்சிக்க விரும்பி நந்தவனத் திருப்பணி செய்யலானான். காலை நண்பகல் மாலை என்னும் முக்காலத்திலும் எண் திசையும் மணங்கமழ வண்டுகள் தேன் உண்டு இசை பாடுதற்குரிய மலர்தரும் குருக்கத்தி, பாதிரி, ஆத்தி, வில்வம், மந்தாரை, மல்லிகை, முல்லை, மகிழ், கோங்கு, கொன்றை, கரந்தை, அலரி, நந்தியாவட்டம், தாமரை, நீலம் முதலிய பலவகை மரம் செடி கொடிகள் நிறைந்த நந்தவனத்தினை உண்டாக்கினான். மற்றும் சண்பகமலர் தரும் நந்தவனமும் தனியாக அமைத்தான்.*

சண்பக சுந்தரர் - சண்பக மாறன் : *பாண்டியன் தான் வைத்த சண்பகவனம் மங்கல மகளிர் பொன்னணி பூண்டதுபோல் அழகுற்று விளங்கி, அரும்புகள் முறுக்கவிழ்ந்து நறுமணத்துடன் மலர்ந்து விளங்குவதைக் கண்டான். வண்டு மொய்க்காத அச்சண்பக மலர்களைக் கொய்து நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்து இண்டை, தொடை, தாமம், கண்ணி முதலிய பல மாலைகளைத் தொடுத்து இறைவனுக்கு அணிவித்து மகிழ்ந்தான். சண்பகமாலை யணிந்த இறைவனின் அழகிய கோலத்தைக் கண்டு, இவர் சண்பக சுந்தரர் என்று சொல்லி வணங்கலானான். அன்று முதல் சோமசுந்தரருக்குச் சண்பகசுந்தரர் என்ற திருப்பெயர் வழங்கலாயிற்று. இங்ஙனம் வணங்கிய வங்கிய சூடாமணி பாண்டியனும் அன்று முதல் சண்பக பாண்டியன் என்று பெயர் வழங்கப் பெற்றனன்.*

இளவேனில் வருகை : *சண்பக பாண்டியன், சண்பக சுந்தரரிடத்து நீங்கா அன்புடையவனாய்த் திருப்பணி செய்துவரும் காலத்தில் இளவேனிற் காலம் வந்தது. அக்காலம் மிகவும் வெம்மையுற்று விளங்கியது. மக்கள் வெப்பத்தைப் போக்கும் இளந்தென்றலும் தன் வெப்பம் தீர்க்க வேறு இளந்தென்றலையும், சோலை வேறு சோலையையும், தடாகம் வேறொரு தடாகத்தையும், சந்திரன் வேறொரு சந்திரனையும் விரும்புமாறு அமைந்த அவ்வேனிலின் வெப்பம் விளம்புதற்கு அரியது.*

வேனிற் கால வருணனை ; *இக்காலத்தில் வானளாவ நின்ற மாமரங்கள் செந்தளிர்களைப் பரப்பி வானிலுள்ள கற்பக மரங்களைச் சீறிச் சிவந்து எழுந்தாற்போல் நின்றன. செருந்திகள் அனைத்தும் வண்டுகளிடையே தங்கும்படி பூத்து நீலமணி பதித்த காதணிபோல மலர்ந்தன. முள்முருக்குகள் சூரியனைப் போலச் செந்நிற மலர்களையும், காஞ்சி மரங்கள் இந்திரனைப் போலக் கருநிற மலர்களையும், வெண்கடம்புகள் சந்திரனைப் போல வெண்ணிற மலர்களையும், காயாஞ் செடிகள் திருமாலைப் போல நீல மலர்களையும் மலர்ந்தன.*

வையைக் கரையாகிய பெண், மணல் மேடாகிய இடையில் மேகலை அணிந்தாற்போல, மகரந்தம் சிந்தும் குங்கும மரங்கள் மலர்ந்து விளங்கின. புன்னை மரங்கள் மரகதம் போன்ற இலைகள் தழைத்து முத்துக்கள் போன்ற மொட்டுக்களைத் தோற்றுவித்துப் பொன் போன்ற பூக்கள் மலர்ந்து பவளம் போன்ற மகரந்தத்தைச் சிந்தின.

மரங்கள். ஊடிய மகளிர் போல, இலைகளை உதிர்த்துத் தலைவரைக் கூடிய மகளிர் போலத் தழைத்து பிரிந்து வாழும் மகளிர்போல உடல் பசந்து, காம மயக்கம் கொண்ட மகளிர், பெறும் பழிச்சொல் போல மலர்ந்து திகழ்ந்தன. மரங்களைச் சுற்றி நிற்கும் கொடிகள் கோடை வெப்பத்தால் மரங்கள் வாடும்போது தாமும் வாடியும் தழைக்கும்போது தாமும் தழைத்தும் நின்றன. தென்றற் காற்றினால் தேன் துளிக்க வண்டுகள் பாடச் சாய்ந்து ஆடும் பூங்கொம்புகள், நாட்டியப் புலவன் ஆட்டுவிக்க வியர்வை சிந்தப் பாடி ஆடுகின்ற நாட்டிய மகளிரை ஒத்தன. (வண்டுகள் மொய்த்துத் தேன் உண்ணுமாறு வாடித் தரையில் கிடக்கும் செவ்வந்தி மலரும், மகிழ மலரும், தம்பால் இல்லையென்று வந்தோர்க்குத் தம் உயிரை மாறியாவது கொடுக்கும் நல்லோர் போன்று கிடந்தன) ஆண் குயில்கள் மாந் தளிர்களைக் கோதி பெட்டைகளைக் கூவி உருகச் செய்தன. அவ் விளவேனிலில மயில்களெலலாம் ஒடுங்கின.

தென்றல் வருகை : தென்றற் காற்று, பலரிடமும் சென்று பல கலைகளையும் ஆராய்ந்து உணரும் அறிவுடைய மாணவன் போல, சோலை பொய்கை முதலியவற்றிலுள்ள மலர்களைத் துழாவி, பலவகை மலர்ப்பந்தலிலே படிந்து அம்மலர்களின் மணங்களைக் கவர்ந்து குளிர்ச்சியுடன் மெல்லென உலாவும்.

வேனிலான் அரசாட்சி : பூஞ்சோலைத் தாமரை காளாஞ்சி தாங்க, குயில் முழவொலிக்க, கிளி மங்கலம் கூற, வண்டுகள் பாட, தாழை வாளேந்த வேனிலான் முடிசூடி வீற்றிருந்தான்.

ஆடவர் கோடையில் இளைப்பாற்றுமிடம் : இவ்விளவேனிலில் ஆடவர் கோடை வெப்பாற்றிய இடங்கள் சந்திரகாந்த மண்டபம், செய்குன்றம், சித்திர மண்டபம், செறிந்த சோலைகள், தாமரைத் தடங்கள், மங்கையர் கொங்கைகள் என்பனவாம்.

மக்கள் பூம்பொழிலைச் சார்தல்: ஆண்கள், யானை, குதிரை, தேர் இவற்றின் மீது முறையே ஏறிச் செல்லும் சிங்கம், யானை, சூரியனைப் போலச் சென்றனர். சிலர் நடந்தும் சென்றனர். பெண்கள், யானைகள், முத்துச் சிவிகைகள் குதிரைகள் மீதும், தங்கள் காதலர்களின் கையைப் பிடித்துக் கொண்டும் சென்று, வையையின் வெண் மணற் குன்றுகளின் புறத்திலுள்ள சோலைகளை அடைந்தனர். யானை, குதிரைகளிற் சென்ற பெண்கள், தமது கணவர்கள் தோள் தர இறங்கி, வனமங்கையர்போலச் சென்றனர். அவர்கள் மாதவிப்பந்தர், புன்னைமரம், தேமா, செருந்தி, தாழை ஆகியவற்றின் நிழல்களில் தங்கினர். மங்கையர் கூந்தலை முகிலென்று கருதியாடும் மயில்கள் அவர் கண்களை அம்பெனக் கண்டு அஞ்சி ஓடின. அவர் உருவத்தை மாந்தளிர் என்று எண்ணி உண்ணச் சென்ற குயில்கள், அவர் பண்ணொலி கேட்டு நாணின. குவளை, ஆம்பல், தாமரை என்பன கொம்பு

களில் பூத்தாற் போன்ற பெணகள் தொகுதியால், சோலைகள் சிறந்து விளங்கின. ஆடவரும் மகளிரும் கொடி வீடுகளைச் சார்ந்து பனிநீர் தெளித்து வெம்மையாற்றிக் கொண்டு தளர்ச்சி நீங்கி மலர் கொய்யப் புகுந்தனர்.

மலர் பறித்து விளையாடி மகிழ்தல் : மகளிர் சிலர் மலர்க் கொம்புகளை வளைத்து மலர் பறித்து அணிந்து கொண்டு மகிழ்வர் ; தத்தம் கணவர் மார்பில் மலர்களைப் பறித்து எறிவர். அக்கொம்புகளிலிருந்த வண்டுகள் பெணகளின் கூந்தலிற் புகுந்து ரீங்காரம் செய்து தேன் பருகின.

அம்மகளிர் வளைக்க வளைந்து அவரடிகளில் மலர் சிந்திக் கள்ளாகிய நீரைப் பொழிந்து, கொம்புகளும் அவர்களை வழிபட்டன என்றால், ஆடவர்களின் தன்மையை என்னென்பது! ஆகவே, இவ்வுலகில் வீடுபேறு அளிக்கும் தெய்வம் மகளிரே என்பார் கூற்றும் மெய்யே யன்றோ !

கொம்பில் மலர் பறிக்க முடியாது சோர்ந்து நின்ற மங்கையொருத்தியை அவள் காதலன் தன் தோளில் ஏற்றி மலர் கொய்வித்தான். அவ்வாறு நின்ற வேறொருத்தியை அவள் காதலன் அக்கொம்பை வளைத்துக் கொடுத்து, 'இதுவும் ஊடிய மகளிரோ' என்று பன்மைச் சொல்லால் கூற, அவள் ஊடிக் கண்முத்தரும்பி நின்றாள். காதலன் ஒருவன் பறித்த செருந்தி மலரைக் காதலியின் காதணியில் செருகி, 'இக்குழை அழகிது' என்று கூற, அவள், 'இதனை என் தங்கைக்கு இடுக' என்று வெகுண்டு அவற்றைப் பறித்து எறிந்தாள். மாமரத்திலுள்ள கூட்டுக்குச் செல்லும் பெண் குயில், ஆண் குயில் கூவி அழைத்தலைக் கண்ட ஒரு நங்கை, தன் காதலனைக் கண்ணால் நோக்கிக் குருக்கத்தி பந்தலைச் சார்ந்தாள். மலர் சிந்திய மகரந்தப் பொடி படிந்த மார்பை உடைய தலைவனைக் கண்டு ஊடிச் சினந்தாள் தலைவி ஒருத்தி. காதலியின் ஊடல் தணிய அவளடியில் வீழ்ந்து வணங்கிய தலைவனின் முடிமணியிலே, தன் நிழலைக் கண்ட தலைவி, அவனை இகழ்ந்து கூறி அவனுக்குத் துன்பம் விளைவித்தாள். மகளிர் மலர் கொய்ததனால் மலரற்ற சோலை, கைப்பொருளற்ற வறியவன் போல் காட்சியளித்தது.

பொய்கையில் நீராட்டம் ; மலர் பறித்து மகிழ்ந்த மங்கையர், தம் மணாளருடன் பொய்கையில் நீராடச் சென்றனர். அப்பொய்கையானது மகளிர் தன்னிடம் நீராடுதலால் நீலம், அல்லி, தாமரை மட்டுமேயன்றி முல்லை, சண்பகம், கோங்குகளையும் பூக்கப் பெற்றது போன்றிருந்தது. மகளிர் நீராடப் பொய்கையை அடையுமுன்னே அவர்கள் உறுப்புக்களை யொத்த கயல், வரால், ஆமை, பாம்பு, அன்னம், நண்டு ஆகியவை அஞ்சி ஓடின. வலியவர் போருக்கு வந்தால் மெலியவர் ஓடுதல் இயல்பே யன்றோ? பொய்கையிலுள்ள நீலம், தாமரை, ஆம்பல் ஆகிய மலர்கள் நீராடும் மகளிரது கண்கள், முகங்கள், வாய்களோடு மோதுங்கால் அவை தம்மில் போர் புரிதலை ஒத்தன.

நீராடிக் கரையேறிய தன் காதலியை அடையாளமறியாத ஓர் தலைவன் 'என் உயிரனையாள் எங்கிருக்கின்றாள்?' என்று கேட்க,

அவள் சினந்து கண்ணீர் விட்டு நின்றாள். கணவன் கைப்பற்றி நீராடச் சென்ற ஒரு பெண், அங்கு நீராடிக் கரையேறிய ஒரு பெண்ணை அவன் நோக்கியதும், 'என் தங்கையின் எச்சிலாகிய நீரில் யான் ஆடேன்' என்று கூறிக் கரையிலேயே நின்று விட்டாள். கணவனோடு ஊடிய ஓர் காதலி, ஆழமான நீரில் அழுந்துதலைப் போலப் பாசாங்கு செய்து அருகிலுள்ள அன்னத்தைக் கைகொடுக்குமாறு கெஞ்சினாள்.

ஆண்களும் பெண்களும் மணம் மிக்க சுண்ணம், கலவை, கத்தூரி ஆகியவற்றை எடுத்து, ஒருவர் மீது ஒருவர் வீசி விளையாடினர். அப்போது வண்டுகள் இடையில் செல்லும் நறுமணப் பொருளைப் பாய்ந்து உண்ணுதல், வழிப்பறி செய்வாரைப் போன்றன. நீலம், தாமரை முதலிய மலர்களை எடுத்து மன்மதனின் மலர்க்கணை போல ஒருவர்க் கொருவர் வீசிக் கொள்வர். அப்பொழுது அவற்றை எறிந்தவர் முகத்திலேயே படுமாறு செய்து ஒருவருக்கொருவர் நகைப்பர். பனிநீருடன் சுண்ணப்பொடியையும் அள்ளிவீசி விளையாடுவர். அச்சாந்தழியத் தூயநீரை அள்ளிவீசிக் கொள்வர். மகளிர் நீரைக் கொப்பளித்து உமிழ்ந்தும், ஆழத்தில் நீராடச் செல்லும் அணங்குகளை ஆடவர் அணைத்துக் கரையேற்றியும் ஆடவரும் மகளிரும் நீராட்டயர்ந்தனர்.

நீராடிய மகளிர் தம்மை அலங்கரித்துக் கொள்தல் : தம் உடலில் பூசிய கஸ்தூரி, சந்தனம், பூமாலை முதலியவற்றைப் பொய்கைக்கு அளித்த பெண்கள், தாமரை முதலிய மலர் மணங்கமழத் தத்தம ஆடவருடன் கரையேறினர். நனைந்த ஆடையால் உடல் உறுப்புத் தோன்றப் பெற்ற நங்கையர் சிலர், தம்தம் காதலரைக் கூவி, ஆடையளிக்கக் கேட்டுக் கண்ணனை துகில் அளிக்குமாறு கேட்ட இடைச் சிறுமியரை ஒத்தனர்.

மகளிரது செம்பஞ்சுக் குழம்பும், குங்குமமுங் கலந்தமையால் செந்நிறம் பெற்ற பொய்கைகள், நீராடிக் கரையேறியவர்க்கு அமைத்த ஆலத்தி எடுக்கும் வட்டக்கலத்தினைப் போன்றன. பொய்கையைச் சுற்றியுள்ள சோலைகள் மகளிரை ஒத்தன.

பட்டாடைகள், பலவித பருத்தி நூலாடைகள், பலவகை அணிகள் சந்தனம், கத்தூரி, குங்குமக் குழம்பு, பூமாலை ஆகியவை தங்கள் அழகு முழுவதையுங் கவர்ந்துகொள்ள, பெண்கள் தம் கணவன்மார் உள்ளமனைத்தையுங் கவர்ந்தனர்.

நீராடிய மகளிர் புது மது அருந்தல் : நீராடித தம்மை அலங்கரித்துக்கொண்டு வந்த மகளிர்க்கு, அவரவர் தோழிமார் பொன், வெள்ளிப் பளிங்கு முதலியவற்றாலாகிய கிண்ணங்களில் கூர்மையான வாளை நட்டாற்போல, புதுத்தேனை வார்த்துக் கொடுக்க, அவர்கள் ஒரு துளியைத் தொட்டுத் தெறித்து அம்மதுவைப் பருகுவார்கள். கட்குடம், தன்னிடத்துக்கொண்ட கள்ளினைச் சூறையாட வந்த கிண்ணம் இது என்று தன் மனத்தில் கோபம் கொண்டு கூரிய வாளை ஊன்றி அக்கிண்ணத்தைப் பிளப்பது போல கள்ளினை ஊற்றியது. வண்டுகள் அக்கிண்ணத்தைச் சூழ்ந்திருத்தல், அப்போர்த்தொழிலைக் காணபோரைப் போன்றிருந்தன. கள்ளுண்டு மயங்கிய ஒரு பெண்,

பொற் கிண்ணத்தில் வார்க்கப்படும் மதுத்தாரையை வாட்படை யென்று கருதிக் கிண்ணத்தை வாளால் சிதைக்கின்றாயோ? என்று கூறிச் சிரித்தாள். பலரிடமும் இரந்து அலேயும் வறியவர் புதையலைக் கண்டால், அதனை நீங்காமல் சூழ்ந்து நிற்றல் போல, பூக்கள்தோறும் மதுவினைத் தேடி உண்ணும் வண்டுகள் மதுக்குடத்தை மொய்ப்பன வாயின; மகளிர் கையால் ஓட்டவும் ஓடாமல் சூழ்ந்து மொய்த்தன.

மதுவுண்ட மகளொருத்தி, கிண்ணத்திலுள்ள மதுவில் தன் முகமும், கண்களும் தோன்றுவதைப் பார்த்து 'மதுக்கடலில் தாமரை முளைத்தது; அக்கடல் மதுவை உண்ணுமல் அம்மலர்த் தேனின் சிறு துளியை அடைய விரும்பிச் சுற்றுகின்றனவே இந்தப் பேதை வண்டுகள்!'' என்று கூறிச் சிரித்தாள். மற்றொருத்தி கையி லுள்ள மதுக்கிண்ணத்தில் வான்மதி பிரதிபலிக்க, அதைப் பார்த்து ''சந்திரனே! தலைவன் என்னைப் பிரிந்திருந்த காலத்தில் நீ என்னைச் சுட்டனை அல்லவா? என் கையில் அகப்பட்ட உன்னை விடமாட்டேன்; இங்கேயே கிட'' என்று சொல்லி அம்மதுவைப் பருகாது மற்றொரு கிண்ணத்தால் மூடி வைத்தாள்.

மதுவுண்ட மங்கை யொருத்தி சிவந்த கண்களும் வெளுத்த வாயுமாகத் தோன்றும் தன் முகத்தைக் கண்ணுடியில் பார்த்து, 'என் இன்பத்தைக் கொள்ளையிட்ட வஞ்சகன் யார்?' என்று சொல் லிக்கொண்டு அயலார் நகைக்கச் சோர்ந்தாள். கள்ளுண்டு மயங்கிய வேருெருத்தி, தன் வடிவத்தைக் கண்ணுடியில் பார்த்து, ''இங்கிருப் பது யார்? பிறர் என்னைக் கவர்ந்து ஓடினரோ! என் காதலன் தேடின் என் செய்வேன்? தோழி! என்னைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடு,'' என்று தன் தோழியை வேண்டினாள். கள்ளால் கலங்கிய காதலி யொருத்தி தன் காதலன் பின்னால் நிற்பதனால் தம் இருவர் உருவமும் கண்ணுடியில் தோன்றுவதைப் பார்த்துக் கண்ணீருடன் ''எவளையோ தழுவி இன்புறுகின்றாயே நீ'' என்று கண்ணுடியை உதைத்தாள்.

பின்னர் ஆடவரும் மகளிரும் இளம் புளிப்பினையுடைய சுவைமிக்க தயிர்ச்சோற்றை விருந்தினரோடு உண்பார்கள். பிறகு வசந்த காலத்துக்குரிய வீணையை வாசித்து வெண்ணெய்ப் பாவை போல உருகித் தளர்வார்.

சண்பக மாறன் தன் தேவியுடன் சண்பக வனம் சார்தல்: இத் தகைய இளவேனிற் காலத்திலே ஒருநாள் சண்பக பாண்டியன் தன் தேவியுடன் கோடை வெப்பத்தைப் போக்கும் பொருட்டு அச்சண் பக வனத்தில் ஒரு சந்திரக்காந்தக் குன்றிலிருந்தான்.

பாண்டியன் ஐயம்: அப்பொழுது பாண்டியனுக்கு நேரே நறு மணந் தோன்றும்படி தென்றல் காற்று மெல்லென வீசிற்று. பாண்டி யன் அம்மணத்தை உணர்ந்து, ''இது ஒரு திவ்ய வாசம்; தென்றற் காற்று சோலையில் கவர்ந்து வந்த வாசமன்று; காற்றுக்கு இயல்பில் மணமில்லை இம்மணம் எதனுடைய மணமோ?'' என்று எண்ணியவ னாய்த் தன் தேவியைத் திரும்பிப் பார்த்தான். அது தன் தேவியின் கூந்தலின் மணமாயிருத்தலைக்கண்டு இம்மணம் வண்டுக்கும் தெரி யாது'' என்று எண்ணி வியந்தவனாய், ''இம்மணம் கூந்தலுக்கு இயற்கையோ? செயற்கையோ?'' என்று ஐயம் கொண்டான்.

பாண்டியன் சங்க மண்டபத்தில் பொற்கிழி யொன்றைத் தொங்கவிடல் ; இவ்வாறு ஐயமுற்ற பாண்டியன், அரண்மனையை அடைந்து 'யான் ஐயுற்ற கருத்தை அறிந்து பாடல் செய்வோருக்கு இவ்வாயிரம் பொன் உரியது' என்று சொல்லி ஒரு பொற்கிழியை ஏவலாளன் மூலமாகச் சங்க மண்டபத்தின் முன்னே தொங்கவிடச் செய்தான். இச்செய்தியறிந்த சங்கப் புலவர்கள் யாவரும் தனித்தனியே ஆராய்ந்தும்' ஒன்றுகூடி ஆராய்ந்தும் அரசன் மனக் கருத்தறிய முடியாது வருந்தினர்.

தருமி சோமசுந்தரக் கடவுளிடம் முறையிடுதல் : இச்செய்தியறிந்த ஆதிசைவ அந்தணனொருவன்-தாய்தந்தையற்றவன், மாணவ நிலையினன், மணம் செய்து கொள்ளும் பெரு விருப்பமுள்ளவன், தருமி யென்னும் பெயரினன்—சோமசுந்தரக் கடவுள் திருமுன்பு அடைந்து, வணங்கி "எம்பெருமானே ! அடியேனுக்குத் தாயும் தந்தையும் இல்லை ; ஒரு பற்றுக் கோடு மற்றவன் ; விவாகத்தில் விருப்புடையவன் ; அதற்குரிய பொருளுமற்றவன் ; வேத சிவ ஆகமங்களைக் கற்றவன் ; இல்வாழ்க்கையின்றி நின்னை அருச்சிப்பதற்கு உரிமையற்றவன் ; இவ்வாறு யான் ஆவதா ? எனவே, ஐயனே ! எல்லாம் வல்ல நீர் பாண்டியன் மனக்கருத்தறிந்து அடியேன் உய்யுமாறு ஒரு செய்யுள் செய்து தந்தருளும்" என்று விண்ணப்பித்தான்.

சோமசுந்தரர் தந்த செந்தமிழ்ச் செய்யுள் : அடியார்க் கிரங்கியருளும் ஆலவாய் அழகர் தருமியின் குறை முடிக்கக் கருதி,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி !
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே ?"

என்னும் செய்யுளை செய்து கொடுத்தருளினர்.

தருமி செய்யுளுடன் பாண்டியனை அடைதல் ; தருமி இறைவனை வணங்கி, இச்செய்யுளைப் பெற்றுக் கொண்டு போய்ச் சங்க மண்டபத்தினை அடைந்து புலவர்களிடம் அச்செய்யுளை நீட்டினன். அவர்கள் அதனை வாங்கிப் படித்தறிந்து சொற்சுவை, பொருட்சுவைகளை ஆராய்ந்தறிந்து, பாண்டியன் எதிரே போய் அப்பாட்டைச் சொன்னார்கள். அச்செய்யுள் தன் உள்ளக் கருத்திற்கு ஒத்திருத்தலால், தலையசைத்து மனமகிழ்ந்து 'இதனைக் கொண்டுவந்த அந்தணன் இப்புலவர்களோடு சென்று அவ்வாயிரம் பொன்னையும் கைக்கொள்வானாக" என்றான்.

நக்கீரர் தடைசெய்தல் : அரசன் ஏவலினாலே தருமி, புலவர்களோடு போய்ச் சங்க மண்டபத்தின் முன்னே தொங்கிய பொற்கிழியை அறுக்கும்போது அவனை யணுகிய நக்கீரன் "அறுக்காதே நில் !" என்று தடுத்து, அச்செய்யுளில் குற்றமுள்ளதாகவும் கூறினன்.

தருமி இறைவனிடம் முறையிடுதல்: உடனே தருமி ஏக்கமுற்று, இறைவனையடைந்து அச்செய்யுளை அவர்முன் வைத்து 'எம்பெருமானே! ஏழையேனுக்கு இப்பிழைபட்ட பாடலைத் தந்ததேன்? வறுமை நோயினால் வருந்திப் பலநாள் வழிபடும் உன் அடியான், உம்மால் இப்பொழுது பெற்ற பொருளையும் இழக்க நேர்ந்ததே என்று குற்றம் கூறவில்லை. யாவருக்கும் மேலோனாகிய உமது செய்யுளுக்குச் சில் வாழ்நாள் சிற்றறிவினையுடைய புலவர் குற்றம் கூறுவராயின் உம்மை மதிப்பவர் யார்? இவ்விகழ்ச்சி உமக்கேயலலது எமக்கேது?" என்று பெரிதும் மனக்கவலையுள்ளவனாய் வருந்தி நின்று இரங்கினன்.

இறையவனார் தோற்றமும் நக்கீரர் வாதமும்: அப்பொழுது சோமசுந்தரக் கடவுள், ஒரு புலவர் வடிவங்கொண்டு புறப்பட்டார். அவர் மகர கண்டிகை, பதக்கம், குண்டலம், மோதிரம் முதலிய அணிகளை அணிந்து, முத்தமிழில் வல்லன் யான் என்பதைக் காட்டுவதுபோல திருநீற்றை நெற்றியின் மீது மூன்று கோடுகளாக புலப்படும்படி தரித்துக் கால்களிலே பாதுகை அணிந்து கொணடு, முத்துக்குடை நிழல் செய்ய, வெண்சாமரம் வீச, கற்றுச்சொல்லிகள் பின்னே வர, சங்க மண்டபத்தை அடைந்தார். பின்னர் அங்கிருந்த புலவர்களைப் பார்த்து எமது செய்யுளுக்குக் குற்றம் கூறினவர் யார்?' என்றார். உடனே, நக்கீரர் சிறிதும் அஞ்சாது, 'நானே குற்றம் கூறினேன்' என்றான். அதனைக் கேட்ட புலவர், 'யாது குறறம்?' என்று கேட்க, நக்கீரன், 'சொற்குற்ற மில்லை; பொருட்குற்ற முடையது' என்றான். 'பொருட்குற்றம் யாது?' எனக்கேட்ட புலவர்க்குப் பின் வருவதை யறியாத நக்கீரன், 'கூந்தலுக்கு வாசனை பூவின் சார்பாகிய செயற்கையாலன்றி இயற்கையாக மணமில்லை' என்றார். புலவர், 'பதுமினியினுடைய கூந்தலோ?' என, 'அதுவும் அத்தன்மைத்தே' என்றான். புலவர், 'தேவ மகளிரின் கூந்தலோ?' என, நக்கீரன், 'அதுவும் மந்தார நறுமலர்களால் மணங்கமழும் தன்மையினால் செயற்கை மணமுடையதே' என்றான். புலவர், 'நீ துதித்து வழிபடும் திருக்காளத்தியப்பருடைய சக்தியாகிய ஞானப் பூங்கோதையாருடைய கூந்தலும் அத்தன்மையதோ?' என, நக்கீரன், 'அதுவும் அத்தன்மையதே' என்றான். உடனே புலவர், நெற்றிக் கண்ணைச் சிறிது காட்ட, நக்கீரன் அதற்கும் அஞ்சாது, 'இந்திரன் போல உமக்கு உடல் முழுவதும் கண்கள் ஆனாலும் உமது பாடல் குற்றமே' என்றான்.

இறையனார் மறைவு: அப்பொழுது நக்கீரன் சிவபெருமானது நெற்றிக் கண்ணினுடைய தழல் வெப்பத்தினால் பொறுக்கமாட்டாது பொற்றாமரைப் பொய்கையிலே சென்று வீழ்ந்து அழுந்தினன். புலவர் வடிவுடன் வந்த இறையனார் திடீரெனத் திருவுருக் கரந்தருளினார்.

தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடல்

1. சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுபீடம்
அற்குவை கண்டத் தண்ணல ளித்த தறைந்தேமால்
தற்குவை தந்தா லுய்குவ லென்னுந் தருமிக்குப்
பொற்குவை நல்கும் வண்ணமெ டுத்துப் புகல்கிற்பாம்.

தெளிவுரை: *சொற் கூட்டங்களை ஆராய்ந்து தெளியும் புலவர்கள் தங்குவதற்குச் சங்கப் பலகையைச் செறிந்த இருளையுடைய திருமிடற்றினையுடைய இறைவன் தந்தருளியதைக் கூறினேம்; தனக்கு 'அப்பொற்கிழியிலுள்ள காசுகளை அளித்தாற் பிழைப்பேன் என்று வேண்டுந் தருமிக்கு அப்பொற்காசுகளை ஈந்தருளிய திருவிளையாடலை இனி விதந்து கூறுவோம்.*

விளக்கவுரை: *சோமசுந்தரக் கடவுள் சங்கப் புலவர்களுக்குச் சங்கப் பலகை தந்த திருவிளையாடல் கூறப்பட்டது. இனி, தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடலைக் கூறியவாறு என்பதாம்,* **சொற்குவை தேரும்பாவலர்:** *புலவர்கள் தமிழ் மொழிக்குரிய பெயர்வினை இடையுரிச்சொற்கள், திசைச்சொல், வடசொற்கள் முதலியவற்றின் வெளிப்படைச் சொல் குறிப்புச்சொல், ஆக்கச்சொல் முதலியவற்றை ஆய்ந்து பாக்களியற்றுவோராதலின் இங்ஙனம் குறிக்கப்பட்டனர் என்க.* **தொகுபீடம்** *- சங்கப் பலகை; பலர் தொகுதியாக இருக்கும் பீடமாதலின் இப்பெயர் பெற்றது.* **அல் குவை** *கண்டத்து அண்ணல் - நீலகண்டன்; சிவபெருமான். தற்கு* **உவை:** *இச்சுட்டு பொற்கிழியிலுள்ள காசுகளைச் சுட்டியது; சுட்டடியாகப் பிறந்த பலவின்பாற் பெயர்.* **உய்குவல்** *- தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று.* **ஆல்** *- அசை.*

பாண்டியன் நந்தவனம் அமைத்தல்

2. மன்னவர் மன்னன் வங்கிய சூடா மணிமாறன்
தென்னவ ராகித் திகிரியு ருட்டுந் தென்கூடல்
முன்னவ ரன்னங் கண்டறி யாத முடிக்கேற்றப்
பன்மலர் நல்கு நந்தனம் வைக்கும் பணி பூண்டான்.

தெளிவுரை: *வேந்தர் வேந்தனாகிய வங்கிய சூடாமணி பாண்டியன், சுந்தர பாண்டியராய் ஆக்கினை சக்கரஞ் செலுத்திய தென்றிசைக் கண்ணதாகிய நான் மாடக்கூடலில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் பிரமனாகிய அன்னப் பறவை காணாத திருமுடிக்குப் பொருந்த, பல மலர்களைக் கொடுக்கும் திருநந்தவனம் வைத்தலாகிய திருப்பணியை மேற்கொண்டான்.*

விளக்கவுரை: *வங்கிய சூடாமணி பாண்டியன், சோமசுந்தரக் கடவுளுக்குரிய மலர் வழங்கும் நந்தவனம் அமைக்கலானான் என்பதாம். இறைவன் தடாதகைப் பிராட்டியை மணந்து பாண்டியனுக்கு மருகனாகிச் சுந்தரபாண்டியன் என்னும் பெயருடன் மதுரையைக் அரசாட்சி செய்தனர் என்பது மதுரையைக் காண்டச் செய்தியாகும், நந்தனம் -நந்தவனம் என்பதன் மரூஉ; மகிழ்வு தரும் பூஞ்சோலை.*

நந்தவனத்திலிருந்த பலவகை மலர்ச் செடிகள்

3. மாதவி பாதிரி தாதகி கூவிள மந்தாரந்
தாதவிழ் மல்லிகை முல்லையி லஞ்சி தடங்கோங்கம்
வீதவழ் கொன்றை கரந்தைசெ ழுங்கர வீரந்தண்
போதவிழ் நந்தி செருந்திகு ருந்தம் புன்னாகம்.

தெளிவுரை : *குருக்கத்தியும், பாதிரியும், ஆத்தியும், வில்வமும், மந்தாரமும், மகரந்தத்தொடுமலர்ந்த மல்லிகையும், முல்லையும், மகிழும், பெரிய கோங்கும், வண்டுகள் மொய்க்கும் கொன்றையும், கரந்தையும், வளவிய அலரியும், தண்ணியபோது விரிந்த நந்தியா வட்டமும், செருந்தியும், குருந்தமும், புன்னைகமும்.*

விளக்கவுரை : *பாண்டியன் நந்தவனத்தில் மலர்தரும் மரம் செடி கொடிகளைப் போற்றி வந்தான் என்பதாம். தாதகி - ஆத்திமரம். கூவிளம் - வில்வமரம்.*

சண்பக வனம் அமைத்தல்

4. முண்டக மென்கடி நீலமு தற்பல முப்போதும்
எண்டிசை யுங்கம ழும்படி நந்தன மெங்குந்தேன்
உண்டிசை வண்டு படிந்துழு ரன்றிட வுண்டாக்கி
வண்டிமிர் சண்பக நந்தன முந்தனி வைத்தானல்.

தெளிவுரை : *தாமரையும், மெல்லிய மணமுள்ள நீலோற்பலம் முதலாகிய இவை முதலிய பல மலரும், மூன்று காலத்தும் எட்டுத் திக்குகளிலும் மணங்க மழுமாறு, திருநந்தவனத்தினை எங்கும் தேனிற் படிந்து அதனைப் பருகி வண்டுகள் இசைபாட ஆக்குவித்து, வண்டுகள் ஒலிக்கும் சண்பக நந்தவனமும் தனியே வைத்தான்.*

விளக்கவுரை : *பாண்டியன் பல்வகை மலர்களையுடைய நந்தவனம் அமைத்ததுடன் சண்பகவனம் ஒன்றும் தனியே அமைத்துப் போற்றி வரலானன் என்பதாம். காலை, நண்பகல், மாலை என்பன முப்போதெனக் குறிக்கப்பட்டது.*

செண்பக வனம் செழித்து மலர்தல்

5. பொய்த்திடு நுண்ணிடை மங்கல மங்கையர் பொன்பூண்டார்
ஒத்தெழு சண்பக மொய்த்தவ ரும்ப ருடைந்தெங்கும்
வைத்திடு நந்தன வாசம்வி ழுங்கி மணங்கான்று
பைத்து மலர்ந்தன கண்டும கிழ்ந்து பரித்தேரான்.

தெளிவுரை : *இளைத்த நுண்ணிய இடையினையுடைய மங்கல மகளிர் பொன்னணி பூண்டதையொத்து, மேலெழுந்த சண்பகங்கள் நெருங்கிய அரும்படைந்து வேறெங்கும் வைத்த நந்தவனத்தின் மணத்தைத் தன்னுட்படுத்தி மணம் வீசிப் பசந்து மலர்ந்தன; குதிரை பூட்டிய தேரையுடைய பாண்டியன் அதனைக் கண்டு மகிழ்ந்து;*

விளக்கவுரை : *வங்கிய சூடாமணி பாண்டியன் அமைத்த சண்பக நந்தவனம், அழகிய இளம் பெண்கள் பொன்னணி பூண்டதையொத்து அழகுடன் விளங்கிற்று. பாண்டியன் அதிலுள்ள மரங்கள் அரும்பி மலர்ந்து மணமிக வீசியதைக் கண்டு மகிழ்ந்தான் என்பதாம். இடை உண்டோ இல்லையோ என்னுமாறுள்ள இளமங்கையர் என்பார், 'பொய்த்திடு நுண்ணிடை' என்றார். அரும்பர் - குற்றியலுகரத்திற்கு அர் போலி. பைதது - குறிப்பு வினையெச்சம்.*

பாண்டியன் இறைவனுக்குச் செண்பகமலரணி செய்தல்

6. செருக்கிய வண்டு விழாமலர் கொய்து தெரிந்தாய்ந்து
நெருக்கிய விண்டை நிரைத்தொடை தொங்க னெடுந்தாமம்
மருக்கிளர் கண்ணி தொடுத்தணி வித்து வணங்காரூர்
கருக்கிய கண்ணுத லார்திரு மேனி கவின்செய்தான்.

தெளிவுரை : *கள்ளுண்டு களித்த வண்டுகள் மோவாத மலர்களைக் கொய்து, குற்றமில்லன தெரிந்து, காம்பு முதலியன ஆய்ந்து நெருங்கத் தொடுத்த இண்டையும், வரிசையாகிய தொடையும், தொங்கலும், நெடிய தாமமும், மணம் வீசும் கண்ணியும் ஆகிய பலவகை மாலைகளைத் தொடுத்து அணிவித்து, பகைவரின் திரிபுரத்தை எரித்து. நீருக்கியநெற்றிக் கண்ணையுடைய சோமசுந்தரக் கடவுளின் திருமேனியை அழகு செய்தான்.*

விளக்கவுரை : *பாண்டியன் சண்பக மலர்களைப் பலவகையாகத் தொடுத்து இறைவனுக்குச் சாத்தினன் என்பதாம். சண்பக மலர்களில் வண்டு மொய்க்காததனால், அது வண்டுணா மலர் என்றும் பெயர் பெறும்.* **இண்டை** - *தண்டவடிவமாகச் கட்டிய மாலை.* **தொடை**- *சதுரமாகத் தொடுத்த மாலை.* **தாமம்** - *சரமாகக் கோத்த மாலை.* **கண்ணி** - *வட்டமாகத் தொடுத்த மாலை; தலைமாலை என்பர்.*

சோமசுந்தரரைச் சண்பகசுந்தரர் என அழைத்தல்

7. அன்னவி யன்பொழின் மாமது ரேச ரடித்தாழ்வோன்
பொன்னவிர் சண்பக மாலைபு னைந்த புதுக்கோலந்
தன்னைவி யந்திவர் சண்பக சுந்தரர் தாமென்று
முன்னரி றைஞ்சின னிம்பம ணிந்த முடித்தென்னன்.

தெளிவுரை : *அந்தப் பரந்த சோலை சூழ்ந்த மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் அடியை வணங்குவோனாகிய வேப்ப மலர் மாலை சூடிய முடியையுடைய அப்பாண்டியன், பொன் போல விளங்கும் சண்பக மாலை அணிந்த புதிய கோலத்தைக் கண்டு வியப்புற்று, 'இவர் சண்பக சுந்தரர்' என்று கூறித் திருமுன் வணங்கினன்.*

விளக்கவுரை : *சண்பக மாலை அணிந்துள்ள சோமசுந்தரரது புதிய கோலத்தைக் கண்டு வியந்து வணங்கிய பாண்டியன், 'இவர் சண்பக சுந்தரர்' என்று கூறித் துதித்தான் என்பதாம். அகரச்சுட்டு அன்ன எனத் திரிந்து நின்றது. நிம்பம் - வேப்ப மலர்மாலை.*

சண்பகமாறன் என்னும் பெயரையும் பாண்டியன் பெறுதல்

8. அன்னதொர் நாமம் பெற்றன ரின்று மணிக்கூடன்
முன்னவ ரந்தத் தாமம வர்க்கு முடிக்கேற்றும்
இன்னதொர் நீராற் சண்பக மாற னென்றேபேர்
மன்னிவி ளங்கினன் வங்கிய சூடா மணிதானும்.

தெளிவுரை : அழகிய கூடலில் எழுந்தருளிய முதல்வராகிய சோமசுந்தரக் கடவுள், இது போதும் அந்த ஒரு திருநாமத்தைப் பெற்றூர்; அந்தச் சண்பக மாலைகளை அவரது திருமுடிக்கு ஏற்றும் இத்தன்மையால், வங்கிய சூடாமணி என்னும் பாண்டியனும் சண்பக பாண்டியன் எனப் பெயரெய்தி விளங்கினன்.

விளக்கவுரை : அன்று முதல் இன்று வரை சோமசுந்தரருக்குச் சண்பக சுந்தரர் என்ற திருநாமம் வழங்குகின்றது. சண்பக மாலை சாத்திவழிபட்ட வங்கிய சூடாமணி பாண்டியனும் சண்பக பாண்டியன் எனப்பெயர் பெற்று விளங்கலாயினன் என்பதாம். அன்னது, இன்னது இரண்டும் சுட்டுத் திரிபுகள். ஓர் - குறுக்கல் விகாரம். சூடாமணி தானும் : எச்சவும்மை.

இளவேனிலின் வருகை

9. **சண்பக மாறன் சண்பக சுந்தரர் தம்மாடே**
நண்பக மாறு நன்பணி செய்யு நன்ளுளிற்
பண்பகர் சொல்லார் தம்புடை மாரன் படுபோர்மூண்
டெண்பக வெய்வா ளுகிய வந்தன் றிளவேனில்.

தெளிவுரை : சண்பக பாண்டியன் சண்பக சுந்தரரிடத்து அன்பு உள்ளத்தினின்றும் நீங்காமல், நல்ல திருப்பணி செய்து வரும் நல்ல நாளில் பண்ணென்று கூறும் சொல்லினையுடைய மகளிரிடத்து மதவேள் மிக்க போர்த் தொழிலின் மூண்டு, அளவிறப்ப அம்புகளை எய்ய இளவேனிற்காலம் வந்தது.

விளக்கவுரை : இவ்வாறு சண்பக பாண்டியன் இறைவனிடம் அன்புற்றுத் திருப்பணி செய்து வரும் நாளில் இளவேனிற் காலம் வந்தது என்பதாம். இளவேனில் இளம் பெண்களுக்கு இன்பூட்டும் காலமாதலின் மாறன் படுபோர் தொடங்கினுன் என்றூர். கேட்போர்க்கு இனிய சொற்களையுடைய பெண்கள் என்பார் 'பண்பகர் சொல்லார்' என்றூர். எய்வாளுகிய - எய்ய : செய்யிய என்றும் வாய்ப்பாட்டு வினையெச்சம். வந்தன்று - ஒன்றன்பால் இறந்தகால வினைமுற்று.

இளவேனிலின் வெப்பக் கொடுமை

10. **மனிதர்வெங் கோடை தீர்க்கும் வசந்தமென் காலும் வேறு**
துனிதவி ரிளங்கால் வேண்டுஞ் சோலையுஞ் சோலை வேண்டும்
புனிதநீர்த் தடமும் வேறு புதுமல ரோடை வேண்டும்
பணிதரு மதியும் வேறு பான்மதி வேண்டுங் காலம்.

தெளிவுரை : அவ்விளவேனில், மக்களின் கொடிய வெப்பத்தைப் போக்கும் இளந்தென்றலும் தனது வெப்பத்தாலாகிய துன்பத்தை நீக்கும் வேறு இளந்தென்றலை விரும்பும் காலமாயிருந்தது; சோலையும் வேறு சோலையை விரும்பும் காலமாயிருந்தது ; தூய நீர் நிறைந்த தடாகமும் வேறு நாள் மலர் நிறைந்த நீரோடையை விரும்பும் காலமாயிருந்தது; மக்களுயிர்க்குத் தட்பந்தருஞ் சந்திரனும் வேறு வெள்ளிய சந்திரனை விரும்பும் காலமாயிருந்தது.

விளக்கவுரை : *அவ்விளவேனில் காலத்தில் மக்களின் வெப்பத்தைப் போக்கும் இளந்தென்றலும், சோலையும், தடாகமும், சந்திரனும் மிக்க வெப்பமுற்றிருந்தது என்பதாம். குளிர்ச்சி மிகுந்த தென்றல் முதலிய பொருள்களும் இளவேனிற் காலத்தில் தமது வெம்மையைத் தணித்துக் கொள்ள வேறு வேறு குளிர்ந்த பொருள்களை விரும்பின என்று கூறுவதால், அக்காலத்தின் வெம்மை மிகுதியைப் புலப்படுத்தியவாறுகும். இளவேனில் ஒரு பெரும்பொழுது; சித்திரை, வைகாசி மாதங்களில் நிகழ்வது.*

இளவேனிலில் மாவும் செருந்தியும்

11. அண்டவான் றருமேற் சீறிச் சிவந்தெழுந் தாங்குத் தேமாத்
தண்டளி ரீன்று வானந் தைவர நிவந்த காசு
கொண்டிடை யழுத்திச் செய்த குழையணி மகளிர் போல
வண்டிறை கொள்ளப் பூத்து மலர்ந்தன செருந்தி யெல்லாம்.

தெளிவுரை : *மாமரங்கள், வானின்கண் உள்ள சிறந்த கறபகத் தருவின் மேற் சீறிச் சிவந் தெழுந்தாற் போல, தண்ணிய செந்தளிர்களைத் தந்து, வானுலகை யளாவ உயர்ந்தன; நீலமணிகளைக் கொண்டு இடையிடையிற் பதித்துச்செய்த காதணியை அணிந்த பெண்கள் போல, செருந்திகள் அனைத்தும் வண்டுகள் இடையிடை தங்கப் பூத்து மலர்ந்தன.*

விளக்கவுரை : *வேனிற் காலத்தில் மாமரங்கள் செந்தளிர்களை தளிர்த்து வானளாவி நின்றன; செருந்திகள், வண்டுகள் தம்மிடம தங்குமாறு பூத்து மலர்ந்தன என்பதாம். தேமா-ஒரு வகை மாமரம வானம் தைவர-உயர்வு நவிற்சியணி. தைவர-தடவ. நிவந்த-பலவின் பால் வினைமுற்று. காசு-நீலமணி. மாமரங்கள் இயல்பாகத தளிர்த்து உயர்ந்துள்ள வற்றை ஆசிரியர், அவை அண்டவான் தருக்களைச்சீறி சிவந்து எழுந்தது போன்றிருந்தன என்று கூறியுள்ளதால், இப்பகுதி* **தற்குறிப்பேற்ற உவமையணி.** *வண்டிறை கொள்ளப் பூதது மலர்ந்த செருந்திக்குக் காசு கொண்டிடையழுத்திச் செய்த குழையணி மகளிரை உவமையாக்கியுள்ள நயம் அறியத்தக்கத்து. செருந்தி மரம் மகளிர் போன்றும், மலர் பொற்குழை போன்றும், வண்டு நீலமணி போன்றும் விளங்கின வென்க. உவமையணி. இச்செய்யுள் சங்கீரண அணி (கலவையணி) யாகும்.*

இளவேனிலில் மலர்ந்த மரம் செடிகள்

12. செங்கதிர் மேனி யான்போ லவிழ்ந்தன செழும்ப லாசம்
மங்குலூர் செல்வன் போல மலர்ந்தன காஞ்சி திங்கட்
புங்கவன் போலப் பூத்த பூஞ்சினை மரவஞ் செங்கை
அங்கதி ராழி யான்போ லலர்ந்தன விரிந்த காயா.

தெளிவுரை : *வளவிய முண் முருக்குகள், செவ்வொளி பொருந்திய மேனியையுடைய சூரியனைப் போலச் செந்நிறமாக மலர்ந்தன; காஞ்சி மரங்கள், முகிலை ஊர்தியாகக் கொண்டு ஊரும் இந்திரன் போலக் கருநிறமாக மலர்ந்தன; பொலிவுள்ள கிளைகளையுடைய குங்*

கும மரங்கள் சந்திரனைப் போல வெண்ணிறமாக மலர்ந்தன; விரிந்த காயாஞ் செடிகள் சிவந்த கையில் அழகிய ஒளியையுடைய திகிரியை யுடைய திருமால் போல நீல நிறமாக மலர்ந்தன.

விளக்கவுரை : முண்முருக்கு, காஞ்சி, குங்கும மரங்கள் முறையே செம்மை, கருமை, வெண்மை நிறமுள்ள மலர்களையும், காயாஞ் செடி நீலமலரையும் மலர்ந்தன என்பதாம். இம் மரஞ் செடிகளின் மலர் களின் நிறங்களுக்குச் சூரியன், இந்திரன், சந்திரன், திருமால் ஆகிய தேவர்கள் உவமை கூறப்பட்டுள்ளனர். பலாசம் - முள்முருக்கு மரம். மரவம் - வெண்கடம்ப மரம் என்றும் கூறுவர்.

குங்கும மரமும் புன்னை மரமும் சிந்தியவை

13. தரைகிழித் தெழுநீர் வைகைத் தடங்கரை யெக்க ரல்குல்
அரவமே கலைசூழ்ந் தென்ன வலர்ந்துதா துகுப்ப ஞாழல்
மரகதந் தழைத்து வெண்முத் தரும்பிப்பொன் மலர்ந்து வாங்குந்
திரைகடற் பவளக் காடு செய்வன கன்னிப் புன்னை.

தெளிவுரை: தரையைக கிழித்துச் செல்லா நின்ற நீரையுடைய வையையாற்றின் பெரிய கரையாகிய பெண், மணல் மேடாகிய அல குலில் ஒலியையுடைய மேகலையை அணிநதாற போலத் தோன்றுமாறு குங்கும மரங்கள் மலர்ந்து மகரந்ததததைச சிநதுவன, இளமையாகிய புன்னை மரங்கள் மரகதம்போலும் இலைகள் தழைதது வெள்ளிய முத்துக்கள் போலும் முகைகள் அரும்பி பொன்போலும் பூக்கள் மலர்ந்து வளைந்த அலைதலையுடை கடலிலுள்ள பவளக்காடு போலும் மகரந்தஞ் சிந்துவன.

விளக்கவுரை : வையைக் கரையில் குங்கும மரங்கள் மலர்ந்து மகரந்தத்தைச் சிந்தின; புன்னை மரங்கள் தழைததுப் பூத்து மலர்ந்து மகரந்தத்தைச் சிந்தின என்பதாம். இதனை ஆசிரியர் வையை யாற்றங்கரையிலுள்ள மணல் மேட்டை அல்குல் என உருவகித்தும், அதற்கேற்ப கரையைப் பெண்ணென உருவகிக்காமலும், புன்னை மரங்கள் மரகதம் போலப் பசுமையாகத் தழைத்தும், முத்துக்களைப் போல வெண்ணிற அரும்புகளைத் தோற்றுவித்தும், பொன் போன்ற நிறமுள்ள பூக்களை மலர்ந்தும் பவளக்காடு போலும் செந்நிற மகரந் தங்களைச் சிந்தின என்றும் நயம் தோன்றக் கூறியுள்ளார்.

இளவேனில் மரங்கள் மலர்ந்து விளங்கல்

14. ஊடினர் போல வெம்பி யிலையுதிர்ந் துயிரன் னுரைக்
கூடினர் போல வெங்குங் குழைவரத் தழைத்து நீங்கி
வாடினர் போலக் கண்ணீர் வாரமெய் பசந்து மையல்
நீடின ரலர்போற் பூத்து நெருங்கின மரங்க ளெல்லாம்.

தெளிவுரை : மரங்கள் யாவும் ஊடிய மகளிர் போல வெம்பி இலையை உதிர்த்து, உயிரையொத்த நாயகர்களைக் கூடிய மகளிர் போல எவ்விடத்தும் குழைகள் தோன்றத் தழைத்து, அத்தலைவரைப்

பிரிந்து வாடுகின்ற மகளிர் போல, கண்ணீர் (தேனாகிய நீர்) ஒழுக உடல் பசந்து, காம மயக்கம் மிக்க மகளிரின் பழிச்சொல் போலப் பூக்கள் மலர்ந்து நெருங்கின.

விளக்கவுரை : இளவேனில் காலத்தில் மரங்களெல்லாம் இலைகளை உதிர்த்துப் பின் தழைத்து அரும்பித் தேன் சிந்த மலர்ந்து விளங்கின என்பதாம். மரங்கள் இளவேனிலில் இலைகளை உதிர்த்தலுக்கு ஆசிரியர், கணவரோடு ஊடிய மகளிர் உளம் வெம்பி அணிகளைக் களைந்தெறிதலை உவமையாக்கியுள்ளார்; அம்மரங்கள் மீண்டும் தளிர் விட்டுத் தழைத்தலுக்கு தம் கணவரைக் கூடிய மகளிர் உடல் குழையத் தழைத்தலை உவமையாக்கியுள்ளார் ; மரங்கள் மலர் அரும்பி தேன் சிந்துதலுக்கு, கணவரைப் பிரிந்து வாடினார் விழி நீரொழுக நிற்றலை உவமையாக்கினார். அரும்புகள் அலர்ந்து நிற்றலுக்குக் காமம் மிக்க மகளிரின் (அலர்) பழிச்சொல்லை உவமையாக்கினார். குழைவரத் தழைத்து — குழையாக வளரும் படி, தழை கொண்டு; உடல் குழையப் பூரித்து. கண்ணீர் - கண்களினின்று பெருகுகின்ற நீர்; தேனாகிய நீர். பசந்து - பசுமை கொண்டு; பசலை பூத்து. அலர் - மலர் ; பழிச்சொல். இச்செய்யுள் பலவயிற் போலியுவமையணியாகும்.

மரங்களும் கொடிகளும் வெம்மையில் வாடித் தளிர்த்தல்

15. விழைதரு காத லார்தா மெலிவுற மெலிந்து நெஞ்சங்
குறைவுறக் குழைந்து நிற்குங் கோதிலாக் கற்பி னார்போல்
மழையறுங் கோடை தீப்ப மரந்தலை வாட வாடித்
தழைவுறத் தழைத்து நின்ற தழீஇயபைங் கொடிக ளெல்லாம்.

தெளிவுரை : தம்மால் விரும்பப்பட்ட காதலர் மெலியத் தாமும் மெலிந்து, அவர் மனங்களி கூரத் தாமுங்களி கூர்ந்து நிற்கும் குற்றமற்ற கற்புடைய மகளிர் போல, மழையற்ற கோடை தீத்தலால் மரங்கள் தலைவாட, அவற்றைச் சுற்றிய பசிய கொடிகள் யாவும் வாடி, அவைகள் தழைக்கத் தாமும் தழைத்து நின்றன.

விளக்கவுரை : வேனில் வெம்மையில் மரங்கள் வாட, அவற்றைச் சுற்றிய கொடிகளும் வாடி, பின் அம் மரங்கள் தழைக்கவே, கொடிகளும் தழைத்து நின்றன என்பதாம். இங்கு மரத்திற்குக் காதலரும் பசிய கொடிகளுக்குக் கற்புடைய மகளிரும் உவமையாக வந்தன. கற்புடைய மகளிரும் காதலரும் ஈருடற் கோருயிர் போல அன்பால் இயைந்து நிற்றலும், அவருள் ஒருவர் எய்தும் இன்பத் துன்பங்கள் மற்றவர்க்கும் எய்துதலும் இயல்பாம். இச்செய்யுள் தொழிலுவமையணியாம்.

பூங்கொடிகள் நாடக மகளிரை ஒத்துத் தோன்றுதல்

16. சேட்டிகைத் தென்கா றள்ளத் தெண்மதுச் சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்றபூங் கொம்ப ராடல்
நாட்டியப் புலவ னூட்ட நகைமுகம் வெயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற பாவைமார் போன்ற வன்றே.

தெளிவுரை: *நெடிய தென்றிசை யினின்று வருந் தென்றற் காற்றுத் தள்ளுதலால், தெளிந்த தேன் துளிக்க, வண்டுகள் நெட்டிசை பாட, ஒசிந்து ஆடும் பூங்கொம்புகள் கூத்து வல்லோன் ஆட்டுவிக்க, ஒளி பொருந்திய முகத்தினின்றும் வியர்வை சிதற, பாட்டுப்பாடி ஆடா நின்ற நாடக மகளிரை ஒத்தன.*

விளக்கவுரை: *பூங்கொடிகள் தென்றலில் ஆடித் தேன் துளித்து வண்டுகள் ரீங்காரம் செய்ய அசைந்து நின்றன என்பதாம் இது. இங்குத் தென்றற் காற்றுக்கு நாட்டியப் புலவனும், தேன் துளித்தலுக்கு வியர்வை சிந்தலும், வண்டுகளின் நெட்டிசைக்குப் பாட்டுப் பாடுதலும் பூங்கொம்புகளுக்கு நாட்டிய மகளிரும் உவமைகளாம். சேண் - நெடிய. தென் திசை - தென்குத் திசை. நீட்டிசை - தொடரந்த இராகம். இச்செய்யுள்* **தொழிலுவமையணியாம்.**

செவ்வந்தியும் மகிழும் நல்லோர் செயலைப் பெற்றிருத்தல்

17. மலர்ந்தசெவ் வந்திப் போதும் வகுளமு முதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த் தளிதே னக்கக் கிடப்பன வுள்ள மிக்க
குலந்தரு நல்லோர் செல்வங் குன்றினுந் தம்பா லில்லென்
றலந்தவர்க் குயிரை மாறி யாயினுங் கொடுப்ப ரன்றே.

தெளிவுரை: *விரிந்த செவ்வந்தி மலரும், மகிழம் பூவும், நிலத்தில் உதிர்ந்து வாடிப் புலர்ந்தும், வண்டுகள் மொய்த்துத் தேன் உணணக் கிடப்பனவாயின; உள்ள மிகுதியையுடைய உயர்குடிப் பிறந்த நலலோர்கள் செல்வஞ் சுருங்கிய விடத்தும் தம்மிடத்து வந்து இல்லை என்று கூறி வருந்தியவர்க்குத் தம்முயிரையாகிலும் கொடுப்பா ரல்லவா?*

விளக்கவுரை: *தரையில் உதிர்ந்து வாடி உலர்ந்து கிடக்கின்ற செவ்வந்தி மலரும், மகிழ மலரும் வண்டுகள் தேனுண்ணக் கிடத்தலானது, செல்வம் சுருங்கிய விடத்தும் நற்குடிப் பிறந்தோர் தம்மிடம் இல்லையென்று வருந்தி வந்தவர்க்குத் தம்முயிரை விட்டாயினும் உதவுதலை காட்டின என்பதாம். உள்ளம் மிக்க குலந்தரு நல்லோர் - மன எழுச்சியுடைய நற்குடிப் பிறந்தோர். இச்செய்யுள்* **வேற்றுப் பொருள் வைப்பணி.**

இளவேனிலில் குயில்களும் மயில்களும்

18. நாறிய தண்ணந் தேமா நறுந்தளிர் கோதிக் கூவி
ஊறிய காமப் பேட்டை யுருக்குவ குயின்மென் சேவல்
வீறிய செங்கோல் வேந்தன் வெளிப்படத் தேயங் காவல்
மாறிய வேந்தன் போல வொடுங்கின மயில்க ளெல்லாம்.

தெளிவுரை: *மெல்லிய ஆண் குயில்கள் தோற்றிய குளிர்ந்த அழகிய தே மாவின் நறிய தளிர்களைக் கோதி, காம மரும்பிய பேட்டினைக் கூவி உருக்குவன; பெருமிதமுடைய செங்கோலையுடைய பெரு வேந்தன் தோன்ற, நாடு காவல் மாறிய குறுநில மன்னன் போல, மயில்கள் யாவும் ஒடுங்கின.*

விளக்கவுரை : *இளவேனிற் காலத்தில் மாமரம் தளிர்த்தன; குயில் தளிர்களைக் கோதிப் பேட்டினைக் கூவின; மயில்கள் ஒடுங்கின என்பதாம். இளவேனிலின் வருகை, செங்கோலையுடைய பெரு வேந்தன் தோற்றம் போன்றிருந்ததெனவும் மயில்களின் ஒடுக்கம் அவ்வேந்தன் முன் ஆட்சியிழந்த குறுநில மன்னரது மறைவு போன்றி ருந்த தெனவும் கூறப்பட்டுள்ளமை காண்க. நாறிய - தோற்றிய. பேடு - பெண் குயில். தேயங்காவல் மாறிய வேந்தன் - குறுநில மன்னன்.*

இளவேனிலில் உலவும் தென்றல்

19. பொங்கரி னுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைக டேரு மறிவன்போ லியங்கு மன்றே.

தெளிவுரை : *தென்றற் காற்று, பலவிடங்களிலுஞ் சென்று நூல்களை ஆராய்ந்தறியும் அறிவுடை மாணவன் போல, சோலையில் நுழைந்து, தாடகத்திற் புகுந்து, தாமரையை அளாவி, பசிய மண முள்ள இருவாட்சி முல்லையும் மல்லிகையுமாகிய இவற்றின் பந்த ரிலேதாவி, மகரந்தத்தையுடைய மலர்களின் மணங்களைக் கவர்ந்து குளிர்ந்து மெதுவாய் உலாவும்.*

விளக்கவுரை : *இளவேனிலில் தென்றல்காற்று மெத்தென்று உலவியது என்பதாம். இங்கு, அறிவுடைய மாணவனை தென்றற் காற்றுக்கு ஆசிரியர் உவமையாக்கியுள்ள நயம் அறியத் தக்கது. நன் மாணுக்கன் நல்லாசிரியர் பலரிடமும் சென்று அவர்களிடம் நூற் பொருள் பலவும் கற்றுணர்ந்து நல்லொழுக்கத்துடனும் அமைதியாக வும் செல்லுவான். அங்ஙனமே தென்றல் காற்று பூஞ்சோலை பொய்கை தாமரை மலர் பூம்பந்தர் முதலியவற்றிலுள்ள குணங்க ளைக் கவர்ந்து குளிர்ந்து மெல்லென உலவிய தென்க. இச் செய்யுள்* **தொழிலுவமையணி.** *பொங்கர்-சோலை. மயிலை - இருவாட்சி. பந்தர்- மொழி ஈற்றுப் போலி.*

வேனிலான் அரசு வீற்றிருத்தல்

20. தாமரை களாஞ்சி தாங்கத் தண்குயின் முழவ மேங்க
மாமரு தமருங் கிள்ளை மங்கல மியம்பத் தும்பி
காமர மிசைப்ப முள்வாய்க் கைதைவா ளெடுப்ப வேனிற்
கோமகன் மகுடஞ் சூடி யிருப்பதக் குளிர்பூஞ் சோலை.

தெளிவுரை : *தாமரை காளாஞ்சி தாங்கவும், குளிர்ந்த குயில் முழவம் ஒலிக்கவும், பெரிய மருதமரத்தில் இருக்குங்கிளி மங்கலங் கூறவும், வண்டுகள் இசைப் பாட்டுப் பாடவும், முட்களையுடைய தாழை வாளை ஏந்தவும், வேனிற் காலத்திற்குரிய மன்மதன் முடிசூடி வீற்றிருக்கப் பெறுவது அந்தத் தண்ணிய பூஞ்சோலை.*

விளக்கவுரை: *வேனிற் காலத்தில் சோலையில் தாமரை மலர், குயில் ஒலி, கிளிமொழி, வண்டிசை, தாழைமடல் என்பன சிறந்து விளங்கிச் சேர்ந்தார்க்கு இன்பம் செய்தன என்பதாம்; ஆசிரியர் இவற்றை முறையே காளாஞ்சி, முழவு, மங்கல வாழ்த்து, இசைப் பாட்டு, வாள் ஆக உருவகித்து வேனிலானகிய மன்மதனுக்கு அமைத் துள்ள நயம் அறியத் தக்கது. காளாஞ்சி - தாம்பூலம் எடுக்கும் கலம். மற்றும் மன்மதன் அரசவையில் தாமரை காளாஞ்சி ஏந்து வோராகவும், குயில் முழவொலிப் போராகவும், கிளிமங்கலம் கூறு வோராகவும், வண்டு இசைபாடுவோராகவும், தாழை வாளெடுப் போராகவும் கூறப்பட்டிருத்தலும் கருதத் தக்கது.*

மக்கள் வேனில் வெம்மையை ஆற்றும் இடங்கள்

21. கலையினு ணிறைந்த விந்து காந்தமண் டபத்துஞ் செய்த
மலையினு மெழுது மாட மருங்கினு நெருங்கு சோலைத்
தலையினுங் கமல வாவித் தடத்தினுந் தண்முத் தார
முலையினு மன்றிக் கோடை முடிவிடங் காணார் மைந்தர்.

தெளிவுரை: *ஆடவர்கள், கலைகளால் நிறைந்த சந்திரகாந்தக் கல்லாலாகிய மண்டபத்திலும், செய்குன்றிலும், சித்திரம் வரைந்த மாடத்திடத்தும், நெருங்கிய சோலையினிடத்தும், தாமரையையுடைய பொய்கையினிடத்தும், குளிர்ந்த முத்தாரமணிந்த மகளிர் கொங்கை களிலும் அல்லாமல் வேனில் வெம்மையை ஆற்றும் இடம் வேறு காணார்.*

விளக்கவுரை: *ஆண் மக்கள் வேனில் வெம்மையை ஆற்றிக் கொள்ளும் இடங்களாகக் கொண்டவை சந்திரகாந்தக்கல் மண்ட பம், செய்குன்று, சித்திர மாடம், சோலை, தாமரைப் பொய்கை, முத்து மாலையணிந்த மகளிர் கொங்கைகள் ஆகியவைகளாம என்பதாம். இவையலலாத பிற இடங்கள் தாங்கொணு வெம்மை தந்து துன்புறுத் திய தென்பார், 'கலையினுணிறைநத........முலையினுமன்றிக் கோடை முடிவிடங்காணார் மைந்தர்' என்ருர். இந்துகாந்தம்-சந்திரனைக் கண்டு நீர்கக்கும் கல்.*

காளையர் மாதருடன் பூஞ்சோலை புகுதல்

22. நிலந்தரு திருவி ழுன்ற ணிழன்மணி மாடக் கூடல்
வலந்தரு தடந்தோண் மைந்தர் வானமும் வீழும் போக
நலந்தரு மகளி ரோடு நாகநா டவர்தஞ் செல்வப்
பொலந்தரு வனைய காட்சிப் பூம்பொழி னுகர்வான் போவார்.

தெளிவுரை: *மாற்ருது நிலத்தைத்தரும் போர்த் திருவினை யுடைய வங்கிய சூடாமணி மாறனது ஒளியினையுடைய மணிகள் அழுத்திய மாடங்கள் நிறைந்த கூடலிலுள்ள வெற்றியைத் தரும் பெரிய தோள்களையுடைய காளையர், விண்ணவரும் விரும்பும் இன்ப நலத்தை அளிக்கும் மாதராருடன் அவ்வான நாடரின் செல்வமிக்க பொன்மயமாகிய கற்பகச்சோலை போன்ற தோற்றத்தையுடைய பூஞ்சோலையின் இன்பத்தை நுகர்தற்குப் போவாராயினர்.*

விளக்கவுரை : கூடலிலுள்ள காளையர் மாதராருடன் இளவேனிலின் இன்பம் நுகர்தற்குப் பூஞ்சோலைக்குச் சென்றனர் என்பதாம். நிலந்தருதிருவினுன்-நிலந்தருதிருவிற் பாண்டியன். இவன் தொலகாப்பியர காலத்தவன். பாண்டியர்களின் முன்னேன், அவன் மரபினுகிய வங்கிய சூடாமணி அப்பெயரினுல் வழங்கப்பட்டான் என்க. கூடல் - நான்மாடக் கூடல்; மதுரை, வானமும் - விணணவரும், இடவாகு பெயர். வீழும் - விரும்புகின்ற, நாகநாடு - விண்ணுலகு. பொலம் தரு - பொன்மயமான மலர்களையுடைய கற்பகமரம். நுகர்வான் - வானீற்று எதிர்கால வினையெச்சம்.

பூஞ்சோலைக்குச் செல்லும் ஆடவர்

23. மாத்தாண் மதமா னெருத்தின் மடங்க லெனச்செல் வாரும்
பூத்தா ரொலிவாம் பரிமேற் புகர்மா வெனப்போ வாரும்
பாத்தார் பரிதி யெனவாம் பரித்தே ருகைத்தூர் வாருந்
தேத்தா ருளர்வண் டலம்பச் சிலம்பி னடக்கின் றுரும்.

தெளிவுரை : பெரிய தாளையும் மதமயக்கத்தையுமுடைய யானையின் பிடரில் சிங்கத்தைப் போலச் செல்வாரும், அழகிய கிண்கிணி மாலை ஒலிக்கும் தாவுகின்ற குதிரைமேல் புள்ளியையுடைய முகத்தையுடைய யானையைப் போலப் போவாரும், பன்னிரண்டாகப் பகுக்கப்பட்டு நிறைந்த சூரியர்களைப் போலத் தாவுங்குதிரை பூட்டிய தேரினைத் தூண்டி நடத்துவாரும், தேன் நிறைந்த மாலையிலே கிண்டுகின்ற வண்டுகள் ஒலிக்க மலை போல நடந்து செல்வாரும்.

விளக்கவுரை : பூஞ்சோலைக்குச் செல்லும் ஆடவர் யானையின் மீது செல்லும சிங்கம் போலவும், குதிரைமேல் செல்லும் யானையைப் போலவும், தேர்மீது செல்லும் பன்னிரு சூரியர்களைப் போலவும், நடந்து செல்லும் மலை போலவும் செல்வாராயினர் என்பதாம். பாதது+ஆர் - பகுத்து என்பது பாத்து என மருவியது. தேம்+தார்-தேத்தார், தேன், தேம் எனத் திரிந்தது. இச் செய்யுளிலுள்ள நடக்கின்றுரும் என்பதை 25-ஆம் செய்யுளிலுள்ள ‘ ஆடவரும் ’, என்பதனேடு இயைதது நடக்கின்றுரும் ஆகிய ஆடவரும எனப் பொருள் கொள்க.

மகளிர் செலவு

24. நீலப் பிடிமேற் பிடிபோ னெறிக்கொள் வாருந் தரள
மாலைச் சிவிகை மிசைவெண் மலரா ளெனச்செல் வாரும்
ஆலைக் கரும்பன் றுணைபோ லணித்தார்ப் பரியூர் வாருங்
கோலத் தடக்கை பற்றிக் கொழுந ருடன்போ வாரும்.

தெளிவுரை : கரிய பெண் யானைமீது பெண்யானை போலச் செல்வாரும், முத்துமாலைகள் தூக்கிய பல்லக்கின் மேல் வெண்டாமரை யாளாகிய கலைமகள் போலச் செல்வாரும், ஆலையில் அமையுங் கருப்பு வில்லையுடைய மதவேளின் வாழ்க்கைத் துணையாகிய இரதி தேவியைப் போல அழகிய கிண்கிணி மாலையை யணிந்த குதிரை

மேற் செல்வாரும், கொழுநர்களின் அழகிய பெரிய கையைப் பிடித்து அவருடன் நடந்து செல்வாரும்.

விளக்கவுரை : பூஞ்சோலைக்குச் செல்லும் மகளிர் பெண் யானை மீது செல்லும் பெண் யானை போலவும், வெண்ணிறப் பல்லக்கில் செல்லும் கலைமகள் போலவும், குதிரை மேற் செல்லும் இரதி தேவியைப் போலவும், கணவன்மார் கையைப்பற்றி நடந்தும செல்லலாயினர் என்பதாம். பிடி - கரிய பெண் யானை. கரும்பன் - மன்மதன். கரும்பன் துணை - இரதி தேவி. 'போவாரும்' ஆகிய, 'படையன்ன மகளிர்' எனவரும் அடுத்த செய்யுளோடு கூட்டுக.

ஆடவரும் மகளிரும் சோலைகளிற் புகுதல்

25. சுருப்புக் கமழ்தேங் கண்ணித் தொடுபைங் கழலா டவருங்
கருப்புச் சிலைமன் னவனுற் கருவிப் படையன் னவரும்
விருப்பற் றெறிநீர் வைகை வெள்ளைத் தரளந் தெள்ளிப்
பொருப்பிற் குவிக்கும் புளினம் புறஞ்சூழ் சோலை புகுவார்.

தெளிவுரை : வண்டு மொய்த்த மணங்கமழும் தேன் நிறைந்த மாலையை யணிந்த பசிய வீரக்கழல் அணிந்த ஆடவர்களும் கரும்பு வில்லையுடைய மன்மதனது நான்கு வகைப்பட்ட படைகளைப் போன்ற மகளிரும், விரும்பி ஏற்றுகின்ற நீர் நிறைந்த வையை யாறு முத்துக்களைக் கொழித்து வெள்ளைமலை போலக் குவிக்கின்ற மணற் குன்றுகள் புறஞ் சூழ்ந்த சோலைகளிற் புகுவாராயினர்.

விளக்கவுரை : ஆடவரும் அழகிய மகளிரும் வையை யாற்று வெண் மணற் குன்றுகளின் புறஞ் சூழ்ந்த சோலைகளில் புகுந்தனர என்பதாம். கருப்பு, சுருப்பு என்பன, கரும்பு, சுரும்பு என்பவற்றின் வலித்தல் விகாரம். கருவிப்படை - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

இருபாலாரும் சோலை சேர்தல்

26. கூந்தற் பிடியும் பரியு மூர்வார் கொழுநர் தடந்தோள்
ஏந்தச் சயமா தென்னத் தழுவா விழிந்து பொழில்வாய்ப்
பூந்தொத் தலர்பொற் கொடிதா துகுமா றென்னப் புனைந்த
சாந்தக் கலவை யுகப்போய் வனமங் கையர்போற் சார்ந்தார்.

தெளிவுரை : புறமயிரையுடைய பெண் யானைகளிலும், குதிரைகளிலும் ஏறிச் சென்ற மகளிர், தத்தம் கொழுநர்கள் பெரிய தோளால் ஏந்த, வெற்றி மகளைப் போலத் தழுவி இறங்கிச் சோலையினிடத்துப் பூங்கொத்துக்கள் அலர்ந்த பொன் போன்ற கொடியினின்றும் மகரந்தஞ் சிந்துதல் போல, அணிந்த கலவைச் சந்தனம் உலர்ந்து சிந்த சென்று, வனத்தில் வாழுந்தெய்வ மகளிரைப் போல அடைந்தனர்.

விளக்கவுரை : யானை குதிரைகளில் ஏறிச் சென்ற மகளிர் தத்தம் தலைவர்கள் தோளைத் தழுவி இறங்கிச் சோலையை அடைந்

தனர் என்பதாம். அங்ஙனம் மகளிர் தம் கொழுநர் தோளைத் தழுவி இறங்குங்கால் அவர் அணிந்துள்ள கலவைச் சந்தனம் உலர்ந்து சிந்தின. இதற்கு உவமையாகச் சோலையிலுள்ள பூங்கொத்துக்கள் பொன்னிற மகரந்தங்களைச் சிந்துதலைக் கூறப்பட்டுள்ளது. ஊர்வார், தழுவா, உகப்போய் சார்ந்தார் என வினை முடிவு செய்க.

மகளிர் சோலையில் வெவ்வேறிடம் சேர்தல்

27. ஏமா சலமென் முலையார் நடையோ வியமே யென்னப்
பூமா தவிசேர் வாரும் புன்னை நிழல்சேர் வாருந்
தேமா நிழல்சேர் வாருஞ் செருந்தி நிழல்சேர் வாருங்
காமா யுதசா லைகள்போற் கைதை நிழல்சேர் வாரும்.

தெளிவுரை: பொன் மலையென்று கூறத்தக்க கொங்கையையுடைய மகளிர், நடக்கும் பதுமை போலச் சென்று, பூக்கள் நிறைந்த குருக்கத்தி நிழலை அடைவாரும், புன்னைமரத்தின் நிழலை அடைவாரும், தேமாவின் நிழலை அடைவாரும், செருந்தியின் நிழலை அடைவாரும், மதவேளின் படைச் சாலைகள் போல் மலர்ந்த தாழையின் நிழலை அடைவாரும் ஆயினர்.

விளக்கவுரை சோலையை அடைந்த மகளிர் குருக்கத்தி, புன்னை, செருந்தி, தாழை முதலிய மரநிழலை அடைவாராயினர என்பதாம். ஏமாசலம், காமாயுதம்-தீர்க்கசந்தி. ஏமாசலம் - பொன்மலை.

மயில்களும் குயில்களும் மங்கையரைக் கண்டு மயங்குதல்

28. கோடும் பிறைவா ணுதலார் குழலைக் கருவிக் காரென்
றாடுந் தோகை யவர்கண் ணேக்கிக் கணையென் றஞ்சி
ஓடுங் கொடியி னன்னு ருருமாந் தளிரென் றயில்வான்
நாடுங் குயிலன் னவர்பண் ணிசைகேட் டொதுங்கி நாணும்.

தெளிவுரை: வளைந்த பிறை போன்ற ஒள்ளிய நெற்றியையுடைய மகளிரது கூந்தலை, மின்னு முதலிய தொகுதியையுடைய முகில் என்று கருதி ஆடுகின்ற மயில்கள், அவர் கண்களைக் கண்டு அம்பென்று கருதி அஞ்சி ஓடாநிற்கும். கொடி போன்ற அம்மகளிரின் உருவத்தை மாந்தளிரென்று கருதிக் கோதி, உண்ணச் செல்லுங் குயில்கள், அவர் பாடும் பண்ணொலியைக் கேட்டு நாணிச் செல்லாநிற்கும்.

விளக்கவுரை: சோலை வாழ் மயில்கள், அம்மகளிரின் கூந்தலை மயில் என்று கருதி ஆடத் தொடங்க, அவர்களின் கண்களைக் கண்டு அம்பெனக் கருதி ஓடலாயின; குயில்கள் அம்மங்கையரின் உடலை மாந்தளிரெனக் கருதி உண்ணச் செல்லுங்கால், அவரது பண்ணொலி கேட்டு வெட்கிச் சென்ற என்பதாம். இச் செய்யுள் **மயக்கவணி.** கருவிக்கார் - மின், இடி முதலியவற்றின் தொகுதியை யுடைய மேகம்.

மகளிரால் சோலை அடைந்த விளக்கம்

29. நீடுந் தரங்க மிரங்கு நிறைநீர் நிலையே யன்றிப்
பாடுஞ் சுரும்புண் கழுநீர் பைந்தாட் குமுதம் பதுமங்
கோடும் பூத்த வென்னக் கொடியே ரிடையார் குழையுந்
தோடுங் கிடந்த வதனத் தொகையாற் பொலிவ சோலை.

தெளிவுரை : *நீண்ட அலைகள் ஒலிக்கும் நிறைந்த ஓடைகளே அல்லாமல் இசைபாடும வண்டுகள் மது உண்ணும் குவளையையும் பசிய தாளையுடைய ஆம்பலையும் தாமரையையும் பூங் கொம்புகளும் பூத்தன போல, கொடி போன்ற அழகிய இடையையுடைய மகளிரின் குண்டலமும் தோடும் பொருந்திய முகங்களின் தொகுதியால் சோலை கள் விளங்கா நின்றன.*

விளக்கவுரை : *நீர்ப் பூக்களாகிய குவளை ஆம்பல் தாமரை என் பவை கொம்புகளிற் பூத்தாற் போன்ற கண் வாய் முகங்களையுடைய பெண்கள் தொகுதியால் சோலைகள் விளங்கின என்பதாம். தரங்கம்- அலை. கோடு - பூங் கொம்பு. 'கழுநீர், பைந்தாட் குமுதம் பதுமம் கோடும் பூத்த வென்ன' - இல்பொருளுவமையணி.*

கொடி வீடுகளில் கணவன்மார் தம்தம் மனைவியர்க்கு வெம்மை யாற்றிப் பணிபுரிதல்

30. பிடிக ளென்ன நடந்தா ருடன்போய்க் கொழுநர் பெருந்தண்
கொடிகண் மிடைந்த வில்லி லியக்கர் போலக் குறுகிக்
கடிகொள் பனிநீர் தெளித்து வேடை தணித்துங் கன்றும்
அடிகள் பிடித்துஞ் சேடி யவர்கைக் குதவி யாவார்.

தெளிவுரை : *கணவர்கள் பெண் யானைபோல நடந்த மகளிருடன் சென்று பெரிய குளிர்ந்த கொடிகள் மிடைந்த இல்லினிடத்து இயக்கர் கள் போலச் சார்ந்து மணம் கொண்ட பனி நீரைத் தெளித்து வெம்மையை ஆற்றியும் நடத்தலாற் கன்றிய அவர்கள் அடிகளைப் பிடித்தும் தோழியரின் கைகளுக்கு உதவி புரிவாராவார்.*

விளக்கவுரை : *கணவன்மார் தத்தம் மனைவியருடன் சோலையி லுள்ள கொடி வீடுகளைச் சார்ந்து அவர்களுக்குப் பனி நீர் தெளித்து வெம்மையை அகற்றினர் ; பாதங்களைப் பிடித்து விட்டு நடந்து வந்த துன்பத்தை மாற்றினர் என்பதாம். பெண்களுக்குத் தோழியர் செய்யத்தக்க உதவியைக் கணவன்மார் செய்தனராதலின் 'சேடிய வர் கைக்குதவி செய்வார்' என்றார். கொடிமிடைந்த இல் - வீடு போலக் கொடிகளால் அமைக்கப்பட்ட விடம். வேடை - வெப்பம். சேடியவர் - தோழி.*

மகளிர் தம் கணவர்மீது மலர்களை எறிதல்

31. மைவார் தடங்கண் மடவார் வளைப்பார் கொம்பின் மலரைக்
கொய்வார் குமிழ்மோந் துயிர்ப்பார் குழையுஞ் செவியுங் குழலும்
பெய்வார் மகிழ்ச்சி செய்வார் பேரா மையல் கூர
எய்வார் கணைபோற் றெறிப்பக் கொழுநர் மார்பத் தெறிவார்.

தெளிவுரை : மை தீட்டிய பெரிய கண்களையுடைய மகளிர், கொம்புகளை வளைத்து அவற்றின் மலர்களைக் கொய்து குமிழம் பூப் போன்ற மூக்கில் மோந்து உயிர்த்துக் குழைகளிலும் காதுகளிலும் கூந்தலிலும் அணிந்து நாயகர்களுக்கு மகிழ்ச்சியை விளைப்பார்கள் ; நீங்காத காம மயக்கம் மிக மன்மதன் எய்யும் நீணட கணை போலப் பாயுமாறு அவற்றைக் கணவர் மார்பில் எறிவார்கள்.

விளக்கவுரை : பூஞ்சோலையில் மகளிர் சிலர் மலர்களைக் கொய்து மோந்து உயிர்த்து காதுகளிலும் கூந்தலிலும் அணிந்து கணவன்மார் களுக்கு மகிழ்வூட்டியதோடு அவற்றை அவர்கள் மார்பில் எறிவார்கள் என்பதாம். மகளிர் தத்தம் கணவன்மார் மார்பில் எறிந்த மலருக்கு மன்மதன் எய்யும் கணை உவமிக்கப்பட்டன என்க. குமிழ் - உவமை யாகு பெயர். இங்கு, மலர் சூடுதலும் எறிதலும் கலவிக் குறிப்பை உணர்த்தின என்க.

மகளிர் கூந்தலிற் புகுந்து வண்டுகள் இசைபாடித் தேன் பருகுதல்

32. முத்தேர் நகையார் வளைப்ப முகைவிண் டலர்பூங் கொம்பர்ப்
புத்தேள் வண்டும் பெடையும் புலம்பிக் குழலிற் புகுந்து
தெத்தே யெனப்பாண் செய்து தீந்தே னருந்துந் துணையோ
டொத்தே ழிசைபா டிக்க ளுண்ணும் பாண ரொத்தே.

தெளிவுரை : முத்துப் போன்ற அழகிய பற்களையுடைய மகளிர், கொம்புகளை வளைக்க அரும்புகள் நெகிழ்ந்து மலர்ந்த அப்பூங் கொம்பு களிலுள்ள புதிய ஆண் வண்டுகளும் பெண் வண்டுகளும் ஒலித்து அவர் கூந்தலிற் புகுந்து தெத்தே என்று இசை பாடி, விறலியோடு சேர்ந்து ஏழிசைகளையும் பாடிக் கள்ளினை அருந்தும் பாணர் போல இனிய தேனைப் பருகும்.

விளக்கவுரை : மகளிர் பூங் கொம்புகளை வளைத்தபோது அங் கிருந்த ஆண் வண்டுகளும் பெண் வண்டுகளும் ஒலித்துக் கொண்டு அப் பெண்களின் கூந்தலில் புகுந்து இசை பாடித் தேன் பருகின. இச் செயல், விறலியோடு ஏழிசை பாடிக் கள்ளருந்தும் பாணர் செயலை ஒத்திருந்தது என்பதாம். புத்தேள் வண்டு - புதுமையான வண்டு. புலம்பி - நிலைகுலைந்து. தெத்தே - ஒலிக் குறிப்பு ; ரீங்காரம். விறலியுடன் இசை பாடும் பாணன் பரிசிலாகக் கள் பெற்றுண்பது போல, பெண் வண்டுடன் ஆண் வண்டுகள் ரீங்காரம் செய்து தேனருந்தின. இது பரிவருத்தனை அணியாகும்.

மகளிர் பூங் கொம்புகளை வளைத்து மலர் பறித்தல்

33. இம்பர்வீ டளிக்குந் தெய்வ மகளிரே யென்பார் கூற்றம்
வம்பல மெய்யே போலும் வளைக்கையார் வளைப்பத் தாழ்ந்து
கம்பமுற் றடிப்பூச் சிந்தி மலர்முகங் கண்ணீர் சோரக்
கொம்பரும் பணிந்த தென்று லுலகியல் கூறற் பாற்றே.

தெளிவுரை : 'இந் நிலவுலகில் வீடுபேறு அளிக்கும் தெய்வம் மகளிரே' என்றுரைப்பாரது உரை பொய்யல்ல; மெய்யே போலும்; வளையலணிந்த கையையுடைய அம் மகளிர் வளைக்க வணங்கி, நடுங்கி அவரடிகளில் மலர்களைச் சிதறி, மலர் முகத்தினின்றும் கண்ணீர் ரொழுகக் கொம்புகளும் வழி பட்டன என்னின், உலகிலுள்ள மக்களின் தன்மை கூறும் பகுதியை யுடையதோ? அன்று.

விளக்கவுரை : சோலையில் மகளிர் பூங் கொம்புகளை வளைத்தனர். அவை வணங்கி நடுங்கி அவர் அடிகளில் மலர் சிந்தி, மலர் முகத்தினின்று கண்ணீர் (கள்+நீர்) ஒழுக வழிபட்டன என்பதாம். மகளிர் வளைப்ப இயல்பாக நடுங்கி மலர் சிந்தித் தேன் சொரியும் கொம்புகள் அம்மகளிர் பாலுள்ள வேட்கையால் உடல் நடுங்கி அவர் அருளைப் பெற வேண்டி அடிகளில் மலர் தூவிக் கண்ணீர் சொரிந்து வணங்கின என்று ஆசிரியர் கற்பனையாகக் கூறியுள்ளார். எனவே, மகளிர்பால் காதலுடைய ஆடவர், காதல் வேட்கையால் இவ்வுலகில் வீடுபேறு அளிக்கும் தெய்வம் மகளிரே என்று ஒழுகும் தன்மை மெய்யேபோலும் என்று தன் கருத்தை ஏற்றிக் கூறியுளார் என்க. மலர் முகம் - மலரினிடம்; மலர் போன்ற முகம். கண்ணீர் - கள் நீர்; விழிநீர். மகளிரே தெய்வமென்று உரைத்தல் உலகாயதர் கூற்றாகும். இவர் கூற்றாக,

"ஊடுவ துணர்வ துற்ற கலவிமங் கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின்ப முத்தி யித்தினின் றூர்கள் முத்தர்."

—என்று சிவஞான சித்தியார்ப் பரபக்கத்தில் கூறப்பட்டிருத்தலைக் காண்க.

மைக்கண்ணாள் மலர் பறிக்க உதவல்

34. மைக்கணா ளொருத்தி யெட்டா நிமிர்கொம்பை வளைக்குந்தோறுங்
கைக்குநேர் படாமை வாடுங் கடிமலர்க் கொடிபோ னிற்பத்
தைக்கும்பூங் கணைவே ளன்னா னொருமகன் றலைப்பட் டென்னை
எய்க்கின்றாய் தோண்மே லேறிப் பறியென வேந்தி நின்றான்.

தெளிவுரை : மை தீட்டிய கண்ணையுடைய ஒரு பெண், உயர்ந்த கொம்பொன்றை எட்டி வளைக்குந் தோறும் கைக்கு எட்டாமையால், வாட்டமுற்ற மணமுள்ள மலர்க்கொடி போலச் சோர்ந்து நிற்க, பாய்ந்துருவும் மலர்க் கணையை யுடைய மன்மதன் போன்றானாகிய ஓர் ஆண் மகன் எதிர்ப்பட்டு, 'என்னை வாடுகின்றாய்? எனது தோளின் மேல் ஏறி மலர்களைக் கொய்வாயாக' என்று கூறி தோள் கொடுத்து நின்றான்.

விளக்கவுரை : எட்டாத கொம்பை வளைக்க முயன்று சோர்ந்த ஓர் மைக்கண் மகளொருத்திக்கு முன் ஓர் ஆண் மகன் தோன்றி 'வருந்தற்க; என் தோளில் ஏறி மலர்களைக் கொய்க' என்று கூறி அவளைத் தாங்கி நின்றான் என்பதாம். இது வரைவின் மகளிரின் செயலாகவும் கொள்ளலாம். நேர் படாமை - எட்டாமையால். எய்க்கின்றாய் - இளைத்திருக்கின்றாய்.

பெண்ணொருத்தியின் ஊடல்

35. தையலா ளொருத்தி யெட்டா மலர்க்கொம்பைத் தளிர்க்கைநீட்டி
ஐயநுண் மருங்கு னோவ வருந்தலு மாற்றாக் கேள்வன்
ஒய்யென விதுவு மென்னை யூடிய மகளி ரேயோ
கொய்யென வளைத்து நின்றான் கண்முத்தங் கொழிப்ப நின்றாள்.

தெளிவுரை : *ஒரு பெண், தன் கைக்கு எட்டாத பூங் கொம்பொன்றை, மாந்தளிர் போன்ற தனது கையை நீட்டி, உண்டோ இல்லையோ என்னும் ஐயம் விளைக்கும் நுண்ணிய இடை வருந்த வருந்தலும், அதனைப் பொறாத அவள் கொழுநன் விரைந்து, 'என்னை இக் கொம்பும் பிணங்கிய மாதரையோ? பறிப்பாய்' என்று கூறி அதனை வளைத்து நின்றனன். அவள் கண்களில் முத்துப்போல நீர் துளிக்க நின்றனள்.*

விளக்கவுரை : *தன் கைக்கு எட்டாத பூங்கொம்பை வளைக்க முயன்று முடியாது வருந்தி நின்ற தன் மனைவியைக் கண்ட அவள் கணவன், 'இதுவும் கணவனோடு பிணங்கிய பெண்ணோ? மலர் கொய்க' என்று அக் கொம்பினை வளைத்தான். அவள் கண்ணீர் துளித்தனள் என்பதாம். கைக்கு அகப்படாது விலகி நின்றமையால், பூங் கொம்பை 'ஊடிய மகளிரோ?' என்று பன்மையில் குறித்த தலைவனது கூற்றினால், தலைவி தலைவனுடன் ஊடிய மகளிர் பிறரும் உளர் போலும் என்று பொருள் கொண்டு, அவன் பரத்தையருடன் கூடி இன்பம் நுகர்ந்தான் என்று கருதிப் பிணங்கிக் கண்ணீர் வடித்தாள் என்க. இச் செய்யுள்* **தூர காரிய ஏது** *அணியின் பாற்படும்.*

மலர் அணிவித்த மணாளனோடு ஊடல் கொள்ளல்

36. மைக்குழ லொருத்தி காதில் வட்டப்பொன் னோலை யூடே
திக்கய மனையான் கொய்த செருந்திப்பூச் செருகி நோக்கி
இக்குழை யழகி தென்றா னிடுமெங்கைக் கிடுதி யென்னா
அக்குழை யோடும் வீசி யன்பனுக் கலக்கண் செய்தாள்.

தெளிவுரை : *கரிய கூந்தலையுடைய ஒரு பெண்ணின் காதில் வட்டமாகிய பொன்னாற் செய்த ஓலையூடே திக்கு யானை போன்ற ஒருவன் தான் பறித்த செருந்தி மலரைச் செருகி அதனைப் பார்த்து, 'இந்தக் குழையானது அழகாயுள்ளது' எனக் கூறினான்; 'எமது தங்கைக்கு இடுவாய்; இடுவாய்' என்று கூறி அந்தக் காதணியோடு மலரையும் எறிந்து, அவள் அந்த அன்பனுக்குத் துன்பம் விளைத்தாள்.*

விளக்கவுரை : *தலைவனொருவன் தன் ஆர்வ மிகுதியால் தன் காதலியின் காதிலுள்ள பொன்னோலையூடே செருந்தி மலரைச் செருகி, 'இக்குழை அழகிது' என்று பாராட்டினான். அவன் தன்னால் விரும்பப் பட்ட பிற மகளிர்க்கு இக்கோலத்தை காட்டுவதற்காக இங்ஙனம் செய்தானென்று தலைவி உட்கொண்டு, 'எம் தங்கைக்கு இடுவாய்' என்று சொல்லி ஊடினாள் என்பதாம். 'கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீ ரென்று' என்னும் திருக்குறளும் இங்கு*

ஒப்பு நோக்கத் தக்கது. மற்றும் பரத்தையர்க்கு ஒப்பனை செய்த பயிற்சியால் தனக்கும் இவ்வாறு மலர் செருகினன் என்று கருதிய தலைவி ஊடினாள் என்றும் கூறுவர். எங்கையை என்றது பரத்தையை. தலைவன் மீது கொண்ட வெகுளியால் தலைவி 'இடு, இடுதி' என இருமுறை தன் வெறுப்புத் தோன்றக் கூறினாள் என்க. திக்கயம் - திசை யானை. அலக்கண் - துன்பம்.

மங்கையொருத்தி மணாளனோடு குருக்கத்திப் பந்தரையடைதல்

37\. மயிலிளம் பெடையன் னாளோர் மாதர்மாங் குடம்பை செல்லுங்
குயிலிளம் பெடைதன் னாவிச் சேவலைக் கூவ நோக்கி
அயிலிளங் களிறன் னானைக் கடைக்கணித் தளியுந் தேனும்
பயிலிளஞ் சோலை மாடோர் மாதவிப் பந்தர் சேர்ந்தாள்.

தெளிவுரை : *இளமை பொருந்திய பெண் மயில் போல்வாளாகிய ஒரு பெண், மாமரத்திலுள்ள தனது கூட்டின் கண் செல்லும் இளமையுடைய பெண் குயில் தன் உயிர் போன்ற ஆண் குயிலைக் கூவி அழைக்க அதனைக் கண்டு வேற்படை ஏந்திய மதயானை போன்ற தன் காதலனைக் கடைக் கண்ணால் நோக்கி, ஆண் வண்டும் பெண் வண்டும் பயிலும் இளமரக்காவின் மருங்கு ஒரு குருக்கத்திப் பந்தரை அடைந்தனள்.*

விளக்கவுரை : *மாமரத்திலுள்ள பெண் குயில் ஆண் குயிலைக் கூவியழைத்துக் கூட்டினை அடைதலைக் கண்ட தலைவி, தன் காதலனைக் குறிப்பாக நோக்கிக் குருக்கத்திப் பந்தரை அடைந்தாள். கடைக் கணித்து - கண்ணால் சமிக்கை செய்து. அளி - ஆண் வண்டு. தேன் - பெண் வண்டு. இச் செய்யுள்* தொழில்நுட்ப அணியாகும்.

புலவியுற்ற ஓர் பெண்ணின் செயல்

38\. பாசிழை யொருத்தி யாற்றாப் புலவியாள் பைந்தா ரான்முன்
பூசகில் வாசங் காலிற் போக்கியும் புனைபூண் காஞ்சி
ஓசையைச் செவியி லுய்த்துங் கலவியி னுருவந் தீட்டுந்
தூசினை யுடுத்தும் போர்த்துந் தூதுவிட் டவள்போ னின்றாள்.

தெளிவுரை : *பசிய அணிகளை அணிந்த ஒரு பெண், பொறாத புலவியையுடையவளாய்ப் பசிய மாலையை யணிந்த தலைவன் முன் பூசிய அகிலின் மணத்தைக் காற்றின் வழிச் செலுத்தியும், இடையில் அணிந்த காஞ்சி யென்னும் அணியின் ஒலியை அவன் காதிற் புகச் செய்தும், கலவியின் வடிவங்களை எழுதிய ஆடையை உடுத்தும், போர்த்தும் தூதனுப்பியவள் போல் நின்றனள்.*

விளக்கவுரை : *தலைவி ஒருத்தி, தான் தலைவனுடன் ஊடிய அவ்வூடல் நீட்டிக்கப் பொறுக்காதவளாய் தலைவன் முன்தான் பூசிய அகிலின் மணத்தையும், காஞ்சி என்னும் அணியின் ஒலியைச் செலுத்தியும், கலவியின் வடிவங்கள் எழுதிய ஆடையை உடுத்தியும் போர்த்தும் நின்றாள் என்பதாம். காஞ்சி - எண் கோவையமைந்த*

அணி. இடையில் அணியப் பெறுவது. இங்குத் தலைவி தன் கணவனிடத்துச் சிறிதும் தவறில்லாதிருக்க இன்பம் காரணமாக ஊடல் கொண்டாள் என்று கொள்க. இச் செய்யுள் தொழில் நுட்பம் என்னும் அணியாகும்.

ஓர் பெண் புலந்து கேட்டது

39. வாய்ந்தநாண் மலர்கொய் தீவான் மெய்யிலம் மலர்த்தேந் தாது
சாந்தமான் மதம்போற் சிந்திக் கிடப்போர் தையல் யாரைத்
தோய்ந்தசாந் தென்ற ளுள்ளத் துன்னையுஞ் சுமந்து கொய்த
ஆய்ந்தசண் பகத்தா தென்று னெய்சொரி யழலி னின்றாள்.

தெளிவுரை : *ஒரு பெண்ணானவள், மணம் வாய்ந்த புதிய மலரைப் பறித்துக் கொடுக்குந் தலைவன் உடலில் அத்தேன் நிறைந்த மலரின் மகரந்தம் சந்தனத்தோடு கலந்த கஸ்தூரி போலச் சிந்திக் கிடக்க, அதனைக் கண்டு, 'இஃது எந்த மாதரைக் கூடினமையாலமைந்த சாந்து' என்றாள். அவன், 'உள்ளத்தின் கண் உன்னையுந் தாங்கிக் கொய்த ஆராய்ந்த சண்பக மலரின் மகரந்தம்' என்று கூறினான். அது கேட்டலும் நெய் சொரியப்பட்ட நெருப்பைப் போலச் சின மூண்டு நின்றாள்.*

விளக்கவுரை : *ஓர் தலைவி தன் தலைவன் மார்பில் சந்தனத்தோடு கலந்த கஸ்தூரிபோல மகரந்தம் சிந்திக் கிடப்பதைக் கண்டு ஊடிக் கேட்டாள். அவன் கூறிய விடையால் மேலும் சினமுற்று நின்றாள் என்பதாம். தலைவன் கூறிய விடை : 'உன்னையும் சுமந்து கொய்த ஆய்ந்த சண்பகத்தாது' என்பது. உன்னையும் என்பதிலுள்ள உம்மை தலைவன் கருத்தில் உயர்வு சிறப்பு உம்மையாகும். தலைவன் தலைவியின் பொருட்டே சண்பக மலர் கொய்தலாலும் அம்மலரின் நிறம் தலைவியின் மேனியையும் அதன் மணம் பதுமினி சாதிப் பெண்ணாகிய அவள் மணத்தைத் தருதலாலும் அவளை அகத்தே நினைந்த விதமாக நின்று மலர் கொய்ததைக் குறித்தற்கு 'உன்னையும் உள்ளத்துச் சுமந்து கொய்தேன்' என்று கூறினான். ஊடலுற்ற தலைவி, பிற மகளிரையன்றி உன்னையும் சுமந்து கொய்தேன் என்று தலைவன் கூறியதாகக் கருதிய தலைவி சினந்தாள். இப் பொருள் கொள்ளின் உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மையாமென்க.*

ஒரு பெண் தன்னை வணங்கும் தலைவனை புலவி தோன்றக் கேட்டல்

40. பிணியவிழ் கோதை யாளோர் பேதைதன் பதிதன் னூடல்
தணியவந் தடியில் வீழத் தன்னிழ லனையான் சென்னி
மணியிடைக் கண்டு கங்கை மணாளனை யொப்பீ ரெம்மைப்
பணிவதென் னென்று நக்குப் பரிவுமேற் பரிவு செய்தாள்.

தெளிவுரை : *கட்டு அவிழ்ந்த மலர் மாலையை யணிந்தாளாகிய ஒரு பெண், தனது நாயகன் தன் ஊடல் தணியுமாறு வந்து காலில் வீழ்ந்து வணங்க, தனது நிழலை அத் தலைவன் முடியிலுள்ள மணியின்*

கட் கண்டு, 'முடியில் ஒருத்தியை ஒளித்து வைத்திருப்பதால் கங்கையின் நாயகனுகிய சிவபிரானைப் போல்வீரே! எம்மை வணங்குவது என் கருதி?' என்று கூறிச் சிரித்து தலைவனுக்குந் துன்பத்தின்மேல் துன்பஞ் செய்தாள்.

விளக்கவுரை : ஊடலுற்ற மங்கையின் காலில் விழுந்து அது தணியுமாறு வணங்கிய தலைவனின் முடி மணியில் தனது நிழலைப் பார்த்த அம்மங்கை, ஊடல் தணியாளாய்க் கங்கையைத் தலையில் கொண்ட சிவனனைய நீர் எம்மை வணங்குவது தகாது என்று கூறித் தலைவனுக்குத் துயர் விளைத்தாள் என்பதாம். ஊடல் நீடித்து வெகுளியால், தலைவி 'எம்மை' என்றும், நீர்பணிவது கரவே என்பது தோன்றப் 'பணிவது ஏன்?'. என்றும் கூறினள். ஊடலைத் தீர்க்கப் பணிந்த தலைவனுக்கு அவள் கூறிய சொற்கள் மேலும் துயர் விளைத்தன என்பார் 'பரிவுமேற் பரிவு செய்தாள்' என்ருர்.

ஓர் ஆடவன் ஓர் பெண்ணிடம் கேட்டன

41\. மதுகைவா ளொருவ னங்கோர் மங்கைதன் வடிவை நோக்கிப்
பதுமமே யடிகை காந்தள் பயோதரங் கோங்கு காவிப்
புதுமலர் விழிவா யாம்பற் போதுநும் மூர லெப்போ
ததனைவாய் திறந்து காட்டிப் போமினென் றடுத்து நின்ருன்.

தெளிவுரை : வலிய வாளையுடைய ஒரு ஆடவன், அங்கு ஒரு பெண்ணின் வடிவத்தை நோக்கி, 'நுமது பாதம் தாமரை மலரே; கை காந்தள் மலரே; கொங்கை கோங்கின் அரும்பே; விழி புதிய நீலோற் பல மலரே; வாய் ஆம்பல் மலரே; நுமது பல் எந்த மலரோ அறியேன்; அதனை வாய் திறந்து காண்பித்துப் போவீராக' என்று கூறி நெருங்கி நின்ருன்.

விளக்கவுரை : ஒரு மங்கையின் அடி, கை, முலை, விழி, வாய் ஆகியவற்றை முறையே தாமரை, காந்தள், கோங்கு, காவி, ஆம்பல் என்னும் மலர்களெனப் புகழ்ந்த ஓர் ஆண்மகன் அவள் பல் எம் மலரை ஒத்தது என்று அறியும் பொருட்டு, அதனைக் காட்டிப்போமாறு கேட்டு அவளை நெருங்கினுன் என்பதாம். ஆண் மகனெருவன் பரத்தையை நோக்கித் தன் மீச இரங்கிப் புன்னகையேனும் செய்ய லாகாதா என்று கேட்க விரும்பியவன், அவளை நோக்கி 'மூரல் எப் போது? அதனை வாய் திறந்து காட்டி போமின்' என்ருன் என்க. தனது எளிமை தோன்ற அவளைப் பன்மையாற் கூறினுன் என்று கொள்க. ஓர் மங்கை இங்குப் பரத்தையெனக் கொள்ளலே பொருந்து மென்க. பயோதரம் - கொங்கை. மூரல் - பல். இச் செய்யுள் ஆண்பாற் கைக்கிளையில் நலம் பாராட்டல் என்னும் துறையாகும். 'அழிபடர் எவ்வம் கூர ஆயிழை பழிதீர் எவ்வம் பாராட்டின்று' (புறப் பொருள் வெண்பா மாலை) என்பதனேடு ஒப்பு நோக்குக.

காமுகன் ஒருவன் கூற்று

42. விடைத்தனி யேறன் ஞானோர் விடலையோர் வேற்க ணுண்முன்
கிடைத்துநும் மிடத்தெ னெஞ்சங் கெட்டுவந் தொளித்த தல்குற்
றடத்திடை யொளித்த தேயோ தனத்திடை யொளித்த தோபூம்
படத்தினைத் திறந்து காட்டிப் போகெனப் பற்றிச் சென்றான்.

தெளிவுரை : ஒப்பற்ற இடபவேறு போல்வானாகிய ஒரு விடன், ஒரு வேல் போன்ற கண்ணையுடைய பெண்ணின் முன் சென்று, "என் மனம் என்னினின்றும் நீங்கி வந்து நும்பால் ஒளித்தது ; அது அல்குலிடத்து ஒளித்ததோ ? கொங்கையின் கண் ஒளித்ததோ ? அவற்றை மூடிய அழகிய ஆடையைத் திறந்து காட்டிப் போவாயாக" என்று கூறி அவளைப் பின்றொடர்ந்து சென்றான்.

விளக்கவுரை : ஒரு காமுகன் பரத்தை யொருத்தியிடம் பெரு விருப்புடன் தன் மனம் ஒளித்த இடத்தைக் காட்டுமாறு கூறலானான் என்பதாம். இது, 'கொய்தழை யல்குல் கூட்டம் வேண்டி எய்து தலருமையின் இறப்பப் புகழ்ந்தன்று' என்று வரும் ஆண்பாற் கைக் கிளையில் நயப் புற்றுரைத்தல் துறையாம். தனிவிடையேறு - ஒப் பற்ற காளை. கிடைத்து - எதிர்சென்று. பூம்படம் - அழகிய ஆடை. பூத்தொழிலமைந்த ஆடையுமாம். பற்றி-உடையைப் பற்றிக்கொண்டு என்றும் உரைப்பர்.

வண்டுகளின் செயல்

43. மாந்தளி ரடியார் சாய்ப்ப வளைந்தபூஞ் சினைவண் டன்னார்
கூந்தலிற் கிடந்த செம்மற் கோதைமேல் வீழ்ந்த கற்பின்
ஏந்திழை யவரை நீத்துப் பலர்நுகர்ந் தெச்சி லாக்கும்
பூந்தொடி யவரைத் துய்க்கும் பேதையர் போன்ற தன்றே.

தெளிவுரை : மாந்தளிர் போன்ற அடிகளையுடைய மகளிர் வளைத்தலால் வளைந்த மலர்க் கொம்பினின்றும் அம் மகளின் குழ லிற்றங்கிக் கிடந்த பழம் பூமாலையின் மேல் வீழ்ந்த வண்டு, கற்பு நிறைந்த மனைக் கிழத்தியரை விடுத்துப் பலரும் நுகர்ந்து எச்சிலாக்கிய பொருட் பெண்டிரைத் துய்க்கும் அறிவிலிகளை ஒத்தது.

விளக்கவுரை : கற்புடைய மனைவியரை விட்டுப் பரத்தையரை விரும்பும் அறிவிலிகள் போல, மகளிர் வளைத்த பூங்கொம்பில் புது மலர்த் தேனுண்ட வண்டுகள் அவர்கள் கூந்தலிலுள்ள பழம் பூக்களில் வீழ்ந்து கிடந்தன என்பதாம். செம்மல் கோதை - பழம் பூமாலை, பழம்பூச் செறிந்த கூந்தல். பூந்தொடியவர் - இங்கு விலைமாதர். பேதையர் - அறிவிலர். கொம்பிலுள்ள மலரைக் கற்புடை மகளிராக வும் கூந்தலிலுள்ள வாடிய மலரை விலை மாதராகவும் உவமைக் கேற்பப் பொருளைக் கொள்க. இச் செய்யுள் ஒருவயிற்போலியுவமை யணியாம். அன்று, ஏ - அசைகள்.

சோலைகள் வறங்கூர்தல்

44. புல்லி மைந்தர் பொருள்கவர்ந் தாரென
வல்லி யன்ன மடந்தையர் கொய்தலின்
அல்லி நாண்மல ரற்றபின் கைப்பொருள்
இல்லி யென்ன விளைத்தன காவெலாம்.

தெளிவுரை : *தழுவி ஆடவர் பொருளை விலைமாதர் கவர்ந்தது போல, கொடி போன்ற மகளிர் பறித்தலினால் அகவிதழையுடைய புதிய மலர்கள் ஒழிந்தபின், அங்ஙனம் பரத்தையர்க்குக் கொடுத்தலால், கைப் பொருளற்ற வறியன் போல சோலைகளெல்லாம் வறங்கூர்ந்தன.*

விளக்கவுரை : *மகளிர், மலர்களைப் பறித்ததனால் சோலைகள், பரத்தையர்க்குக் கொடுத்தலால் கைப் பொருளற்ற வறியவன் போலாயின என்பதாம். கவர்ந்தார் வினையாலணையும் பெயர். அல்லி- அகவிதழ். இல்லி - கைப்பொருள் இல்லாதவன், வறியவன். 'குல மகளிர்க்கு விலை மகளிரை உவமை கூறியது உவமை வழு. ஆயினும் பூக் கொய்தலில் பெரிதும் முயன்றனர் என்னும் குணமிக்குத் தோன்றுதலால் வழுவன்று' என்றும் அறிஞர் கூறுவர்.*

மகளிர் மைந்தருடன் பொய்கையில் நீராடச் செல்லுதல்

45. மையுண் கண்ணியர் மைந்தரொ டம்மலர்
கொய்யுஞ் செல்வ நுகர்ந்து கொழுங்கணும்
மெய்யுந் தோயிற் கொழுநரின் வேற்றுமை
செய்யும் பொய்கை திளைப்பச்சென் றாரரோ.

தெளிவுரை : *மையுண்ட கண்களையுடைய அம்மகளிர், ஆடவரோடு அப்பூக் கொய்யும் செல்வத்தைத் துய்த்துக் கலந்ததால் மதர்த்த கண்களையும் உடலையும் கொழுநர் வேறுபடுத்துவது போல் வேறுபடுத்தும் பொய்கையின் கண் நீராட்டயரச் சென்றனர்.*

விளக்கவுரை : *மகளிர் மைந்தரோடு சோலையில் பூக்கொய்து இன்பம் துய்த்தவர் பொய்கையில் புனல் விளையாட்டயரச் சென்றனர் என்பதாம். செல்வம் - இங்குக் காம இன்பம். மகளிர்க்குக் கணவரைக் கூடுதலால் உண்டாகும் வேறுபாடுகளாகிய கண் சிவத்தல் இதழ் வெளுத்தல் முதலியன அவர்கள் பொய்கையில் புனலாடுதலாலும் உண்டாகும் என்பதால் கொழுநரின் வேற்றுமை செய்யும் பொய்கை எனப்பட்டது. அரோ - அசை.*

பொய்கையின் தோற்றம்

46. அன்ன மன்னவ ராடுங் கயந்தலை
நன்னர் நீல நளினங் குமுதமென்
றின்ன வன்றி யெழின் முல்லை சண்பகம்
பொன்னங் கோங்கமும் பூத்தது போன்றதே.

தெளிவுரை : *அன்னம் போன்ற அம்மகளிர் நீர் விளையாடும் பொய்கையானது, நல்ல நீலோற்பலமும் தாமரையும் ஆம்பலுமென்று கூறப்படும் இம் மலர்களையே அன்றி, அழகிய முல்லையையும் சண்பகத்தையும் பொன் போன்ற அழகிய கோங்கினையும் பூத்திருத்தலை ஒத்தது.*

விளக்கவுரை : *பொய்கையில் நீர் விளையாடப் புகுந்த பெண்களின் பல், உடல், முலை முதலிய உறுப்புக்கள் அப்பொய்கையிலுள்ள நீலோற்பலம், தாமரை, ஆமபல் முதலிய மலர்களிடையே காணப் பட்டன. அவை முறையே முல்லை, சண்பகம் கோங்கு முதலிய மலர்கள் போலக் காணப்பட்டன என்பதாம். பொய்கையில் நீர் விளையாடும் மகளிரின் பற்கள் முல்லை மலர் போலவும், உடல் சண்பக மலர் போலவும், முலை கோங்க மலர் போலவும் தோன்றுவதால், அங்கு நீர் பூக்களே யன்றி கொடிப் பூவும் கோட்டுப் பூக்களும்:பூத்துள்ளன என்பார் 'இன்னவன்றி யெழின் முல்லை சண்பகம் பொன்னங் கோங்கமும் பூத்தது போன்றது' என்றார். முல்லை கொடிப்பூ. சண்பகமும் கோங்கமும் மரப் பூக்களாகும். முல்லை, சண்பகம், கோங்க மலர்கள் முறையே பெண்களின் பல், உடல், முலைகளுக்கு உவமையாக நின்றன. கயம் - குளம். நன்னர் - பண்புப் பெயர்.*

மகளிர் வருகையால் அஞ்சியோடியவை

47\. குரவ வோதியர் கயந்தலை குறுகுமுன் கயலும்
அரவு மாமையு மலவனு மன்னமு மகன்ற
பருவ ரால்களு மிரிந்தன பகைஞர்மே லிட்டு
வருவ ரேலெதிர் நிற்பரோ வலியிழந் தவரே.

தெளிவுரை : *குராமலரை யணிந்த கூந்தலையுடைய மகளிர், பொய்கையை அடையுமுன்பே சேல்மீனும் பாம்பும் யாமையும் ஞெண்டும் அன்னமும் அஞ்சி அகன்றன ; பெரிய வரால் மீன்களும் ஓடின ; பகைவர் மேலெழுந்து போருக்கு வருவரேல் வலியற்றவர் எதிர்த்து நிற்பரோ ? நில்லார்.*

விளக்கவுரை : *பொய்கையில் மகளிர் நீராட வருங்கால், அவர்கள் உறுப்புக்களின் அழகுக்கு ஒப்பாக நிற்கவியலாத சேல்மீன், பாம்பு, யாமை, ஞெண்டு, அன்னம், வரால் முதலியவை அஞ்சி அகன்றன என்பதாம். கயல், மகளிரின் கண்களுக்கும், அரவு அல்குலுக்கும், ஆமை புறவடிக்கும், அலவன் முழங்காலுக்கும், அன்னம் நடைக்கும், வரால் கணைக்காலுக்கும் உவமை கூறத் தக்கனவாம். ஆயினும் அவை அப் பெண்களின் உறுப்பழகுக்கு நேர் நிற்க வியலாமல் அஞ்சி அகன்றொளித்தன என்றார். வலிய பகைவர் நேரில் வருவரேல் வலியற்றவர் எதிர் நில்லாது அஞ்சியோடுதல் இயல்பு. இவ்வுலகியலைக் கொண்டிருந்தன அஞ்சியோடும் கயல் முதலிய உயிரினங்கள் என்று ஆசிரியர் நயம்படக் கூறியுள்ளார். இச் செய்யுள்* **வேற்றுப் பொருள் வைப்பணி.** *அலவன் - நண்டு. அகன்ற - அன்பெறாத பலவின்பால் வினைமுற்று. நிற்பரோ - எதிர்மறை ஓகாரம்.*

மகளிர் நீரில் மூழ்குதல்

48. பண்ணெ னுஞ்சொலார் குடைதொறும் பன்மலர் வீழ்ந்த
தண்ணெ னுந்திரை யலைதொறு நிரைநிரை தாக்கல்
கண்ணு நீலமு முகங்களுங் கமலமும் வாயும்
வண்ண வாம்பலுந் தத்தமின் மலைவன வனைய.

தெளிவுரை : *பண் என்று கூறப்படும் சொல்லையுடைய மகளிர், மூழ்குந்தோறும், பல மலர்கள் மேலெழுந்து வீழ்ந்த குளிர்ந்த அலைகள் அலைக்குந் தோறும், வரிசை வரிசையாக மோதுதல், கண்களும் நீலோற்பல மலர்களும் முகங்களும் தாமரை மலர்களும் வாய்களும் அழகிய ஆம்பல் மலர்களும் தங்கள் தங்களுக்குள்ளே போர் புரிதலை ஒத்தன.*

விளக்கவுரை : *மகளிர் நீரில் குடைந்தாடுங்கால், உண்டாகும் அலையினால் அவர்களின் உறுப்புக்களை ஒத்த நீர்ப் பூக்கள் மோதுதல், அவ் வுறுப்புக்களோடு போர் புரிதலை ஒத்தன என்பதாம். குடைதொறும் - நீரில் மூழ்கும்போதெல்லாம். மலைதல் - போர் செய்தல்.*

மகளிர் தோய்ந்து நீராடுதல்

49. கூழை பாசியின் விரிந்திட மகிழ்ந்துநீர் குடையும்
மாழை யுண்கணார் கொங்கையு முகங்களு மருங்கர்
சூழ ரும்பொடு மலர்ந்தசெந் தாமரைத் தொகுதி
ஆழ்த ரங்கநீ ரிடைக்கிடந் தலைவன வனைய.

தெளிவுரை : *கூந்தல் பாசியைப்போல விரிய, மகிழ்ந்து நீராடுகின்ற மாவடுவின் பிளவு போன்ற மையுண்ட கண்களையுடைய மகளிரின் கொங்கைகளும் முகங்களும், ஆழ்ந்த அலைகளையுடை நீரின்கட்கிடந்து அசைவனவாகிய பக்கத்திற் சூழ்ந்த மொட்டுகளோடு மலர்ந்த செந்தாமரைக் கூட்டங்களை ஒத்தன.*

விளக்கவுரை : *நீராடுகின்ற மகளிரின் கூந்தல், பொய்கையினிடத்து நீர்ப்பாசி போல விரிந்து கிடந்தன ; கொங்கைகள் தாமரை மொட்டுகளைப் போன்றன ; முகங்கள் மலர்ந்த செந்தாமரைக் கூட்டம் போன்றன என்பதாம். கூழை - கூந்தல். மாழை - மாவடுவின் பிளவு. மருங்கர் - மருங்கு, குற்றியலுகரத்திற்கு அர்போலி.*

மகளிர் கண்சிவக்க நீராடுதல்

50. தூய நீர்குடைந் தேறுந்தன் றுணைவியைத் துணைவன்
வாயுங் கண்களும் வேறுற்ற வண்ணங்கண் டென்கண்
ஏய வின்னுயி ரனையவ ளெங்குளா ளென்றுன்
காயும் வேற்கணுள் முலைகுளிப் பாட்டினுள் கண்ணீர்.

தெளிவுரை : *தூய நீரில் மூழ்கிக் கரையேறுந் தனது தலைவியைத் தலைவன் அவள் வாயும் விழிகளும் வேறுபட்டிருக்குந் தன்மையைக்*

கண்டு, தன் தலைவி அல்லள் இவள் என்று கருதி, 'என்னிடத்துப் பொருந்திய இனிய உயிர்போல்வாள் எங்கே உள்ளாள்?' என்று வினவினன்; அதனைக் கேட்ட அவள் கொல்லுலையிற் காயும் வேல் போலுஞ் சிவந்த கண்களையுடையளாய்க் கண்ணீரால் முலைகளைக் குளிப்பாட்டினாள்.

விளக்கவுரை : நீராடியதால் வாயும் கண்களும் நிறம் மாறுபட்டிருந்ததைக் கண்ட ஒரு மங்கையின் கணவன், அவளை ஐயுற்று, 'என் காதலி எங்கே?' என்று கேட்கவே, அவள் கண்ணீர்விட்டுக் கலங்கி நின்றாள் என்பதாம். வாயுங் கண்ணும் வேறுபடுதலாவது, நீரில் நீண்ட நேரம் முழுகியதால் செந்நிற வாய் வெண்ணிறமாகவும், வெண்ணிறமான கண் செந்நிறமாகவும் மாறுதலாம். தலைவியின் இம் மாறுபாடே தலைவனை ஐயுறச் செய்ததென்க 'என் உயிரனையாள் எங்குளாள்?' என்ற தலைவனது வினா, அவள் மற்றொருத்தியைத் தன் இன்னுயிரனையளாகக் கொண்டு வினவினன் எனக் கருதி வெகுண்டு அழுதனள் என்க. காயும் வேற்கணாள் என்றது தலைவியது மிக்க சினத்தைப் புலப்படுத்துகின்றது. தலைவனது வினாவைக் கேட்ட தலைவி மிகவும் அழுதாள் என்பதை 'கண்ணீரால் முலை குளிப்பாட்டினாள்' என்றார். வேற்கணாள் - உவமைத் தொகை.

ஓர் பெண் நீராட விரும்பாமை

51. மங்கை நல்லவ ளொருத்திநீ ராடுவான் மகிழ்நன்
அங்கை பற்றின ளேகுவா ளவன்குடைந் தேறும்
பங்க யக்கண ளொருத்தியைப் பார்த்தலுஞ் சீசீ
எங்கை யெச்சினீ ராடலே னெனக்கரை நின்றாள்.

தெளிவுரை : மங்கைப் பருவமுடைய ஒரு பெண் நீராடுதற் பொருட்டு கொழுநனது அழகிய கையைப் பிடித்துக்கொண்டு செல்கின்றவள், அக்கொழுநன் அங்கு நீராடிக் கரையேறும் தாமரை போன்ற கண்களையுடைய ஒரு பெண்ணைப் பார்த்த வளவில், 'சீச்சி எனது தங்கையின் எச்சிலாகிய நீரில் யான் ஆடேன்' என்று கூறிக் கரையிலே நின்றனள்.

விளக்கவுரை : ஒரு மங்கை தன் மணாளனுடன் நீராடச் சென்ற போது மணாளன் தன்னெதிர்ப்பட்ட ஒரு மாதை மகிழ்வுடன் நோக்க, அது கண்ட அம்மங்கை, 'இவள் இவன் காமக் கிழத்தியாயிருத்தல் வேண்டும்: அதனாலன்றோ உவந்து நோக்கினான் எனக் கருதி, அவள் ஆடிய நீரிலே யான் ஆடேன்' எனப் புலந்து நின்றாள் என்பதாம். ஆடுவான் - வானீற்று எதிர்கால வினையெச்சம். பற்றினள் - முற்றெச்சம். ஏகுவாள் - வினையாலணையும் பெயர். சீ சீ - இகழ்ச்சிக் குறிப்பு.

நீராட்டத்தில் புலவி

52. வளைந்த பைங்கழ லான்புன லாடலின் மார்பின்
நனைந்த குங்குமத் தலையெறி நளினமொட் டழுந்தப்
புனைந்த கொங்கையால் வடுப்படப் பொறித்தவள் யாரென்
றினைந்த முங்கிளு ணெய்சொரி யெரியென வொருத்தி.

தெளிவுரை : பசிய வீரக்கழலை அணிந்த ஒரு ஆடவன் நீராடுதலால் அவனது மார்பின் கண் நனைந்துள்ள குங்குமக் குழம்பில் அலைகளால் வீசப்பட்ட தாமரை மொட்டு அழுந்தி வடுப்படுத்த அதனைக் கண்ட தலைவி, 'முத்துமாலை அணிந்த கொங்கைகளால் வடுப்படுமாறு அழுத்தியவள் யார்?' என்று வினவி, வருந்தி நெய் சொரிந்த நெருப்புப் போலச் சினமிக்கு நைந்து வருந்தினள்.

விளக்கவுரை : தலைவன் நீராடுங்கால் அவன் மார்பிலே தாமரை மொட்டு அழுந்தியதனால், குங்குமக் குழம்பில் காணப்பட்ட வடுவைத் தலைவி, அது காமக் கிழத்தியின் முலைச்சுவடு எனக் கருதிப் புலந்தனள் என்பதாம். வனைந்த - அணிந்த. இனைந்து - கோபித்து. பைங்கழல் - பசும் பொன்னாற் செய்யப்பட்ட கழல். நளினம் - தாமரை.

ஓர் மாதின் ஊடல்

53. வீழ்ந்த காதலன் செய்ததீங் காகிய வேலாற்
போழ்ந்த நெஞ்சினுள் புலவிநோய் பொருளவன் காண
ஆழ்ந்த நீரிடை யமிழ்த்துவாள் போன்றயர்ந்த தயலே
தாழ்ந்த வன்னத்தை நோக்கிக்கை தாவென விரந்தாள்.

தெளிவுரை : தன்னால் விரும்பப்பட்ட காதலன் தனக்குச் செய்த திமை என்னும் வேற்படையால் பிளக்கப்பட்ட உள்ளத்தை யுடையவளாகிய ஒரு மாது, ஊடல் நோய் பொருதவளாய் அக் காதலன் பார்க்க, ஆழமாகிய நீரின் கண் அழுந்துவாள் போலப் பாவனை காட்டிச் சோர்ந்து, அருகிலே தாமரை மலரில் தங்கிய அன்னத்தைப் பார்த்து, 'கைகொடு' எனக் குறையிரந்தாள்.

விளக்கவுரை : தலைவனிடம் புலவியுற்ற ஒரு மாது, தலைவன் தன்னை அணைத்து எடுக்க வேண்டுமென்னும் கருத்தினளாய் நீரில் அழுந்துவாள் போன்று சோர்ந்து அன்னத்தை நோக்கிக் கைகொடுத்துதவும்படி இரப்பாளாயினள் என்பதாம். வீழ்தல் - விரும்புதல். கை தா - உதவி செய்; கை கொடு. தாழ்தல் - தங்குதல்.

காதலன் தாமரை மலர்களிடையே தன் காதலியைக் கண்டு கலத்தல்

54. கரும்பு போன்மொழி யாளொரு காரிகை வதனஞ்
சுரும்பு சூழ்கம லங்களுட் கமலமாய்த் தோன்ற
விரும்பு காதல னையுற்று மெலிந்தனன் மெல்ல
அரும்பு முல்லைகண் டையத்தி னீங்கிச்சென் றணைந்தான்.

தெளிவுரை : கருப்பஞ்சாறு போலுஞ் சொற்களை யுடையவளாகிய ஒரு பெண்ணினுடைய முகமானது, வண்டுகள் சூழ்ந்த தாமரை மலர்களுள் ஒரு தாமரை மலராய்த் தோன்ற, அவளை விரும்பிய காதலன் ஐயுறவு கொண்டு மெலிந்து, அது போழ்து மெல்ல அரும்பிய முல்லை யரும்பு போலும் பற்களைக் கண்டு சந்தேகத்தினின்றும் நீங்கிப்போய் காதலியைக் கலந்தான்.

விளக்கவுரை : நீர் நிலையிலுள்ள வண்டு மொய்த்த தாமரை மலர்களிடையே தன் தலைவியின் முகமும் ஒரு மலர் போன்றிருத்தலைக் கண்டு தலைவன் ஐயுற்று நிற்க, அது கண்டு புன்னகை செய்த தலைவியின் முல்லையரும்பு போன்ற பற்களைக் கண்டு தெளிந்து அவளைக் கலந்தான் என்பதாம். கூந்தலாற் சூழப்பட்ட முகம்வண்டு சூழ்ந்த தாமரை மலரெனத் தோன்றியதென்க. இது தாமரை மலரோ, காதலியின் முகமோ என்று ஐயுற்று வருந்திய காதலனைக் கண்டு தலைவி புன்னகை செய்தமையால் தோன்றிய பற்களால், அவள் முகமெனத் தெளிந்து சென்று அணைந்தான். இச் செய்யுளில் ஐயவணியும் தெரிதருதேற்ற உவமையணியும் வந்துள்ளன. காரிகை - பெண். முல்லை - உவமையாகு பெயர்.

நீர் விளையாட்டு

55. களித்த காதலன் மொக்குள்வாய்த் தன்னிழல் கண்டு
தெளித்து வாணகை செய்யமாற் றுளென்று சீறித்
தளிர்க்கை நீட்டினன் கண்டில டடவினள் சலத்துள்
ஒளித்தி யோவெனு வுதைத்தனள் பேதைமா தொருத்தி.

தெளிவுரை: பேதையாகிய ஒரு பெண், களிப்புற்ற தலைவன் நீர்க்குமிழியில் தன் நிழலைப் பார்த்து உரப்பி ஒள்ளிய நகை செய்ய, அவள் அந்நிழலைத் தனது மாற்றாளென்று சினந்து தனது தளிர் போன்ற கைகளை நீட்டித் தடவிக் காணாது 'நீருள் மறைந்தனையோ' வென்று சொல்லி உதைத்தாள்.

விளக்கவுரை: நீர்க்குமிழியில் தோன்றிய ஒரு பெண்ணின் நிழலைக் கண்டு அவள் தலைவன் நகைக்க, அப்பெண் அந்நிழலைத் தன் மாற்றாள் என்று எண்ணிச் சினந்து உதைத்தாள் என்பதாம். நிழலை மாற்றாள் என்று மயங்கிய தலைவி, தடவிப் பார்த்து 'சலத்துள் ஒளித்தியோ' என இரட்டுற மொழிந்தாள் என்று உரைத்தலும் ஆம். சலம் - நீர், வஞ்சம். தன் நிழல் - தன் காதலியின் உருநிழல். இச் செய்யுள் மயக்கவணி.

ஆடவரும் மகளிரும் சுண்ணச் சாந்தெறிந்து விளையாடுதல்

56. நாறு சுண்ணமென் கலவையு நானமுந் தம்மின்
மாறி வீசிநின் றுடுவார் மாலைதா ழகலத்
தூறு பாடற வந்தரத் தளிகவர்ந் துண்ப
ஆறு செல்பவர் பொருள்வெளவு மரட்டரே போல.

தெளிவுரை: நறுமணங்கமழுஞ் சுண்ணப்பொடியையும், மெல்லிய கலவையையும், மான் மதத்தையும் தம்முள் மாறி மாறி வீசி விளையாடும் ஆடவர் மகளிர்களின் மாலை தங்கிய மார்பின் கண் அவை சென்று பொருந்துதல் இல்லையாக, வழிச்செல்வோரின் பொருளை இடையே பறித்துக் கொள்ளும் ஆறலைப்பார் போல வண்டுகள் இடைவெளியுணின்று அவற்றைக் கொள்ளை கொண்டு உண்பன.

விளக்கவுரை : *நீராடிய ஆடவரும் மகளிரும் மணமிக்க சுண்ணப் பொடி, கலவைச் சந்தனம், கத்தூரி முதலியவற்றை ஒருவர் மீது ஒருவர் வீசியெறிந்து விளையாடினர் என்பதாம். அங்ஙனம் வீசுங் கால் அவை எறியப்பட்டவரிடம் சென்று சேரும் வழியிலேயே வண்டுகள் இடைவெளியில் நின்று மணமிகுந்த அவற்றைக் கொள்ளை கொண்டு உண்ணலாயின. எனவே, வண்டுகள் வழிப்பறி செய்வோரைப் போன்றன என்றார் என்க. ஊறுபாடு - இடையூறு. அந்தரம் — ஆகாயம். அரட்டர் - குறும்பர்; ஈண்டு ஆறலைப் போர்.*

ஆடவரும் மகளிரும் மலர்வீசி விளையாடுதல்

57. கொய்யு நீலமுங் கமலமுங் கொண்டுகொண் டனங்கன்
எய்யும் வாளியி னெறிவரா லெறிந்திடு மலரைக்
கையி னூற்புடைத் தெறிந்தவர் கதிர்முகம் படக்கண்
டைது வாணகை செய்தக மகிழ்ச்சியு ளாழ்வார்.

தெளிவுரை : *கொய்த நீல மலரையும், தாமரை மலரையும், கைக் கொண்டு, மதவேள் எய்யும் மலர்க்கணைபோல ஒருவர் மேலொருவர் வீசுவர்; அங்ஙனம் வீசிய மலரை கரத்தினால் அது எதிர்த்துச் செல்லுமாறு தாக்கி அது சென்று எறிந்தவரின் முகத்திற் படுதலைப் பார்த்து, அழகிதாக ஒள்ளிய நகைபுரிந்து மனமகிழ்ச்சியாகிய கடலில் அழுந்துவார்.*

விளக்கவுரை : *ஆடவரும் மகளிரும் நீலம் தாமரை முதலிய மலர்களை ஒருவர் மீது ஒருவர் வீசி எறிந்தும், தம்மீது படவரும் மலரை எதிர்த்துச் செல்லுமாறு தாக்கியும், எறிந்தவர் மீது படச் செய்தும் மகிழ்ந்து விளையாடலாயினர் என்பதாம். அனங்கன் - உடம்பில்லாதவன்; மன்மதன். தாமரை நீலம் முதலியன மன்மதனது அம்புகள். எனவே மன்மதனையனைய ஆடவர் எறியும் அம்புகளும் காமத்தை மிகுவிப்பதாயின என்க. ஆல் - அசை, ஐது - அழகிது : குறிப்பு வினைமுற்று.*

ஆடவரும் மகளிரும் நீர் வீசி விளையாடுதல்

58. வாச மென்பனி நீரொடு சுண்ணமும் வாரி
வீசு வாரிளம் பிடியொடு வேழமா நிரைபோற்
காசு லாந்தொடி வில்லிடக் கைகளா லள்ளிப்
பூசு சாந்தவை யழிந்திடப் புனிதநீ ரிறைப்பார்.

தெளிவுரை : *இளமையாகிய பெண் யானைகளோடு ஆண் யானைகளின் கூட்டங்கள் நீரை வீசி விளையாடுதல் போல, மணமுள்ள மெல்லிய பனி நீருடன் சுண்ணப் பொடியையும் அள்ளி மகளிரும் ஆடவரும் வீசி விளையாடுவர்; மணிகள் அழுத்திய வளைகள் ஒளி வீச, கைகளாலே தூயநீரை அள்ளிப் பூசிய சந்தனம் அழியுமாறு வீசுவர்.*

விளக்கவுரை : *ஆடவரும் மகளிரும் பனிநீர் இறைத்தும், சுண்ணப் பொடி வீசியும், பூசிய சந்தனம் அழியுமாறு தூயநீரினை*

அள்ளி வீசியும், விளையாடினர் என்பதாம். இவர்கள் நீர் வீசி விளையாடியது, இளமையான பெண்யானைகளும் விளையாடியதை ஒத்தன என்க. வில் - ஒளி.

நீர் விளையாட்டு

59. அப்பெ ரும்புனற் றடங்குடைந் தாடுவா ராயத்
தொப்ப ருந்தனி யொருமக ளொருவன்றன் முகத்துத்
துப்பை வென்றசெந் துவரிதழ்ச் செய்யவாய்த் தூநீர்
கொப்ப ளித்தன ளாம்பலந் தேனெனக் குடித்தான்.

தெளிவுரை : *அந்தப் பெரிய நீர் நிறைந்த வாவியில் குடைந்து நீராடும் மகளிர் கூட்டத்து ஒப்பற்ற ஒரு மாது, ஒரு ஆடவன் முகத்தில் பவளத்தை வென்ற செந்நிறம் வாய்ந்த இதழையுடைய சிவந்த வாயிலுள்ள தூய நீரைக் கொப்பளித்தாள்; அவன் அந்நீரை ஆம்பல் மலரிலுள்ள அழகிய தேன் என்று கருதிக் குடித்தான்.*

விளக்கவுரை : *ஆடவரும் மகளிரும் நீரைக் கொப்பளித்து ஒருவர் மீதொருவர் உமிழ்ந்தும் அதனை விரும்பிக் குடித்தும் மகிழ்ந்து விளையாடினர் என்பதாம். பெண்ணின் வாய் ஆம்பல் மலர் போன்றிருத்தலின் அதனின்று உமிழப்பட்ட நீரைத் தலைவன் 'ஆம்பலந் தேனெனக் குடித்தான்' என்றார். ஆயம் - பெண்கள் கூட்டம். துப்பு- பவளம்.*

நீர் விளையாட்டு

60. ஆழ மவ்விடைச் செல்லலை நில்லென வடுத்தோர்
வேழ மன்னவன் விலக்குவான் போலொரு வேற்கண்
ஏழை தன்னைக்கை யால்வளைத் தேந்திவண் டறைதார்
சூழு மார்பணைத் திரதிதோ டோய்ந்தவ னொத்தான்.

தெளிவுரை : *ஆண் யானை போன்ற ஒரு ஆடவன், வேல்போன்ற விழிகளையுடைய ஒரு மாதினை 'அவ்விடம் ஆழமுடைத்தாகலின் செல்லாதே; நில்' என்று தடுப்பவன் போலச் சென்று, கரங்களால் வளைத்துத் தூக்கி வண்டுகள் ஒலிக்கும் மாலை சூழ்ந்த மார்பின் கண் அணைத்து, இரதியின் தோளைக் கூடின மன்மதனை ஒத்தனன்.*

விளக்கவுரை : *ஆழத்தில் செல்லாமல் தடுப்பவன் போல, ஓர் ஆண்மகன் ஒரு மாதினை மார்பில் அணைத்துத் தழுவி மகிழ்ந்தான் என்பதாம். அவன் கருத்து அவளைத் தழுவுவதே, ஆதலின் 'ஆழம்; அவ்விடை செல்லலை' என்று, விலக்குவான் போல் அணைத்தான் என்றார். செல்லலை - எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று அவ் விடை - இறங்கும் அந்நீர் நிலை.*

மகளிர் நீராடி ஆடவருடன் கரைசேர்தல்

61. மாசி னுனமுஞ் சூடிய மாலையு மெய்யிற்
பூசு சாந்தமு மாரமும் பொய்கைக்குக் கொடுத்து
வாச மெய்யினி லம்புய வாசமு மயங்க
ஆசை மைந்தரோ டிளையவ ரகன்கரை யடைவார்.

தெளிவுரை: *குற்றமில்லாத மான் மதமும், அணிந்த மாலைகளும், மெய்யினிற் பூசிய சந்தனமும், முத்தாரமுமாகிய இவற்றை வாவிக்குக் கொடுத்து, மணமிக்க தங்கள் மேனியில் தாமரை மலரின் மணமும் விரவ, இளமை வாய்ந்த மகளிர் அன்புள்ள ஆடவருடன் அகன்ற கரையை அடைவாராயினர்.*

விளக்கவுரை: *நீர் விளையாடிய மகளிர் தமதுடலிலுள்ள கஸ்தூரி மாலைகள் சந்தனம் முதலியவற்றை நீர் நிலைகளில் விட்டுத் தாமரை முதலிய மலர் மணம் கமழ நாயகருடன் கரையேறினர் என்பதாம். இச் செய்யுள்* பரிவர்த்தனை *அணி. இளையவர் - மகளிர். மைந்தர் - கணவன்மார். வாசமும் - இறந்தது தழுவிய எச்சவும்மை, ஆம்பல் முதலிய மலர் மணமேயன்றித் தாமரை மணமும் கலந்து மயங்க என்று கொளக.*

நீராடிய மகளிர் துகில் புனைதல்

62. தைய லார்சிலர் நனைந்தநுண் டாளையுட் பொதிந்த
மெய்யெ லாம்வெளிப் படக்கரை யேறுவான் வெள்கி
ஐய தாபொலந் துகிலென வன்பரைக் கூய்க்கண்
செய்ய மாயனைக் கேட்குமாய்ச் சிறுமிய ரொத்தார்.

தெளிவுரை: *நனைந்த மெல்லிய ஆடையுள்ளே மறைபட்ட உறுப்புக்கள் யாவும் வெளிப்படத் தோன்றலால், கரை ஏற வெட்கித் தங்கள் காதலரைக் கூவி, 'ஐயனே! பொன்னுடை அளிப்பாய்' என்று கேட்டலால், அவர்கள் சிவந்த கண்களையுடைய கண்ணனைத் துகில் கேட்கின்ற இடைச் சிறுமியரைப் போன்றுர்.*

விளக்கவுரை: *நீராடிய மகளிர் தம் காதலரைக் கேட்டுத் துகில்களைப் பெற்று உடுத்திக் கொண்டு கரை யேறினர் என்பதாம். அவர்கள், யமுனை யாற்றில் நீர்விளையாடிய இடைச் சிறுமியர் உடைகளைக் கவர்ந்து குருந்த மரத்தில் ஒளித்து நின்ற கண்ணன், அவர் விரும்பியதற் கிணங்க ஆடைகளைக் கொடுக்கப் பெற்று உடுத்திக் கொண்ட இடைச் சிறுமியரை ஒத்தனர் எனப்பட்ட தென்க. ஆடைகள் மிகவும் மெல்லியனவாததால் நனைந்தவுடன் உறுப்புக்கள் வெளிப்படலாயின. ஏறுவான் - வானீற்று எதிர்கால வினையெச்சம். 'ஐய!தா' என ஒருமையாற் கூறினர்; ஒவ்வொருவரும் தனித் தனியே கேட்டனராதலின் என்க. ஆயச் சிறுமியர் - கோபிகாஸ்திரீகள்.*

பொய்கை சோலைகளின் தோற்றம்

63. உலத்தை வென்றதோ ளாடவ ருச்சிமேற் பொறித்த
அலத்த கத்தொடு குங்கும மளைந்துசெம் புனலாய்
மலர்த்த டங்குடைந் தவர்க்குநீ ராஞ்சன வட்டக்
கலத்தை யொத்தன சுற்றிநின் றுரொத்த கடிக்கா.

தெளிவுரை : *மலர்கள் நிறைந்த பொய்கைகள், திரண்ட கல்லை வென்ற தோளையுடைய ஆடவர்களின் முடி மீது தீட்டிய செம்பஞ்சுக் குழம்போடு குங்குமமுங் கலந்து சிவந்த நீரினையுடையனவாய், நீராடிக் கரை யேறியவர்க்கு அமைத்த நீராஞ்சன மெடுக்கும் வட்டக் கலத்தினை ஒத்தன: மணமுள்ள சோலைகள் அவற்றைச் சுற்றி நின்ற மகளிரை ஒத்தன.*

விளக்கவுரை : *நீராடிக் கரையேறிய மகளிர்க்கு ஆலத்தி எடுக்கும் வட்டக் கலத்தினை ஒத்திருந்தது பொயகைகள். சோலைகள் அவற்றைச் சுறறி நின்ற மகளிரை ஒத்தன என்பதாம். மகளிர் அடிகளில் தீட்டியுள்ள செம்பஞ்சுக் குழம்பும், அவர்கள் அணிந்திருந்த குங்குமக் கலவையும் நீராடுங்கால கரைந்தமையால், பொய்கைகள் செந்நிறமான நீருடையனவாகியமையால் நீராஞ்சனம் ஒத்தன வென்றுர். நீராஞ்சனம - ஆலத்தி. வட்டக்கலம் - வட்டமான தட்டு. சுற்றி - சுழற்றி. உலம - திரணடகல. அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு. ஆடவர் உச்சிமேல் பொறித்த அலததகம் - மகளிர் ஊடல் தீர்த்தற்கு ஆடவர் அவர் காலில் விழுந்து வணங்கும் பொழுது, சினங்கொணட அம்மகளிர் தததம் கணவர் தலைமீது உதைததலால், அவர காலில் ஊட்டிய செம்பஞ்சுக் குழமபு ஆடவரின் தலையின்மேல் பொறிக்கப் பட்டிருக்கும் என்க.*

நீராடிய மகளிர் தம்மை அலங்கரித்துக் கொள்ளல்

64. பட்டும் பன்னிறக கலிங்கமும் பன்மணிக் கலனுங்
கொட்டுஞ் சாந்தமு நானமுங் குங்குமச் சேறுங்
கட்டுந் தாமமுந் தமதுகட் டழகெலாங் கவர
மட்டுண் கோதைய ராடவர் மனமெலாங் கவர்ந்தார்.

தெளிவுரை : *பட்டாடைகளும், பலநிறமுள்ள பருத்தி நூலாடைகளும், பல மணிகள் அழுத்திய அணிகளும், நிறையப் பூசிய சந்தனமும், மான்மதமும், குங்குமக் குழம்பும், கட்டிய மாலைகளுமாகிய இவைகள் தங்கள் கட்டழகு முழுவதையுங் கவர்ந்துகொள்ள, மணமிக்க மாலையணிந்த மகளிர் ஆடவர்களின் உள்ளமனைத்தையும் கவர்ந்தனர.*

விளக்கவுரை : *நீராடிய மகளிர் பல வண்ண ஆடையணிகளாலும் சந்தனம முதலிய பூச்சுக்களாலும் மாலைகளாலும் தங்களை அலங்கரித்துக்கொண்டு தம்தம் கணவன்மார் மனங்களைக் கவர்ந்து நின்றனர் என்பதாம். மகளிர் இயற்கை வனப்பு மிக்கவராதலின் அவரணிந்த ஆடையணிகள் அவர்களின் அழகைக் கவர்ந்தன என்பார் 'கட்டழகெலாம் கவர' என்றுர். ஆடையணிகள் முதலியவற்ருல்*

அம்மகளிர் அழகு பெறுது, அவற்றை அம்மகளிர் அணிந்தமையால் அவை அழகு பெற்றன வென அவர்களின் இயற்கையழகைச் சிறப்பித்தவாறு எனக் கொள்க. மட்டுண் கோதையர் - மணமிக்க மாலையணிந்த மகளிர். அடுத்த செய்யுளில் 'மகளிர் புது மது நுகரப்புக்கார்' என வருதலின் மட்டுண் கோதையர் என்பதற்கு மது உண்ட மகளிர் என்று கூறுதல் பொருந்தாதென்க. கலிங்கம் - பருத்தி ஆடை; இடவாகு பெயர். கட்டழகு - பேரழகு. ஆடவர் - தத்தம் கணவன்மார்.

நீராடிய மகளிர் மது உண்ணப் புகுதல்

65. காவியுங் கமலப் போதுங் கள்ளொழு காம்பற் போதும்
ஆவியுட் பூத்த போல வாடியுட் பூப்ப நோக்கி
ஏவிரண் டன்ன கண்ணு லனங்கனை யேவல் கொள்ளும்
பூவிரி பொலங்கொம் பன்னார் புதுமது நுகரப் புக்கார்.

தெளிவுரை : *நீலோற்பல மலரும், தாமரை மலரும் தேன் ஒழுகும் ஆம்பல் மலருமாகிய இவை, வாவியுள மலர்ந்தன போல, கண்ணாடியுள்ளும் மலருமாறு பார்த்து இரண்டு கணைகளை ஒத்த கணகளால மத வேளையும் பணிகொள்ளும் பூக்கள் மலர்ந்த பொற் கொம்பு போன்ற அம்மகளிர் புதிய மதுவினைப் பருகப் புகுந்தனர்.*

விளக்கவுரை : *நீராடிய மகளிர் கண்ணாடியில் பார்த்துத் தம்மை ஒப்பனை செய்துகொண்டு புது மது பருகப் புகுந்தனர் என்பதாம். நீலம், தாமரை, ஆம்பல் முதலிய மலர்கள் பொய்கையில் மலர்ந்திருத்தல் இயல்பு. மகளிர் கண்கள், முகம், வாய், கை, கால்களுக்கு அந்நீர்ப் பூக்களை உவமை கூறுதலும் மரபாகும். மகளிர் கண்ணாடியில் பார்க்குங்கால் தமது உறுப்புக்கள் அங்குக் காணப்பட்டன. அவை ஆடியுள் தோன்றுதல் காவி, கமலம், ஆம்பல் முதலிய நீர்ப் பூக்களை அது பூத்தது போன்றிருந்தது என்பார், 'ஆவியுட் பூப்பபோல ஆடியுட் பூப்ப நோக்கி' என்றார். ஆவி - பொய்கை. ஆடி - கண்ணாடி. ஏவிரண்டு - இரண்டு அம்புகள். இவை பெண்களின் கண்களுக்கு உவமைகள். அன்ன - உவம உருபு. அனங்கன் - அங்கமில்லாதவன்; மன்மதன். பூத்த - பலவின்பால் வினையாலணையும் பெயர். பொலம் கொம்பு - பொற்கொம்பு; அழகிய கொம்பு என்றுமாம்.*

நீராடிய மகளிர் மது உண்ணல்

66. பொன்னினும் வெள்ளி யானும் பளிங்கினும் புலவன் செய்த
நன்னிறக் கலத்திற் கூர்வா ணட்டென வாக்கிச் சேடி
மின்னனு ரளித்த தேறற் சிறுதுளி விரலிற் றெள்ளித்
துன்னிவீழ் களிவண் டோச்சித் தொண்டையங் கனிவாய் வைப்பார்.

தெளிவுரை : *மின் போன்ற தோழிகள், பொன்னாலும் வெள்ளியாலும் பளிங்காலும் கம்மப் புலவனாற் செய்யப்பட்ட நல்ல ஒளியையுடைய கலங்களில் கூரியவாளை நட்டாற்போல வார்த்துக் கொடுத்த மதுவில் சிறிய துளியை விரலாற்றெட்டுத் தெறித்து நெருங்கி வீழும்*

மது மயக்கத்தையுடைய வண்டுகளை ஓட்டி, அழகிய கோவைக்கனி போன்ற வாயில் வைத்து அருந்துவார்.

விளக்கவுரை : மகளிர், தோழிமார் வார்த்துக்கொடுத்த மதுவைப் பருகினர் என்பதாம். மதுக்கலங்கள் பொன், வெள்ளி, பளிங்கு முதலியவற்றால் ஆக்கப்பட்டிருந்தன என்க. புலவன் - பொன் முதலியவற்றால் கலங்கள் இயற்றும் அறிஞன்; கம்மியன். அக்கலங்களில் தோழியர் மதுவினை இடையறாது வார்த்தனராதலின், அத்தோற்றம் வாளினை நட்டது போன்றிருந்ததென்க. கள்ளுண்பவர், முதலில் அதனை ஒரு விரலால் தொட்டுத் தெறித்துவிட்டுப் பின் உண்பது மரபாகுமெனக் கொள்க. நட்டது என, நட்டாலென என்பன 'நட்டென' எனத் தொகுத்தல் விகாரம் பெற்று நின்றது. வாக்கி - வார்த்து. தொண்டை அம்கனி - கோவைப்பழம். கனிவாய் - உவமைத் தொகை.

மதுக்குடத்தின் தோற்றம்

67. வள்ளத்து வாள்போல் வாக்கு மதுக்குடந் தன்பாற் பெய்த
கொள்ளைத்தேன் மதுவைக் கொள்ளை கொளவந்த வள்ள மீதென்
றுள்ளத்து வெகுண்டு வைவா ளூன்றிமார் பிடப்ப தொத்த
கள்ளைச்சூழ் காளை வண்டு செருச்செயல் காண்ப வொத்த.

தெளிவுரை : கிண்ணத்தில் வாளை நட்டாற்போல வார்க்கா நின்ற மதுக் குடமானது, அத்தோற்றத்தால் தன்னிடத்துப் பெய்து வைத்த மிக்க மணமுள்ள கள்ளினைக் கவர வந்த வள்ளம் இது வென்று கருதி, மனத்திற் சினங்கொண்டு கூரிய வாளை ஊன்றி அதன் மார்பைப் பிளப்பதை ஒக்கும்; அம் மதுவினைச் சூழ்ந்த இளமையுடைய வண்டுகள் அப்போர்ச் செயலைக் காண்பன ஒத்தன.

விளக்கவுரை : மதுக் குடத்திலிருந்து இடையறாது கிண்ணத்தில் மது வார்க்கப்பட்டது; அதனை வண்டுகள் சூழ்ந்திருந்தன என்பதாம். இதனை ஆசிரியர், கற்பனை நயம் தோன்றக் கூறியுள்ளார். மதுக்குடம், கிண்ணத்தைத் தன்னிடமுள்ள மதுவை எல்லாம் கவர வந்த கள்வன் என்று எண்ணிச் சினத்துடன் கூரிய வாளை ஊன்றி அதன் மார்பைப் பிளப்பது போன்றிருந்தது என்றும், வண்டுகள் அப்போர்ச் செயலைக் காண்பன போன்றிருந்ததாகவும் கூறியுள்ளார். தேன் - மணம். இடப்பது - பிளப்பது. காண்ப - காண்பன, பலவின்பால் வினையாலணையும் பெயர்.

மதுவுண்டு மயங்கிய ஓர் மாதின் கூற்று

68. தணியலுண் டுள்ளஞ் சோரு மொருமக டணிய லுண்பான்
பிணியவிழ் கோதை யாளோர் பெண்மகள் கலத்தில் வாக்குந்
துணிமதுத் தாரை தன்னை வாளெனத் துணிந்து பேதாய்
திணிகதிர் வாளால் வள்ளஞ் சிதைத்தியோ வென்று நக்காள்.

தெளிவுரை : கள்ளினை நுகர்ந்து மதிமயங்கிய ஒரு மாது, கள்ளினைப் பருகுதற் பொருட்டு முறுக்கவிழ்ந்த மலர் மாலையணிந்த ஒரு

பெண் வள்ளத்தில் வார்க்கின்ற தெளிந்த மதுத் தாரையை வாட்படை என்று துணிந்து, 'அறிவில்லாதவளே! செறிந்த ஒளியை யுடை வாட் படையினால் வள்ளத்தை அழிக்கின்றாயோ?' என்று கூறிச் சிரித்தாள்.

விளக்கவுரை: மது உண்டு மயங்கிய ஓர் மாது, கிண்ணத்தில் உண்பதற்கு மதுவை வார்க்கும் பெண்ணைப் பார்த்து, மயக்கத்தால் வாட் படையினால் கிண்ணத்தைச் சிதைக்கின்றாயோ என்று கூறிச் சிரித்தாள் என்பதாம். தணியல் - கள். துணி மது - தெளிந்த கள். வள்ளம் - கிண்ணம். உண்பான் - பானீற்று எதிர்கால வினையெச்சம். இச் செய்யுள் **மயக்கவணியின்** பாற்படும்.

மதுச் சாடியை வண்டுகள் மொய்த்தல்

69. மலர்தொறுஞ் சிறுதே னக்கித் திரிவண்டு மடவார் தங்கைத்
தலனெடுத் தோச்ச வோடா தழீஇத்தடஞ் சாடி மொய்ப்ப
இலமெனப் பல்லோர் மாட்டு மிரந்திரந் தின்மை நீங்கா
தலமரும் வறியோர் வைத்த நிதிகண்டா லகல்வ ரேயோ.

தெளிவுரை:- பூக்கள்தோறும் சென்று சிறிய தேனை நக்கித் திரிகின்றவண்டுகள், மதுவுண்ணும் மகளிர் தமதுகையை மேலெடுத்து ஓட்டவும் ஓடாமல் பெரிய மதுச் சாடியை தழுவி மொய்ப்பனவாயின: 'வறியம்' என்று கூறிப் பலரிடத்தும் பலகாலும் இரந்தும், இலம் பாடு நீங்காமல் மனஞ்சுழன்று அலையும் வறுமையுடையோர், சேமித்து வைத்த நிதியைக் காணின் யாவர் அகற்றினும் அதை விட்டு நீங்கு வாரோ? நீங்கார்.

விளக்கவுரை: மலர் தொறும் தேனுகர்ந்து திரியும் வண்டுகள் மகளிர் ஓட்டவும் ஓடாமல் மதுக் குடத்தை மொய்ப்பனவாயின என்பதாம். இதனைக் கொண்டு ஆசிரியர், வறியவர் சேமநிதியைக் கண்டால் யாவர் அகற்றிலும் அகலாமல் அதனைச் சுற்றிவருவார் என்னும் பொதுச் செய்தியை வற்புறுத்தியுள்ளார். இச் செய்யுள் **வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும்.** மலர் தொறும் தேன் துளியை நக்கி வயிறு நிரம்பாது திரிகின்ற வண்டு, பலரிடத்து இரந்தும் வறுமை நீங் காது மனம் சுழலும் வறியோரை ஒக்கும் என்க. மதுச் சாடி, சேமித்து வைத்த செல்வத்தைக் குறிக்கும். தழீஇ - சொல்லிசை யளபெடை. ஓடா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்,

மதுவால் மயங்கிய மங்கையின் கூற்று

70. உண்டவ ளொருத்தி கள்வா யுதிக்குந்தன் முகமுங் கண்ணுங்
கண்டுதா மரைகள் வேலை முளைத்ததக் கள்ளை யார
மொண்டுணும் பேதைத் தும்பி யம்மது முளரி வார்தேன்
நுண்டுளி செறிவ தென்னா நொடித்துக்கை புடைத்து நக்காள்.

தெளிவுரை: மதுவைப் பருகிய ஒரு பெண், கள்ளின்கண் தோன் றுந் தனது முகத்தையுங் கண்ணையுங்கண்டு, 'தாமரை மதுக்கடலில் முளைத்தது; அம்மதுவை நிறைய அள்ளி உண்ணுத அறிவில்லாத

வண்டு, அம் மதுக் கடலில் முளைத்த தாமரையினின்று ஒழுகும் மதுவின் சிறு துளியைச் சூழ்கின்றது' என்று சொல்லிக் கைதட்டிச் சிரித்தாள்.

விளக்கவுரை: மதுவால் மதிமயங்கிய மங்கை யொருத்தி கள்ளில் தோன்றிய தன் முகத்தைத் தாமரையாகவும், கண்ணை வண்டாகவும் கருதி மயங்கினள் என்பதாம். கள் வாய் உதிக்கும் - கள்ளின் கண் தோன்றும். கள் வேலை - மதுக்கடல். நொடித்து - சொல்லி. மதுக்கடலிலுள்ள மதுவை உண்ணத் தெரியாத வண்டு, தாமரையிலுள்ள சிறு துளியைச் சூழ்ந்து வருகிறதே என்று தன் பேதைமையை அதன் மேலேற்றிக் கூறினள் என்க.

மதுவால் மயங்கிய ஓர் மாதின் செயல்

71. மங்கையா ளொருத்தி தானுண் டெஞ்சிய மதுவுட் டோன்றுந்
திங்களை நோக்கி யென்னைப் பிரிவின்கட் டீயாச் சுட்டாய்
இங்குவந் தகப்பட்ட டாயே யினிவிடேன் கிடத்தி யென்னு
அங்கொரு வள்ளங் கொண்டு சேமித்தா ளருந்தல் செய்யாள்.

தெளிவுரை: மங்கைப் பருவமுள்ள ஒரு பெண், தான் பருகி மிகுந்த கள்ளினுள் பிரதிபலிக்கும் சந்திரனைப் பார்த்து, 'என் தலைவனைப் பிரிந்திருந்த காலத்து என்னை நெருப்பாக நின்று காய்ந்தனை; இன்று இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டாயே; இனி உன்னை விட மாட்டேன்; இங்ஙனே கிடப்பாயாக' என்று கூறி, அக்கள்ளைப் பருகாது அங்கு மற்றொரு வள்ளத்தினால் மூடி வைத்தனள்.

விளக்கவுரை: மதுவால் மயங்கிய மாது ஒருத்தி, மதுக் கிண்ணத்தில் பிரதி பலிக்கும் சந்திரனை அது தன்னைத் துன்புறுத்திய பழி தீர்க்கக் கருதி அதனைச் சிறைப்படுத்துவான் போலவேறொரு கிண்ணத்தினால் அதனை மூடி வைத்தாள் என்பதாம். பிரிவின் கண்-தலைவனைப் பிரிந்து நின்றபோது. சேமித்தல் - காவல் செய்தல்; மூடி வைத்தல். கிடத்தி - முன்னிலை ஒருமை எதிர்கால வினைமுற்று

மதுவுண்டு பிதற்றிய மங்கை

72. வெவ்விய நறவ முண்ட விளங்கிழை யொருத்தி கையிற்
கௌவிய வாடி தன்னிற் கருங்கய னெடுங்கட் சேப்புங்
கொவவைவாய் விளர்ப்பு நோக்கி யென்னலங் கூட்டுண் டேகும்
ஔவிய மனத்தான் யாரென் றயர்கின்று ளயலா ரெள்ள.

தெளிவுரை: வெம்மையுடைய கள்ளை உண்ட விளக்கமாகிய அணிகளை யணிந்த ஒரு பெண், கையிற் பற்றிய கண்ணாடியில் கரிய கயல் போன்ற நெடிய கண்களின் சிவப்பையும், கொவ்வைக் கனி போன்ற வாயின் வெளுப்பையும் பார்த்து, 'எனது இன்பத்தைக் கொள்ளை கொண்டு செல்லும் வஞ்ச மனததையுடையான் யாவன்?' என்று கூறி அயலவர் நகைக்கச் சோர்கின்றாள்.

விளக்கவுரை : *மதுவுண்டதால் உண்டான கண் சிவப்பையும், வாயின் வெளுப்பையும் கலவியால் வந்தனவாக மயங்கிய மாது ஒருத்தி, 'எனது இன்பத்தைக் கொள்ளை கொண்ட வஞ்சகன் யார்? என்று பிறர் நகைக்கச் சோர்ந்தாள் என்பதாம். சேப்பு - செந்நிறம். விளர்ப்பு - வெண்ணிறம். கூட்டுணல் - கொள்ளை கொள்ளல்.*

மதுவுண்ட மங்கையர் உரையாடல்

73 ஒருத்திகள் ளுண்கின் ருடன் னுருவமந் நறவுட் டோன்ற
ஒருத்தியென் னுடன்வந் துண்பாள் காணென வுண்ட தோழி
ஒருத்திவந் தென்செய் வாடன் னுருவமு நோக்கிப் பேதாய்
ஒருத்தியோ விருவ ரென்று ளெச்சிலென் றுகுத்து நக்காள்.

தெளிவுரை : *கள் உணகின்ற ஒரு பெண், தன் வடிவம் அம்மதுவுள்ளே தோன்றக் கண்டு, 'ஒருத்தி என்னோடு வந்து உண்கின்றாள்; இதைக் காணபாயாக' வென்று கூற, கள்ளுண்ட தோழி ஒருததி அங்கு வந்து என்ன செய்கின்றாளெனின் தன் வடிவத்தையும் அதனுட் கண்டு, 'அறிவிலலாதவளே! உன்னோடு உணபவள் ஒருததியா? அன்று இருவர்' எனறு கூறினாள். அவள, 'இது எச்சிறபட்டது' என்று கீழே அதனை உகுத்துச் சிரித்தனள்.*

விளக்கவுரை : *மதுவுண்ட மங்கையர் மயக்கத்தாலும் மடமையாலும் பலவாறு பேசலாயினர் என்பதாம். நறவு - கள். உருவமும்- இறந்தது தழுவிய எச்சவுமமை ஒருததியோ - தெரிநிலை ஓகாரம்.*

மதுவுண்ட மங்கையும் தோழியும்

74. சாடியு ணறவ முண்டா டன்னுரு வேறு பாட்டை
ஆடியு ளோக்கி நானோ வல்லனோ வென்னைத்தான் கைக்கொண்
டோடினா பிறரு முண்டோ வுயிரன்னான் வந்திங் கென்னைத்
தேடினென் செய்கே னென்னைத் தேடித்தா சேடி யென்றாள்.

தெளிவுரை : *சாடியிலேயுள்ள மதுவை உண்ட ஒரு பெண், தனது வடிவததின் வேறு பாட்டினைக் கண்ணாடியுட் கண்டு, 'இங்கிருப்பது நான் தானோ? வேறு மகளோ! பிறர் என்னைக் கைப்பற்றி ஓடினரோ? என் உயிர் போன்ற காதலன் வந்து இங்கு என்னைத் தேடினால், யான் என் செய்கேன்? தோழியே! என்னைத தேடிக் கணடு பிடிததுத் தருவாயாக' என்று வேணடினள்.*

விளக்கவுரை : *நறவுண்ட நங்கை தன்னையே மறந்து தன் தோழியிடம தன்னையே தேடிக் கணடு பிடித்துத தருமாறு கேட்டாள் என்பதாம். செய்கேன் - தன்மை ஒருமை எதிரகால வினைமுற்று.*

கள்ளுண்ட பெண்ணும் காதலனும்

75. களித்தவ ளொருத்தி நின்ற வாடியுட் கணவன் றன்பின்
ஒளித்தவ னுருவுந் தானு நேர்பட வுருத்து நோக்கித்
துளித்தகண் ணீர ளாகி யேதிலா டோடோய்ந் தின்பங்
குளித்தனை யிருத்தி யோவென் றுதைத்தனள் கோபமுண்டாள்.

தெளிவுரை: கள்ளுண்ட ஒரு பெண், தான் நின்று பார்த்த கண்ணயுள் தன்பின்னே மறைந்து நின்ற கேள்வன் வடிவமும் தன் வடிவமுந் தோன்றச் செயிர்த்து நோக்கி துளிக்கின்ற கண்ணீரையுடையவளாய், 'அயலான் தோளைப் புணர்ந்து இன்பக்கடலுள் மூழ்கி இருக்கின்றயோ?' என்று கூறிச் சினமுதிர்ந்து உதைத்தாள்.

விளக்கவுரை: கள்ளுண்டு கலங்கிய பெண்ணொருத்தி தன் கணவன் நிழலைக் கணவனாகவும் தன் நிழலை மற்றொரு பெண்ணாகவும் கண்ணாடியுட் கண்டு மயங்கி அவன் அயலாளைக் கூடியின்புறுவதாகக் கருதிச் சினந்து உதைத்தாள் என்பதாம். அம்மங்கையின் பேதைமை நகைச்சுவைக்கு ஏதுவாயிருத்தல் உணரத்தக்கது. களித்தவள் - கள்ளுண்டு மகிழ்ந்தவள். உருத்து - கோபித்து.

உண்டாட்டும் இசை விருந்தும்

76. இளம்புளிந் தயிர்வி ராய வின்சுவை பொதிந்த சோறு
வளம்பட விருந்தி னோடு மருந்துவார் வசந்த வீணை
களம்படு மெழாலி னோடு கைவிர னடாத்திக் காமன்
உளம்புகுந் தலைப்ப வெண்ணெய்ப் பாவைபோ லுருகிச் சோர்வார்.

தெளிவுரை: இளம் புளிப்பினையுடைய தயிர் கலந்த இனியசுவை நிறைந்த சோற்றினை விருந்தினரோடும் வளம் பொருந்த உண்பார்கள்; மிடற்றிலுண்டாகும் ஓசையமைந்த பண்ணுடன் வசந்த காலத்திற்குரிய வீணையை வாசித்து மதவேள் உள்ளத்தில் சென்று வருந்துதலால், வெண்ணையாற் செய்த பதுமைபோல் உருகித் தளர்வார்.

விளக்கவுரை: நீராடி மதுவுண்ட மங்கையரும் மணாளரும் விருந்தினருடன் உணவுண்டு வசந்த காலத்திற்குரிய வீணையை வாசித்து மனமுருகி இன்புற்றார் என்பதாம். வசந்த வீணை - வசந்த காலத்திற்குரிய வீணை; ஓர் இராகமுமாம். களம்படுமெழால் - மிடற்றினின்று எழுப்பப்படும் பண். கைவிரல் நடாத்தி - வாசித்து. புளி தயிர் - புளிந்தயிர் என மெல்லெழுத்து மிக்கது. 'புளிப்பெயர் முன்னின மென்மையும் தோன்றும்' என்பது விதி. விருந்து - பண்பாகு பெயர்.

செண்பக மாறனும் அவன் மனைவியும் சோலையில் தங்கியிருத்தல்

77. இவ்விள வேனிற் காலத் தின்னுயிர்த் துணைவி யோடும்
செவ்விய செங்கோ னேமிச் செண்பக மாற னோர்நாள்
கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்
வெவ்விய வேடை நீப்பா னிருந்தனன் வேறு வைகி.

தெளிவுரை: இந்த இளவேனிற் காலத்தில் ஒரு நாள் சிற்ப நூல் வல்லோன் செய்த ஒளிவிடும் சந்திரகாந்தக் கல்லாகிய செய்குன்றின் கண் கொடிய வெப்பத்தைப் போக்கும் பொருட்டு, திருந்திய செங்கோலையும் ஆணைத் திகிரியையுமுடைய செண்பக மாறன் என்பான், தனது இனிய உயிர் போலும் மனைவியோடு வேறாகத் தங்கியிருந்தனன்.

விளக்கவுரை : *சண்பக மாறன் தன் மனைவியுடன் இத்தகைய இளவேனிற் காலத்தில் வெப்பம் நீங்கச் சந்திர காந்தச் செய்குன்றில் வேருகத் தங்கியிருந்தான் என்பதாம். கைவினை வல்லோன் - சிற்பத் தொழிலில் வல்லவன். காந்தம் - சந்திரகாந்தம். வெவ்விய வேடை- மிக்க கொடிய கோடை. நீப்பான் - பானீற்று எதிர்கால வினையெச்சம்.*

நறுமணத்துடன் தென்றல் வீசுதல்

78. மாந்தளி ரீன்று கோங்கு வண்டள வரும்பித் தண்டேங்
காந்தள்செங் கமல மாம்பல் சண்பகங் கழுநீர் பூத்துச்
சாய்ந்தமென் கொடியுந் தானுந் தனியிடத் திருப்பா னேரே
வாய்ந்ததோர் நாற்றந் தோன்ற வசைந்தது வசந்தத் தென்றல்.

தெளிவுரை : *மாந்தளிர் தளிர்த்து, கோங்கு மொட்டும் வளவிய முல்லையரும்பும் அரும்பி, தண்ணிய தேன் நிறைந்த காந்தள் மலரும், செந்தாமரை மலரும், குமுத மலரும், சண்பக மலரும், குவளை மலரும் மலர்ந்து, ஒசிந்த மெல்லிய கொடி ஒன்று உளதேல், அது போன்ற தேவியுந்தானுமாக தனியிடத்தில் இருக்கும் அச்சண்பக மாறனுக்கு நேரே புதுமை வாய்ந்ததாகிய ஓர் நறுமணந் தோன்றுமாறு வசந்த காலத்திற்குரிய தென்றல் மெல்லென வீசியது.*

விளக்கவுரை : *மனைவியும் தானுமாக மாறன் அமர்ந்திருந்தபோது புதுமை வாய்ந்த நறுமணத்துடன் வசந்தத் தென்றல் மெல்லென வீசியது என்பதாம். மாந்தளிரும், கோங்கு முல்லை காந்தள் செந் தாமரை குமுதம் சண்பகம் குவளை முதலிய மலர்களும் மலந்துள்ள கொடியொன்றுளதேல் அது மாறன் மனைவிக்கு ஒப்பாகுமென்க. இது* **இல்பொருள் உவமையணி.** *மாந்தளிர் முதலிய உவமானச் சொற்களால் உடல் நிறம் முதலிய உவமேயம் புலப்பட அமைத்துள்ள நயம் அறியத் தக்கது. மாந்தளிர் மேனி நிறத்தையும், கோங்கு முலையையும், தளவு பற்களையும், காந்தள் கையையும், கமலம் முகத்தையும் ஆம்பல் வாயையும், சண்பகம் மூக்கையும், கழுநீர் கண்ணையும், கொடி தலைவியையும் உணர்த்தி நின்றன. கொடியும் தானும் இருப்பான் என்பது திணைவழுவமைதி.*

சண்பக மாறன் தென்றலின் கண்தோன்றிய மணத்தைப் பற்றி எண்ணுதல்

79. வெவ்விய வேலான் வீசும் வாசமோந் தீது வேறு
திவ்விய வாச மாக விருந்தது தென்றல் காவில்
வெளவிய வாச மன்று காலுக்கும் வாச மில்லை
எவ்வியல் வாச மேயோ விதுவென வெண்ணங் கொள்வான்.

தெளிவுரை : *கொடிய வேற்படையினையுடைய சண்பகமாறன், அங்ஙனம் வீசிய மணதைதை உயிர்த்து, 'இது வேறு தெய்வத் தன்மை பொருந்திய மணமாக இருந்தது ; தென்றல் சோலையிற் கவர்ந்த மணம் அன்று; காற்றுக்கு இயல்பாக மணமில்லையாயின் இம்மணம் எதன் கட் பொருந்திய மணமோ ?' என்று எண்ணுவானாகி.*

விளக்கவுரை : *சண்பகமாறன் வசந்தத் தென்றலின்கண் வந்த மணத்தை உயிர்த்துணர்ந்து அம்மணம் வந்தவாற்றினை ஆராய்வானாயினன் என்பதாம். பாண்டியன் தான் இதுவரை உணர்ந்த மணமன்று எனக் கருதியமையால், 'வேறு திவ்வியவாசமாக இருந்தது' என்றான் என்க. காவில் வெளவிய வாசமாயினும் அதனையும் அரசன் உணர்வானாகலின் அதுவுமன்று என்று கருதினன். ஊறு, ஓசை என்னும் இருகுணங்களையே காற்று பெற்றிருத்தலையும் அறிந்த பாண்டியன் காலுக்கும் வாசமில்லை என்றான். எனவே அவனுள்ளம் அதன் காரணத்தை ஆராயலாயிற்று என்க. திவ்வியம் - தெய்வத்தன்மை.*

சண்பக மாறனின் ஐயம்

80. திரும்பித்தன் றேவி தன்னை நோக்கினன் றேவி யைம்பால்
இரும்பித்தை வாச மாகி யிருந்தது கண்டிவ் வாசஞ்
சுரும்பிற்குந் தெரியா தென்னாச் சூழ்ந்திறும் பூது கொண்டீ
தரும்பித்தைக் கியல்போ செய்கை யோவென வையங் கொண்டான்.

தெளிவுரை : *திரும்பித் தனது மனைவியைப் பார்த்தான்; அந்த மணம் தேவியின் பகுப்பாக முடிக்கப்படும் பெருமை பொருந்திய கூந்தலின் மணமாயிருத்தலைக் கண்டு, இம்மனம் வணடிற்கும் தெரியாது என்று எண்ணி வியப்புற்று, 'இம்மணம், அரிய கூந்தலுக்கு இயற்கையோ ? அன்றிச் செயற்கையோ ?' என்று ஐயுற்றான்.*

விளக்கவுரை : *தென்றலின் மணத்திற்குரிய காரணத்தை ஆய்ந்த பாண்டியன், அது தன் மனைவியின் கூந்தலின் மணமாயிருத்தலை கண்டு வியந்து கூந்தலுக்கு மணம் இயற்கையோ செயற்கையோ என்று ஐயங்கொண்டான் என்பதாம். ஐம்பால் இரும்பித்தை - ஐந்து பகுப்பாக முடிக்கப்படும் பெருமை வாய்ந்த கூந்தல். ஐம்பால்- முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்ற ஐந்து பகுப்பு. முடி- மயிரை உச்சியில் முடிவது. கொண்டை - பக்கத்தில் முடிவது. சுருள்- பின்னே செருகுவது; குழல் - சுருட்டி முடிவது; பனிச்சை - பின்னி விடுவது. பித்தை - கூந்தல். செய்கை - செயற்கை.*

சங்க மண்டபத்தில் பொற்கிழி தொங்கவிடப் படுதல்

81. ஐயுறு கருத்தை யாவ ராயினு மறிந்து பாடல்
செய்யுந ரவர்க்கே யின்ன வாயிரஞ் செம்பொ னென்றக்
கையுறை வேலா னீந்த பொற்கிழி கைக்கொண் டேகி
மெய்யுணர் புலவர் முன்னாத் தூக்கினர் வினைசெய் மாக்கள்.

தெளிவுரை : *'யான் ஐயுற்ற கருத்தினை உணர்ந்து பாடுகின்றவர் யாவராயிருந்தாலும், அவருக்கே இந்த ஆயிரம் செம்பொன் அடங்கிய முடிப்பு உரியது' என்று கூறி, அந்த வேற்படை ஏந்திய கையினனாகிய சண்பக மாறன் கொடுத்த பொன் முடிப்பை ஏவலாளர் பெற்றுச் சென்று உண்மையை உணர்ந்த சங்கப் புலவர் இருக்கை முன்னே கட்டித் தொங்க விட்டனர்.*

விளக்கவுரை : பாண்டியன், தான் ஐயுற்ற கருத்தினை யுணர்ந்து பாடும் புலவர்க்கு ஆயிரம் பொன்னடங்கிய முடிப்பு உரியதென்று கூறி, அம் முடிப்பைச் சங்க மண்டபத்தில் தொங்கவிடச் செய்தான் என்பதாம். பொற்கிழி - பொன் முடிப்பு. முன்றை - முன்றைக.

சங்கப் புலவர்கள் முயற்சியும் அயர்ச்சியும்

82. வங்கத்தார் பொருள்போல் வேறு வகையமை கேள்வி நோக்கிச்
சங்கத்தா ரெல்லாந் தம்மிற் றனித்தனி தேர்ந்து தேர்ந்து
துங்கத்தார் வேம்ப னுள்ளஞ் சூழ்பொரு டுழாவி யுற்ற
பங்கத்தா ராகி யெய்த்துப் படருறு மனத்த ராஞர்.

தெளிவுரை : சங்கப் புலவரனைவரும் மரக்கலத்தில் நிறைந்த பொருளின் வகைபோல, வேறு வேறு வகையாக அமைந்த நூல்களால் தம்முள் ஒன்று பட்டு ஆராய்ந்தும், ஒவ்வொருவரும் தனித் தனியே பன்முறை ஆராய்ந்தும், சிறந்த வேப்ப மலர் மாலையை அணிந்த சண்பக மாறன் உள்ளதுக் கருதிய பொருளைத் தேடிக் காணமையால், சிறுமை யுற்றவராய் இளைத்துத் துன்ப மிக்க மனத்தினையுடையராஞர்.

விளக்கவுரை: சங்கப் புலவர்கள் யாவரும் பாண்டியன் மனக் கருத்தினை அறியும் பொருட்டு ஒன்று கூடியும் தனித் தனியே ஆராய்ந்தும் அறிய முடியாமல் வருந்தலாயினர என்பதாம். மரக்கலத்திலே பல திணைப் பொருள்களும் நிறைந்திருப்பதுபோல பல திணைப் பொருள்களும் நிறைந்த நூல்களை ஆய்ந்தறிந்த சங்கப் புலவர்களாதலின், வங்கத்தார் பொருள் போல், வேறு வகையமை கேள்வி சங்கத்தார் எனப்பட்டார். பங்கத்தாராகி - சிறுமையுற்றவராகி. சிறுமை, பாண்டியன் கருத்துப் புலப்படப் பாடியும் பொற்கிழி பெறவியலாமையால் ஏற்பட்டதென்க. படர் - துன்பம். சூழ் பொருள் - கருதிய பொருள்; வினைத் தொகை. தார்வேம்பன் - வேப்பந்தாரனுகிய பாண்டியன். உற்ற பங்கத் தாராகி-பங்கமுற்றவராகி எனக் கூட்டுக.

தருமியின் திருமண விருப்பம்

83. அந்த வேலையி லாதி சைவரில்
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையான்
முகத்தை யாச்சிம முயலும் பெற்றியான்
தந்தை தாயிலான் றருமி யென்றுளான்.

தெளிவுரை : அப்பொழுது ஆதி சைவ மரபில் வந்த மாணவனும் தந்தையும் தாயும் இல்லாதவனும் பிரமசரிய நிலையில் வழுவாது ஒழுகுந் தன்மையனும் ஆகிய தருமி என்ற பெயருள்ள ஒருவன் மணஞ் செய்யும் விருப்பமுடையவனுய்,

விளக்கவுரை : தருமி என்னும் பெயருடைய ஆதி சைவ அந்தணன் ஒருவன் மணம் செய்து கொள்ளும் விருப்புடையவனுயிருந்தான் என்பதாம். ஆதி சைவர் - சிவபெருமான் திருமேனி தீண்டித்

தொண்டு செய்யும் அந்தணர். மாணவன் - பிரமசாரி; இவன் வேதம் ஓதுதலும் விரதங் காத்தலுமாகிய ஒழுக்க நெறியில் நிற்போன். முந்தை - முன். ஆச்சிரமம் என்பது ஆச்சிமம் என நின்றது.

தருமி சோமசுந்தரக் கடவுளை வேண்டுதல்

84. ஒருவ னுன்முகத் தொருவன் மார்புறை
திருவ னுடருந் தேவ னுலுரு
அருவ நாலகன் றனைத் தன்கலி
வெருவ நாடிமுன் வீழ்ந்து வேண்டுவான்.

தெளிவுரை : ஒப்பற்றவனும், நான் முகங்களையுடைய பிரமனும் திருமகள் உறையும் மார்பினையுடைய திருமாலினும் தேடிக் காண்பதற்கு அரிய தேவனும், நான்கு உருவங்களும் நான்கு அருவங்களும் அருவுருவம் ஒன்றும் ஆகிய இவற்றைக் கடந்தவனுமாகிய சோமசுந்தரக் கடவுளைத் தன் துன்பம் அஞ்சி ஓடக்கருதி திருமுன் வீழ்ந்து வணங்கி வேணடுவானாயினன்.

விளக்கவுரை : தருமி, சோமசுந்தரக் கடவுளை அடைந்து தன் மனத்துயர் நீங்க வணங்கி வேண்டலாயினன் என்பதாம். ஒருவன் - ஒப்புயர்வற்றவனாகிய சிவபெருமான். நான்முகன் - பிரமன். மார்பு உறைதிருவன் என்பதைத் திருவுறை மார்பன் என விகுதி பிரித்துக் கூட்டித திருமால் என்று கொள்க. உரு அருவ நால் அகன்றான் - பரம்பொருளாகிய சோமசுந்தரக் கடவுள், நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன் என்பன உருவம் நான்காகும். விந்து, நாதம், சக்தி, சிவம் என்பன அருவம் நான்காகும். நான்கு உருவங்களையும், நான்கு அருவங்களையும், சதாசிவமாகிய உருவருங்களையும் ஆகிய ஒன்பது பேதங்களிலும் கலந்து நின்று தொழில் நடத்துவோனாகிய ஒப்பற்ற மேலோனே முழு முதல்வன் என்பது சைவ சித்தாந்த உண்மையாகும். அத்தகை இறைவனாகிய சோமசுந்தரக் கடவுளைத் தருமி வேண்டித் தன் குறையை நீக்கிக் கொள்ளக் கருதினன் என்க.

தருமியின் வேண்டுகோள்

85. தந்தை தாயிலேன் றனிய னாகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயுஞ் செல்ல றீர்ப்பதற்
கெந்தை யேயிது பதமென் றேத்தியே.

தெளிவுரை : 'எமது தந்தையே! தந்தை தாய் அற்றவனாய் ஒரு பற்றுக்கோடு மில்லாதவனாயுள்ள சிறியேன் கடிமணம் புரியும் விருப்ப முடையேன்; அது முடித்தற்குப் பொருளின்மையின் மனத்தை வருத்தும் வறுமைத் துன்பினை நீக்குதற்கு இது தருணம்' என்று கூறித் துதித்து.

விளக்கவுரை : தருமி சோமசுந்தரக் கடவுளை நோக்கி, தாய் தந்தையற்றவனும் வறியவனும் திருமண விருப்புடையவனுமாகிய

எனது துன்பினை நீக்குதற்கு இது தக்க சமயம் என்று கூறி வேண்டினன் என்பதாம். இது பதம் - பாண்டியன் அமைத்துள்ள பொற்கிழியைப் பெறும் கருத்தினனைக் கூறியவாறாகும். புது வதுவை - புதிய திருமணம். செல்லல் - வறுமை. பதம் - சமயம்.

தருமி தன் குறையைக் கூறி முறையிடல்

86. நெடிய வேதநூ னிறைய வாகமம்
முடிய வோதிய முறையி னிற்கெனும்
வடிவி லில்லற வாழ்க்கை யின்றிநின்
அடிய ருச்சனைக் கருக னவனோ

தெளிவுரை: ''உயர்ந்த மறைநூல்கள் முற்றவும் ஆகமங்கள் முற்றவும் ஓதி அறிந்த முறையில் நிற்பேன் எனினும், குற்றமில்லாத இல்லற வாழ்க்கை இல்லாமல் தேவரீரின் திருவடியை அருச்சிப்பதற்கு உரியன் ஆவனோ? (ஆகேன்)'

விளக்கவுரை: 'வேதாகமங்களைக் கற்றறிந்தேனாயினும் இல்லறம் பூண்டாலன்றி உன்னை அருச்சிக்க உரியனாகேனே' என்று தருமி சிவனை வேண்டினன் என்பதாம். இல்வாழ்க்கையிலீடுபட்டோரே சிவபெருமானை அருச்சிக்க உரியர் என்பது வேதாகமங்களின் துணிவு என்பது இதனால் கூறியவாறாகும். நிற்கு - நிற்பேன்; தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று. எனினும் என்பது, எனும் என விகாரப்பட்டு நின்றது.

இறைவனிடம் தருமி குறையிரத்தல்

87. ஐய யாவையு மறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்
துய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினன்.

தெளிவுரை: 'ஐயனே! நீ யாவற்றையும் அறிவாயன்றோ? வையை நாட்டையுடைய பாண்டியனது உள்ளக் கருத்தை ஓர்ந்து, யான் உய்தி பெற ஒரு கவி பாடி அடியேனுக்கு அருளல் வேண்டும்' என்று குறையிரந்து கூறினன்.

விளக்கவுரை: தருமி இறைவனிடம், 'எல்லாவற்றையும் அறிந்த நீ, பாண்டியன் கருத்தை கவியாகப் பாடியளித்து அருள்புரிய வேண்டும்' என்று வேண்டினன் என்பதாம். மணம்புரிய விரும்புதல், அதற்குரிய பொருளின்றி வருந்துதல், மணம் புரிந்து இறைவனை அருச்சிக்க விரும்புதல் என்பனவாகிய தன் குறையை, இறைவன் அறிவான் என்பதை குறிக்கவே தருமி 'யாவையும் அறிதியே' என்றான். கொல், ஆம் - அசைகள்.

இறைவன் தருமிக்கு அருளிய பாடல்

88. தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் "கொங்குதோ வாழ்க்கை" யின்றமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்ன னீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினான்.

தெளிவுரை: *பாண்டியன் குல தெய்வமாகிய சுந்தர பாண்டியர், 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் முதலையுடைய இனிய தமிழ்ப் பாவினைச் சொலலழகு நிரம்பப் பாடித் தந்தருளினார்; துன்பம் நீங்கி அத்தருமி என்பவன் அதனை வணங்கி வாங்கினான்.*

விளக்கவுரை: *தருமியின் வேண்டுகோளுக்கு இரங்கிய இறைவன் 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் தமிழ் பாடலைப் பாடித் தந்தருள, தருமி அதனை வணங்கிப் பெற்றான் என்பதாம். அச் செய்யுள்:*

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

இச் செய்யுளின் பொருள்: மலர்களிலுள்ள தேனை ஆராய்ந்து திரிகின்ற வாழ்க்கையையுடைய அழகிய சிறகினையுடைய வண்டே! பயிற்சிமிக்க நட்பும், மயில்போன்ற சாயலும், நெருங்கிய பற்களும் உடைய இவ்வரிவையின் கூந்தல் போல நறுமண முடையன நீ அறியும பூக்களுள் உள்ளனவோ, விருப்பம் பற்றிக் கூறாது உண்மை கூறுக' என்பதாம். இச் செய்யுள் நலம் பாராட்டல் என்னும் துறையாகும். இச் செய்யுள் எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாகியாகிய குறுந் தொகையில் இரண்டாம் செயயுளாக இறையனார் பாடியதாகச் சேர்க்கப் பட்டுள்ளது. தமிழ் - செய்யுளைக் குறித்தது.

தருமி தமிழ்ச் சங்கத்தை யடைதல்

89. பொற்ற னிச்சடைப் புவன நாயகன்
சொற்ற பாடல்கைக் கொண்டு தொன்னிதி
பெற்றே டுத்தவன் போன்று பீடுறக்
கற்ற நாவலர் கழக நண்ணினான்.

தெளிவுரை: *பொன் போலுஞ் சடையினையுடைய ஒப்பற்ற உலக நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள், திருவாய் மலர்ந்தருளிய திருப் பாசுரத்தைக் கையிலேற்று, வைப்பு நிதியைப் பெற்றவன் போல மகிழ்ந்து, பெருமை பொருந்தக் கற்றுவல்ல புலவர் சங்கத்தை அடைந்தான்.*

விளக்கவுரை: *இறையனாரளித்த பாடலைப் பெற்ற தருமி பொன் முடிப்பைப் பெற்றவனே போல மகிழ்ந்து சங்க மண்டபத்தை யடைந்*

தான் என்பதாம். தருமியின் மகிழ்வுக்குத் தொன்னிதி பெற்றெடுத்த வன் அடையும் மகிழ்ச்சி உவமையாயிற்று. நாவலர் கழகம் - தமிழ்ப் புலவர்கள் உள்ள சங்கம்.

சங்கப் புலவர் பாராட்டு

90. கல்வி யாளர்தங் கையி னீட்டினுன்
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளுந் தூக்கியே
நல்ல நல்லவென் றுவகை நண்ணினுர்.

தெளிவுரை: *புலவர் கையில் அத்திருப் பாசுரத்தைக் கொடுத் தான்; விரைந்து வாங்கி அனைவரும் அதனைப் படித்துச் சொல் வளத் தையும் பொருள் வளத்தையும் சீர்தூக்கி, அவை மிகவும் நல்லன என்று கூறி மகிழ்ச்சியுற்றனர்.*

விளக்கவுரை: *சங்கப் புலவர்கள், தருமி கொடுத்த பாடலைப் படித்துணர்ந்து மிகவும் மகிழ்ந்தனர் என்பதாம். சொல்லின் செல்வமும் பொருளும் - சொற்சுவையும் பொருட்சுவையும்.* **நல்ல நல்ல** - *அடுக்குத் தொடர், உவகை பற்றியது. வியப்புப் பற்றியது எனினும் பொருந்தும்.*

பாண்டியன் கவி கேட்டுக் களிகூர்தல்

91. அளக்கில் கேள்வியா ரரசன் முன்புபோய்
விளக்கி யக்கவி விளம்பி னுர்கடன்
உளக்க ருத்துநே ரொத்த லாற்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினுன்.

தெளிவுரை: *அளவில்லாத நூற் கேள்வியையுடைய சங்கப் புலவர்கள், பாண்டியன் முன் சென்று அக் கவியினைக் கூறிப் பொருள் விளக்கினுர்கள்; தன் உள்ளக் கருத்துடன் அது முற்றும் ஒத்திருத்த லால், பாண்டியன் முடியசைத்துக் களி கூர்ந்தான்.*

விளக்கவுரை: *சங்கப் புலவர்கள் பாண்டியனிடம் சென்று அக் கவியின் பொருளை விளக்க, பாண்டியன் அது தன் கருத்துக்கிசைந் திருத்தலைக் கண்டு களி கூர்ந்தான் என்பதாம். அளக்கு - அளத்தல்; தொழிற் பெயர். கேள்வியார் - நூற் கேள்வியினையுடைய சங்கப் புலவர். நேர் ஒத்தல் - முழுவது ஒத்திருத்தல். விளக்கியக் கவி விளம் பினுர் என்பதை அக்கவி விளம்பி விளக்கினுர் என்று கூட்டிப் பொருள் கொள்க.*

தருமி பொற்கிழி பெறுமாறு பாண்டியன் கூறல்

92. உணர்ந்த கேள்வியா ரிவரொ டொல்லைபோய்ப்
புணர்ந்த வாயிரம் பொன்னு மின்றமிழ்
கொணர்ந்த வேதியன் கொள்க வின்றென
மணந்த தாரினுன் மகிழ்ந்து நல்கினுன்.

தெளிவுரை : 'உண்மையுணர்ந்த கேள்வி வல்லாராகிய இப் புலவரோடும விரைந்து சென்று, பொருந்திய ஆயிரம் பொன்னையும் இனிய பாசுரத்தைக் கொண்டு வந்த வேதியன் இப்பொழுதே கொள்ளக் கடவன்' என்று மணம் வீசும மாலையை யணிந்த பாண்டியன் மகிழ்ந்து அளித்தான்.

விளக்கவுரை : 'இப் பாடலைக் கொணர்ந்த தருமி சங்கப் புலவர்களோடு சென்று ஆயிரம் பொன்னைப் பெற்றுக் கொள்வானாக' என்று பாண்டியன் கூறினன் என்பதாம். இன்றமிழ் கொணர்ந்த வேதியன் - தருமி என்னும் ஆதிசைவ அந்தணன். தமிழ் - தமிழ்ச் செய்யுள்.

நக்கீரன் தருமியைத் தடுத்தல்

93. வேந்த னேவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி யறுக்கு நம்பியை
நேர்ந்து கீரனில் லெனவி லக்கினன்.

தெளிவுரை : பாண்டியன் ஏவலினல் புலவரோடும் திரும்பிச் சென்று, கழகத்தின் வெளியிற்றெங்கிய சிறந்த பொன் முடிப்பை அறுக்கும் அத்தருமியை நக்கீரன் எதிர்ந்து, 'அறுக்காதே; நில்' என்று தடுத்தான்.

விளக்கவுரை : பாண்டியன் கட்டளையின்படி பொன் முடிப்பைக் கைக கொள்ளும் தருமியை நக்கீரன் தடுத்தான் என்பதாம். விபுதர் - சங்கப் புலவர். அவை-தமிழ்ச் சங்கம். நம்பி-ஆண்களிற் சிறந்தவன்; தருமி. நேர்ந்து - எதிர்தது. இங்ஙனம் தடுத்த நக்கீரன் முன்பு அங்கிருந்திலன் என்பது பெறப் பட்டது.

தருமி பொற்கிழி பெறமுடியாது வருந்தல்

94. குற்ற மிக்கவிக் கென்று கூறலுங்
கற்றி லானெடுங் காலம் வெம்பசி
உற்ற வன்கலத் துண்ணு மெல்லைக்கைப்
பற்ற வாடினன் பண்பு பற்றினன்.

தெளிவுரை : 'இந்தப் பாடலுக்குக் குற்றம் உண்டு' என்று கூறலும், தமிழ்ப் புலமை யில்லாதைகிய அவ்வேதியன், நீண்ட காலமாகக் கொடிய பசி, உற்றவனுக்க் கலத்தின் கண உணவு பெற்று உண்ணுங்கால் 'உண்ணற்க' வெனத் தடுத்து ஒருவன் கையைப் பற்றிக் கொள்ள வாட்ட மடைந்த ஒருவனது தன்மையை அடைந்தான்.

விளக்கவுரை : இறையனர் கவிக்குக் குற்றம் கூறியதைக் கேட்ட தருமி, தமிழ்ப் புலமையில்லாதவனகையால் செய்வதறியாது மனம் மிகவும் வாட்ட மடைந்தான். இக் கவி குற்றமில்லாதது என்று கூறுதற்கேற்ற வலிமையற்றவனதலின் தருமி கற்றிலான் எனப்

பட்டான். பொருளிலக்கணம் கற்றுணராதவன் என்று கூறுதலும் பொருந்தும். தருமி தன் வருத்தம் தீரத்தக்க பொன் ஆயிரமும் கையில் கிட்டும் சமயத்தில் நக்கீரர் தடுத்தமையால், அது கிட்டப் பெருது வாட்ட முற்றதற்கு, நெடுங்காலம் பசியுற்றவன் கலத்தில் உணவு பெற்று உண்ணுங்கால், உண்ணற்க என்று தடுக்கப்பட்ட ஒருவன் அடையும் வாட்டத்தை உவமையாக்கி யுள்ளார்.

தருமி மன வாட்டத்துடன் இறைவன் கோயில் சார்தல்

95. உலர்ந்த நெஞ்சுகொண் டொதுங்கி நாயகன்
நலந்த ருங்கழ னண்ணி ஞனவன்
மலர்ந்த பாடல்கொண் டறிஞர் வைகிடத்
தலர்ந்த சிந்தைகொண் டடைந்த மைந்தனே.

தெளிவுரை : *அவ்விறைவன் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரத்தைப் பெற்றுக் கொண்டு சங்கப் புலவர் இருக்கும் இடத்திற்கு மகிழ்ந்த உள்ளத்தோடு சென்ற அத்தருமி என்பான், வாடிய மனத்துடன் நடந்து இறைவனது நன்மையைத் தருந் திருவடியை அடைந்தனன்.*

விளக்கவுரை : *மகிழ்ந்த உள்ளத்துடன் பாடலைப் பெற்றுக் கொண்டு சங்க மண்டபமடைந்த தருமி, பொன் பெற வியாலாமையால் வாடிய மனத்துடன் இறைவன் திருமுன் வந்தான் என்பதாம். அவன் - சோமசுந்தரக் கடவுள், இறையஞர். மலர்ந்த பாடல் - அருளிச் செய்த செய்யுள். அலர்ந்த சிந்தை - பேரானந்தம்.*

தருமி இறைவனிடம் முறையிடுதல்

96. செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டவப் பனவ னென்னைநீ
மையுண் கண்டவிவ் வழுவு பாடலைக்
கையு ணல்கிஞய் கதியி லேற்கெஞ.

தெளிவுரை : *உள்ளத்திற் கவலை கொண்ட அம் மறையோன், திருப்பாசுரத்தைக் கொண்டு போய்த் திருமுன் வைத்து, 'கருமை பொருந்திய திருமிடற்றை யுடையவனே! நீ குற்றமுள்ள இப் பாடலை ஒரு பற்று மற்ற எனக்குக் கையில் அளித்தருளினையே அது என்னை?' என்று கூற,*

விளக்கவுரை: *தருமி, இறைவனளித்த திருப்பாடலை அவன் திருமுன் வைத்து, இறைவனே! குற்றமுள்ள பாடலை நீ எனக்களித்தது ஏன்?' என்று கேட்டான் என்பதாம். பையுள் - துன்பம். வழுவு பாடல் - நக்கீரஞல் குற்றமுடைத் தென்று கூறப்பட்ட பாடல். பனவன் - பார்ப்பனன்; தருமி.*

தருமி இறைவனை நோக்கிக் கூறியன

97. வறுமைநோய் பிணிப்பப் பன்னாள் வழிபடு மடியே னின்பாற்
பெறுபொரு ளிழந்தே னென்று பேசிலேன் யார்க்கு மேலாங்
கறைகெழு மிடற்றோய் நின்றன் கவிக்குற்றஞ் சில்வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னா லாருனை மதிக்க வல்லார்.

தெளிவுரை : *'வறுமையாகிய பிணி என்னைக் கட்டி வருத்த, பல நாட்களாக வழிபாடு செய்து வரும் அடியேன், நின்னிடத்துப் பெறுகின்ற பொருளை இழந்தேன் என்று கூறிற்றிலேன்; அனைவருக்கும் மேலாகிய நஞ்சுக்கறை பொருந்திய திருமிடற்றையுடைய இறைவனே! நீ பாடியருளிய பாசுரத்திற்கு சில் வாழ்நாளும் சிற்றறிவு முடைய புலவர் குற்றங் கூறினால், நின்னை மதிக்க வல்லவர் யாவர்? ஒருவரும் இல்லை.'*

விளக்கவுரை : *தருமி இறைவன் திருமுன் சென்று 'பெருமானே! யான் பொருள் பெற முடியாமையாலடையும் வருத்தத்தைவிட, அச் சங்கப் புலவர் நின் கவிக்குக் குற்றம் கூறியதனாலாகிய வருத்தமே பெரிதுடையேன் என்று முறையிட்டான் என்பதாம். பிணிப்ப-கட்டி வருத்த. பேசிலேன் - குறை கூறிற்றிலேன்; தன்மை ஒருமை எதிர் மறை வினைமுற்று.*

சோமசுந்தரக் கடவுள் புலவனைத் தோன்றுதல்

98. எந்தையிவ் விகழ்ச்சி நின்ன தல்லதை யெனக்கியா தென்னாச்
சிந்தைநோ யுழந்து சைவச் சிறுவனின் றிரங்க யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப் பனுவலும் பயனு மான
சுந்தர விடங்க னங்கோர் புலவனுய்த் தோற்றஞ் செய்தான்.

தெளிவுரை : *'எமது தந்தையே! இந்த நிந்தை நின்னைச் சார்ந்த தல்லது எனக்கு யாதுளது? என்று கூறி, அவ்வாதிசைவ மாணவன் மனக் கவலையால் வருந்தி நின்று இரங்க, அனைவருக்கும் பந்தமும் வீடும் மறை நூலும் அதன் பயனுமாகிய சோமசுந்தரக்கடவுள் அங்கு ஒரு புலவனைத் தோற்றுவானாயினன்.*

விளக்கவுரை : *தருமியின் மனக்கவலையினை யுணர்ந்த சோம சுந்தரக் கடவுள் அப்பொழுது ஒரு புலவனைத் தோன்றலாயினர் என்பதாம். தருமியின் மனக்கவலை - நக்கீரர் இகழ்ந்த இகழ்ச்சி இறைவன் மேலதாகையால், அது போக்கப்பட வேண்டும் என்று கொண்ட மனக்கவலை, இறைவன் பந்தமாயும், வீடுமாயும், வேத மாயும், அதன் பயனுமாயும் விளங்குகின்றான் என அவனியல்பு கூறியவாறு. சைவச் சிறுவன் - ஆதிசைவப் பிராமணப் பிரமசாரி; பயன் - வேதப்பயன்.*

புலவனான இறைவனின் தோற்றம்

99. கண்டிகை மதாணி யாழி கதிர்முடி வயிரம் வேய்ந்த
குண்டலங் குடிகொண் டாகத் தழகெலாங் கொள்ளை கொள்ளத்
தண்டமிழ் மூன்றும் வல்லோன் றானெனக் குறியிட் டாங்கே
புண்டர நுதலிற் பூத்துப் பொய்யிருள் கிழித்துத் தள்ள.

தெளிவுரை: *மகர கண்டிகையும், பதக்கமும், மோதிரமும், ஒளி பொருந்திய முடியும், வயிரங்கள் பதித்த குண்டலமும் திருமேனியின் கண் குடியாக இருக்கும் அழகையெல்லாம் கவரவும், தண்ணிய மூன்று தமிழிலும் வல்லவன் தானே எனக் குறியிட்டது போல திரிபுண்டரம் நெற்றியின்கண் இடப்பெற்று நிலையில்லாத அஞ்ஞான விருளைக்கிழித்து ஓட்டவும்,*

விளக்கவுரை: *இறைவன் புலவன் கோலங்கொண்டு வந்தான் என்பதாம். முத்தமிழிலும் வல்ல புலவன் யான் என்று குறியிட்டு வருதல் போல மூன்று கீற்றாக நெற்றியில் திருநீறு விளங்கத் தோன்றினன் என்க. புண்டபுரம் - மூன்று கீற்றாக நெற்றியில் இடப்படும் திருநீறு. பொய்யிருள் - நிலையில்லாத அஞ்ஞான இருள்; பொய்க்குக் காரணமாகிய ஆணவம், மாயை, கன்மம் என்றலுமாம். மும்மல நீக்கத்துக்கும் சிவதத்துவ விளக்கத்துக்கும் அறிகுறியாகவே நெற்றியில் நீற்றினைத் திரிபுண்டரமாக அணிதல் மரபாகும். புலவராக வந்த இறைவன் அணிந்துவந்த மகரகண்டிகை மதாணி முதலியன அவர் உடலழகெலாம் கவர்ந்தன என்பார், 'அழகெலாம் கொள்ளை கொள்ள' என்றார்.*

புலவனாகிய இறையனார் வருகை

100. விரிகதிர்ப் படாத்திற் போர்த்த மெய்ப்பையு ளடங்கிப் பக்கத்
தெரிமணிக் கடகத் திண்டோ ளிளையவ ரடைப்பை யோடுங்
குருமணிக் களாஞ்சி யம்பொற் கோடிகந் தாங்க முத்தாற்
புரிமதிக் குடைக்கீழ்ப் பொற்காற் கவரிபால் புரண்டு துள்ள.

தெளிவுரை: *விரிந்த ஒளியையுடைய ஆடையாற் போர்க்கப்பெற்ற நிலையங்கியினுள் உடலைக்கரந்து, இரு பக்கங்களிலும் நெருப்புப் போலும் மணிகள் அழுத்திய கடகங்கள் அணிந்த திண்ணிய தோள்களையுடைய இளைஞர், அடைப்பையையும் நிறம் பொருந்திய மணிகள் பதித்த காளாஞ்சியையும் அழகிய பொன்னாலாகிய பூந்தட்டினையும் தாங்கி வரவும், முத்தாலாகிய சந்திரவட்டக் குடையின் கீழே இருபாலும் பொற்காம்பினையுடைய சாமரை புரண்டு துள்ளவும்.*

விளக்கவுரை: *புலவனாக வந்த இறையனார், இளைஞர் அடைப்பை, காளாஞ்சி பூந்தட்டு தாங்கிவரவும், சாமரை இரட்டவும் சந்திரவட்டக் குடையின் கீழே வரலானார் என்பதாம். மெய்ப்பை - சட்டை; நிலையங்கியுமாம். இளையவர் - மாணவர், அடைப்பை - வெற்றிலைப்பை. களாஞ்சி - தாம்பூலம் உமிழும் கலம். கோடிகம் - பூந்தட்டு.*

இறையனார் சங்கத்தை யடைதல்

101. சொல்வரம் பிகந்த பாத மென்பது தோன்ற வேதம்
நல்லபா துகையாய்ச் சூட நவின்றன கற்றுப்பாட
வல்லவர் மறையி னாறு மனுமுதற் கலைபோற் பின்பு
செல்லநூ லாய்ந்தோர் வைகுந் திருந்தவைக் களத்தைச் சேர்ந்தான்.

தெளிவுரை : *சொல்லின் எல்லையைக் கடந்த திருவடி யென்பது புலப்பட்ட, மறை நல்ல பாதுகை வடிவமாகி அதனைத் தன் முடியிற் சூடவும், கூறியருளிய பாசுரங்களைக் கற்றுப் பாட வல்லவர்கள் மறையின் வழியே மனுமுறை முதலிய கலைகள் பின் செல்வது போலப் பின் செல்லவும, நூலாராய்ச்சி வல்ல புலவர் இருக்கும் திருத்தமாகிய கழகத்தை அடைந்தனன்.*

விளக்கவுரை : *இறையனார் தம் திருவடியை வேதம் பாதுகையாகித் தாங்கவும், மறை வழிப்பட்ட மனு முதலிய கலைகள் அவரைத் தொடர்வன போல பாடல் வல்ல மாணவர்கள் பின் வரவும் சங்க மண்டபத்தை அடைந்தார் என்பதாம். இறைவன் பாதம் வேதத்தின் உச்சியில் விளங்குவனவாதலின் சொல்வரம்பிகந்த பாதம் எனப்பட்டது மறையினாறு மனுமுதற்கலைபோல - வேதத்தின் வழியே மனு முதலிய பதினெட்டு ஸ்மிருதிகளும் தொடர்ந்து செல்லுதல் போல. மறையினாறு - வேதாங்கங்களாகிய சிட்சை முதலிய ஆறும் எனப் பொருள் கொள்வாருமுளர். நவின்றனகற்றுப் பாடவல்லவர் - மாணாக்கர்கள் ; கற்றுச் சொல்லிகள் எனப்படுவோர்.*

இறையனார் எம் கவிக்குக் குற்றம் கூறியவர் யார்? எனல்

102. ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி,
யாரைநங் கவிக்குக் குற்ற மியம்பினா ரென்னா முன்னங்
கீரனஞ் சாது நானே கிளத்தினே னென்றா னின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

தெளிவுரை : *புலவர் நிறைந்த அவையினைச் சார்ந்து எதிர்நின்று அங்கு இருந்த புலவர்களைப் பார்த்து, 'எமது கவிக்குக் குற்றம் கூறினவர் யார்?' என்று கேட்பதற்கு முன்னரே, நக்கீரன் சிறிதும் அஞ்சாது, 'நானே குற்றங் கூறினேன்' என்றனன். அதனைக் கேட்டு நிலைபெற்ற புகழ் வாய்ந்த புலவன், 'குற்றம் யாது' என்று வினவ, தெளியாத நக்கீரன்.*

விளக்கவுரை : *சங்கத்தை அடைந்த இறையனார் தம் கவிக்குக் குற்றம் கூறியவர் யாரெனக் கேட்க, நக்கீரர் 'நானே கூறியவன்' என்று விடை கூறவே, குற்றம் யாதெனக் கேட்கலாயினர் என்பதாம். ஆரவை - அருமையான சபை; நிறைந்த சபை. சீரணி புலவன் - இறையனார். தேராக்கீரன் - பொருளிலக்கணம் தெளியாத கீரன்.*

இறையனாரும் நக்கீரரும்

103. சொற்குற்ற மின்று வேறு பொருட்குற்ற மென்றான் றூய
பொற்குற்ற வேணி யண்ணல் பொருட்குற்ற மென்னை யென்றான்
தற்குற்றம் வருவ தோரான் புனைமலர்ச் சார்பா லன்றிச்
அற்குற்ற குழற்கு நாற்ற மில்லையே யென்றா னையன்.

தெளிவுரை : *சொற்குற்றமில்லை; வேறே பொருளின் குற்ற மென்று கூறினான். தூய பொன்னை யொத்த சடையை யுடைய இறைவன், 'பொருட்குற்றம் என்னை' என்று வினவினான். தனக்குக் குற்றம் வருவதை அறியாத கீரன், 'அணிந்த மலர்ச்சார்பினாலல் லாமல் இருளையொத்த கூந்தலுக்கு இயற்கையாக மணம் இல்லை' யென்று கூறினான் இறைவன்.*

விளக்கவுரை : *நக்கீரன் அக்கவியில் சொற்குற்றமில்லை; பொருட் குற்றமுளதெனக் கூறக் கேட்ட இறையனார், அப் பொருட்குற்றத் தைக் கூறுமாறு கேட்கவே, வருவதறியாக் கீரன், கூந்தலுக்கு மலர் முதலியவற்றின் சார்பாலன்றி இயற்கை மணமில்லை என்று தெரி வித்தான் என்பதாம். பொற்கு உற்ற வேணி - பொன்னை ஒத்த நிற முடைய சடை; குவ்வுருபை ஐயுருபாகத் திரிக்க. உற்ற - உவமஉருபு. அல் - இருட்டு. அல்கு உற்ற குழற்கு - இருளை ஒத்த கூந்தலுக்கு. இங்கும் அவ்வாறே உரைத்துக்கொள்க.*

நக்கீரன் மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணமில்லை என்று வாதிடுதல்

104. பங்கய முகமென் கொங்கைப் பதுமினி குழலோ வென்ன
அங்கது மனைத்தே யென்றா னாலவா யுடையான் றெய்வ
மங்கையார் குழலோ வென்ன வன்னது மந்தா ரத்தின்
கொங்கல ரளைந்து நாறுங் கொள்கையாற் செய்கைத் தென்றான்.

தெளிவுரை : *'தாமரை மலர் போன்ற முகத்தையும், மெல்லிய கொங்கையையுமுடைய பதுமினி கூந்தலோ?' என்று வினவ, 'அக்கூந்தலும் 'அத்தன்மைத்தே' எனக் கூறினான். திருவாலவா யுடைய இறைவன், 'தேவ மகளிரின் கூந்தலோ?' என்று வினவ, 'அக்கூந்தலும் மந்தாரத்தின் மணமுடைய மலர்களைக் கலந்து மணங்கமழுந் தன்மையினால் செயற்கை மண முடையதே' என்று கூறினான்.*

விளக்கவுரை : *இறைவன் பதுமினிப்பெண், தேவமகளிர் கூந் தல் ஆகியவற்றைப் பற்றிக் குறித்து கேட்கவே, நக்கீரன் அவை செயற்கை மணமுடையதே என்று வாதாடினான் என்பதாம். இறை வனார் பதுமினி தேவமகளிர் முதலியோர் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டென்னும் கருத்தினராதலின் அவற்றை விதந்து வினா வினார் என்க. பதுமினி - உத்தமசாதிப் பெண், தெய்வ மங்கையர் - இந்திராணி முதலிய தெய்வலோக மகளிர். மந்தாரம் - பஞ்ச தருக் களில் ஒன்று; தேவேந்திரனுக்குரியது. செய்கைத்து - செயற்கை மண முடையது.*

நக்கீரன் ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கும் செயற்கை மணமே எனல்

105. பரவிநீ வழிபட் டேத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத் தமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீர்ங் குழலு மற்றோ வெனவஃது மற்றே யென்று
வெரு விலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்.

தெளிவுரை : *'நீ துதித்து வழிபட்டு வணங்கும் பரஞ்சோதியாகிய திருக்காளத்தியிற் கோயில் கொண்டருளிய பாம்பையும் கங்கையையும் அணிந்த சடையுடைய இறைவரது இடப்பாகத்தில் எழுந்தருளிய ஞானப் பூங்கோதையின் இருளையொத்த தண்ணிய கூந்தலும் அத்தன்மைத்தோ?' என்று வினவ, 'அக்கூந்தலும் அத் தன்மையை உடையதே' என்று சிறிதும் அஞ்சாது மேல் வருவதை அறியாமல் முற்றிலும் சலஞ்சாதித்தான்.*

விளக்கவுரை : *நக்கீரன் அறியாதுரைத்ததைக் கேட்ட இறைவனர், அவன் வழிபட்டு வணங்கும் இறைவியாகிய ஞானப் பூங் கோதையின் கூந்தலைச் சுட்டிக் கேட்கவே, அக்கூந்தலும் அத் தன்மைத்தே என்று சிறிதும் அஞ்சாது உரைத்தான் என்பதாம். சலம் - பொய். கூந்தற்கு இயற்கை மணம் உண்டெனக் கருதிச் சொல்லிய பாடலை மறுத்து, கூந்தற்குப் பூ முதலியவற்றின் செயற்கை மணமே உண்டென வேறு பொருள் கூறியதனல் 'சலமே முற்றச் சாதித்தான்' என்றார்.*

நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே என்று நக்கீரன் கூறல்

106. கற்றைவார் சடையா னெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்னு மஞ்சா னும்பரார் பதிபோ லாகம்
முற்றுநீர் கண்ணா னாலு மொழிந்தநும் பாடல் குற்றங்
குற்றமே யென்றான் றன்பா லாகிய குற்றந் தேரான்.

தெளிவுரை : *திரண்ட நீண்ட சடையை யுடைய இறைவன் நுதல் விழியைச் சிறிது திறந்து காட்ட, அதனற் பற்றப்படுபவனாகியும் இன்னும் அஞ்சாதவனாய், 'தேவேந்திரன் போல் உடல் முற்றும் நீர் கண்களை உடையீரானாலும், கூறிய நுமது செய்யுள் குற்றமுடையதே' என்று கூறினான்; தன்னிடத்துள்ள குற்றத்தை அறியாத கீரன்.*

விளக்கவுரை : *ஞானப் பூங்கோதையின் கூந்தற்கும் செயற்கை மணமே யுண்டெனச் சாதித்த நக்கீரன் முன், இறையனர் தமது நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து காட்ட, அதனல் துன்புறும் போதும் நக்கீரன், 'உமது உடல் முழுதும் கண்ணானாலும் நும் செய்யுள் குற்றமுடையதே' என்று கூறினான் என்பதாம். நக்கீரன் தீமை தீர்த்து ஆட்கொள்ளும் கருத்துடைய கருணைமூர்த்தியாதலின் 'கண்ணினைச் சிறிதே காட்ட' என்றார். பற்றுவான் - நெற்றிக் கண்*

தீயினால் பற்றப்படுவோனாகிய நக்கீரன், உம்பரார் பதி - இந்திரன். உம்பரார் - விண்ணுலகிலுள்ள தேவர். தன் கருத்தை வலியுறுத்தும் கருத்தினனாதலின் நக்கீரன், 'குற்றம் குற்றமே' என்றான்

நக்கீரன் நெற்றிக் கண் வெப்பத்தால வருந்தலும் இறைவன் மறைதலும்

107. தேய்ந்த நாண்மதிக் கண்ணியா னுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொருதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தன னவனைக்
காய்ந்த நாவல னிம்மெனத் திருவுருக் கரந்தான்.

தெளிவுரை : *குறைந்த பிறைமதியாகிய கண்ணியை உடைய இறைவனது நெற்றிக் கணணின் செந்தழல் பற்றிய வெப்பத்தால் பொறுக்கலாற்றாது பொற்றாமரை வாவியுள் நூல்களை ஆராய்ந்தறிந்த நாவல் லோனாகிய கீரன் சென்று விழுந்து, அழுந்தினன; அவனைச் சினந்து ஒறுத்த புலவனாகிய சோமசுந்தரக் கடவுள் விரைந்து தனது திருவுருவை மறைததருளினான்.*

விளக்கவுரை ; *இறைவனின் நுதல் விழி வெம்மை பொறுக்க வியலாத நக்கீரன் பொற்றாமரைக் குளத்துள் விழுந்து அழுந்தினான்; புலவனாக வந்த இறைவன் தன் திருவுருவத்தை மறைததருளினான் என்பதாம். தேய்ந்த நாண்மதி - இளம்பிறைச் சந்திரன். ஆய்ந்த நாவலன் - பல நூல்களையும் ஆராய்ந்துணர்ந்த நக்கீரன். தேய்ந்த நாண்மதிக் கண்ணியான் - ஒற்றைக்கலையுடன் தன்னை வந்தடைந்த சந்திரனுக்கும் அடைக்கலம் தந்தவன் இறைவனாதலின் தனக்குப் பிழை செய்த நக்கீரனும் மீணடு வந்தடைந்தால் அவனுக்கும் அருள் புரிவான் என்னும் குறிப்புத் தோன்ற அடைமொழி அமைந்துள்ளதாதலின் இது* கருத்துடையடைமொழியணி*யாம்.*

பயிற்சி வினாக்கள்

1. வங்கிய சூடாமணி பாண்டியன் அமைத்த திருநந்த வனச் சிறப்பைத் தெரிவிக்க.
2. சண்பக மாறன், சண்பக சுந்தரர் — இப்பெயர்க் காரணங்களைத் தெரிவிக்க.
3. இளவேனிற் காலத்தின் வெப்பத்தை ஆசிரியர் எங்ஙனம் புலப்படுத்தியுள்ளார் ?
4. வேனிற்காலத்தின் நிலையை ஆசிரியர் எங்ஙனம் வருணித்துள்ளார் ?
5. வேனிற்காலத்தில் மரங்கள் இலையுதிர்த்துத்தழைத்து பூத்தல் எங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளன ?
6. பைங்கொடிகளைக் கற்பினார்க்கு உவமை கூறியுள்ள தனைப் பொருத்தி விளக்குக.
7. நாட்டியப் புலவன் ஆட்ட நகைமுகம் வியர்வை சிந்தப் பாட்டிசைத்தாடா நின்ற பாவைமார்

போன்ற — இவ்வுவமையைப் பொருளொடு பொருத்துக.

8. குலந்தரு நல்லோர் செல்வம் குன்றினும் தம்பாலில் லென்று அலந்தவர்க் குயிரை மாறியாயினும் கொடுப்பர் — இந்நீதியை நினைவூட்டும் செய்தி யாது? இதிலமைந்துள்ள அணியை விளக்குக.

9. வேனிற்காலத்தில் சோலையிலுள்ள பறவைகளின் செயல்களை விவரிக்க.

10. தென்றலின் வருகை எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?

11. வேனிற் கோமகன் மகுடம்சூடியிருப்பதக் குளிர் பூஞ்சோலை — விளக்குக.

12. மக்கள் கோடை வெம்மையாற்றிக் கொள்ளுதற்குரிய இடங்களாகக் கொண்டன யாவை?

13. வேனிலில் பூம்பொழிலின்பம் நுகரும் பொருட்டு ஆடவரும் மகளிரும் சென்ற காட்சியை விவரிக்க.

14. மங்கையர் வருகையைக் கண்ட சோலைமயிலும் குயிலும் அவரை அணுகவும் அகலவும் காரணமென்ன?

15. மங்கையர் வதனத் தொகையால் சோலை பொலிவுற்றிருந்த தெங்ஙனம்?

16. சோலையில் ஆடவரும் மகளிரும் மலர் கொய்து விளையாடிய செயல்களை விவரிக்க.

17. இம்பர் வீடளிக்குந் தெய்வம் மகளிரே என்பார் கூற்றும் வம்பலமெய்யே என்று எதனால் மெய்ப்பிக்கப் படுகிறது?

18. மகளிரால் புதுமலர் கொய்யப்பட்ட சோலைக் காட்சி எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

19. ஆடவரும் மகளிரும் பொய்கைகளில் காமக் குறிப்புடன் நீராடிய காட்சிகள் எவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளன?

20. கொழுநரின் வேற்றுமை செய்யும் பொய்கை — செய்யும் வேற்றுமைகள் யாவை?

21. மங்கையர் வருகையால் பொய்கையை விட்டகன்றன யாவை? ஏன்? அச் செய்யுளில் அமைந்துள்ள அணி யாது?

22. ஆறு செல்பவர் பொருள் வௌவும் அரட்டர் போன்றன–எவை? விளக்குக.

23. நீராடிக் கரை யேறும் மகளிர் பொய்கைக்கு வழங்கியன யாவை? பெற்று வந்தன யாவை?
24. ஐயதா பொலந்துகிலென வன்பரைக் கூய்க் கண் செய்ய மாயனைக்கேட்கு மாயச்சிறுமியரொத்தார் -யாவர்-இதனைச் சந்தர்ப்பம் தோன்ற விளக்குக.
25. மகளிர் நீராடிக் கரை யேறிய ஆடவர் மகளிர்க்கு பொய்கையும் சோலையும் எத்தகைய காட்சி வழங்கிய தாக ஆசிரியர் கற்பித்துள்ளார்?
26. நீராடிய மகளிர் புது மது நுகர்ந்த முறையைப் புலப் படுத்துக.
27. மதுவுண்ட மகளிர் மயங்கிக் கூறியனவாகவுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.
28. 'இலமெனப் பல்லோர் மாட்டு மிரந்திரந் தின்மை நீங்கா, தலமரும் வறியோர், வைத்த நிதிகண்டால் அகல்வரேயோ'-இது எச்செயலை விளக்க வந்தது? இச் செய்யுள் என்ன அணி?
29. சண்பக மாறனுக்குத் தோன்றிய ஐயம் யாது? எவ் வாறு துணிந்தான்? என்ன செய்தான்?
30. வங்கத்தார் பொருள் போல்-இவ்வுவமையைப் பொரு ளொடு பொருத்தி விளக்குக.
31. தருமி என்பவன் யார்? அவன் இறைவனிடம் வேண் டிய தென்ன?
32. தருமியின் குறையைத் தீர்க்கச் சோம சுந்தரக் கடவுள் அவனுக்கு அளித்த செய்யுளையும் அதன் பொருளையும் தெரிவிக்க.
33. பாண்டியன் ஆணைப்படி பொற்கிழி பெறச் சென்ற தருமிக்கு நேர்ந்த தென்ன?
34. பெற்கிழி பெற முடியாத தருமி இறைவனிடம் முறை யிட்டதென்ன?
35. இறைவன் புலவர் வடிவம் கொண்டு சங்க மண்ட பத்தை அடைந்ததை வருணிக்க.
36. இறைவனாகிய புலவர்க்கும் நக்கீரனுக்கும் நேர்ந்த வாக்கு வாதத்தைத் தெரிவிக்க.
37. நெடுங்காலம் வெம்பசி உற்றவன் கலத்துண்ணும் மெல்லை கைப்பற்ற வாடினவனை ஒத்தவன் யார்? விளக்கி வரைக.
38. இறைவனுக்கும் நக்கீரனுக்கும் நடந்த வாதத்தைப் பற்றிய நுமது கருத்தினைத் தெரிவிக்க.

5. கீரனைக் கரையேற்றிய படலம்

கதைச் சுருக்கம்

நக்கீரன் துன்பமும் சங்கப் புலவர் கலக்கமும் : *நக்கீரர் சோமசுந்தரக் கடவுளின் நெற்றிக் கண்ணின் தழலால் தாக்கப்பெற்று பொற்றாமரைக் குளத்தில் விழுந்து துன்புற்றான். அதனைக் கண்ட சங்கப் புலவர்கள் மனம் பொறாது கலங்கி நடுங்கினார்கள். நக்கீரன் இல்லாத சங்கம் அரசன் இல்லாத குடியும், நாயகமணி இல்லாத கண்டிகையும், மெய்யுணர் வில்லாதவர் கல்வியும் போன்றது. ஐயையோ! சொற்பொருள் வடிவாய் விளங்கும் இறைவனொருடன் வாதுசெய்தபிழையோ பெரிது. இது தீர்வது எப்படி! இனி நக்கீரர் உய்வது அரிது என்று எண்ணி மனங்கலங்கினர்.*

புலவர்கள் இறைவனை அடைந்து துதித்து வேண்டுதல் : *பின்னர் புலவர்கள் 'சிவபெருமானே' திருக்கயிலாய மலையைப் பெயர்த்த இராவணனும் தன் கையிலே வீணையைக்கொண்டு இனிய இசை பாடத் திருவுளம் மகிழ்ந்து அவன் செய்த பிழையைப் பொறுத்தருளியது மன்றி அவனுக்குத திண்ணிய தேரும் வாளும் கொடுத்தருளினாரன்றோ! இப்பிழை யாவரானும் நீக்குதற்கரியது. யாவருக்கும் தேவராகிய சிவபெருமானே திருவுளம் திரும்பினால், இப்பிழை நீங்கிவிடும்; இது உறுதியே' என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டுபோய் அச்சங்கப் புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை வணங்கி 'தூயவனே! உனக்கு யாங்கள் அடைக்கலம்' என்று அடைக்கலம் கூறி, அடியார்க்கு விரைந்து அருள்புரிய விரைந்துவரும் எம்பெருமானே! எவ்வுயிர்க்கும் அன்னையும அத்தனுமான இறைவனே! உனது அருள், புண்ணியம் செய்தரர்க்கு இன்பத்தையும் பாவம் செய்தார்க்குத் துன்பத்தையும் கொடுப்பது. ஆகையினால், நக்கீரர் கல்விச் செருக்கினால் அறிவு அழிந்து உமது செய்யுளைப் பிழை என்றமையால், நீர் நெற்றிக் கண்ணைத் திறந்து அதன் வெம்மையினால் அவர் பொற்றாமரையில் விழும்படி செய்தீர். இனி பெருங் கருணை கூர்ந்து, இப்பிழையைப் பொறுத்தருளும்' என்று விண்ணப்பித்தனர்.*

இறைவன் நக்கீரனைக் கரையேற்றல் : *அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் மீனாட்சியம்மையாரோடு எழுந்தருளி, பொற்றாமரைக் குளக் கரையை அடைந்து புலவர் கூட்டத்துள்ளே நின்றுகொண்டு அருட் கண்ணால் நோக்கியருளினார். உடனே நீருள் மூழ்கிக் கிடந்த நக்கீரன் தன்னுடைய பொறி புலன் கரணமெல்லாம் சிவபெருமானுடையனவேயாக. அவரது பெருங் கருணைக் கடலுள் ஆழ்ந்து அன்புருவானான். உலக மாதாவாகிய ஞானப் பூங்கோதையம்மை யாருடைய கூந்தலுக்குச் சொல்லிய கொடிய நாவின் குற்றத்தை அப்பெருமானேயன்றி வேறு யார் பொறுக்கவல்லார்' என்று எண்ணியவராய், திருக் காளத்தியப்பர் மீது கைலை பாதி காளத்தி பாதி யந்தாதி என்னும் நேரிசை வெண்பாக்களாகிய பாமாலையைப் பாடினார். இறைவன்*

அதைத் திருச்செவி மடுத்து நேர் வந்து அவருடைய கையைப் பிடித்துக் கரையிலேற்றி யருளினர்.

நக்கீரன் இறைவன் மீது பிரபந்தங்கள் பாடி வணங்குதல் : இறைவனருளால் கரையேறிய நக்கீரன், சோமசுந்தரக் கடவுளையும், மீனாட்சியம்மையாரையும் வணங்கிச் சிவபெருமான் தீமை செய்தார்க்குக் கோபமும், நன்மை செய்தோர்க்கு அருள் செய்தமையைப் பொருளாகக் கொண்டு **கோபப்பிரசாதம்** என்னும் பிரபந்தமும் பின்பு **பெருந் தேவபாணி**யும் திருவெழுக் கூற்றிருக்கையும் பாடி, இறைவன் திருவடிகளில் பன்முறை பணிந்தெழுந்தார். சங்கப் புலவர்களும் தனித் தனியே இறைவனைத் துதித்து வணங்கினர். சிவபெருமான் நக்கீரனுக்குத திருவருள் சுரந்து, 'நீ முன்போலவே நின்னை நன்கு மதித்த புலவர கூடடததுள் இருப்பாயாக' என்று பணித்து மறைந்தருளினர்

தருமி பொற் கிழி பெறுதல் : நக்கீரனும் சங்கப் புலவர்களுடன் சங்க மண்டபம் அடைந்து அங்கிருந்த பொற்கிழியை அறுத்துத் தருமிக்குக் கொடுதது. பாணடியனைக் கொண்டு வரிசைகள் கொடுப் பிததுக் கல்விச் செல்வம் சிறக்க வாழ்ந்தான். சண்பக பாண்டியனும் நாடோறும் சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற் கணணியம்மையையும் வணங்கித திருப்பணிகள் பல நடத்திச் சிறப்புடன் இனிது வாழ்ந் திருந்தான்.

கீரனைக் கரையேற்றிய திருவிளையாடல்

1. **மார னைப்பொடி கண்டவ னந்தண மைந்தனுக்**
கார நற்கன கக்கிழி யீந்த தறைந்தனம்
ஏர னத்திரள் சூழ்மல ரோடை யிடத்தினுங்
கீர னைக்கரை யேற்றிய வாறு கிளத்துவாம்.

தெளிவுரை : மன்மதனை நீறுக்கிய இறைவன் மறைச் சிறுவனுகிய தருமிக்கு மனமகிழ நல்ல பொற்கிழியை அளித்தருளிய திருவிளையாடலைக் கூறினும்; அழகிய அன்னப் பறவையின் கூட்டம் சூழ்ந்த பொற்றுமரை வாவியினின்றும் நக்கீரனைக் கரை 'யேற்றிய திருவிளையாடலை இனிக் கூறுவாம்.

விளக்கவுரை : தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடலின் பின் நக்கீரனைப் பொற்றுமரைக் குளத்தினின்று கரையேற்றிய திருவிளையாடல் கூறப்படுகிறது என்பதாம். மாரன் – மன்மதன் பொடி கணடவன் - நீறுக்கிய சிவபெருமான். தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, யோக நிலையிலிருந்த சிவபெருமான் மீது மலர் வாளிகளை ஏவிய மன்மதனை, அப்பெருமான் நெற்றிக் கண்ணினுல் நீறுக்கினுர் என்பது புராண வரலாறு. ஓடை - பொற்றுமரைவாவி. 'நற்கனக் கிழி தருமிக்கு ஈந்தது' - இது பின்னிகழ்ச்சியே யாயினும் அது பெறுதற்குரிய 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் செய்யுளைத் தருமிக்கு முன்னரே அளிக்கப் பெற்றதாகலின் இங்ஙனம் குறித்த வாறெனக் கொள்க.

சங்கப் புலவர் நக்கீரன் பொருட்டு வருந்துதல்

2. தாழ்ந்த வேணிய னெற்றி முளைத்த தழற்கணற்
போழ்ந்த நாவல னுடக பங்கயப் பொய்கைவாய்
வீழ்ந்த ரும்படர் வேலையில் வீழ்ந்தனன் விம்முறச்
சூழ்ந்த நாவலர் கண்டு பொருது துளங்குவார்.

தெளிவுரை : *நீண்ட சடையையுடைய சோமசுந்தரக் கடவுளின் நெற்றியில் தோன்றிய அனல் கணுல் பிளக்கப்பட்ட கீரன் பொற்ருமரை வாவியுள் வீழ்ந்து கடத்தற்கரிய துன்பக் கடலுள் வீழ்ந்து வருந்த சூழ்ந்து நின்ற ஏனைப் புலவர்கள் அதனைக் கண்டு பொறுக்கலாற்ருது, வருந்துவாராயினர்.*

விளக்கவுரை : *நக்கீரன், இறைவனது நெற்றிக் கண் தழலால் சுடப்பட்டுப் பொற்ருமரைக் குளத்தில் வீழ்ந்து வருந்துவதைக் கண்ட சங்கப் புலவர்கள் பெரிதும் துன்புற்றனர் என்பதாம். தாழ்ந்த - தொங்கிய, படர் - துன்பம். வீழ்ந்தனன் - முற்றெச்சம்.*

நக்கீரனில்லாத தமிழ்ச்சங்கம்

3. ஏன்ற வேந்த னிலாக்குடி யீட்டமு மின்கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்ற ஞான மிலாதவர் கல்வியு மானதே
சான்ற கீர னிலாதவை கூடிய சங்கமே.

தெளிவுரை : *புலமை சான்ற நக்கீரன் இல்லாது பிற புலவர் கூடிய இச்சங்கமானது பொருந்திய மன்னனில்லாத குடியின் கூட்டத்தையும் இனிய ஒளி வீசும் நடுநாயகமாகிய பெரிய மணியை இழந்த கண்டிகையையும் நிறைந்த மெய்யுணர் வில்லாதவர் 'கல்வியையும்' போன்றது.*

விளக்கவுரை : *நக்கீரனில்லாத தமிழ்ச் சங்கம் பொலிவிழந்துள்ளதை எண்ணிச் சங்கப்புலவர் வருந்தினர் என்பதாம். குடிமக்களுக்கு அரசனும், கண்டிகைக்கு நாயகமணியும், கல்விக்கு மெய்யுணர்வும் இன்றியமையாததுபோல, சங்கப் புலவர் அவைக்குத் தலைவனுகிய நக்கீரன் இன்றியமையாதவனுயினுன் என்க. இது கருதியே சங்கப்புலவர் பெரிதும் வருந்தலாயினர். நக்கீரனில்லாத சங்கத்தில் கவர்ச்சியும் இல்லை; விளக்கமுமில்லை; பயனும் இல்லை என்பது பெறப்பட்டது.*

சங்கப்புலவர் மனத்துயர்

4. ஐய சொற்பொரு டன்வடி வானவ ராலவாய்
மைத ழைத்த மிடற்றினர் தம்மொடும் வாதுதான்
செய்த விப்பிழை யோபெரி தெப்படி தீருமோ
உய்வ தற்புத மேயென யாவரு முன்னினர்.

தெளிவுரை : 'சொல்லும் பொருளும் தனது வடிவமாயுள்ளவரும் திருவாலவாயின்கண் வீற்றிருக்கும இருள்மிக்க திருமிடற்றினை யுடையவருமாகிய சோமசுந்தரக் கடவுளுடன் வாதஞ் செய்த இந்தப் பிழை மிகப் பெரியது; ஆகலின் இஃது எங்ஙனம் நீங்குமோ? இனி பிழைத்தல் அரிதே' என்று அனைவருங் கருதினர்.

விளக்கவுரை : நக்கீரன் தான் செய்த பெரும் பிழையினின்று உய்வது இயலாதே என்று சங்கப்புலவர்கள் கருதினர் என்பதாம். சோமசுந்தரக் கடவுளுடன் நக்கீரன் வாதம் செய்தானுதலின், அதனைப் பெரும் பிழையென எண்ணலாயினர். ஏனெனில் இறைவன், சொற்பொருள் வடிவானவன், சொற்பொருள் பற்றிய வாதத்தைச் சொற்பொருள் வடிவானவனுடன் வாதம் செய்தல் எவராலும் இயலாத தொன்றும். ஆகவே, நக்கீரன் வாதம் பெரும் பிழையெனக் கருதப்பட்டதென்க. சொற்பொருள்-சொல்லின் பொருள் என்றுமாம். ஐய, தான் அசை நிலைகள்.

புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை யடைதல்

5. எய்தி வெள்ளி மலைபெயர்த் தானு மிறுத்ததன்
கையில் வீணைதொட் டின்னிசை பாடக் கனிந்தவன்
செய்த தீங்கு பொறுத்தது மன்றித்திண் டேரொடும்
மொய்கொள் வாளுங் கொடுத்தனன் புண்ணிய மூர்த்தியே.

தெளிவுரை : வெள்ளி மலைக்குச் சென்று அதனைப் பெயர்த்த இராவணனும் அம்மலையைப் பறிதத தனது கையில் வீணையைத தழுவி இனிய இசை பாடத திருவுள்ளங் கனிந்து அவன் செய்த பிழையையப பொறுத்தருளியதும் அல்லாமல், திண்ணிய தேரும் வலிய வாளும் கொடுத்தருளினன் இந்தப் புண்ணிய வடிவாகிய இறைவன்.

விளக்கவுரை : புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை யடைந்து அவனது பெருங்கருணைத் திறத்தை எண்ணலாயினர் என்பதாம். தனக்குத் தீங்கு செய்த இராவணன் இன்னிசை பாட அவன் தீங்கினைப் பொறுத்ததுமன்றி அவனுக்கு அருள் செய்த இறைவனது கருணைத் திறத்தையும் எண்ணி வழிபட்டனர் சங்கப்புலவர்கள். அங்ஙனமே தம் செருக்கால் தவறுக வாதம் செய்த நக்கீரனையும் இறைவன் பிழை பொறுத்தருளுவான் என்னும் கருத்துடன் வழி பட்டனர் என்க. இச்செய்யுளில் அமைந்துள்ள இராவணன் வரலாறு: இராவணன் குபேரனிடமிருந்து கவர்ந்த புட்பக விமானத்திலேறித் திருக்கைலையை அடைந்தபோது அவ்விமானம் தடைப்பட, சினங் கொண்ட இராவணன், அம்மலையைப் பெயர்த்தெடுக்கலானுன். அப்பொழுது இறைவன் தன் திருப்பாதத்தின் விரலால் ஊன்றவே, இராவணன் அம்மலையின் கீழ்க்கிடந்து வருந்திப்பின் தெளிந்து இசை பாடி இறைவனைத் துதித்தான். அப்பொழுது இறைவன் அவனுக்கு இரங்கி நீண்ட வாழ்நாளும், வாளும், தேரும் கொடுத்தருளினன் என்பது. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தமது தேவாரத் தில் பதிகந்தோறும் இறைவனது இக்கருணைத் திறத்தினையே எண்ணி வியந்து குறித்துள்ளனர் என்பர்.

சங்கப்புலவர்கள் இறைவனைத் துதிக்கத் தொடங்கல்

6. யாவ ராலு மகற்றரி தீப்பிழை யாவர்க்குந்
தேவ ராவம ரேதிரு வுள்ளந் திரும்பினுற்
போவ தேயிது வேதுணி பென்று புகன்றுபோய்ப்
பாவு லோர்பரன் ருணிழ லிற்பணிந் தேத்துவார்.

தெளிவுரை : *இப்பெரும் பிழையை யாவராலும் நீக்குதலரிது; அனைவர்க்குந் தேவராகிய அப்பெருமானே திருவுள்ளம் இரங்குவராயின் இப்பிழை நீங்குவது உறுதியே' என்று கூறிப் புலவர்கள் சென்று சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழலில் வீழ்ந்து வணங்கித் துதிப்பாராயினர்.*

விளக்கவுரை : *நக்கீரன் செய்த பிழை, இறைவன் திருவுள்ளம் இரங்கினுலன்றி நீங்காது என்று துணிந்த புலவர்கள் அவ்விறைவனையே துதிக்கலாயினர் என்பதாம். அகறறு - அகற்றுதல்; நீங்குதல், முதனிலைத் தொழிற்பெயர். உள்ளம் திரும்புதல்-சினமொழிந்து இரக்கங்கொள்ளுதல்.*

சங்கப்புலவர்கள் இறைவனைத் துதித்தல்

7. திருத்த னேசர ணஞ்சர ணம்மறைச் சென்னிமேல்
நிருத்த னேசர ணஞ்சர ணந்நிறை வேதநூல்
அருத்த னேசர ணஞ்சர ணந்திரு வாலவாய்
ஒருத்த னேசர ணஞ்சர ணங்க ளுனக்குநாம்.

தெளிவுரை : *'தூயவனே! நாங்கள் உனக்கு அடைக்கலம்; மறை முடியின் மேல் திருக்கூத்தாடுபவனே! உனக்கு அடைக்கலம்; நிறைந்த மறைகளின் பொருளாயுள்ளவனே! உனக்கு அடைக்கலம்; திருவாலவாயின்கண் எழுந்தருளிய ஒப்பற்றவனே! உனக்கு அடைக்கலம்.'*

விளக்கவுரை: *சங்கப்புலவர்கள், இறைவனே! 'யாங்கள் உனக்கு அடைக்கலம்' என்று வேண்டி வழிபடலாயினர் என்பதாம். அடைக்கலம்-உடல் பொருள் ஆவி அனைத்தும் இறைவனுடைமை என்னும் எண்ணத்துடன் தமக்கோர் உரிமையுமின்றித் தம்மை ஒப்புவித்து வழிபடல்.*

சங்கப்புலவர் வேண்டுகோள்

8. பாயு மால்விடை மேல்வரு வோய்பல் லுயிர்க்கெலாந்
தாயுந் தந்தையு மாகுநின் றண்ணளி தாமரைக்
கேயு மாதவன் போனல்ல தீய வியற்றினுர்க்
காயு மின்பமுந் துன்பமு மாக்குவ தாதலால்.

தெளிவுரை : *பாய்ந்து செல்லும் திருமாலாகிய இடபவூர்தியில் ஏறி, அடியார்க்கருள விரைந்து வருபவனே! பல வேறு வகைப்பட்ட உயிர்கள் யாவற்றிற்கும் அன்னையும் அத்தனுமாகும் நினது தண்ணிய*

அருளே, தாமரை மலருக்குப்பொருந்திய சூரியன் மலர் தலையும் வாடுதலையுஞ் செய்தல் போல, நன்மைகளையும் தீமைகளையுஞ் செய்தார்க்கு ஆராயும் இன்பத்தையும் துன்பத்தையும் செய்வது ஆகையால்,

விளக்கவுரை : இறைவனது அருளே, நன்மை .தீமைகளைச் செய்தார்க்கு முறையே இன்ப துன்பங்களைச் செயகிறது என்று எண்ணிச் சங்கப்புலவர்கள் இறைவனைத் துதிக்கலாயினர் என்பதாம். இறைவனது தண்ணிய அருளே யாவருக்கும் தாயும் தந்தையுமாயிருந்து உதவுகின்றது என்பது சமய உண்மையாகும். உயிர்க்கெல்லாம் இறைவன் தண்ணளி, தாயும் தந்தையுமாகும் என்றமையால், இறைவனால் உயிர்களுக்கு அளிக்கப்படும துன்பங்கள் தாய் தந்தையரால் மக்களுக்கு அளிக்கப்படும் துன்பங்கள் போன்றனவேயாகும். இங்கே, "தந்தை தாய் பெற்ற தததம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின், வந்திடாவிடினுறுக்கி வளாரினல் அடித்துத்தீய, பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின் பரிவேயாகும், இந்த நீர் முறைமையன்றோ ஈசனுர் முனிவும் என்றும்' என்னும் சிவஞான சித்தியார் பாடல் கருதத்தக்கதாகும். **தாமரைக்கு ஏயும் ஆதவன்போல**—இறைவன் முன்னிலையில் உயிர்கள் தாமே இன்ப துன்பங்களை எய்துகின்றன என்பதும் சமய உண்மையாகும். இதனை விளக்கவே சூரியன் முன்னே தாமரை தனது இயல்பின்படி மலர்தலையும் காய்தலையும் உவமையாக்கிக் கூறியுள்ளார்.

சங்கப்புலவர் வேண்டுகோள்

9. **அத்த கற்ற செருக்கி னறிவழி கீரனின்**
வித்த கக்கவி யைப்பழு தென்ற விதண்டையான்
மத்த கக்கண் விழித்து வெதுப்பின் மலர்ந்தபொன்
முத்த கக்கம லத்திடை வீழ முடுக்கினுய்.

தெளிவுரை : 'இறைவனே! கற்றுணர்ந்த இறுமாப்பினுல் உணர்வழிந்த கிரன் நினது சதுரப்பாடுடைய பாசுரத்தை குற்றமென்ற விதண்டையினுலே நெற்றிக்கண்ணைத் திறந்து அதன் வெம்மையால் முத்துக்களைத் தன்னிடத்துள்ள மலர்ந்த பொற்றுமரை வாவியுள் வீழுமாறு செலுத்தினுய்.'

விளக்கவுரை : நக்கீரன் கல்விச் செருக்கினுல் அறிவழிந்து உமது பாடலைப் பிழை என்ற விதண்டையினுல் நீர் பொற்றுமரைக் குளத்தில் அவனை வீழ்த்தினீர் என்று சங்கப்புலவர்கள், இறைவனது அருட்செயலைக் கூறித் துதிக்கலாயினர் என்பதாம். கற்ற செருக்கின் அறிவழி கீரன்-முற்றக் கற்றுளேன் என்னும் செருக்கால் உணர்வு அழிந்த கீரன். விதண்டை-உண்டான வாதத்தில் வெல்லுதலையே குறியாகக் கொண்டு தமது பக்கத்தை உறுதிப் படுத்தாமலேயே பிறர் பக்கத்தை இகழ்தல். வித்தகம்-சதுரப்பாடு. பிறர் மறுக்க வியலாத திறமை.

சங்கப்புலவர்கள் குறையிரத்தல்

10. இருணி றைந்த மிடற்றடி கேளினி யிப்பிழை
கருணை செய்து பொறுத்தரு ளென்று கபிலனும்
பரண னும்முத லாகிய பாவலர் யாவருஞ்
சரண மென்று விழுந்திரந் தாரடி சாரவே.

தெளிவுரை : *'இருள் நிறைந்த திருமிடற்றினையுடைய பெரியோய்! இனி அருள் புரிந்து இக்குற்றத்தைப் பொறுக்கக் கடவை' என்று கபிலனும் பரணனு முதலான புலவர் அனைவரும் அடைக்கலமென்று திருவடியிற் பொருந்த வீழ்ந்து குறையிரந்து வேண்டினர்.*

விளக்கவுரை : *கபிலன் பரணன் முதலான சங்கப்புலவர்கள் அனைவரும் இறைவனடியில் வீழ்ந்து நக்கீரன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் குறையிரந்தனர் என்பதாம். அடிகள்-அடிகேள் என விளியேற்று நின்றது. சரணம்-அடைக்கலம்.*

சோமசுந்தரக் கடவுள் உமையோடு புலவர்களிடை நிற்றல்

11. அக்கீர வேலை யால மயின்றவெங் கருணை வள்ளல்
இக்கீர மழலைத் தீஞ்சொ லிறைவியோ டெழுந்து போந்து
நக்கீரன் கிடந்த செம்பொ னளினப்பூந் தடத்து ஞாங்கர்ப்
புக்கீர மதுரத் தீஞ்சொற் புலவர்தங் குழாத்து ணின்றான்.

தெளிவுரை : *அந்தப் பாற்கடலிற் றோன்றிய நஞ்சினை உண்டருளிய எமது அருள் வள்ளலாகிய இறைவர், கரும்பின் சுவையினை வென்ற அழகிய மழலையாகிய இனிய சொல்லையுடைய உமைப் பிராட்டியோடு எழுந்து வந்தருளி, நக்கீரன் அழுந்திக் கிடந்த சிவந்த பொற்றாமரை மலர்களையுடைய வாவியினருகு அடைந்து அன்புச் சுவை கனிந்த இனிய சொல்லையுடைய புலவர் கூட்டத்துள் நின்றான்.*

விளக்கவுரை : *சங்கப் புலவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கிய சோமசுந்தரக் கடவுள் மீனாட்சியம்மையாருடன் எழுந்தருளி வந்து பொற்றாமரைக் குளக்கரையை அடைந்து புலவர் கூட்டத்துள் நின்றான் என்பதாம். கீர வேலை-பாற்கடல். (கீரம்-க்ஷீரம் என்பதன் தற்பவம். க்ஷீரம்-பால்.) ஆலம்-நஞ்சு. இக்கு-கரும்பு.*

இறைவன் நக்கீரனுக்கு அருள் செய்தல்

12. அனற்கணா னோக்கி னான்பின் னருட்கணா னோக்க வாழ்ந்த
புனற்கணே கிடந்த கீரன் பொறிபுலன் கரண மெல்லாங்
கனற்கணார் தமவே யாகக் கருணைமா கடலி லாழ்ந்து
வினைக்கணே யெடுத்த யாக்கை வேறிலன் புருவ மானான்.

தெளிவுரை : *முன் அழற்கண்ணால் நோக்கிய இறைவன், பின் அருள் விழியால் நோக்கியருள, ஆழமாகிய நீரின்கண்ணே கிடந்த*

நக்கீரன் பொறியும் புலனும் கரணமுமாகிய அனைத்தும் நெற்றிக் கண்ணினையுடைய அவ்விறைவருடையனவேயாக, அருளென்னும் பெரிய கடலில் அழுந்தி வினையினலெடுத்த உடல் அழிதலில்லாத அன்பு வடிவமானன்.

விளக்கவுரை : இறைவன் முன்பு அனற் கண்ணுல் நோக்கியமை யால் பொற்ருமரை வாவியில் அழுந்திக் கிடந்த நக்கீரன், இப் பொழுது அவ்விறைவனது அருள் விழியால் நோக்கப் பெற்றமையால் கருணைக் கடலுள்ளாழ்ந்து அன்புருவானன் என்பதாம். பொறி-மெய் வாய் கண மூக்குச் செவி என்னும் ஐந்து பொறிகள். புலன்-சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்கள். கரணம்-மனம், சித்தம் புத்தி அகங்காரம் என்னும் நான்கு கரணங்கள். இவை தன் வயமாயியங்குதல் பசுகரணம் என்றும், இறைவன் வயமாயியங்குதல் பதிகரணம் எனப்படும். நக்கீரனது பொறிபுலன் கரணமெல்லாம் தன் வசமிழந்து இறைவன் வசப்பட்டனவாதலின் 'பொறி புலன் கரணமெல்லாம் கனற் கணர் தமவேயாக' என்ருர். தம-பலவின்பால் குறிப்பு வினைமுற்று.

நக்கீரன் இறைவனைத் துதித்தல்

13. போதையா ருலக மீன்ற புனிதையார் பரஞா னப்பூங்
கோதையார் குழற்குத் தீங்கு கூறிய கொடிய நாவின்
றீதையார் பொறுப்ப ரேயோ வவரன்றித் திருக்கா ளத்திக்
காதையார் குழையி ளுரைக் காளத்தி கயிலை யென்ளு.

தெளிவுரை : ஞான வடிவினரும் உலகத்தைப் பெற்ற தூய்மை யுடையாருமாகிய சிறந்த ஞானப் பூங்கோதையாரின் கூந்தலுக்குப் பழுது சொன்ன கொடிய நாவின் குற்றத்தை அவ்விறைவர் பொறுப் பாரே அல்லாமல் வேறெருவர பொறுப்பாரோ? திருக்காளத்தியில் எழுந்தருளிய காதிற் பொருந்திய குழையினையுடைய அவ்விறை வரைக் காளத்தி கயிலை என்று.

விளக்கவுரை : 'ஞானப் பூங்கோதையார் கூந்தலுக்குக் குறை கூறிய எனது பிழையை இறைவரே யன்றிப் பிறர் பொறுக்கவல்ல வரல்லர்' என்று கருதிய நக்கீரர், அவ்விறைவரைக் கைலைபாதி காளத்தி பாதி என்றும் பாமாலையால் துதிக்கலானன் என்பதாம். போதம் - ஞானம். இது பரஞானம் அபரஞானம் என இருவகைப் படும். பரஞானம் - மெய்யுணர்வு, அபரஞானம் - நூலறிவு. போதை-ஞானமுடையார். போதை, புனிதை, கோதை - பெண்பாற் பெயர் கள். கைலைபாதி காளத்திபாதி எனற் பாலது செய்யுளில் மாறி நின்றதென்க.

இறைவன் கீரனைக் கரையேற்றுதல்

14. எடுத்தசொன் மாறி மாறி யிசையநே ரிசைவெண் பாவாற்
றெடுத்தவந் தாதி சாத்தத் துணைச்செவி மடுத்து நேர்வந்
தடுத்தவன் கையைப் பற்றி யகன்கரை யேற்றி ஞர்தாள்
கொடுத்தெழு பிறவி வேலைக் கொடுங்கரை யேற்ற வல்லார்.

தெளிவுரை : *எடுத்த சொல் மாறி மாறி வந்து பொருந்த, நேரிசை வெண்பாவால தொடுத்த* **கைலை பாதி காளத்தி பாதி** *எனனும அந்தாதி மாலையைச சாதத, அடியார்கட்குத திருவடியாகிய புணையை அருளி, எழுவகைப் பிறவியாகிய கொடிய கடலினின்றும் வீடு என்னுங் கரையில் ஏற்றவலல அவ்விறைவர், அவ்வந்தாதியை இரண்டு செவிகளாலுங் கேட்டு நேரே வந்து நெருங்கி அந்தக் கீரன் கையைப் பிடித்து அகன்ற கரையின் கண் ஏற்றியருளினர.*

விளக்கவுரை : *நக்கீரனது கைலை பாதி காளததி பாதி என்னும் பாமாலையைச் செவிமடுதத இறைவர், அந்நக்கீரன் கையைப் பிடிதது வாவியினின்று கரையேறறி யருளினர என்பதாம். கைலை பாதி காளத்தி பாதி யந்தாதி - இஃது ஒரு பாட்டில் கைலையின் சிறப்பும அடுத்த பாட்டில் காளத்தி மலையின் சிறப்புமாக மாறிமாறி அமைய நூறு நேரிசை வெண்பாக்களாலான நூல். திருவடிப் புணையால் எழு பிறவி என்னும் கடலினின்றும் உயிர்களை கரையேற்ற வல்ல இறைவன் நக்கீரன் கையைப் பறறிப் பொய்கையினின்று கரையேற்றினர் என்னும் நயம் கருதத் தக்கதாகும்.*

நக்கீரன் இறைவனைப் பாடித் துதித்தல்

15. கைதந்து கரையேற் றிட்ட கருணையங் கடலைத் தாழ்ந்து
மைதந்த கயற்க ணாளை வந்தித்துத் தீங்கு நன்கு
செய்தந்தோர்க் கிகலு மன்புஞ் செய்தமை பொருளாச் செய்யுட்
பெய்தந்து பாடு கின்றான் பிரானருள் நாடு கின்றான்.

தெளிவுரை : *கைகொடுத்துக் கரையேற்றிய அழகிய கருணைக் கடலாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, மையெழுதிய கயல் போலுங் கண்களையுடைய அங்கயற் கண்ணம்மையையும வணங்கித் தீமையும் நன்மையும் புரிந்தவர்க்குச் சினத்தையும் அருளையும் செய்தமையே பொருளாகச் செயயுளிலமைத்து இறைவன் திருவருளைநாடும் நக்கிரன் பாடுவானாயினன்.*

விளக்கவுரை : *இறைவனது திருக்கரத்தைப் பற்றிக் கரையேறிய நக்கீரன், தீமையும் நன்மையும் புரிந்தவர்க்கு முறையே சினத்தையும் அருளையும் செய்த இறைவன் திருவருளைப் பொருளாகக் கொண்டு 'கோபப்பிரசாதம்' என்னும் நூலியற்றலானான் என்பதாம். தீங்கு செய்தோர்க்கு இகலும் நன்கு செய்தோர்க்கு அன்பும் என நிரனிறையாகப் பொருள் கொள்க. செய்தந்தோர் - செய்தோர் வினையாலணையும் பெயர். பெய்தந்து - பெய்து; அமைத்து. இவற்றில் தா - துணைவினை. இகலும் அன்பும் - கோபமும் பிரசாதமும். நாடுகின்றான்- வினையாலணையும் பெயர்.*

நக்கீரன் துதித்தல்

16. அறனிலா னிழைத்த வேள்வி யழித்தபே ராண்மை போற்றி
மறனிலாச் சண்டிக் கீந்த மாண்பெருங் கருணை போற்றி
கறுவிவீழ் கூற்றைக் காய்ந்த கனைகழற் கமலம் போற்றி
சிறுவனுக் கழியா வாழ்நா ளளித்தருள் செய்தி போற்றி.

தெளிவுரை : *அறம் சற்றுமில்லாத தக்கன் செய்த வேள்வியை அழித்த பெரிய ஆண்மை அடியேனைக் காக்க; பாவஞ் சற்றுமில்லாத சண்டேசருக்கு அளித்தருளிய மாட்சிமை பொருந்திய பெரிய கருணை காக்க; சினந்து மாணியின் மேல் வீழ்ந்த கூற்றுவனை உதைத்தருளிய ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த தாமரை மலர் போன்ற திருவடி காக்க; அச்சிறுவனாகிய மார்க்கண்டனுக்கு அழிவில்லாத ஆயுளை அளித் தருளிய செய்தி காக்க.*

விளக்கவுரை : *இறைவன் தக்க வேள்வியழித்தமை சண்டேசருக்கு அளித்த மாட்சிமை, கூற்றுவனைக் காய்ந்தமை, மார்க்கண்டனுக்கு வாழ்நாள் வழங்கியமையாகிய கருணைத் திறங்களை எடுத்துரைத்து அத்தகைய கருணை காப்பதாக என்று நக்கீரன் வேணடி வழிபட லானான் என்பதாம. வேள்வியழித்தமை கூறறைக் காய்நதமை என்னும் இரண்டும இகலாகும். சண்டிக்குக் கருணை செய்தமை மார்க்கண்டனுக்கு வாழ்நாள் வழங்கியமை என்னும் இரண்டும் அன் பாகும். அறனிலான் - தக்கன், சண்டி -சண்டேசுர நாயனார் கறுவி கோபித்து. சிறுவன் - மார்க்கண்டன்.*

நக்கீரன் இறைவனைத் துதித்து வணங்குதல்

17. சலந்தர னுடலங் கீண்ட சக்கரப் படையாய்ப் போற்றி
வலந்தரு மதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய் போற்றி
அலர்ந்தசெங் கமலப் புத்தே ணடுச்சிர மரிந்தாய் போற்றி
சிலந்தியை மகுடஞ் சூட்டி யரசருள் செல்வம் போற்றி.

தெளிவுரை : *சலந்தராசுரன் உடலைப் பிளந்த திகிரிப்படையை யுடையவனே! வணக்கம்; வெற்றி தரும் அப்படையினை திருமால் வழிபாடு செய்ய அளித்தருளியவனே! வணக்கம்; மலர்ந்த செந் தாமரையில் இருக்கும பிரமனின் நடுத்தலையை அரிந்தவனே! வணக்கம்; சிலந்திக்கு முடிசூட்டி அரசு அருளிய செல்வமே வணக்கம்.*

விளக்கவுரை : *சலந்திரன் உடலைச் சக்கரப்படையால் கீண்டமை, மாயோனுக்கு அச்சக்கரத்தை அளித்தமை, பிரமன் நடுத்தலையை அரிந்தமை, சிலந்திக்கு முடி சூட்டியமை ஆகிய இறைவனது செயல் களைக் கூறி நக்கீரன் துதித்தான் என்பதாம். சலந்திரன் - ஓர் அசுரன். பிரமன் ஐந்து தலையுடையவனயிருந்தான். அவன் செருக் கழிக்கச் சிவன் அவனது நடுத்தலையைக் கிள்ளினன் என்பது புராண வழக்கு. சிலந்திக்கு கோச்செங்கட் சோழனுக்கு. இவன் முற்பிறவி யில் சிலந்தியாயிருந்து திருவெண்ணாவலடியிலிருந்த இறைவனுககு வலை பின்னி நிழல் செய்ய, அதனை அழித்த யானைத் துதிக்கையில் நுழைந்து அவ் யானையால் மோதுண்டு அழிந்து பின் சிவனருளால் அரசனயினன் என்பது புராண வரலாறு. சலந்திரனுடலங் கீண்டமை பிரமன் சிரமரிந்தமை இகலாம். மாயோற்குச் சக்கரம் அளித்தமை சிலந்தியை மகுடம் சூட்டியமை அன்பாம்.*

நக்கீரன் இறைவனைத் துதித்தல்

18. திரிபுரம் பொரிய நக்க சேவகம் போற்றி முவர்க்
கருளிய தலைமை போற்றி யனங்கனை யாகந் தீய
எரியிடு நயனம் போற்றி யிரதிவந் திரப்ப மீளக்
கரியவன் மகனுக் காவி யுதவிய கருணை போற்றி.

தெளிவுரை : *திரிபுரம் எரியுமாறு சிரித்தருளிய வீரம் காக்க; அப்புரத்திலுள்ள மூவருக்கு அருளிய தலைமை காக்க; மதவேளை அவன் உடல் நீறாக எரித்தருளிய நுதல விழிகாக்க; இரதிவந்து குறையிரப்ப திரும்பவும் திருமாலின் புதல்வனாகிய அம்மதவேளுக்கு உயிர் அளித்தருளிய கருணை காக்க.*

விளக்கவுரை : *திரிபுரத்தைச் சிரித்தமை, அப்புரத்தவர மூவர்க்கு அருளிய தலைமை, மன்மதனை நெற்றிக் கண்ணால் எரிததமை, பின அவனுக்கு உயிர் அளித்தமை ஆகிய இறைவன் செயல்களைக் கூறி நக்கீரன் துதித்தான் என்பதாம். திரிபுரம் - பொன், வெள்ளி, இரும் பாலாகிய அரணமைந்த பறக்கும் நகர்கள். மூவர் - தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அரக்கர். அவருள் இரு வரைத் திருக்கோயில் வாயில் காவலாளராகவும், ஒருவனை முழவறை வோனாகவும் அருள் செய்தான் என்பது சுந்தரர் தேவாரத்தில் கண்ட செய்தியாகும். திரிபுரமெரிததல், மன்மதனை அழித்தல் இகலாம். மூவர்க்கருளல், மன்மதனுக்கு உயிரளிததல் அன்பாம். நக்க - சிரித்த சேவகம் - வீரம். அனங்கன் - மன்மதன். கரியவன் - திருமால். கரியவன் மகன் - மன்மதன்.*

நக்கீரன் துதித்தல்

19. நகைத்தட வந்த வந்த நகுசிரந் திருகி வாங்கிச்
சிகைத்திரு முடிமேல் வைத்த திண்டிறல் போற்றி கோயில்
அகத்தவி சுடரைத் தூண்டு மெலிக்கர சாள மூன்று
சகத்தையு மளித்த தேவர் தம்பிரான் சரணம் போற்றி.

தெளிவுரை : *சிரித்துக் கொல்லுவதற்கு வந்த அந்த வெண்டலை யைத் திருகி எடுத்துச் சடையையுடைய அழகிய முடியின் கண் வைத்த மிக்க திறல் காக்க; திருக்கோயிலினுள் அவிகின்ற விளக் கைத் தூணடிய எலிக்கு ஆட்சி புரிய மூன்று உலகத்தையும் அளித் தருளிய தேவதேவனது திருவடி காக்க.*

விளக்கவுரை : *கொல்ல வந்த தலையைச் சடை முடியில் வைத்தமை, திருவிளக்கைத் தூணடிய எலிக்கு மூவுல காட்சியளித் தமை ஆகிய செயல்களைக் கூறி, நக்கிரன் இறைவனைத் துதிததான் என்பதாம். அட - கொல்லுதற்கு. நகுசிரம் - வெண்டலை. இது தாருகாவனத்து முனிவர்களால் விடப்பட்டது. கோயில் - திருமறைக் காடு. எலியினுக்கு :—இங்கு மாவலிச் சக்கரவர்த்திக்கு. திருக் கோயிலில் அவிய இருந்த திருவிளக்கைத் தூண்டிய சிவ புண்ணியத் தால் எலி, மாவலியாகப் பிறந்து உலகாண்ட தென்பது வரலாறு.*

நக்கீரன் துதித்தல்

20. பொருப்பகழ்ந் தெடுத்தோன் சென்னி புயமிற மிதித்தாய் போற்றி
இருக்கிசைத் தவனே பாட விரங்கிவாள் கொடுத்தாய் போற்றி
தருக்கொடு மிருவர் தேடத் தழற்பிழம் பானாய் போற்றி
செருக்குவிட் டவரே பூசை செய்யநேர் நின்றாய் போற்றி.

தெளிவுரை : *திருக்கைலையைப் பறித்தெடுத்த இராவணனது தலைகளும் தோள்களும் முறிய மிதித்தருளியவனே! வணக்கம்; அவ்விராவணனே வேதத்தைக் கூறிப்பாட கருணை கூர்ந்து அவனுக்கு வாட்படை யருளியவனே! வணக்கம்; செருக்கோடு திருமாலும பிரமனும் தேட அழற்பிழம்பானவனே! வணக்கம்; அவ்விருவருமே அத்தருக்கினை ஒழித்து வழிபட நேரில் நின்றருளியவனே! வணக்கம்.*

விளக்கவுரை : *கயிலை மலையைப் பறித்த இராவணன் தோள் முறிய மிதித்தமை, பின்பு அவன் பாடலுக்கு இரங்கி வாள் படை அளித்தமை, மாலும் அயனும் காணவியலா அழற் பிழம்பானமை, பின் அவ்விருவரும் வழிபட நேரில் நின்றமை ஆகிய இறைவன் செயல்களைக் கூறி நக்கீரன் துதித்தான் என்பதாம். இராவணன் சாமவேதம் பாடி இறைவனைத் துதித்தான் ஆதலின் 'இருக்கு' என்பது இருக்கு வேதத்தைக் குறிக்காமல் வேதம் என்னும் பொதுப் பொருளில் வந்ததெனக் கொள்க. மாலும் அயனும் தருக்கொழிந்து வழிபட்டபோது இறைவன் நேரில் நின்றான் என்பது புராண வரலாறு. இருவர் - திருமாலும் பிரமனும். நேர்நின்றாய் - நேரில் நின்றருளியவன்.*

அஃறிணை உயிர்களுக்கும் அருள் செய்த இறைவன் செயலை எண்ணிப் போற்றுதல்

21. பருங்கைமால் யானை யேனம் பாய்புலி யரிமான் மீனம்
இருங்குறள் யாமை கொண்ட விகல்வலி கடந்தாய் போற்றி
குரங்குபாம் பெறும்பு நாரை கோழியா ணலவன் றேரை
கருங்குரீஇ கழுகி னன்புக் கிரங்கிய கருணை போற்றி.

தெளிவுரை : *பருத்த துதிக்கையையுடைய யானையும் பன்றியும் பாய்கின்ற புலியும் சிங்கமும் மீனமும் பெரிய குறளும் யாமையுங் கொண்ட மிக்க வலியை அடக்கினவனே! வணக்கம்; குரங்கும் பாம்பும் எறும்பும் நாரையும் கோழியும் ஆண் ஞெண்டும தவளையும் கருக்குருவியும் கழுகுமாகிய இவற்றின் அன்புக்கு இரங்கிய கருணையே! வணக்கம்.*

விளக்கவுரை : *யானை முதல் கழுகு வரை கூறப்பட்ட அஃறிணை உயிர்களின் அன்புக்கு இரங்கி இறைவன் அருள் செய்தமையை நக்கிரன் கூறித் துதித்தான் என்பதாம். ஏனம் - பன்றி. ஏனம், அரிமான், மீன், குறள், ஆமை என்பன முறையே திருமால் கொண்ட வராகாவதாரம நரசிங்காவதாரம், மச்சாவதாரம், வாமனாவதாரம், கூர்மாவதாரங்களைக் குறிக்கும். திருமால் இவ்வவதாரங்களை எடுத்து உலகிற்கு நலம் புரிந்து அச்செயலின் முடிவில் தருக்குற்று உலகிற்குத்*

துன்பமும் அச்சமும் இடரும் உண்டாக்கியபோது சிவபெருமான் அந்த அவதாரங்களை எல்லாம் அழித்துத் தம்மை வணங்கச் செய்தனர் என்று சிவபுராணங்கள் கூறுகின்றன. குரங்கு குரங்காடுதுறையிலும், பாம்பு திருநாகேச்சுரம், திருகாளத்தியிலும், எறும்பு திருவெறும்பீச்சுரத்திலும், கழுகு திருக்கழுக்குன்றம், புள்ளிருக்கு வேளூரிலும், நாரை கரிக்குருவிகள் மதுரையிலும், கோழி காசியிலும் சிவனைப் பூசித்துப் பேறு பெற்றன என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளன. அலவன் - நண்டு. தேரை - தவளை. நண்டு கற்கடேச்சுரத்திலும், தவளை ஆற்றூரிலும் சிவனருள் பெற்றன என்றும் புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

இறைவனையும் இறைவியையும் நக்கீரன் துதித்தல்

22. சாலநா னிழைத்த தீங் தக் கென்னையுந் தண்டஞ் செய்த
கோலமே போற்றி பொல்லாக் கொடியனேன் றொடுத்த புன்சொன்
மாலைகேட் டென்னை யாண்ட மலைமகண் மணாள போற்றி
ஆலவா யடிகள் போற்றி யம்மைநின் னடிகள் போற்றி.

தெளிவுரை : *'நான் மிகவும் செய்த குற்றத்திற்கு அடியேனையும் ஒறுத்தருளிய திருவுருவே' வணக்கம். பொல்லாத கொடியவனாகிய யான் தொகுத்த புல்லிய சொல் மாலையைக் கேட்டு அடியேனை ஆண்டருளிய மலைமகளின் மணாளனே! வணக்கம்; திருவாலவாயில் எழுந்தருளிய பெருமானே! வணக்கம்; பிராட்டியே! நின் திருவடிகட்கு வணக்கம்.*

விளக்கவுரை : *தன் குற்றத்திற்கு தண்டித்ததையும் பாமாலை கேட்டு அருள் புரிந்ததையும் கூறிய நக்கீரன் இறைவனோடு இறைவியையும் துதித்தான் என்பதாம். சால - மிகவும்; புன் சொன்மாலை - கைலை பாதி காளத்தி பாதி யந்தாதி என்னும் பாமாலை.*

நக்கீரன் இறைவனையும் இறைவியையும் துதித்தல்

23. ஆவ லந்தனே னடியனேற் கருளரு ளென்னுக்
கோவ முப்பிர சாதமுங் குறித்துரை பனுவற்
பாவ லங்கலாற் பரனையும் பங்கிலங் கயற்கட்
பூவை தன்னையு முறைமுறை போற்றியென் றேத்தா.

தெளிவுரை : *'ஐயோ, வருந்தினேன், அடியேனுக்கு அருளாய், அருளாய் வேண்டிய இறைவனுடைய வெகுளியையும் அருளையும் குறித்துக் கூறும் பாமாலையால் சோமசுந்தரக் கடவுளையும் அவன் பாகத்திலமர்ந்த அங்கயற் கணணம்மையையும் முறையாகப் போற்றி என்று துதித்து.*

விளக்கவுரை : *இவ்வாறு நக்கீரன் இறைவனது வெகுளியையும் அருளையும் குறித்துப் பாமாலையால் இறைவனையும் இறைவியையும் போற்றித் துதித்தான் என்பதாம். பனுவல் - கோபப் பிரசாதம் என்னும் பிரபந்தம். இது, 'தவறு பெரிதுடைத்தே' என்று தொடங்

கும் ஒரு பிரபந்தம்; இணைக் குறளாசிரியப்பாவால் அமைந்தது. ஆ - இரக்கப் பொருளில் வந்த இடைச் சொல். அலந்தனேன். வருந்தினேன். பனுவல்பா அலங்கல் - நூலாகிய பாமாலை. பங்கில் - ஒரு பாகத்தில்.

நக்கீரன் இறைவனைப் பணிந்தெழல்

24. தேவ தேவனைப் பின்பெருந் தேவபா ணியொடுந்
தாவி லேழிசை யேழுகூற் றிருக்கையுஞ் சாத்திப்
பூவர் சேவடி சென்னிமேற் பூப்பவீழ்ந் தெழுந்தான்
பாவ லோர்களுந் தனித்தனி துதித்தனர் பணிந்தார்.

தெளிவுரை : *பின்பு தேவனாகிய அவ்விறைவனுக்குப்* பெருந் தேவ பாணியுடன் *கெடுதலில்லாத ஏழிசையமைந்த* திருவெழு கூற்றிருக்கை*யும் சாத்தி, மலர் போன்ற சிவந்த திருவடிகள் தனது முடியின்மேல் மலருமாறு விழுந்து வணங்கி எழுந்தனன்; ஏனைப்புலவர்களும் தனித் தனியே துதித்து வணங்கினர்.*

விளக்கவுரை : *பின்பு, நக்கீரன் பெருந் தேவபாணி, திருவெழு கூற்றிருக்கை என்னும் பிரபந்தங்களைப் பாடி இறைவனைத் துதிக்க, புலவர்களும் தனித்தனி துதித்து வணங்கினர என்பதாம். தேவ பாணி - தெய்வத்தைப் பாடும் பாட்டு: இது முதற் கடவுளைப்பற்றிப் பாடினமையின் பெருந்தேவபாணி எனப்பட்டது. 'சூலபாணியை' என்று தொடங்கப் பெறுவது; இணைக் குறள் ஆசிரியப் பாவால் இயன்றது. திருவெழுகூற்றிருக்கை - இஃது ஒன்று முதல் ஏழு வரை யுள்ள எண்களை அமைத்துப் பாடும் ஒரு வகைச் சித்திரப் பாட்டு; இணைக் குறளாசிரியப் பாவால் அமைந்தது. பூவர - பூப்போன்ற, பூவார் என்பது பூவர் என எதுகை நோக்கி நின்றது. துதித்தனர் முற்றெச்சம் இவ்வாறு நக்கீரர் பாடிய நான்கு பிரபந்தங்களும் பதினோராந் திருமுறையில் உள்ளன.*

இறைவன் திருவுருக் கரத்தல்

25. துதித்த கீரனுக் கின்னருள் சுரந்துநீ முன்போன்
மதித்த நாவலர் குழாத்திடை வதியென மறைநூல்
உதித்த நாவினர் கருணைசெய் துருக்கரந் தயன்சேய்
விதித்த கோயில்புக் கமர்ந்தனர் விளங்கிழை யோடும்.

தெளிவுரை : *வேத நூல் தோன்றிய நாவினையுடைய சோம சுந்தரக் கடவுள், இங்ஙனம் துதித்த நக்கீரனுக்கு இனிய அருள் சுரந்து, 'நீ முன் போலவே நின்னை நன்கு மதித்த புலவர் கூட்டத்து நடுவிலே தங்குவாயாக'வென்று கூறியருளி திருவுருவை ஒளித்துப் பிரமன் புதல்வனாகிய தேவதச்சன் அமைத்த திருக்கோயிலினுட் புகுந்து விளக்கமாகிய அணிகளை அணிந்த உமையம்மையோடும் வீற்றிருந்தனர்.*

விளக்கவுரை ; *இவ்வாறு தம்மைத் துதித்த நக்கீரனுக்கு இறை அருள் புரிந்து 'நீ முன்போலவே புலவர நடுவில் தங்குக' என்றருளி*

திருவுருக்கரந்தான் என்பதாம்; விளங்கிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தருமிக்குப் பொற்கிழி யளித்தல்

26. **கற்ற கீரனுங் கலைஞருங் கழகமண் டபத்தில்**
உற்ற வாடகக் கிழியறுத் தந்தணற் குதவிக்
கொற்ற வேந்தனும் வரிசைகள் சிலசெயக் கொடுப்பித்
தற்ற நீங்கிய கல்வியின் செல்வரா யமர்ந்தார்.

தெளிவுரை : *பல கலைகளையும் கற்ற நக்கீரனும் புலவர்களும் சங்க மண்டபத்தின் முன் தூக்கிய பொன் முடிப்பை அறுத்துத் தருமி என்னும் மறையவனுக்குக் கொடுத்து. வெற்றி வேந்தனாகிய சண்பமாறனும் சில வரிசைகள் செய்யுமாறு கொடுப்பித்துக் குற்றம் நீங்கிய கல்விச் செல்வராக இருந்தனர்.*

விளக்கவுரை . *பின்னர் நக்கீரனும் புலவர்களும் பொற்கிழியைத் தருமிக்கு அளித்து அரசனாலும் வரிசைகள் செயவித்தனர் என்பதாம். 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்' என்னும திருநாவுக்கரசர் தேவாரமும் பிற நூல்களும் தருமி பொற்கிழி பெற்றதைப் பற்றிக் கூறுகின்றன. ஆவணித் திருவிழா நான்காம் நாளில் கிழியறுத்தல் என்னும் நிகழ்ச்சி மதுரையில் நடைபெறுகிறது. அற்றம - சோர்வு குற்றம்.*

சண்பகமாறன் இறைவனுக்குத் திருப்பணிகள் செய்தல்

27. **சம்பக மாற னென்னுந் தமிழ்நர்தம் பெருமான் கூடல்**
அம்பக நுதலி னானை யங்கயற் கண்ணி னானை
வம்பக நிறைந்த செந்தா மரையடி வந்து தாழ்ந்து
நம்பக நிறைந்த வன்பாற் பல்பணி நடாத்தி வைகும்.

தெளிவுரை : *சணபகமாறன் என்னும் தமிழர் வேந்தன், கூடலில் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணனாகிய சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற் கண்ணம்மையையும் மணம் உள்ளே நிறைந்த செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில் வந்து வணங்கி, சிவமே பொருளெனத் துணிந்த உள்ளத்தின்கண் நிறைந்த அன்பினால் பல திருப்பணிகள் நடாத்தி இனிதிருப்பானாயினன்.*

விளக்கவுரை : *சண்பகமாறன் சிவபக்திச் சிறப்புடன் அம்மையப்பருக்கு அருந்திருப்பணிகள் செய்து வாழ்ந்து வந்தான் என்பதாம். தமிழ்நர் - நர் பெயர் விகுதி. அம்பகம் - கண். வம்பு - மணம். நம்பு - விருப்பம்.*

பயிற்சி வினாக்கள்

1. கீரனிலாதவை கூடிய சங்கம் எவ்வெவற்றைப் போன்றது?
2. பொற்றாமரை வாவியுள் வீழ்ந்து வருந்து கீரனைக் கண்ட சங்கப் புலவர்கள் எண்ணிய தென்ன? என்ன செய்தனர்?

3. எய்தி வெள்ளி மலை..............புண்ணிய மூர்த்தியே யே-இவ்வாறு சங்கப் புலவர்கள் எண்ணியது ஏன்?

4. சங்கப் புலவர் சோமசுந்தரக் கடவுளை எங்ஙனம் துதித்து வேண்டினர்?

5. இறைவன் நக்கீரனைக் கரையேற்றிய வாற்றை விவரிக்க.

6. எடுத்த சொல் மாறிமாறி இசைய நேரிசை வெண் பாவால் தொடுத்த வந்தாதி-எது? இது பாடப் பட்ட இடம் சுட்டி விளக்குக.

7. பொற்றாமரைப் பொய்கையினின்று கரையேற்றப்பட்ட வுடன் நக்கீரன் இறைவனை எங்ஙனம் போற்றிப் பாடி ஞன்? அங்ஙனம் பாடப்பட்ட நூலின் பெயர் யாது?

8. கரையேறிய கீரன் பாடிய நூல்கள் யாவை? அவை எத்தொகுப்பைச் சேர்ந்தவை?

9. திருவெழுக் கூற்றிருக்கை, பெருந்தேவபாணி-குறிப்பு வரைக.

10. நீ முன்போன் மதித்தநாவலர் குழாத்திடைவதி - இடஞ்சுட்டுக.

11. நக்கீரன் இறைவனது கோபமும் பிரசாதமுமாகக் கூறியவற்றுள் நந்நான்கு செய்திகளைத் தெரிவிக்க.

12. அனற்கணுேக்கினன் பின் னருட்கணு நோக்க, நக்கீரன் என்ன வாயினன்?

13. தாமரைக்கேயு மாதவன் போல் - இவ்வுவமையைப் பொருளொடு பொருத்தி விளக்குக.

14. யாவர்க்கும் தேவராமவரே திருவுள்ளந் திரும்பினுற் போவதேயீது-சுட்டு குறிக்கும் பொருள் யாது!

6. கீரனுக்கு இலக்கணமுபதேசித்த படலம்

கதைச் சுருக்கம்

நக்கீரன் மேற்கொண்ட வழிபாட்டு முறை: சோமசுந்தரக் கடவுளின் அருளாணையால், நக்கீரர் சங்கப் புலவர் கூட்டத்தில் சேர்ந்து அழுக்காறு நீங்கி அக்கடவுளின் திருவடிகளிலே அன்பு கொண்ட மனத்தனுகி, 'சிவபிரானது நெற்றிக் கண்ணினுல் எரித்த மன்மதன் பிரமனுலும் திருமாலினுலும் காக்கப்பட்டவனல்லன்; அவ்வனற்கண் நம்மைச் சுட்டபோது வெப்பம் தீர்த்துக் காத்தது இப்பொற்றாமரைக் குளமேயாகும். எனவே, இப்பொய்கையே நமமை இருமையிலும் காப்பதாகும்' என்று சிந்தித்து நாடோறும் முப்போதும் ஒன்றிய மனத்துடன் அப்பொய்கையில் நீராடிச் சோமசுந்தரப் பெருமானை வழிபடுகின்ற நியமத்தை மேற்கொண்டான்.

இறைவன் நக்கீரனுக்கு அருள் புரியக் கருதுதல்: நக்கீரன் நாடோறு வழிபட்டு வருகின்ற நியமத்தை நோக்கித் திருவுளமகிழ்ந்த இறைவனுர், இலக்கணம் இவனுக்கு இன்னும விளங்கவில்லை. அதனுல் இவன் 'இது வழாநிலைச்சொல். இது வழூஉச் சொல்' என்பது அறிகிலன். யாரைக் கொண்டு இவனுக்கு இலக்கணம் கற்பிக்கலாம்' என்று சிந்திக்கலானுர்.

இறைவி அகத்தியரைப்பற்றி இறைவனிடம் தெரிவித்தல்: அப்பொழுது உமாதேவியார், செங்கை குவிதது, 'எம்பெருமானே! நுமது நினைவுககுத் தக்க விடை கூற வல்லவர் எவருமிலரெனினும் அடியேன் உளததில் தோன்றியதைக் கூறுகின்றேன். தலைவ! முன்னெரு நாள் கயிலாய மலையிலே பிரமன் திருமால் இந்திரன் முதலிய தேவர்களும் சனகன் முதலிய முனிவர்களும் பிறரும் நும்மைத் தரிசிக்க வநது கூட்டமாயிருந்தார்கள். அதனுல் நிலம் பொறுக்கலாற்ருது வட கிழக்கெல்லை தாழ்ந்தது! தென்மேறகெல்லை உயரநதது! தேவர்கள் அது கண்டு தேவரீரை வணங்கி, 'பெருமானே! தங்களுக்குச் சமமாவர் ஒருவரை அத்தென்மேற்கெல்லையில் இருக்கச் செயதால், இப்பூமி சமமாய் நிற்கும் என்று வேண்டினர். அப்போது தாங்கள், நம்மை ஒப்பவன் அகத்திய முனிவனே; நமது பார்வதியை ஒப்பவள் அம்முனிவரின் மனைவியாகிய உலோபமுத்திரையே என்றருளி, அம்முனிபுங்கவனைத் தென்னுட்டுக்குப் போகப் பணித்தீர். அம்முனிவன் தங்களிடம் விடை பெறுங்கால், தங்களை நோக்கி 'அடியேன் செல்லும நாடு தமிழ்நாடாகும். அங்குள்ளார் தமிழில் மிகவும் வல்லவர்; அவர்களுக்குத் தக்க விடையளித்தல் வேண்டுமாதலால், அடியேனுக்குச் செந்தமிழிலக்கண நூலை அருள் செய்க' என வேணடினன். அவ்வாறே தாங்களும் அம்முனிவனுக்கு முதனூலை அருளிச் செய்தீர். பின்னும் அம்முனிவன் 'அடியேன் நுமது திருவடியை என்று தரிசிப்

பேன்' என்றான். தாங்கள், 'கடம்ப வனத்திலே நம்மை தரிசித்து வணங்கி நின் மனம் விரும்பிய வரங்களெல்லாம் பெற்றுக்கொண்டு பொதிய மலையிலே இருப்பாயாக' என்று அனுப்பியுள்ளீர். அவனும் அப்படியே உலோபாமுத்திரையுடன் சென்று அங்கிருக்கின்றான்; இது நுமது திருவுள்ளத்திற்கிசைவாயின் இந்நக்கீரனுக்கு அவ்வகத்தியனைக் கொண்டு இலக்கணத்தை போதித்தருளுங்கள்' என்று விண்ணப்பித்தார்.

இறைவன் நினைத்தலும் அகத்தியர் வந்து வணங்கலும் : இறைவி கூறியதைக் கேட்ட இறைவன் மகிழ்ந்து அப்படியே செய்வோம் என்று அகத்திய முனிவனை நினைந்தருளினார். இறைவன் திருக்குறிப்பினை அறிந்த அகத்திய முனிவர் தம் முடிமீது அஞ்சலியாகக் கைகளைக் குவித்தவராய் உலோபாமுத்திரையோடு தம் தவ வலியால் வான் வழியே வந்து மதுரையை அடைந்து திருக்கோயிலுட் புகுந்து சோம சுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மையாரையும் வணங்கி சிவானந்தம் பெருக அருகிலிருந்தார்.

நக்கீரனுக்கு இலக்கணம் போதிக்குமாறு இறைவன் அகத்தியனுக்குப் பணித்தல் : அப்பொழுது நக்கீரன் வழக்கம்போல் பொற்றாமரைக் குளத்தில நீராடி இறைவனைத் துதிக்க அங்கு வந்து சேர்ந்தனன். அப்பொழுது சிவபெருமான் அகத்திய முனிவரை நோக்கி, 'அகத்திய முனிவ, இந்நக்கீரனுக்குத் தமிழ் இலக்கணம் நிரம்பிற்றிலது. நீ நம்மிடத்தில் கற்றுக்கொண்டபடியே அவ்விலக்கணத்தைக் குற்றமற இவனுக்குக் கற்பிக்கக் கடவாய்' என்று பணித்தருளினார்.

அகத்தியர் நக்கீரனுக்கு இலக்கணம் போதித்தல் : இறைவனிட்ட பணியை அகத்தியன் சிரத்தினும் மனத்தினும தாங்கித் தம்மை வணங்கி நின்ற நக்கீரனுக்கு மன மயக்கம் நீங்க, இலக்கணததை அறிவுறுத்தினார். இருவகைப் பாயிரம், எழுவகை மதம், நால்வகைப்பயன், பத்தழகு, குற்றங்கள், முப்பத்திரண்டு உத்திகளையும் கொண்டுவிளங்கும் முதனூலைத் தொகை வகை விரி என்னும் முறையில் காண்டிகையுரையாலும், விருத்தியுரையாலும் ஐயம் திரிபறப் போதித்தார்.

இறைவன் அகத்தியனுக்கு வரமளித்து அனுப்புதல் : அகத்தியன் நக்கீரனுக்கு இலக்கண முதனூலை முறைப்படி கற்பித்த அவனது திறமையைக் கண்டு திருவுளமகிழ்ந்த இறைவன், அவனைத் தழுவி வேண்டிய வரங்களெல்லாம் கொடுத்து இருக்கையிற் செல்ல விடுத்தார்.

இறைவியின் ஐயமும் இறைவன் கூறிய விளக்கமும் : அகத்தியன் தன் மனைவி உலோபாமுததிரையுடன் இறைவனிடம் விடைபெற்றுச் சென்ற பின்பு, உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, இந்நக்கிரனுக்கு எல்லாம் வல்லவராகிய தாங்கள் இலக்கணம் கற்பிததருளாது அகததியனைக் கொண்டு கற்பித்த காரணம் யாது?' என்று கேட்டனர். அதற்குச் சிவபெருமான் உமையை நோக்கி, 'தம்மை நித்தமும் வழிபடுவோருக்கும், தமக்குப் பொருள் கொடுப்போருக்கும், தமமிடத்துப் பொறுமையில்லாதவருக்கும், தமது சொல்லைக்கடவாதவருக்கும் நூல் கற்பித்தல் அறமாகும். நக்கீரன் நம்மிடத்தே

பொருமை கொண்டாளுதலால் நாம் கற்பியாது அகத்தியனைக் கொண்டு கற்பித்தோம்' என்று கூறி இறைவியின் ஐயமகற்றினர்.

நக்கீரன் கொண்ட இன்பமும் துன்பமும்: அகத்திய முனிவனிடம் முதனூலை ஐயம் திரிபறக் கற்ற கீரன் தான் செய்த செய்யுட்களை ஆராய்ந்து வழுவும் வழாநிலையுமாகிய முடிவுகளை உற்று நோக்கித் தெளிந்தான். பின்னர் நக்கீரன், "எனது அறியாமையால் எல்லாம் வல்ல இறைவனாது பாடலில் பொருட் குற்றம் கூறினேனே! மறை முடியும் தீண்டுதற்கரிய திருவடி நிலத்தில் பட எழுந்தருளி வந்த பெருங்கருணை வள்ளலுக்குப் பிழை செய்தேனே! அற்ப வித்தையுடையோர் அகங்கார முடையோர்' என்னும் பழமொழி என்னளவில் மெய்யாயிற்றே! இறைவனுக்குச் செய்த தீங்கினால் அடியேனை அவருடைய நெற்றிக் கண்ணின் நெருப்புச் சுட்டதன்றி அடியேனுடைய நெஞ்சமும் சுடுகின்றதே" என்று நினைந்து நினைந்து துன்பக் கடலுள் ஆழ்ந்தான். "தாய் தான் பெற்ற குழந்தையைக் கைக்கின்ற மருந்தைப் பருகச் செய்து அதனது நோயை ஓட்டுதலபோல, அடியேனைத் தண்டித்து அறிவுறுத்திய அப்பெருங்கருணைப் பெருமானுக்கு ஏழையேன் தருவது யாதுளது?' என்று எல்லையற்ற மகிழ்ச்சிக் கடலுள் ஆழ்ந்தான்.

நக்கீரன் வாழ்க்கை: பின்னர் நக்கீரன், தனக்கு அகத்திய முனிவன் போதித்தருளிய இலக்கண முதனூலை மற்றைப் புலவர்களுக்கும் போதித்துச் சோமசுந்தரக் கடவுளின் திருவடி மலர்களில் ஆழ்ந்த அன்புடையவனாய் வாழ்ந்து வந்தான்.

நக்கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த திருவிளையாடல்

1. கொன்றையந் தெரியல் வேய்ந்த கூடலெம் பெருமான் செம்பொன்
மன்றலங் கமலத் தாழ்ந்து வழிபடு நாவ லோனை
அன்றகன் கரையே றிட்ட வருளுரை செய்தே மிப்பாற்
றென்றமி ழனையான் றேறத் தெருட்டிய திறனுஞ் சொல்வாம்.

தெளிவுரை: அழகிய கொன்றை மாலையணிந்த கூடலில் வீற்றிருக்கும் எம்பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள் மணமிக்க அழகிய சிவந்த பொற்றாமரைத் தடத்து வீழ்ந்து அழுந்தி துதித்த நாவலனாகிய நக்கீரனை அப்பொழுது அகன்ற கரையினகண் ஏற்றியருளிய திருவிளையாடலை உரைத்தேம்; பின் அழகிய தமிழிலக்கணத்தை அந்நக்கீரன் தெளியுமாறு தெளிவித்த திருவிளையாடலையும் உரைப்பாம்.

விளக்கவுரை: நக்கீரனைப் பொற்றாமரைக் குளத்தினின்று கரையேற்றிய திருவிளையாடலின் பின் அக்கீரனுக்கு அகத்திய முனிவரால் தமிழிலக்கணம் தெளிவித்த திருவிளையாடலைக் கூறியவாறு என்பதாம், தென்தமிழனையான் - நக்கீரன். தென் தமிழ் - இயற்றமிழ். தேற - இலக்கணம் தெளிந்து உய்ய. தெருட்டிய அகத்திய முனிவரால் அறிவுறுத்திய. செம்பொன் கமலம் - இது பொற்றாமரை என்னும் பெயருடைய வாவியைக் குறித்து நின்றதென்க.

நக்கீரன் சங்கப்புலவர்களோடு சேர்ந்திருத்தல்

2. முன்புநான் மாடக் கூடன் முழுமுத லாணை யாற்போய்
இன்புற வறிஞ ரீட்டத் தெய்தியாங் குறையுங் கீரன்
வன்புறு கோட்டந் தீர்ந்து மதுரையெம் பெருமான் றருளில்
அன்புறு மனத்த னாகி யாய்ந்துமற் றிதனைச் செய்வான்.

தெளிவுரை : *நான் மாடக் கூடலின்கண் எழுந்தருளிய முழுமுதற் கடவுளாகிய சோமசுந்தரக் கடவுளின் ஏவலால் முன்பு சென்று மகிழ்ச்சி மிக, புலவர் கூட்டத்தை அடைந்து அங்கு வதியும் நக்கீரன், வலிமிக்க அழுக்காறு நீங்கி மதுரையில் அமர்ந்தருளிய எமது பெருமான் திருவடியில் அன்புமிகக மனமுடையவனாய் ஆராய்ந்து இதனைச் செய்வானாயினன்.*

விளக்கவுரை : *நக்கீரன் சோமசுந்தரப் பெருமான் ஆணையின்படி சங்கப்புலவரோடு சேர்ந்து இனிது வாழ்ந்து வந்தான் என்பதாம். வன்புறு கோட்டம் வலிமிக்க மாறுபாடு; அழுக்காறு எனும் ஆம்.*

நக்கீரன் பொற்றாமரைத்தடத்தின் பெருமையைச் சிந்தித்தல்

3. கட்டவிழ் கடுக்கை யண்ணல் கண்ணினா லவிந்த காளை
மட்டவிழ் மலரோ னானு மாயவ னானுங் காக்கப்
பட்டவ னல்ல னன்னா னுதல்விழிப் படுதீ நம்மைச்
சுட்டபோ துருப்பந் தீர்த்துக் காத்ததிச் சுவண கஞ்சம்.

தெளிவுரை : *முறுசகு அவிழ்ந்த கொன்றை மலர் மாலையை அணிந்த இறைவனது நுதற் கண்ணினால் நீறாகிய மதவேள் மணத்தொடு மலர்ந்த தாமரை மலரில் இருக்கும் பிரமனாலும் திருமாலினாலும் காக்கப்பட்டிலன்; அவ்விறைவனது நெற்றிக் கண்ணில் உண்டாகிய நெருப்பு, நம்மை வெதுப்பியபொழுது அவ்வெம்மையைப் போக்கி இப்பொற்றாமரைத் தடம் பாதுகாத்தது.*

விளக்கவுரை : *மன்மதன் சிவனது நெற்றிக்கண்ணால் நீறாக்கப் பட்டபோது, அவனை ஏவிய பிரமனும் திருமாலுமே அவனைக் காக்க முடியவில்லை. அவ்வாறிருக்க இப்பொற்றாமரைத் தடம் யான் இறைவனது நெற்றிக் கணணால் துன்புற்றபோது என் வெம்மையைப் போக்கிக் காத்தது என்று எண்ணினான் என்தாம. சிவபெருமான் யோக நிலையிலிருந்தபோது அதனைக கலைக்கும் பொருட்டுத திருமாலும் பிரமனும் மன்மதனை ஏவி மலரம்பு தொடுக்கச் செய்தனர. அதன் பயனாக மன்மதன் சிவனது நெற்றிக்கண் வெம்மையால் நீறாயினான். அவ்வமயம் பிரமனும் திருமாலும் அவனைக் காக்கும் வலியுடையரேல் காத்திருப்பாரன்றோ? அவர்களாலும் காக்க முடியாத நெற்றிக்கண்ணால் தனக்கு ஏற்பட்ட வெம்மையை இப் பொற்றாமரை காத்தது என்று நக்கீரன் அத்தடத்தின் பெருமையை எண்ணலானான். அண்ணல் கண்ணினால் அவிந்த காளை-மன்மதன். உருப்பம்-வெப்பம். சுவணகஞ்சம்-பொற்றாமரைத் தீர்த்தம்.*

நக்கீரன் பொற்றாமரைக் குளத்தில் நாளும் மூழ்கி இறைவனை வழிபட்டு வருதல்

4. இப்பெருந் தடமே யெம்மை யெம்மையுங் காப்ப தென்னுக்
கப்பிலா மனத்தான் மூன்று காலமு மூழ்கி மூழ்கி
அப்பனை யால வாயெம் மடிகளை யடியார் சேம
வைப்பினை யிறைஞ்சி நித்தம் வழிபடு நியமம் பூண்டான்.

தெளிவுரை : *இந்தப் பெருமை வாய்ந்த தீர்த்தமே எம்மை எப்பிறப்பிலும் ஓம்புவதாகும் என்று கருதி ஒன்றுபட்ட மனததுடன் மூன்று காலங்களிலும் அதில் நீராடி எல்லா உயிர்கட்கும் அததனும் திருவாலவாயில் அமரும் எமது இறைவனும் அடியார்களின் சேமநிதி யுமாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி நாள்தோறும் வழிபடுகின்ற கடப்பாட்டினை மேற்கொண்டான்.*

விளக்கவுரை : *நக்கிரன் நாடோறும் பொற்றாமரைப் பொய்கை யில் மூன்று காலங்களிலும் நீராடிச் சோமசுந்தரக கடவுளை வழிபடும் நியமம் பூண்டு வந்தான் என்பதாம். எம்மையும்-எப்பிறப்பிலும்; இம்மை மறுமையில் என்க. கபபிலாமனம்-பிளவுபடாத, ஒன்று பட்ட மனம். இறைவன் அடியார் வேண்டும் காலத்து உதவுமியல் பினன் என்பார் 'அடியார் சேமவைப்பினை' என்றார்.*

இறைவன் நக்கீரனுக்கு அருளக்கருதல்

5. மையறு மனத்தான் வந்து வழிபடு நியம நோக்கிப்
பையர வாரம்பூண்ட பரஞ்சுடர் மாடக் கூடல்
ஐயனு மணிய னாகி யகமகிழ்ந் தவனுக் கொன்று
செய்யநன் கருணை பூத்துத் திருவுளத் திதனைத் தேர்வான்.

தெளிவுரை : *குற்றம் நீங்கிய மனத்தையுடைய நக்கீரன், நாள் தோறும் வந்து வழிபடுங் கடப்பாட்டினைப் பார்த்துப் படத்தையுடைய பாம்பினை ஆரமாகப் பூண்ட பரஞ்சோதியுமாகிய நான்மாடக்கூடல் இறைவனும் அண்மையனாய்த் திருவுள்ளம் மகிழ்ந்து அந்தக் கீரனுக்கு ஒன்று புரியத் திருவருள் கூர்ந்து திருவுள்ளததின் கண் இதனைக் கருதுவானாயினன்.*

விளக்கவுரை : *நக்கிரன் வழிபாட்டையுணர்ந்த இறைவன் அவனுக்கு அருள்புரியக் கருதலானான் என்பதாம். இறைவன், சூரியன் சந்திரன் அக்கினி முதலிய பேரொளிகளுக்கும் ஒளி வழங்கும் பெருஞ்சோதி வடிவினனாதலின், 'பரஞ்சுடர்' எனப்பட்டான். அணியனாகி-அவன் உள்ளததே விளங்குதல்.*

நக்கீரனுக்கு இலக்கணம் போதிக்க இறைவன் உன்னுதல்

6. இலக்கண மிவனுக் கின்னுந் தெளிகில விதனா லாய்ந்த
நலத்தசொல் வழூஉச்சொ லென்ப தறிகில னவைதீர் கேள்விப்
புலத்தவர் யாரைக் கொண்டு போதித்து மிவனுக் கென்னா
மலைத்தனு வளைத்த முக்கண் மன்னவ னுன்னு மெல்லை.

தெளிவுரை : 'இவனுக்கு இன்னும் இலக்கணம் விளங்கவில்லை, இதனாலே ஆராய்ந்த நன்மையையுடைய சொலலும் கூற்றமுடைய சொலலும் இது இது என்பதை அறியாதவனாயினன்; கூற்றமற்ற நூற் கேள்வியின் புலமையோர் யாவரால் இவனுக்கு அதனைப் போதிப்போம்' என்று மலையை வில்லாக வளைத்த மூன்று கண்களையுடைய சுந்தர பாண்டியன் நினைத்தபொழுது,

விளக்கவுரை : நக்கிரனுக்கு இன்னும் இலக்கணம் விளங்காமையினால், யாரைக்கொண்டு குற்றமுள்ள சொல் குணமுள்ள சொல என்பனவற்றை போதிககலாம்' என்று இறைவன் எண்ணினான் என்பதாம். நலத்த சொல்-குணமுளள சொல, வழூஉச்சொல்-குற்றமுள்ள சொல். முக்கண் மனனவன்-சோமசுந்தரக் கடவுள், தெளிகில-விளங்கிற்றில. நலத்த-குறிபபுப் பெயரெச்சம். புலத்தவர-புலமையுடையோர். போதிததும்-தலைமை பற்றி வந்த தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று.

இறைவி இறைவனிடம் கூறுதல்

7. பங்கயச் செங்கை கூப்பிப் பாலினேர் மொழியாள் சொல்வாள்
அங்கணா வங்கை நெல்லிக் கனியென வனைத்துங் கண்ட
புங்கவா நினது சங்கைக் குத்தரம் புகல வல்லார்
எங்குளா ரேனு மென்னஞ் சுதிப்பதொன் றிசைப்பேனையா.

தெளிவுரை : பால் போலும் மொழியினையுடைய உமையம்மையார் தாமரை மலர் போன்ற சிவந்த கரங்களைக் குவித்து வணங்கிக் கூறுவாள் : 'அங்கணனே! உள்ளங்கை நெல்லிக்கனி போல யாவையும் உணர்ந்த புங்கவனே! உனது கேள்விக்கு விடை கூற வல்லவர் எங்கே உள்ளார்? ஒருவருமில்லை. எனினும், ஐயனே, எனது உள்ளத்திலே தோன்றுவதொன்றைக் கூறுவேன்!'

விளக்கவுரை : அங்கயற்கண்ணம்மையார் சோமசுந்தரக் கடவுள் எண்ணத்தையுணர்ந்து தன் கருத்தை கூறத் தொடங்கினார் என்பதாம். சங்கை-திருவுள்ள நிகழ்ச்சி. புங்கவன்-உயர்ந்தோன். தேவன்-. உத்தரம்-விடை. ஏனும்-அங்ஙனமாயினும்.

இறைவி நிலம் தாழ்ந்த காரணம் கூறல்

8. பண்டொரு வைகல் வெள்ளிப் பனிவரை யிடத்துன் பாங்கர்ப்
புண்டவழ் குலிசக் கோமான் பூமகன் மாயப் புத்தேன்
அண்டருஞ் சனக னாதி யருந்தவர் பிறகு மீண்டிக்
கொண்டன ரிருந்தா ரிந்தக் குவலயம் பொறுது மாதோ.

தெளிவுரை : முன்னொரு நாள் வெள்ளிய இமய மலையின்கண் உன் பக்கலில் புலால் விளங்கும் வச்சிரப் படையையுடைய இந்திரனும் பிரமனும் திருமாலும் பிற தேவர்களும் சனகன் முதலிய அரிய முனிவரும் பிறரும் நெருங்கி இருந்தார்; அதனால் இந்த ஞாலம் பொறுக்கலாற்றாது (வடதிசை தாழ்ந்தது).

விளக்கவுரை : 'இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் இமய மலையில் முன்னொரு நாள் கூடிய தனால் நிலம் பொறுக்கலாற்றாது தாழ்ந்தது' என்றாள் என்பதாம். பண்டொருவைகல்-திருக்கலியாண காலத்தின்போது. குலிசக்கோமான்-இந்திரன். பிறர்-வித்தியாதரர் முதலியோர், கொண்டனர் இருந்தார்-முற்றெச்சம். மாது, ஓ-அசை.

தேவர்கள் வேண்டுகோள்

9. தாழ்ந்தது வடகீ ழெல்லை யுயர்ந்தது தென்மேற் கெல்லை
சூழ்ந்தது கண்டு வானோர் தொழுதுணைப் பரவி யைய
ஊழ்ந்திடு மரவம் பூண்டோ யொருவனின் னொப்பா னங்கே
வாழ்ந்திட விடுத்தா லிந்த வையநேர் நிற்கு மென்றார்.

தெளிவுரை : வடகிழக்கெல்லை தாழ்ந்தது; தென் மேற்கெல்லை உயர்ந்தது. அதனைப் பார்த்துத் தேவர்கள் உன்னைச் சூழ்ந்து கொண்டு வணங்கித் துதித்து, 'ஐயனே! ஊர்கின்ற பாம்பினை அணிந் தவனே! நின்னையொப்பானொருவனை அத் தென்மேற்கெல்லையில் வாழும்படி விடுப்பின் இந்த நிலவுலகம் சமமாக நிற்கும்' எனக் கூறினர்.

விளக்கவுரை : தேவர்கள் தாழ்ந்த நிலத்தைச் சமப்படுத்த இறைவனிடம் தன்னொப்பான் ஒருவனைத் தென்மேற்கெல்லைக்கு அனுப்புமாறு வேண்டினர் என்பதாம். சூழ்ந்து-ஆலோசித்து. ஊழ்ந் திடும்-ஊர்கின்ற. நின்னொப்பான்-நின்னை உள்ளத்தே கொண்டிருப் பவன்.

இறைவன் அகத்தியனை அத்தென் திசைக்கு அனுப்புதல்

10. பைத்தலை புரட்டு முந்நீர்ப் பௌமுண் டவனே யெம்மை
ஒத்தவ னனையான் வாழ்க்கைக் குரியளா கியவு லோபா
முத்திரை யிமவான் பெற்ற முகிழ்முலைக் கொடியொப் பாளென்
றத்திரு முனியை நோக்கி யாயிடை விடுத்தா யன்றே

தெளிவுரை : பரந்து அலைவீசும் மூன்று நீரினையுடைய கடலைக் குடித்த குறுமுனிவனே! எம்மை ஒப்பான்; அம் முனிவன் இல் வாழ்க் கைக்கு உரியவளாகிய உலோபா முத்திரை என்பாளே மலையரை யன் பெற்ற அரும்பிய கொங்கையை யுடைய கொடிபோன்ற உமையை ஒத்தவள் என்று கூறி, அந்தத் திரு முனிவனைப் பார்த்து, அங்குப் போகுமாறு பணித்தனை,

விளக்கவுரை : 'இறைவனே, நீ அகத்தியனைத் தென்மேற்குத் திசைக்குச் செல்லுமாறு பணித்தனை' என்று இறைவி கூறினாள் என்பதாம். பைதது - பரந்து; விரிந்து என்னும் பொருளையுடையது. பௌவம் - கடல், பௌவமுண்டவன் - அகத்தியன் கடலில் ஒளித்துக் கொண்டு விருத்திராசுரனைக் கொல்லும் பொருட்டு தேவந்திரன் வேண்டுகோளுக்கு இரங்கி அகத்தியர் கடலைக் குடித்தார் என்பர். உலோபா முத்திரை - அகத்தியன் மனைவி. ஆயிடை - அத்தென் மேற்கெல்லைக்கு.

அகத்தியன் இறைவனிடம் விண்ணப்பித்தல்

11 விடைகொடு போவா னொன்றை வேண்டின னேகுந் தேயந்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டின்
இடையயின் மனித்த ரெல்லா மின்றமி ழாய்ந்து கேள்வி
உடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல் வேண்டும்.

தெளிவுரை : *விடை பெற்றுப் போகும் அம்முனிவன் ஒன்றை வேண்டுவானாயினன், யான் செல்லும் நாடு, செய்யுளாகத் தொடுத்தலைப்பெறும் தமிழ் நாடு என்று கூறுவர். அந்த நாட்டின் கண் வாழும் மக்களனைவரும் இனிய தமிழை ஆராய்ந்து அந்நூற் கேள்வி மிக்கவரென்று கூறுவர். ஆதலால், அந்தமிழ் நூலில் வினவினர்க்கு விடை கூறுதல் வேண்டும்.*

விளக்கவுரை : *அகத்தியன் இறைவனிடம் தான் செல்லும் நாடு தமிழ் நாடாதலின், அங்குள்ள தமிழ் வல்லவர்க்கு ஏற்ப யானும் தமிழில் கூறவேண்டுமே என்று விண்ணப்பித்தான் என்பதாம். தொடை பெறும் தமிழ் - மோனை முதலிய தொடை விகற்பங்கள் அமைந்த தமிழ்.*

இறைவன் அகத்தியனுக்கு இலக்கணம் கற்பித்தமையை உமையம்மை கூறல்

12. சித்தமா சகல வந்தச் செந்தமி ழியனூ றன்னை
அத்தனே யருளிச் செய்தி யென்றன னனையான் றேற
வைத்தனை முதனூ றன்னை மற்றது தெளிந்த பின்னும்
நித்தனே யடியே னென்று நின்னடி காண்பே னென்றான்.

தெளிவுரை : *'மனத்திலுள்ள அறியாமையாகிய குற்றம் நீங்க அச்செந்தமிழின் இலக்கண நூலை இறைவனே! அருளிச்செய்வாயாக' என்று வேண்டினன். அம்முனிவன் தெளியுமாறு முதனூல் அருளினை; அம்முதல் நூலைத் தேர்ந்துணர்ந்த பின்னும் அழிவில்லாதவனே! அடியேன் நினது திருவடியை என்று காணபேன்' என்று வினவினன்.*

விளக்கவுரை : *உமையம்மை இறைவனை நோக்கி, 'அந்த அகத்தியன் வேண்டுகோளுக்கு இணங்கி இலக்கண நூலைக் கற்பித்தனை; அவன் திருவடியை என்று காணபேன் என்று வேண்டினன்' என்று கூறினள் என்பதாம். சித்தமாசு - அறியாமையாகிய மனக்குற்றம். இயல் நூல் - இலக்கண நூல். மற்று - அசை.*

கடம்பவனத்தில் வணங்கிப் பொதியமலையில் இருக்குமாறு அகத்தியனைப் பணித்தமையைத் தேவியார் கூறுதல்

13. கடம்பமா வனத்தி லெம்மைக் கண்டனை யிறைஞ்சி யுள்ளத்
திடம்பெற யாது வேட்டா யவையெலா மெம்பாற் பெற்றுத்
திடம்பெற மலயத் தெய்தி யிருக்கென விடுத்தாய் சென்று
குடம்பெறு முனியு மங்கே யிருக்கின்றான் கொடியி னேடும்.

தெளிவுரை : "பெரிய கடம்பவனத்தின் கண் எம்மைக் கண்டு வணங்கி நின் உள்ளத்தின் கண் நிரம்ப யாதொன்றனை விரும்பினையோ அவற்றை எல்லாம் எம்மிடத்துப் பெற்று, மனஞ் சலியாது பொதியின் மலையிற் சென்று இருக்கக் கடவை' என்று ஏவினாய்; கலச முனி யாகிய அவனும் அங்குச் சென்று உலோபா முத்திரையோடும இருக்கின்றான்.

விளக்கவுரை : இறைவன் அகத்தியனிடம் 'கடம்பவனத்தில் எம்மை கண்டு வணங்கி விரும்பியன பெறறு, பொதியமலைலிரு'" கூறியதைத் தேவி எடுத்துரைத்தாள், மற்றும் அகத்தியன் தன் மனைவி உலோபா முத்திரையோடும் பொதியமலையிலிருப்பதாகவும் கூறினாள் என்பதாம். குடம் பெறுமுனி - அகத்தியன்; கும்பயோனி கணடனை - முற்றெச்சம். கொடி - உலோபா முத்திரை : உவமை யாகு பெயர்.

இறைவன் அகத்தியனைத் தம்மிடம் வருமாறு நினைத்தல்

14\. இனையதுன் றிருவுள் ளத்துக் கிசைந்ததே லிவற்குக் கேள்வி
அனையமா தவனைக் கூவி யுணர்த்தென வணங்கு கூற
இனையாநா ணிகழ்ச்சி யெல்லா மறந்திடா தின்று சொன்னாய்
அனையதே செய்து மென்று வறிவனை நினைந்தா னையன்.

தெளிவுரை : 'இச்செய்தி நினது திருவுள்ளத்தும் பொருந்துவ தாயின் அம்முனிவனை அழைத்து இந்நக்கீரனுக்குத் தமிழிலக் கணத்தை அறிவுறததுவாயாக' என்று இறைவி கூற, 'இத்துணை நாட் செய்திகளனைத்தையும் மறந்திடாது இன்று கூறினை ; அதனையே செய்வே'மென்று கூறி இறைவன் அம்முனிவனை நினைந்தனன்.

விளக்கவுரை ; அகத்தியனைக் கொணடு நக்கீரனுக்குத் தமிழ் இலக்கணத்தை அறிவுறுத்துமாறு இறைவி கூறியதற கேற்ப, இறைவன் அகத்தியரைத தம்மிடம் வருமாறு எண்ணினான் என்ப தாம். இவறகு - இந்த நக்கீரனுக்கு. கேள்வி - நூற்கேள்வியினை. அறிவன் - அகதகிய முனிவன்.

அகத்தியன் மதுரையை அடைதல்

15\. உடைய நாயகன் றிருவுள முணர்ந்தனன் முடிமேல்
அடைய வஞ்சலி முகிழ்த்தன னருந்தவ விமானத்
திடைபு குந்தனன் பன்னியோ டெழுந்தன னகல்வான்
நடைய னாகிவந் தடைந்தன னற்றமிழ் முனிவன்.

தெளிவுரை: எல்லாமுடைய இறைவனது திருவுள்ளக் குறிப்பினை அறிந்து முடிமீது பொருநத அஞ்சலியாகக கைகளைக் குவித்து, அரிய தவமாகிய விமானததில் மனைவியோடும் ஏறி மேலே எழுந்து அகன்ற வானை வழியாகக் கொணடு நடப்பவனாய் நல்ல தமிழ் முனிவன் மது ரையை அடைந்தனன்.

விளக்கவுரை : *இறைவன் திருவுள்ளக் குறிப்பினை உணர்ந்த அகத்தியன் தன் மனைவியோடும் தவவிமானத்தில் மதுரையை அடைந்தனன் என்பதாம். அகத்தியர வான் வழிச் செல்லும் தவ ஆற்றலுடையராதலின் அருந்தவ விமானத்திடை புகுந்தனன் எனப் பட்டார். தவ ஆற்றல், தவ விமானமாக உருவகிக்கப்பட்டதென்க. உணர்ந்தனன், முகிழ்த்தனன், புகுத்தனன், எழுந்தனன் என்பன முற்றெச்சங்கள்.*

அகத்தியன் இறைவனையும் இறைவியையும் வணங்கல்

16. இயங்கு மாதவத் தேரினும் பன்னியோ டிழிந்து
புயங்க னாலயம் புகுந்துநாற் புயம்புடை கிளைத்துத்
தயங்கு செம்பவ ளாசலந் தன்னையு மதன்பால்
வயங்கு மிந்திர நீலமால் வரையையும் பணியா.

தெளிவுரை : *இயங்குதலையுடைய பெரிய தவமாகிய தேரினின் றும் மனைவியோடும இறங்கி சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயி லுட் புகுந்து மருங்கில் நான்கு திருத் தோள்கள் கிளைத்து விளங்கும் சிவந்த பவளமலையை ஒத்த இறைவனையும், அதன் மருங்கில் விளங் கும் பெரிய இந்திர நீல மலையை ஒத்த அம்மையையும் வணங்கி,*

விளக்கவுரை : *வான் வழியே மதுரையை அடைந்த அகத்தியன் இறைவன் திருக்கோயிலினுட புகுந்து இறைவனையும் இறைவியை யும் வணங்கலானான் என்பதாம். மாதவத் தேரினும்-பெரிய தவமாகிய தேரினின்றும். புயங்கன் - சிவபெருமான்; புயங்கம்- பாம்பு. இறை வன் பாம்பணிந்தோனாதலின் இப்பெயர் பெற்றனன் என்க. பவள மலை இறைவனையும், இந்திர நீலமலை இறைவனருகில் வீற்றிருக்கும் இறைவியையும் குறிக்கும். இறைவன் செம்மேனியனாதலின் பவள மலையும் இறைவி கரியளாதலின் நீல மலையும் உவமைகளாயின. சேக்கிழாரும் இறைவியையும் இறைவனையும், 'மரகதக் கொடியுடன் விளங்கும் தெள்ளுபேரொளிப் பவள வேற்பு' எனக் குறித்திருத்தலும கருதற்பாற்று.*

அப்போது நக்கீரனும் வழக்கப்படி இறைவனை வணங்க வருதல்

17. பெருகு மன்புளந் துளும்பமெய் யானந்தம் பெருக
அருகி ருந்தனன் றவயிற் கீரனு மம்பொன்
முருக விழ்ந்ததா மரைபடிந் திறைவனை முன்போல்
உருகு மன்பினு லிறைஞ்சுவா னெல்லைவந் தடைந்தான்.

தெளிவுரை : *சுரந்து பெருகும் அன்பானது உள்ளம் நிறைந்து ததும்புவதால், சிவானந்தம் பெருக அகத்தியன் அருகில் இருந்தனன்: நககீரனும் மணம் விரிந்த அழகிய பொற்றாமரையிற் படிந்து முன் போலவே உருகுகின்ற அன்பினால் இறைவனை வணங்குதற் பொருட்டு வந்து சேர்ந்தனன்.*

விளக்கவுரை : அகத்தியன் இறைவனைச் சிவானந்தம் பெருக வணங்கியிருக்குங்கால, நக்கீரன் வழக்கப்படி பொற்றாமரையில் மூழ்கி, உள்ளன்புடன இறைவனைத் துதித்து வணங்க வந்தனன் என்பதாம். ஆவயின் - அவ்விடத்தில்; சுட்டு நீண்டது. இறைஞ்சுவான் - 'வான்' ஈறறு எதிரகால வினையெச்சம். அன்பு பெருகப் பெருக உள்ளம் உருகுதலும். ஆனநதம் தோன்றுதலும் இயல்பாதலின், அகத்தியன் 'பெருகு மன்புளம் துளும்ப மெய்யானந்தம் பெருக' இருந்தனன என்றார.

இறைவன் அகத்தியனைக் கீரனுக்கு இலக்கணம் கற்பிக்கப் பணித்தல்

18. இருந்த மாதவச் செல்வனை யெதிர்வர நோக்கி
அருந்த வாவிவற் கியற்றமி ழமைந்தில வெம்பாற்
றெரிந்த நீயதை யரிறபத் தெருட்டெனப் பிணியும
மருந்து மாகிய பெருந்தகை செய்யவாய் மலர்ந்தான்.

தெளிவுரை : அருகில இருந்த பெரிய தவமாகிய செல்வத்தினையுடைய அகத்திய முனிவனைத் திருமுன் வருமாறு கடைக்கண் சாத்தி, 'அரிய தவச் செல்வ! இந்நக்கீரனுக்குத் தமிழிலக்கணம் நிரம்பிற்றில, எம்மிடத்துக கேட்டுத தெரிந்த நீ அவ்விலக்கணத்தைக் குறறம நீங்க இவற்கு விளக்குக' என்று பிணியும் மருந்துமாகிய சோமசுந்தரக கடவுள் செவ்விய திருவாய் மலர்ந்தருளினன்.

விளக்கவுரை : இறைவன், அகத்திய முனிவனைப் பார்த்து நக்கீரனுக்குத் தாமிடம் கேட்டுத தெரிந்த இலக்கணததைக் குறறமற விளக்குமாறு பணித்தான் என்பதாம். இறைவன் தனது ஆணையாகிய வேதாகமங்களின் வழி நில்லாத உயிர்களுக்குத் தணடனை புரிந்தும், அவ்வாறு நிற்போர்க்குத திருவருள் புரிந்தும் விளங்குகின்றனாதலால், 'பிணியும் மருந்துமாகிய பெருந்தகை' என்றார். இறைவன் இவவியல்பினன் என்பது கோபப் பிரசாதம் என்னும் நூலாலும் அறியலாகுமென்க. அரில் தப - குறறம் நீங்க. தப, தபு பகுதி. பெருந்தகை- பண்புத தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. தெருட்டு - தெருள என்பதன் பிறவினை

அகத்தியன் நக்கீரனுக்கு இலக்கணம் அறிவுறுத்தல்

19. வெள்ளை மாமதிப் பிளவணி வேணியங் கருணை
வள்ள லார்பணி சிரத்தினு மனத்தினுந் தாங்கிப்
பள்ள மேழையும் பருகினோன் பணியுநக் கீரன்
உள்ள மாசற வியாகர ணத்தினை யுரைக்கும்.

தெளிவுரை : வெண்மையாகிய பெருமை பொருந்திய பிறைமதியை அணிந்த சடையையுடைய அழகிய அருள் வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுள் கட்டளையை முடிவிலும் மனத்திலும் தாங்கிக் கடல் ஏழையுங் குடித்த குறுமுனிவன், தன்னை வணங்கிய நக்கீரனது உள்ளததிலுள்ள அறியாமை நீங்க இலக்கணத்தை அறிவுறுத்தலானான்.

விளக்கவுரை : அகத்தியன் இறைவன் கட்டளையின்படி, தன்னை வணங்கிய நக்கீரனுக்கு இலக்கணத்தை அறிவுறுத்தலானன் என்பதாம். பள்ளம் - கடல். வியாகரணம் - இலக்கணம்.

அகத்தியன் கீரனுக்கு முதனூலை முறைப்படி விளக்குதல்

20. இருவ கைப்புற வுரைதழீஇ யெழுமத மொடுநாற்
பொருளோ டும்புணர்ந் தையிரு குற்றமும் போக்கி
ஒருவி லையிரண் டழகொடு முத்தியெண் ணன்கும்
மருவு மாதிநூ லினைத்தொகை வகைவிரி முறையால்

தெளிவுரை : பொதுவுஞ் சிறப்புமாகிய இருவகைப் புறவுரைகளையும் முன்னர்ப் பொருந்தி, உடன் படல் முதலிய எழுவகை மதங்களோடும், அற முதலிய நான்கு பொருளோடும் கூடி, குன்றக்கூறல் முதலிய பத்துக் குற்றங்களையும் அகற்றி, நீங்குதல் இல்லாத சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகோடும் முப்பத்திரண்டு உததியும் பொருந்தும் முதனூலினை தொகையும் வகையும் விரியுமாகிய முறையினால்,

விளக்கவுரை : இருவகைப் புறவுரை, எழுவகை மதம், நாற் பொருள், பத்துக குற்றம், பதது அழகு, முப்பததிரணடு உத்தி ஆகியவை பொருநதிய முதனூலினைத தொகைவகை விரியாகிய முறையினால் அகத்தியன் கீரனுககு விளக்கினன் என்பதாம். புறவுரை - பாயிரம். இருவகைப் பாயிரம் முதலியவற்றை நன்னூல் பொதுப் பாயிரத்துள் கணடு கொள்க புறவுரை - நூல் கருதிய பொருளலலாதவை ; நூலின் புறததே சேரககப்படுவது. ஒருவில் - நீங்குதலில்லாத. ஆதி நூல் - முதனூல், முதல்வன் அருளிச செய்த நூல்.

அகத்தியன் முதனூலை உரை வகைகளால் விளக்குதல்

21. கருத்துக் கண்ணழி வாதிய காண்டிகை யானும்
விருத்தி யானுநூற் கிடைப்பொரு டுளக்கற விளக்கித்
தெரித்து ரைத்தன னுரைத்திடு திறங்கண்டு நூலின்
அருத்த மேவடி வாகிய வாதியா சிரியன்.

தெளிவுரை : கருத்துரையும் பதவுரையும் முதலிய காண்டிகையுரையானும் விருத்தி யுரையானும் அயமுத நூலின் உட்கிடைப் பொருளை ஐயமற விளக்கித் தெருட்டிக் கூறினன் ; அவன் கூறிய வன்மையைப் பாரத்து அந்நூலின் பொருளே திருவுருவமாகிய முதற் குரவனுகிய சோமசுநதரக் கடவுள்.

விளக்கவுரை : அகத்தியன் முதனூற் பொருளைக் காண்டிகை யுரையானும் விருத்தியுரையானும் நக்கீரனுக்குத் தெளிவுற விளக்கினன். அவனது ஆற்றலை யுணர்ந்த இறைவன் கூறலானன் என்பதாம். கருத்து, பதவுரை, எடுத்துக்காட்டு, வினவிடை என்னும் ஐந்தினையுமுடையது காண்டிகை யுரையாகும். பாடம், கருத்து, சொல்

வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினாவிடை விசேடம், விரிவு அதிகாரம், துணிவு, பயன், மேற்கோள் ஆகிய பதினான்கு உறுப்புக்களையுடையது விருத்தியுரையாகும். இவ்விருவகை உரையானும் முதனூலை நக்கீரனுக்கு அகத்தியன் விளக்கினான் என்க.

இறைவன் அகத்தியனுக்கு இருப்பிடம் செல்ல விடையளித்தல்

22. தருக்கு மின்பமுங் கருணையுந் தழையமா தவனைத்
திருக்க ரங்களான் மகிழ்ச்சியுட் டிளைத்திடத் தடவிப்
பெருக்க வேண்டிய பேறெலாம் பீடுற நல்கி
இருக்கை யிற்செல விடுத்தன னாலவா யிறைவன்.

தெளிவுரை : *களிப்பும் இன்பமும் அருளும் பெருக தவப் பெரியானாகிய இவ்வகத்திய முனிவனை அவன் மகிழ்ச்சிக் கடலுள் திளைக்க, தனது திருக்கைகளாலே தடவி, அவன் பெற வேண்டிய பயன் அனைத்தையும் நிரம்ப, சிறக்கக் கொடுத்தருளி, அவன் இருக்கையிற் செல்ல விடுத்தருளினான், திருவாலவாயின்கண் எழுந்தருளிய இறைவன்.*

விளக்கவுரை : *இறைவன், மாதவத்தோனாகிய அகத்தியன் பெறத்தகு பயன் அனைத்தையும் அருள் செய்து அவன் இருப்பிடம் செல்ல விடையளித்தான் என்பதாம். தருக்கு - களிப்பு. இருக்கை - தொழிலாகு பெயர்.*

அகத்தியன் சென்றபின் இறைவி இறைவனைக் கேட்டது

23. **பொன்ன னாளொடுங் குறுமுனி விடைகொடு போன
பின்னை யாருயிர்க் கிழத்திதன் பிரானைநேர் நோக்கி
என்னை நீயிவற் குணர்த்திடா தித்தவப் பொதியின்
மன்ன னாலுணர்த் தியதென மதுரைநா யகனும்.**

தெளிவுரை : *பொன்னை யொத்த உலோபாமுத்திரை யோடுங் குறுமுனி விடைபெற்றுப் போன பின்னர், அரிய உயிர் போன்ற பிராட்டியார் தன் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுளை எதிரே பார்த்து, 'இந் நக்கீரனுக்கு நீ இலக்கணம் அறிவித்தருளாது இத்தவமுடைய பொதிய மலைத் தலைவனாகிய அகத்தியனால் உணர்த்திய காரணம் என்" என்று வினவ மதுரைப் பெருமானும்,*

விளக்கவுரை : *அகத்தியன் உலோபாமுத்திரையோடும் இறைவனிடம் விடை பெற்றுச் சென்ற பின், இறைவி இறைவனை நோக்கி, 'நக்கிரனுக்கு நீ இலக்கணம் அறிவித்தருளாமல் அம் முனிவனைக் கொண்டு உணர்த்திய காரணம் யாது? எனக் கேட்டாள் என்பதாம். பொன் - இலக்குமி. பொன் அன்னாள் - உலோபாமுத்திரை. பொதியின் மன்னன் - அகத்தியன்.*

நூல் கேட்டற்குரியோர் இவரெனக் கூறல்

24. தன்னை நித்தலும் வழிபடுந் தகுதியோர் சாலப்
பொன்ன ளிப்பவர் தொடுத்தமற் சரமிலாப் புனிதர்
சொன்ன சொற்கட வாதவர் துகடவிர் நெஞ்சத்
தின்ன வர்க்கு நூல் கொளுத்துவ தறனென விசைப்ப

தெளிவுரை : *தன்னை நாள்தோறும் வழிபடும் தன்மையுடையயோரும், நிறையப் பொருள் கொடுப்போரும், அழுக்காறு அடைதலில்லாத மனத்தூய்மை உடையவரும், சொன்ன சொல்லைக் கடவாதவரும் ஆகிய குற்றம நீங்கிய உள்ளமுடைய இவர் போல்வாருக்கு நூல் போதிப்பது அறமென்று கூறுவர் அறிந்தோர்.*

விளக்கவுரை : *நூல் கேட்டற்குரியோர் இன்னின்னர் என்று இறைவன் இறைவிக்குக் கூறியருளினர் என்பதாம். மற்சரம் - அழுக்காறு; மாற்சரியம் என்றும் கூறுவர். கொளுத்துவது - போதிப்பது.*

இறைவன் இறைவியின் கவலையைப் போக்கல்

25. இவனெ டுத்தமற் சரத்தினுல் யாமுணர்த் தாதத்
தவனை விட்டுணர்த் தினமெனச் சாற்றினுன் கேட்டுக்
கவலை விட்டக மகிழ்ச்சிகொண் டிருந்தனள் கதிர்கால்
நவம ணிக்கலம் பூத்ததோர் கொடிபுரை நங்கை

தெளிவுரை : *இவன் கொண்ட அழுக்காற்றினுல் யாம் அறிவுறுத்தாமல் அம் முனிவனை விட்டு அறிவித்தோம் என்று கூறியருளினுன். அதனைக் கேட்டு ஐயமொழிந்து ஒளிவீசும் நவமணிகள் பதித்த அணிகளைப் பூத்ததாகிய ஒரு கொடி போன்ற பிராட்டி மனமகிழ்ச்சி கொண்டு இருந்தனள்.*

விளக்கவுரை : *நக்கீரனது அழுக்காற்றினுல் அகத்திய முனிவனைக் கொண்டு அவனுக்கு இலக்கணம் அறிவிக்கலாயிற்று என்று இறைவன் கூறவே, இறைவியினது கவலை நீங்கலாயிற்று என்பதாம். கவலை: இறைவன் எல்லா முணர்ந்த பெருமானுக இருக்க, நக்கீரனுக்கு அகத்தியனைக் கொண்டு இலக்கண முணர்ததக் காரணம் இன்னது என இறைவி அறியக் கூடாமையால் ஏற்பட்டது கவலையாகும். 'கதிர் கால் நவமணிக்கலம் பூத்ததோர் கொடி புரைநங்கை' - இல்பொருளுவமை. புரை - உவமவுருபு.*

இலக்கணம் கற்ற கீரன் தன் செயலை எண்ணி வருந்துதல்

26. கற்ற கீரனும் பின்புதான் முன்செய்த கவிகண்
முற்று மாய்ந்துசொல் வழுக்களும் வழாநிலை முடிபும்
உற்று நோக்கினு னறிவின்றி முழுதொருங் குணர்ந்தோன்
சொற்ற பாடலிற் பொருள்வழுச் சொல்லினே னென்னு.

தெளிவுரை : *அகத்தியர் பால் இலக்கணங் கற்ற நக்கீரனும் பின்னர், தான் முன்னே செய்த கவிகள் அனைத்தையும் ஆராய்ந்து வழுஉச் சொல் முடிபும், வழாநிலை முடிபும் ஆகிய இவற்றைச் சிந்தித்துப் பார்த்து, 'முற்றும் ஒரு சேர உணர்ந்த இறைவன் கூறியருளிய பாசுரத்தில் அறிவில்லாமையினால் பொருட் குற்றஞ் சொல்லினேன்' என்று,*

விளக்கவுரை : *நக்கீரன் தான் கற்ற இலக்கணத்திற் கேற்ப வழுஉச் சொல் முதலியவற்றை ஆராய்ந்து, முழுதும் உணர்ந்த இறைவன் கவிக்குக் குற்றம் கூறிய தன் செயலை எண்ணி வருந்தலானான் என்பதாம். சொலவழுக்கள் - திணைவழு, பாலவழு, இடவழு, காலவழு, வினாவழு, விடைவழு, மரபுவழு என ஏழு வகைப்படும். மற்றும் அகத்திணை வழுவும் வழுவுமாகிய பொருளிலக்கண வழுக்களும் வழுவமைதிகளும் கொள்ளப்படும்.*

இறைவன் பாடலுக்குக் குற்றம் கூறியதை எண்ணி நக்கீரன் வருந்துதல்

27. மறையி னந்தமுந் தொடாததா ணிலந்தொட வந்த
நிறைப ரஞ்சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன்
சிறிய கேள்வியோர் கழியவுஞ் செருக்குடை யோரென்
றறிஞர் கூறிய பழஞ்சொலென் னளவிற்றே யம்ம.

தெளிவுரை : *மறை முடியும் தீண்டுதற்கரிய திருவடிகளை நிலமகள் தீண்டுமாறு நடந்துவந்த எங்கும் நிறைந்த பரஞ்சோதியாகிய பாசமற்ற கூத்தப் பிரானுக்குப் பிழை செய்தேன். ஆகலின் நிரம்பாத கல்வியுடையோர் மிகவும் இறுமாப்புடையவராய இருப்பர் என்று அறிவுடையோர் கூறிய பழமொழி என் அளவினதாயது.*

விளக்கவுரை : *'இறைவனுக்குப் பிழை செய்தேன்; நிறைந்த அறிவிலார் செருக் குற்றிருப்பர் என்னும் பழமொழி என்பால் மெய்யாயிற்று' என்று எண்ணி நக்கீரன் வருந்தலாயினன் என்பதாம். மறையின் அந்தம் - உபநிடதம்; வேதாந்தம் நிராமயன் - பாசநோய் இல்லாதவன், ஆமயம் - நோய். நிறைகுடம் நீர் தளும்பலில் என்பது பழமொழி. எனவே குறைகுடம் நீர தளும்புதல் சொல்லாமலே பெறப்பட்டது. எனவே யான் குறைகுடத்திற்கு உதாரணமாகி, இறைவனுக்குப் பிழை செய்தேன் என்று எண்ணி நக்கீரன் வருந்தினான் என்க. அம்ம - இடைச் சொல்.*

நக்கீரன் துன்பத்துள் ஆழ்தல்

28. அட்ட மூர்த்திதன் றிருவடிக் கடியனேன் பிழைக்கப்
பட்ட தீங்கினு லெனையவ னுதல்விழிப் படுதீச்
சுட்ட தன்றியென் னெஞ்சமுஞ் சுடுவதே யென்றென்
றுட்ட தும்பிய விழுமநோ யுவரியு ளாழ்ந்தான்.

தெளிவுரை : *அட்ட மூர்த்தியாகிய இறைவன் திருவடிகட்கு அடியேன் பிழை செய்ய நேர்ந்த தீங்கினால் அடியேனை அவ்விறைவினது*

நெற்றி விழியில் உண்டாகிய நெருப்புச் சுட்டதே யல்லாமல் என் உள்ளமும் என்னைச் சுடுகின்றதே என்று எண்ணி எண்ணி உள்ளே நிரம்பித்ததும்பும் துன்ப நோயென்னுங் கடலுள் ஆழ்ந்தான்.

விளக்கவுரை : 'இறைவன் திருவடிகளுக்குப் பிழை செய்தமையால் அவன் நெற்றிவிழி நெருப்பால் சுடப்பட்டேன் ; அன்றியும் எனது உள்ளமும் என்னைச் சுடுகின்றது' என்று எண்ணி நக்கீரன் வருந்தினன் என்பதாம். அட்டமூர்த்தி - எட்டு வடிவாகிய இறைவன். வடிவம் எட்டு: நிலம், நீர் தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன் உயிர் என்பன. நெஞ்சமும் சுடுவதே - உம்மை இறந்தது தழுவிய எச்சப் பொருளில் வந்தது. உள் ததும்பிய விழுமநோய - தன் மனத்தில் பொங்கி எழுந்த கவலையாகிய வருத்தம்.

இறைவனருட் செயலை எண்ணி நக்கீரன் மகிழ்தல்

29. மகவை யீன்றதாய் கைத்திடு மருந்துவாய் மடுத்துப்
பகைப டும்பிணி யகற்றிடும் பான்மைபோ லென்னை
இகலி ழைத்தறி வுறுத்தினற் கேழையேன் செய்யத்
தகுவ தியாதென வரம்பிலா மகிழ்ச்சியுட் டாழ்ந்தான்.

தெளிவுரை : பிள்ளையைப் பெற்ற தாய கசக்கும் மருந்தினை அதன் வாயில் ஊட்டி பகைத்தலைப பொருந்திய பிணியை நீக்குந் தன்மைபோல என்மேற் சினங்கொண்டு அறிவுறுத்திய அவ்விறைவனுக்கு அறிவிலியாகிய என்னால் செய்யத்தக்க கைம்மாறு யாதென்று எல்லையில்லாத மகிழ்ச்சிக் கடலுள் அழுந்தினன்.

விளக்கவுரை : குழந்தைக்குக் கைக்கும் மருந்தினை ஊட்டிப் பிணி நீக்கும் தாய்போல, யான் செய்த பிழை நீங்க என்னைச் சினந்து அறிவுறுத்திய இறைவன் திருவருள் என்னே என்று எண்ணிய நக்கீரன மகிழ்ச்சியுள் மூழ்கினன் என்பதாம். மகவு மருந்தினை உண்ணாது, தாய் அதனை வலிதின் உண்பித்துப் பிணியகற்றுவாள் அங்ஙனமே தன் திறத்து இறைவன் செய்த கருணையை வியந்தான் என்க. நக்கீரன் முதலில் தன் பிழையை எண்ணிக் கவலையுள் ஆழ்ந்தானேனும் பின்னர் இறைவன் தனக்குப் புரிந்த அருளை எண்ணி இன்புற்றான் என்க.

நக்கீரன் தான்கற்ற இலக்கணத்தைப் பிறர்க்கும் அறிவுறுத்தி வாழ்தல்

30 மாத வன்றனக் காலவாய் மன்னவ னருளாற்
போத கஞ்செய்த நூலினைப் புலவரே னோர்க்கும்
ஆத ரஞ்செயக் கொளுத்தியிட் டிருந்தன னமலன்
பாத பங்கய முழ்கிய பத்திமைக் கீரன்.

தெளிவுரை : நின் மலனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடித் தாமரையில் அழுந்திய அன்பையுடைய நக்கீரன், குறுமுனிவனு

னவன் தனக்கு அவ்விறைவனருளால் போதித்த இலக்கண நூலை எனைய புலவர்களுக்கும் அன்பு மிக அறிவுறுத்தி யிருந்தான்.

விளக்கவுரை : நக்கீரன் சோமசுந்தரக் கடவுளின் அருளால் அகத்தியன் மூலமாய்க் கற்ற இலக்கண நூலைப் புலவர்களுக்கும் அறிவுறுத்தி வாழ்ந்து வந்தான் என்பதாம். மாதவன் - அகத்தியன். ஆலவாய மன்னன் - சோமசுந்தர பாண்டியனாக யிருந்த அரசு புரிந்த இறைவன்.

பயிற்சி வினாக்கள்

1. நக்கீரன் பொற்றாமரைப் பொய்கையின் பெருமையைப் பற்றி எண்ணிய தென்ன ?
2. அடியார் சேம வைப்பு - எது ?
3. பொற்றாமரைப் பொய்கையினின்று, கரை யேற்றப்பட்ட நக்கீரன் இறைவனை எங்ஙனம் வழிபட்டு வரலானான் ?
4. கீரனது வழிபாட்டுக்கு இரங்கிய இறைவன் இன்னருள் செய்யக் கருதியது யாது ?
5. 'புங்கவா நினது சங்கைக் குத்தரம் புகலவல்லார் எங்குளா ரேனு மென்னெஞ்சு திப்பது ஒன்று இசைப்பேன் ' - இது யார் கூற்று ? புங்கவன் சங்கையாது? இசைத்த தென்ன?
6. 'நித்தனே யடியேன் என்று நின்னடி காண்பேன்' - இடஞ் சுட்டுக.
7. அகத்தியன் இறைவன் பணித்தவாறு நக்கீரனுக்கு இலக் கணம் போதித்தவற்றை விளக்கி வரைக.
8. உமையம்மையார் இறைவனிடம், ஐயுற்றுக் கேட்ட தென்ன ? இறைவன் கூறிய விடை யாது ?
10. நூல் கற்பித்தற் குரியார் யாவர் ?
11. அகத்தியனிடம் இலக்கணம் கற்ற கீரன் துன்பமும் இன்பமும் கொண்டு கூறிய தென்ன ?
12. 'அறிஞர் கூறிய பழஞ்சொல் என்னளவிற்றே' - பழஞ் சொல் யாது ? சந்தர்ப்பம் தோன்ற விளக்குக.
13. மகவை யீன்றதாய் கைத்திடு மருந்து வாய் மடுத்துப் பகைபடும் பிணி யகற்றிடும் பான்மைபோல் - உவமை யைப் பொருளொடு பொருத்தி விளக்குக.

7. சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்

கதைச் சுருக்கம்

சங்கப் புலவர்கள் இறைவனிடம் செய்து கொண்ட விண்ணப்பம் : *கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தெண்மரும் வேவ்வேறு தமிழ்ப் பாடல் செய்து தம்மில் செருக்குற்றுத் தங்களைத் தாங்களே நன்கு மதித்து மாறுபாடுகொணடனர். பின்னர் தங்கள் பெருமை சிறுமைகளை அளக்க வல்ல முதனூலாசிரியராகிய சோமசுந்தரக் கடவுளின் திரு முன் படைந்து வணங்கி, 'எம்பெருமானே ! அடியேங்கள் தொடுதத பாடல்களுள்ளே நன்றும் தீதும் ஆய்ந்து அவற்றின் வேறுபாடு காட்டி எம்முள் எழுந்த இறுமாப்பினைப் போக்கி எமது ஐயத்தைத் தீர்த் தருளுக' என்று விண்ணப்பம் செய்தனர்.*

இறைவன் புலவராகி வந்து சங்கப் புலவர்களிடம் கூறியன : *சோம சுந்தரக் கடவுள் மூல லிங்கததினின்று ஒரு புலவராய்த் தோன்றி 'புலவர்களே, இந்நகரத்தில் தனபதி என்ற வணிகன் ஒருவனுள் ளான். அவன் மனைவி குணசாலினி. அவர்கள் செய்தவப் பேற்றினால் வெள்ளையறிவினரைத் தழுவிய அறியாமையாகிய இருளை அகற்றும் ஞாயிறுபோல, ஒரு புதல்வன் தோன்றியுள்ளான் ; அவன் முருகக் கடவுளின் அவதாரமாவான். அழகில் மன்மதனை ஒப்பவன், ஆனால் ஊமையனே. அவனை நீங்கள் அழைத்துச் சென்று அவனெதிரே உங்கள் பாடல்களைச் சொல்லுங்கள்; அவன் புத்திக்கிசைந்த பாடல் எதுவோ, அதுவே யாவராலும் நன்கு மதிக்கப்படும் பாடலாகும் என்று திருவாய் மலர்ந்தருளினார்.*

அது கேட்ட புலவர்கள், 'எம்பெருமானே. அவன் ஊமையானால், அடியேங்களுடைய பாடல்களைக் கேட்டு, நல்லன என்பதும் தீயன என் பதும் பகுத்தறிந்து தெரிவிப்பது எவ்வாறியலும் ?' என்றனர். அதற்குச் சிவபெருமான், அவ்வூமைப் பிள்ளை தனக்கு இசையச் சொல்லாழமும் பொருளாழமும கண்டானாயின் முடியசைத்துத் தோள் புளகித்து மனம் மிகவும் மகிழ்வான்; உங்களுக்குள் உண்டான கலகமும தீர்ந்து விடும்'' என்றருளித் திருக்கோயிலினுட் சென் றருளினார்.

புலவர்கள் வணிக மைந்தனை அழைத்து வந்து பாடல்களைக் கேட் பித்தல் : *பின்னர் புலவர்கள் யாவரும் வணிக மைந்தனை அன்புடன் அழைத்து வந்து தமது கழகத்தின்கண் இருத்தி வெண்மலராலும் வெண்சாந்தினாலும் அருச்சிதது வணங்கிக் கீழிருந்து தங்கள் தங்கள் பாடலகளைச் சொன்னார்கள்*

வணிக மைந்தன் செயல் : *சங்கப் புலவர்கள் பாடல்களைக் கேட்டு வணிக மைந்தன் சிலருடைய சொல்லமைதியை மகிழ்ந்தான். சில ருடைய பொருளமைதியை மகிழ்ந்தான் : சிலருடைய சொல்லமை தியை இகழ்ந்தான் ; சிலருடைய பொருளமைதியை இகழ்ந்தான் :*

சிலருடைய சொல்லின்பத்தையும் பொருளின்பத்தையும் ஒன்றாகப் புகழ்ந்தான். சிலருடைய சொல்லாற்றலையும் பொருளாற்றலையும் ஆராய்ந்தறிந்து மகிழ்ந்தான். இவ்வாறெல்லாம் வணிக மைந்தனாகிய ஊமன் அப்புலவர்கள பாடல்கள் அனைத்தையும் உளத்திற்கொண்டு அவற்றின் இயல்புகளைத் தன் மெய்ப்பாட்டினாலேயே மகிழ்ந்தும் இகழ்ந்தும் புகழ்ந்தும் புலப்படுத்தினான்.

மூவர் பாடலுக்கு முடி துளக்கல் : *இறுதியில் நக்கீரன், கபிலன், பரணன் என்னும் மூவருடைய பாடல்களை வணிக மைந்தன் கேட்ட பொழுது நுண்ணிய சொல்தோறும் பொருள்தோறும் நுழைந்து அவற்றின் இனிய சுவையினை அருந்தி உடல் பூரித்தான் ; புலனுணர் வழிந்து சுவை வடிவாயத் திகழ்ந்தான் : மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் வார்ந்து சிரமசைத்துப் பெருமகிழ்வுற்றான்.*

சங்கப் புலவர் கலகம் தீர்ந்து நண்பராதல் : *இவ்வாறு வணிக மைந்தன் தமது பாடல்களின் சொல்லாழத்தையும் பொருளாழத்தையும் நாவினையே தராசாகக் கொண்டு, நவரத்தினங்களின் தாரதரங்களை அறிந்து உணர்த்துபவன் போலக் காட்டவே புலவர்கள் தமக்குள் தோன்றிய கலகத்தை விடுத்து நண்பராயினர். நக்கீரன், கபிலன், பரணன் ஆகியோர் பாடல்களை உலகில் சிறந்தோங்கின. சங்கப் புலவர் நூலாராய்ச்சி செய்து அளவளாவி கலகம் தீர்ந்து வாழலாயினர்.*

சங்கத்தார் கலகம் தீர்த்த விளையாடல்

1. காமனைப் பொடியாக் கண்ட கண்ணுத றென்னூல் கீர
நாமநற் புலவற் கீந்த நலமிது பொலம்பூங் கொன்றைத்
தாமனச் சங்கத் துள்ளார் தலைதடு மாற்றந் தேற
ஊமனைக் கொண்டு பாட லுணர்த்திய வொழுக்கஞ் சொல்வாம்

தெளிவுரை : *மன்மதனை நீறாக்கிய நெற்றிக் கண்ணையுடைய இறைவன், தமிழிலக்கணத்தை கீரனென்னும் பெயரையுடைய நல்ல புலவனுக்கு உபதேசித்த திருவிளையாடல் இது, பொன் போன்ற கொன்றை மலர மாலையை யணிந்த அப்பெருமான் அச்சங்கப் புலவர்கள் தததம் மயக்கத்தினின்றும் தெளிய மூங்கை ஒருவனால் பாடல்களின் பெருமை சிறுமையை அப்புலவர்களுக்கு அறிவித்தருளிய திருவிளையாடலை இனிக் கூறுவாம்.*

விளக்கவுரை : *இறைவன நக்கீரனுக்குத தமிழிலக்கணத்தைக் கற்பிதத திருவிளையாடலுக்குப் பின் சங்கப் புலவரிடையே தோன்றிய மயக்கத்தை மூங்கை ஒருவனால் போக்கிய திருவிளையாடல் இங்குக் கூறப்படுகிறது என்பதாம். தென் நூல் - அழகிய பொருளிலக்கண நூல். சங்கத்துள்ளார் - சங்கப் புலவர்கள். ஊமன் - ஊமைப்பிள்ளை. கொன்றைத்தாமன் - சிவபெருமான். தாமம்-மாலை. ஒழுக்கம்-இங்குத் திருவிளையாடலைக் குறிததது.*

சங்கப் புலவர்கள் தம்மில் மாறுபட்டு இறைவனையடைதல்

2. அந்தமில் கேள்வி யோரெண் ணருவரும் வேறு வேறு
செந்தமிழ் செய்து தம்மிற் செருக்குறு பெருமை கூறித்
தந்தமில் மாறுய்த் தத்தந் தராதர மளக்க வல்ல
முந்தைநூன் மொழிந்த வாசான முன்னர்வந் தெய்தி னாரே.

தெளிவுரை : *அளவிறந்த புலமை சான்ற நாற்பத்தெட்டுப் புலவர்களும் தனித்தனியாகச் செவ்விய தமிழ்ப் பாக்கள் செய்து தங்களுள் ஒருக்கு மிகக பெருமை கூறித தம்முள்ளே ஒருவர்க்கொருவர் பகையாய்த் தததம் பெருமை சிறுமையை அளநதறிய வலல முன்னூல் மொழிந்தருளிய குரவனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருமுன் வந்து சேர்நதனர்.*

விளக்கவுரை : *சங்கப் புலவர் நாற்பதெதெணமரும் தனித்தனியே தமிழ்ப்பாக்களை இயற்றித் தம்முடையதே சிறந்ததெனச் செருக்குற்றுத் தமக்குள் பகைமை கொணடனர். பின்னர்த் தம்மை அளந்தறியவல்ல இறைவன் முன் அனைவரும் வந்து சேர்நதனர் என்பதாம். சங்கப் புலவர் நாறபத்தெண்மரும் ஒத்த அறிவும் சிறந்த செயயுட்களியற்றும வனமையுமுடையோராதலின் அவரவர் தத்தம் பாடலகளைச் சிறப்பித்துக் கூறுங்கால் அவர்களுக்குள் பகைமை தோன்றலாயிற்றென்க. சங்கததார்க்கிடையே தோன்றிய பகைமையையும் தருக்கினையும் தீர்க்க வல்ல அறிவாற்றலுடையவர் வேறெவரும இல்லையாதலின 'முந்தை நூல் மொழிந்த ஆசான்' முன்னர் வந்தெய்தினர் என்க. தராதரம் - பெருமை சிறுமை ; தகுதி. செந்தமிழ் - செந்தமிழ்ப்பாக்கள் முநதை நூல - முதனூல். ஆசான் - ஆசிரியர், சோமசுநதரக் கடவுள், இறையனார்.*

சங்கத்தார் இறைவனை வேண்டுதல்

3. தொழுதன ரடிகள் யாங்க டொடுத்தவிப் பாட றம்முள்
விழுமிதுந் தீதுந் தூக்கி வேறுபா டளந்து காட்டிப்
பழுதறுத் தையந் தீரப் பணிக்கெனப் பணிந்தார் கேட்டு
முழுதொருங் குணர்ந்த வேத முதல்வனு முக்கண் மூர்த்தி

தெளிவுரை : *புலவர்கள் இறைவனை வணங்கி, 'இறைவ! யாங்கள் பாடிய இப்பாடல்களுள் வழுவில்லாததனையும் வழுவுள்ளதனையும் சீர்தூக்கி அவற்றின் பெருமை சிறுமைகளைத் தெரிந்து காட்டி, எம்முள் எழுந்த இறுமாப்பினைப் போக்கி, எமது ஐயுறவு நீங்குமாறு பணித்தருளக் கடவை' என்று வேண்டி மீண்டும் வணங்கினர். முற்றும் ஒரு சேர உணர்ந்தருளிய மறை முதல்வனாகிய அம்முக்கட் பெருமான் அதனைக் கேட்டருளி,*

விளக்கவுரை : *சங்கப் புலவர் சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தம் பாடல்களைச் சீர்தூக்கிப் பெருமை சிறுமைகளைக் காட்டித் தமது செருக்கொழிக்குமாறு வேண்டினர் என்பதாம். சங்கப் புலவர்கள் தம் இறுமாப்பு ஒழிய வேணடுமானல் மூதறிஞர் ஒருவர். இன்ன*

காரணத்தால் இப்பாடல் சிறப்புடையது; இது சிறப்பில்லது என்றும் ஒரு பாடலுக்கும் மற்றொரு பாடலுக்கும் இன்ன வேறுபாடுள்ளது என்றும் எடுத்துக் காட்ட வேண்டும். அங்ஙனம் குற்றமுள்ளவற்றைச் சுட்டி அவற்றைப் போக்க வேண்டும்; அவற்றில் தமக்குள்ள ஐயங்களையும் தீர்க்க வேண்டும். எனவே, இவற்றையெல்லாம் செய்யவல்லார் ஒருவருமில்லை யாதலால், இறைவனையணுகி இவ்வாறு வேண்டலாயினர் என்க. தொழுதனர் - முற்றெச்சம். பணிக்கென - பணிக்க என்னும் வியங்கோளின் ஈற்று அகரம் தொகுத்தல் விகாரம்.

இறைவன் புலவனாய்த் தோன்றிச் சங்கப்புலவர்க்கோர் செய்தி கூறல்

4. இருவருந் துருவ நீண்ட வெரியழற் றூணிற் றோன்றும்
உருவென வறியா னந்த வுண்மையா யுலகுக் கெல்லாங்
கருவென முளைத்த மூல விலிங்கத்து ணின்றுங் காண்டற்
கரியதோர் புலவ னாகித் தோன்றியொன் றருளிச் செய்வான்.

தெளிவுரை : *திருமாலும் பிரமனும் தேட எட்டாது நீண்ட தீப்பிழம்பினின்றும் தோன்றியருளிய திருவுருவம் போல, சச்சிதானந்த வடிவமாய் உலகத்திலுள்ள இலிங்கங்களுக்கெல்லாம் காரணமாய் முளைத்த மூல விலிங்கத்துள் நின்றும் காணுதற்கரிய ஒரு புலவனாகத் திருவுருக் கொண்டு வெளிப்பட்டு ஒரு செய்தி கூறியருளுவான்.*

விளக்கவுரை : *சங்கப்புலவர் வேண்டுகோளுக்கிணங்கிய சோமசுந்தரக் கடவுள், தமது திருவுருவமான மூல விலிங்கத்துள்ளிருந்தும் ஒரு புலவன் திருவுருக்கொண்டு வெளிப்பட்டு அவர்களுக்கு ஒரு செய்தி கூறத் தொடங்கினர் என்பதாம். இருவர்-திருமாலும பிரமனும். இறைவன் உண்மை அறிவு ஆனந்த வடிவனாயும் உலகுக்கெல்லாம் கருவாகவும் விளங்குபவன் என்று கூறியுள்ளது இங்குக் கருதத்தக்கது. உலகுக்கெல்லாம் கரு-உலகத்தோற்ற ஒடுக்கங்களுக்கெல்லாம் காரணம். உலகிலுள்ள சிவலிங்கங்களுக்கெல்லாம் பிறப்பிடமாதலின் மூல லிங்கம் எனப்பட்டதென்க.*

முருகன் வணிகன் குலத்தில் தோன்றியுள்ளான் எனல்

5. இம்மாநக ருள்ளானொரு வணிகன்றன பதியென்
தம்மாநிதிக் கிழவோன்மனை குணசாலினி யனையார்
தம்மாதவப் பொருட்டால்வெளிற் றறிவாளரைத் தழுவும்
பொய்ம்மாசற வினன்போலவ தரித்தானொரு புத்தேள்.

தெளிவுரை : *தனபதி என்னும் பெயருடையனாய் ஒரு வணிகன் இப்பெரிய நகரில் இருக்கின்றான். அப்பெரிய நிதிக்கிழவன் மனைவி குணசாலி என்பாள். அவர்கள் செய்த பெரிய தவம் காரணமாக வெள்ளறிவினரைத் தழுவிய நிலையுதல் இல்லாத அஞ்ஞானம் ஆகிய இருள் நீங்கச் சூரியன் தோன்றினாற்போல ஒப்பற்ற முருகக் கடவுள் அவதரித்தான்.*

விளக்கவுரை : சங்கப்புலவர்கள் முன்னே புலவராய்த் தோன்றிய இறைவன், 'புலவர்களே! இப்பெருநகரிலுள்ள தனபதி வணிகனுக்கும் குணசாலி என்பவளுக்கும் அவர்கள செய்தவப்பயனாய் ஒரு புதல்வன் தோன்றியுள்ளான்; அவன் முருகக் கடவுளின் அவதாரம்' என்று மேலும் கூறலானார் என்பதாம். வெளிறறறிவு-புல்லறிவு; மந்தபுத்தி. இனன்-சூரியன். பொய்ம்மாசு-நிலையில்லாத அஞ்ஞானம. ஒரு புததேள்-ஒப்பற்ற முருகக் கடவுள். தனபதி வணிகனை 'உருத்திரசன்மன்' என்று இறையனார் அகப் பொருளுரை கூறுகின்றது.

மூங்கைபாராட்டும் கவியே சிறந்ததெனக் கொள்ளுமாறு இறைவன் கூறுதல்

6. ஓயாவிறன் மதனுக்கிணை யொப்பானவ னூமச்
சேயாமவ னிடைநீருரை செய்யுட்கவி யெல்லாம்
போயாடுமி னவனயானது புந்திக்கிசைந் தானன்
றுயாவரு மதிக்குந்தமி ழதுவேயென வறைந்தான்.

தெளிவுரை : 'அவன் இடையீடுபடாத வெற்றியையுடைய மதவேளுக்கு இணையொத்தவன்; மூங்கைப் பிள்ளையாகிய அவனிடத்துச் சென்று நீவிர் பாடிய கவிகள் அனைத்தையுங் கூறுங்கள்; அவனது உள்ளத்திற்குப் பொருந்துமேல், அனைவரும சிறப்பாகக் கருதிப் பாராட்டும் கவி அதுவேயாகும்' என்று கூறியருளினான்.

விளக்கவுரை : புலவனாக வந்த இறைவன் புலவர்களைப் பார்த்து, 'அப்புதல்வன் மதவேளை ஒத்தவன்; மூங்கையாவான்; நீவிர் பாடிய கவிகளை அவனிடம் கூறுங்கள்; அவனது உள்ளத்திற்குப் பொருந்தும் கவிகளே சிறந்தன' என்று கூறினான் என்பதாம். விறல்-வெற்றி. ஊமச்சேய்-ஊமைப்பிள்ளை. ஆடுமின்-சொல்லுங்கள், ஏவற்பன்மை வினைமுற்று.

'ஊமன் கவிநலம் கூறவல்லனோ?' எனப் புலவர்கள் கேட்டல்

7. வன்றாண்மழ விடையாயவன் மணிவாணிக னூமன்
என்றாலவன் கேட்டெங்ஙன மிப்பாடலிற் கிடக்கும்
நன்றானவுந் தீதானவு நயந்தாய்ந்ததன் றன்மை
குன்றாவகை யறைவானென மன்றாடிய கூத்தன்.

தெளிவுரை : 'வலிய கால்களையுடைய இளமையாகிய இடபவூர்தியையுடையாய்! அவன் மணிகளின் குணங்குற்றங்களை ஆராயும் வணிகர் மரபினனும், ஊமனுமாகில், அவன் இபபாடலை விரும்பிக் கேட்டு இதிற்கிடக்கின்ற நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து அதன் தன்மையைக் குறைவின்றி எவ்வாறு கூறுவான்' என்று வினவ, வெள்ளியம்பலத்திலே திருக்கூத்தாடிய பெருமான்.

விளக்கவுரை : இறைவன் கூறியதைக் கேட்ட புலவர்கள், 'இரத்தின வியாபாரியும் ஊமனுமாயுள்ளவன் பாட்டின் தன்மையை ஆராய்ந்து சொல்லுவதெங்ஙனம்?' என்று ஐயுற்றவராய வினவலாயினர் என்பதாம். மணி வாணிகன்-இரத்தின வியாபாரி.

ஊமன் கவிநலம் தேரும் வகையை இறைவன் புலவர்க்குரைத்தல்

8. மல்லார்தடம் புயவாணிக மைந்தன்றனக் கிசையச்
சொல்லாழமும் பொருளாழமுங் கண்டான்முடி துளக்காக்
கல்லார்புயம் புளகித்துளங் களிதூங்குவன் கலகம்
எல்லாமகன் றிடுமுங்களுக் கென்றாலயஞ் சென்றான்.

தெளிவுரை : 'வலி நிறைந்த பெரிய தோளையுடைய அவ்வணிக மைந்தன் தனக்குப்பொருந்தச் சொல்லாழத்தையும் பொருளாழத்தையும் காணின், முடியை அசைத்து மலைபோன்ற தோள் புளகித்து உள்ளத்தின் கண் மிக மகிழ்வன்; உங்களுள் நேர்ந்த கலகம் அனைத்தும் நீங்கும்' என்று கூறியருளி திருக் கோயிலுட் சென்றருளினான்.

விளக்கவுரை : இறைவன் ஊமனைப்பற்றி ஐயுற்று வினவிய புலவர்களைப் பார்த்து, 'அவ்வணிக மைந்தனாகிய ஊமன் சிறந்த கவிகளைக் காணுங்கால் முடியையசைத்து உளம் புளகித்து மகிழ்வன; இதனால் உங்கள் கலகம் யாவும் நீங்கிவிடும்' என்று கூறித் திருக் கோயில் சென்றருளினான் என்பதாம். மல்-மற்போர்; வளமும் ஆம். சொல்லாழம் - பொருள் செறிந்த சொற்களையுடைத்தாயிருத்தல். பொருளாழம்-உள்ளுறை இறைச்சி முதலிய பொருள்கள் சிறந்து நிற்றல். கல்லார் புயம்: கல்-மலை. ஆர்-உவமையுருபு. துளக்கா-செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

புலவர்கள் தனபதி மகனை அழைத்துவந்து தம் கவிகளைக் கேட்பித்தல்

9. பின்பாவல ரெல்லாம்பெரு வணிகக்குல மணியை
அன்பாலழைத் தேகித்தம தவையத்திடை யிருத்தா
நன்பான்மலர் நறுஞ்சாந்துகொண் டருச்சித்தனர் நயந்தே
முன்பாலிருந் தருந்தீந்தமிழ் மொழிந்தாரவை கேளா.

தெளிவுரை : பின்பு புலவர் அனைவரும் பெரிய வணிகர் குல சிகாமணியை அன்போடு அழைத்துச் சென்று, தங்கள் கழகத்தின கண் இருத்தி, நல்ல வெண் மலரும நறிய சந்தனமுமாகிய இவற்றால் விரும்பி அருச்சித்து, முன்னர இருந்து அரிய இனிய தமிழ்க் கவிகளை மொழிந்தனர். அவற்றைக் கேட்டு,

விளக்கவுரை : சங்கப்புலவர் அனைவரும் இறைவனது ஆணையின்படி தனபதி வணிகன் மகனை அன்புடன் சங்கத்திற்கு அழைத்து வந்து உபசரித்துத தத்தம் கவிகளை கேட்பித்தனர் என்பதாம்.

இறையனுர களவியலுரையில், 'வெளியதுடீஇ, வெண்பூச்சூடி வெணசாந்தணிந்து,' என்றெல்லாம் கூறியதற்கேற்ப ஈண்டும், பான் மலர் நறுஞ்சாந்து கொண்டருச்சித்தனர் என்ருர் என்க. தமது அவை - தமிழ்ச்சங்கம். இருத்தா - இருத்தி. அருச்சித்தனர் - முற்றெச்சம்.

புலவர் கவிகளைக்கேட்ட ஊமன் செயல்

10. மகிழ்ந்தான்சிலர் சொல்லாழ்ச்சியை மகிழ்ந்தான்சிலர் பொருளை
இகழ்ந்தான்சிலர் சொல்வைப்பினை யிகழ்ந்தான்சிலர் பொருளைப்
புகழ்ந்தான்சிலர் சொல்லின்பமும் பொருளின்பமு மொருங்கே
திகழ்ந்தான்சிலர் சொற்றிண்மையும் பொருட்டிண்மையுந் தேர்ந்தே

தெளிவுரை : சிலர் சொல்லாழத்தை மகிழ்ந்தான்; சிலர் பொருளாழத்தை மகிழ்ந்தான்; சிலர் சொல் வைத்த முறையினை இகழ்ந்தான்; சிலர் பொருளமைப்பினை இகழ்ந்தான்; சிலர் சொல்லின்பத்தையும் பொருளின்பத்தையும் ஒரு சேரப் புகழ்ந்தான்; சிலர் சொல் வலிமையையும் பொருள் வலியையும் ஆராய்ந்தறிந்து மகிழ்ச்சியுடன் விளங்கினன்.

விளக்கவுரை : சங்கத்தார் கூறிய கவிகளைக்கேட்ட ஊமன் சிலர் கவிகளின் சொல்லாழம் பொருளாழங்களைக் கேட்டு மகிழ்தலும் இகழ்தலும் புகழ்தலும் செய்தான் என்பதாம். இவ்வாறு மகிழ்தல், இகழ்தல், புகழ்தல்களை ஊமன் மெய்ப்பாட்டால் தெரிவித்தான் என்க. சொல் இன்பம்-சிறந்த சொல்லமைப்பினைக் கண்டபோது உண்டாகும் இன்பம். பொருள் இன்பம் - கருத்தினைப் புலப்படுத்தும் செஞ்சொல்லைக் கண்டபோது உண்டாகும் இன்பம்.

நக்கீரன், கபிலன், பரணன் ஆகிய மூவர் பாடல்களையும் ஊமன் கேட்டல்

11. இத்தன்மைய னுகிக்கலை வல்லோர்தமி ழெல்லாஞ்
சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன்றெருள் கீரன்
முத்தண்டமிழ் கபிலன்றமிழ் பரணன்றமிழ் மூன்றும்
அத்தன்மைய னறியுந்தொறு மறியுந்தொறு மெல்லாம்

தெளிவுரை : கலையில் வல்ல அப்புலவர்களின் கவிகள் அனைத்தையும் உள்ளத்திற் கொண்டு அவற்றினியல்புகளை இங்ஙனம் மெய்ப்பாட்டினுலே புலப்படுத்திய சிறிய வணிகன் தெளிநத நக்கிரனது மூன்று வகைப்பட்ட தண்ணிய தமிழும், கபிலனது தமிழும் பரணனது தமிழுமாகிய மூன்றினையும் அங்ஙனம் உளங்கொண்டு உணருந்தோறும் உணருந்தோறும்,

விளக்கவுரை : தனபதி வணிகன் மகன் சங்கத்தார் பாடல்களைக் கேட்டு மெய்ப்பாட்டினுலேயே தன் கருத்தைப் புலப்படுத்தியவன் நக்கிரன் கபிலன் பரணன் ஆகிய மூவர் பாடலையும் கேட்கலானுன் என்பதாம். சித்தம் கொடு தெருட்டும்-மனத்தால் குணம் குற்றங்

களைப் புலப்படுத்தினன் என்க. கீரன் தமிழ்-ஆறும் வேற்றுமைத் தொகை; செய்யுட்கிழமைப் பொருளில் வந்தது. அறியுந்தோறும் அறியுந்தோறும்-அடுக்கு மிகுதிப் பொருளைக் குறித்தது.

நக்கீரன் கபிலன் பரணன் ஆகியோர் பாடலைக் கேட்ட ஊமன் செயல்

12. நுழைந்தான்பொரு டொறுஞ்சொற்றொறு நுண் ணஞ்சுவையுண்டே
தழைந்தானுடல் புலனைந்தினுந் தனித்தான்சிரம் பனித்தான்
குழைந்தான்விழி வழிவேலையுட் குளித்தான்றனை யளித்தான்
விழைந்தான்புரி தவப்பேற்றினை விளைத்தான்களி திளைத்தான்

தெளிவுரை : தன்னைப் பெற்ற தந்தை விரும்பிச் செய்த தவத்தின் பயனைப் புலப்படுத்திய அவ்வணிக மைந்தன், நுண்ணிய பொருள் தோறும் சொல் தோறும் நுழைந்து அவற்றின் இனிய சுவையினை அறிந்து உடல் பூரித்து ஐம்புலன்களினின்றுந் தனித்து அச்சுவை மயமாயினன்; முடிதுளக்கினன்; மனங்குழைந்து விழிகளினின்றும் வழிகின்ற ஆனந்தக்கண்ணீராகிய கடலுட் குளித்துக் களிகூர்ந்தனன்.

விளக்கவுரை : வணிக மைந்தன் நக்கீரன் கபிலன் பரணன் ஆகியோர் பாடல்களை கேட்குந்தோறும் பெருமகிழ்வுற்றான் என்பதாம். பொருட்சுவை-நகை, அழுகை, இளிவரல் மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை என்னும் ஒன்பதுமாம். சொற்சுவை-குணம், யமகம், திரிபு முதலிய அலங்காரங்கள். பாடல்களைக் கேட்டுணருங்கால் உண்டாகும் சுவை, மனவுணர்வு பற்றியது. மெய் வாய் கண் மூக்குச் செவிகளாகிய புலனைந்தின் சுவைகளினும் அச்சுவை தனித்து விளங்குவது. எனவே, 'புலனைந்தினும் தனித்தான்' என்றார். பனித்தான்-அசைந்தான்.

சங்கப்புலவர் கலகம் தீர்ந்து நண்பராதல்

13. பல்காசொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம்
எல்லாநிறுத் தளப்பானென வியல்வாணிகக் குமரன்
சொல்லாழமும் பொருளாழமுந் துலைநாவெனத் தூக்க
நல்லாறறி புலவோர்களு நட்டாரிகல் விட்டார்.

தெளிவுரை : பல மணிகளும் கடலிற்றோன்றும் பவளமும் ஒளிவிடும் முத்துமாகிய அணைத்தையும் நிறுத்து அறுதியிடுவான்போல, அழகிய வணிக மைந்தன் சொல்லாழத்தையும் பொருள் ஆழத்தையும் நாவினையே துலையாகக் கொண்டு நிறுத்துக் காட்ட நன்னெறியை அறிந்த புலவர்கள் யாவரும் பகையை விடுத்து நண்பராயினர்.

விளக்கவுரை : தனபதி வணிகன் மகன் புலவர்கள் பாடல்களைக் கேட்டுத் தன் மெய்ப்பாட்டினால் அறுதியிட்டுக் காட்டியவளவில் புலவர்கள் பகைமை ஒழித்து நண்பராயினர் என்பதாம். துலை நா என்னத் தூக்க-துலாக்கோலுள்ள முள், விற்போர் வாங்குவோர்க்கு இடையில்

நின்று பொருளை வரையறுத்துக் காட்டுவதுபோல, ஊமன் சங்கத்தார் பாடல்களின் சொல்லாழம் பொருளாழங்களைக் கண்டு நடுநிலையுடன் சீர்தூக்கித் தெளிவுபடுத்தினுன் என்க. காசு-பொன். சுடர் தரளம்-வினைத்தொகை விட்டார்-முற்றெச்சம்.

சங்கப்புலவர் அளவளாவி வாழ்தல்

14. உலகினுட் பெருகி யந்த வொண்டமிழ் மூன்றும் பாடற்
றிலகமாய்ச் சிறந்த வாய்ந்த தெய்வநா வலருந் தங்கள்
கலகமா நவையிற் றீர்ந்து காசறு பனுவ லாய்ந்து
புலமிகு கோட்டி செய்து பொலிந்தன ரிருந்தார் போலும்.

தெளிவுரை : அவ்வணிக மைந்தனுல் முற்றும் பாராட்டப் பெற்ற நக்கீரன் கபிலன் பரணன் என்னும் மூவருடைய பாடல்கள் உலகத்திற் பரவி பாக்களுக்குத் திலகமாக விளங்கின; கலைகளை ஆராய்ந்த தெய்வப் புலவர்களும் தங்கள் கலகமாகிய குற்றத்தினின்றும் நீங்கிக் குற்றமற்ற நூல்களை ஆராய்ந்து அறிவான் மிக்க அளவளாவுதலைச் செய்து விளங்கி இருந்தனர்.

விளக்கவுரை : வணிக மைந்தன் பாராட்டிய நக்கீரன் கபிலன் பரணன் ஆகியோர் பாடல்கள் உலகில் சிறந்து விளங்கின. ஏனைய புலவர்களும் கலகம் தவிர்த்து அளவளாவி வாழ்ந்தனர் என்பதாம். தமிழ் மூன்றும்-நக்கீரன் கபிலன் பரணன் ஆகிய மூவர் பாடல்களும். தெய்வநாவலர்-கடவுளால் கருதப்பட்ட புலவர். கோட்டி செய்து-கூடி அளவளாவி. பொலிந்தனர்-முற்றெச்சம். சிறந்த-அன் பெருத பலவின் பால் வினைமுற்று.

பயிற்சி விஞக்கள்

1. 'முந்தைநூன் மொழிந்த வாசான் முன்னர் வந் தெய்தினர்'—ஆசான் யார்? எய்தினவர் யாவர்? ஆசான்முன் அவர் மொழிந்தன யாவை?
2. மூலலிங்கத்தின் சிறப்பு எங்ஙனம் மொழியப் பட்டுள்ளது?
3. இறைவன் புலவனுய்த் தோன்றிச் சங்கத்தார் கலகம் தீரக் கூறிய உபாயம் யாது?
4. ஊமன் எங்ஙன் பாடலியல்புகளை அறைவான் எனக் கேட்ட புலவர்க்கு இறைவன் கூறியன யாவை?
5. சங்கத்தார் சிறந்த பாடல்களைத் தேர்ந்து கலகம் தீர்ந்த வரலாற்றைத் தெரிவிக்க.
6. புலவர்கள் பாடல்களைக் கேட்ட ஊமன் மெய்ப் பாட்டினுல் புலப்படுத்தியவற்றைத் தெரிவிக்க.
7. நக்கீரன் பரணன் கபிலன் பாடல்களைக்கேட்ட ஊமன் மகிழ்ந்தெங்ஙனம்?
8. பல்காசொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம் எல்லா நிறுத்தளப்பான் என—இவ்வுவமையைப் பொருளொடு பொருத்தி விளக்குக.

8. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

கதைச் சுருக்கம்

குலேச பாண்டியன் சிறப்பியல்பு : *சண்பக மாறன் சிவபத மடைந்த பின்பு பிரதாபசூரிய பாண்டியன், வங்கிசத்துவச பாண்டியன், இரிபு மருத்தன பாண்டியன், சோழவங்கிசாந்தக பாண்டியன், சேரவங்கி சாந்தக பாண்டியன், பாண்டிவங்கிகேச பாண்டியன், வங்கிச சிரோன் மணி பாண்டியன், பாண்டீச்சுர பாண்டியன், குலத்துவச பாண்டியன், வங்கிசபூடண பாண்டியன், சோமசூடாமணி பாண்டியன், குலசூடா மணி பாண்டியன், இராசசூடாமணி பாண்டியன், பூபசூடாமணி பாண் டியன், குலேச பாண்டியன் என்னும் பதினேவர் வழி வழிப் பிறந்து சிறப்புடன் ஆட்சி நடத்தினர். இவர்களுள் குலேச பாண்டியன் இலக்கண இலக்கியங்களின் எல்லே கண்டு எத்தகைய பெரு நூலையும் இனிதறிந்திருந்தானதலால் முத்தமிழ்ப் புலவர் இருக்கும் சங்கப் பலகை அவனுக்கும் ஏற இடமளித்தது.*

குலேச பாண்டியன் கல்விச் செருக்கால் இடைக்காடனை அவமதித்தல்; *குலேச பாண்டியன் கல்வியில் மிகச் சிறந்து விளங்குவதைக் கேள்வி யுற்று, கபிலனது நணபனுகிய இடைக்காடன், ஒரு பிரபந்தம் இயற்றிக் கொண்டு வந்து அரசன் முன் வாசித்தான். அப்பொழுது சொற்சுவையும் பொருட்சுவையும் நன்கு அறியவல்ல பாண்டியன் கல்விச் செருக்காலும் பொறுமையினுலும் அச்செய்யுட்களைக் கேட்டு முடியசைக்காமலும் முகமலர்ச்சி காட்டாமலும் யாதொன்றும் பேசா மலும் வாளா இருந்தான். கற்றவர்களும் பாராட்டும் சிறப்புடைய இடைக்காடன் அரசனது நிலையினுல் அவமானமுற்று மானம்பிடர் பிடித்துத்தள்ளத் திருக்கோயிலை அடைந்தான்.*

இடைக்காடன் இறைவனிடம் முறையிடுதல் : *திருக்கோயிலை அடைந்த இடைக்காடன் சோமசுந்தரக் கடவுளை வணங்கி 'திருவால வாயுடைய தலைவனே, தமிழறியும் பெருமானே! பாண்டியன் செல்வப் பொருள் போலக் கல்விப் பொருளும் மிக்குடையவன் என்று கேள்வி யுற்றுச் செய்யுள் செய்துகொண்டு சென்றேன். சிறிதும் முடியசைக் காது அவமதித்தான். செய்யுள் செய்து வருணித்தவருக்கு மன மகிழ்ந்து ஒரு பயனும் கொடாத கடலும் கழியும், மிருகமும் பறவை யும், மரமும் மலையும் சுரமுமாகிய அஃறிணைப் பொருள்களுள் ஒன்று போல் இருந்தான். அவன் அடியேனை இகழ்ந்தானே ! இல்லை. சொல்லின் வடிவாகிய உமாதேவியாரையும் சொற்பொருள் வடிவாகிய உம்மையுமே இகழ்ந்தான். அதனுல் எனக்கு வந்த குறையொன்று மில்லை' என்று விண்ணப்பித்துக்கொண்டு, தணியாத கோபம் இழுக்க, வடதிசை நோக்கிச் செல்லலானுன்.*

இறைவனும் புலவர்களும் இடைக்காடன் பின் செல்லுதல் : *இடைக் காடன் கூறிய சொற்களைக் கேட்ட சிவபெருமான், அவனுக்கும்*

அவனது நண்பனுகிய கபிலனுக்கும் மனமகிழ்ச்சி உண்டாகும் பொருட்டுத் தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவி யோடும் எழுந்து புறம்போந்து தமது திருக்கோயிலுக்கு நேர்வடக்கே வையை யாற்றுக்குத தெற்கே ஓராலயங்கண்டு அங்கு எழுந்தருளி யிருந்தார். சங்கப் புலவர்களும் இறைவன் சென்ற வழியே போய் அங்கு இருந்தனர்.

மதுரை நகரம் பொலிவிழந்துள்ளதை அடியார்கள் பாண்டியனுக்கு அறிவித்தல் : மறு நாள் விடியிற்காலையில் திருப்பள்ளி யெழுச்சி பாடி இறைவனை வழிபட வந்த அடியார்கள் சிவலிங்கத் திருமேனியைக் காணுது, 'இது என்ன அதிசயமோ?'' என்று ஐயமுற்று அஞ்சி அரச னுக்கு அறிவிக்க வருங்கால், உயிர்க் காதலரைப் பிரித்து வாழும் பெணகள் போலவும் இலக்குமியை நீத்த தாமரை போலவும் பொலி வழிந்த நகரத்தைக் கண்டனர். உடனே பாண்டியனை அடைந்து மனம் நடுங்கி நாவுலர்ந்து 'அரசே ஒன்று சொல்ல அஞ்சுகின்ருேம். இன்று இறைவனைத் திருப்பள்ளி எழுச்சியிலே தரிசிக்கச் சென்ருேம்; அங்கு இலிங்கத் திருமேனியைக் காணேம்; நகரும் பொலிவிழந்துள் ளது' என்று வருத்தத்துடன் கூறினர்.

குலேச பாண்டியனின் வருத்தம் : அடியார் கூறிய சொற்கள் நெருப்பிற் காய்ச்சிய வேல் போல் தன் செவியில் புகுதலும் பாண்டி யன் சிங்காதனத்தினின்று கீழே வீழ்ந்து உயிரொடுங்க, அறி வொடுங்கிப் பாவைபோலச் சிறிது பொழுது கிடந்து, அறிவுவர எழுந்து இரண்டு கைகளையும் தலைமீது குவித்து அழுது கண்ணீர் வெள்ளத் தாழ்ந்து 'எம்பெருமானே! அடியேன் யாது பிழை செய் தேன்? நீ மகாமேருமலையிலோ, சிவபுரத்திலோ, கைலைமலையிலோ, அடியார் நெஞ்சிலோ, வேதத்தின் உச்சியிலோ எங்குச் சென் றுள்ளாய்! எங்குச் சென்றுள்ளாய் !' என்று சொல்லிச் சொல்லி மனந்தளர்ந்தான்.

பாண்டியன் வையைத் தென்கரையில் இறைவனைக் காணுதல் : அப்போது சிலர் பாண்டியனிடம் வந்து, 'அரசர் பெரும! யாங்கள் ஓர் அதிசயம் கண்டோம். வையை யாற்றுக்குத் தென்கரையிலே சங்கப் புலவர்களோடும் இறைவியோடும் இறைவன் எழுந்தருளியுள்ளார்' என்றனர். அவ்வாரத்தை தன் செவியில் புகுந்து இழுக்கப் பாண்டி யன் எழுந்து விரைந்து நடந்து சென்று அங்கயற்கண்ணம்மையோடும் எழுந்தருளியுள்ள சோமசுந்தரப் பெருமானைக் கண்டு வணங்கிக் கணணீர் வார்ந்து பேரின்பக் கடலில் ஆழ்ந்து நாக்குழறித் தடுமாறி நின்று, 'ஐயனே, மறைகளும் அறியாத மலரடிகள் சிவப்ப, திருநகரம் செல்வப் பொலிவழிய, உலகன்னையோடு இங்கு வந்திருக்கும் காரணம் யாது? அடியேனல் பிழை ஏதேனும் நேர்ந்ததோ? அடியேனது சுற்றத்தாராலாயினும், பகைவராலாயினும், கள்வராலாயினும், விலங்கு முதலியவற்ருலாயினும் தமிழ் நாட்டுக்கு இடையூறு எய்தி யதோ? வேதியர் ஒழுக்கம் குன்றினரோ? தவமும் தருமமும் குறைந் தனவோ! இல்லறமும் துறவறமும் வழுவினவோ? அடியேன் அறியேன்! அறியேன்!' என்று விண்ணப்பம் செய்துகொண்டு 'கள்ளேறு கடுக்கை நறுஞ்சடையானே போற்றி பெருங்கருணை

போற்றி, வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே போற்றி யருள் விகிர்தாபோற்றி, புள்ளேறு கொடியுயர்த்த புனிதனயன் தேருத புனிதாபோற்றி, வள்ளேறு சிறுகுழவி மதிநுதலங்கயற்கண்ணி மணாள போற்றி'; பாதமலரிணை போற்றி பன்னிரண்டு கையானைப் பயந்தாய் போற்றி, வேதமுடி கடந்த பரஞானத்திலானந்த விளைவே போற்றி, போத வடிவாய் நால்வர்க் கசைவிறந்து நிறைந்த பரம் பொருளே போற்றி, மாதவள நீறணிந்த மன்ற வங்கயற் கண்ணி மணாள போற்றி.' 'பொக்கமுடையார் செய்யும் பூசைதவம் கண்டு நகும்புராண போற்றி, தக்கன்மகம் பொடியாகத் திருப்புருவம் நெரித்த கொடுந்தழலே போற்றி, செக்கமலக் கண்ணிடந்த கண்ண னுக்குத் திகிரியருள் செல்வா போற்றி, மைக் குவளையனைய மணிகண்டா வங்கயண்ணி மணாள போற்றி' என்று துதித்து வணங்கினான்.

இறைவன் பாண்டியனுக்கு அசரீரியாக மொழிதல் : அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் 'பாண்டியனே! உனது துதியைக் கேட்டு நாம் மகிழ்ந்தோம். உனக்குக் கூறவேண்டிய தொன்றுண்டு கேள் : எல்லாத் தலங்களுள்ளும் திருவாலவாயே சிறந்தது. இங்கே சுயம்பு லிங்கங்கள் பல உள. அரக்கர்களும் சித்தர்களும் தேவர்களும் முனிவர்களும் மனத்தால் அமைதது வழிபட்ட இலிங்கங்கள் அநேக முள்ளன. அவற்றுள் அறுபத்து நான்கு உயர்ந்தன. அவற்றுள்ளும் எட்டு ஒப்புயர்வற்றன. அவ்வட்டும் எண்டிசைப் பாலகரால் பூசிக்கப்பட்டவை, அவைகளுள் நாம் தங்கியிருக்கும் இலிங்கம் நம்முடைய தோழனாகிய குபேரன் பூசித்த இலிங்கமாகும். மேற் கூறிய இலிங்கங்கள் உள்ள இடமனைத்தும் ஒருழிக்காலத்தில் மறைந்தன. இது நமது தோழனாகிய குபேரன் நிறுவிய இலிங்க மாதலால் நாம் இங்கே வந்திருந்தோம். ஆகையால் இவ்விடம் இன்று முதல் உத்தர ஆலவாய் என்று சிறப்புறுவதாக. நாம் கடம்ப வனத்தை விட்டு ஒருபொழுதும் நீங்கியிரோம். நீயும் வேறு தீங்கு டையை யல்லை. இடைக்காடன் செய்த செய்யுளை இகழ்ந்தாய, அவனிடத்து வைத்த அருளினால் நாம் அது பொறுக்கமாட்டாது இங்கே வந்தோம்' என்று அசரீரியால் அருளிச் செய்தார். பாண்டி யன் அது கேட்டு, 'பெருமானே! சிறியோர் செய்த குற்றத்தைப் பொறுப்பது பெரியோர்க்குப் பெருமையன்றோ!'' என்று சொல்லி வணங்கினான். அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் பாண்டியனுக்கு அருள்புரிந்து அங்கயற்கண்ணம்மையுடனும் புலவர்களுடனும் தமது திருக்கோயிலுட் புகுந்தருளினார். பாண்டியன் இறைவன் பின் திருககோயிலுக்கு நடந்து சென்று விடை பெற்றுத் திரும்பிச் சங்கப் புலவர்களோடு இடைக் காடரையும் அழைத்துக் கொண்டு தனது திருமாளிகையினுட் புகுந்தனன்.

பாண்டியன் இடைக் காடனுக்கும் சங்கப் புலவர்க்கும் சிறப்புச் செய்தல் : பாண்டியன், தனது திருமாளிகையினுள் வாழை கமுகு

மேற்கட்டி கொடி மாலை சாமரை தீபம் பூரண கும்பம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் இடைக் காடரை அலங்கரித்து புலவர்கள் சூழப் பொன்னாசனத்தின் மீதிருத்தி, தான் வெண் பூமாலையும் வெண் பட்டும் முத்துமாலையும் அணிந்து கொண்டு சிங்காதனத்தின் மீதிருந்து மங்கல வாத்தியங்கள் முழங்க மறையவர் ஆசிகூற, மங்கையர் பல்லாண்டு பாட இடைக் காடரது பிரபந்தத்தைக் கேட்டு உள்ளம் உவந்து பாராட்டினன். பின்னர் இடைக் காடருக்கும் சங்கப் புலவர்களுக்கும் இரத்தினாபரணம் பட்டாடைகள் ஏவல் மகளிர் யானை குதிரைகள் விளை நிலங்கள் முதலியன ஏராளமாகக் கொடுத்து அவர்கள் பின் காலினால் ஏழடி நடந்து சென்று, 'புலவர்களே! அடியேன் இடைக்காடருக்குச் செய்த குற்றமெல்லாம் பொறுத்தருளக் கடவீர்கள் 'என்று பிரார்த்தித்து வணங்கினான். அதற்குப் புலவர்கள், 'அரசே! நீ சொல்லிய சொல்லாகிய அமுதத்தால் எங்கள் சினத்தீ தணிந்தது. இறைவன் திருவருளினால் இன்னமும் உனக்கு அளவில்லாத புகழும் பெருஞ் செல்வமும் உண்டாவனவாக' என்று ஆசி கூறிச் சென்றனர்.

குலேசன் அரிமருத்தனனுக்கு முடி சூட்டிச் சிவனடி யடைதல்: குலேச பாண்டியன் தான் செய்த தவப் பயனாய்ப் பிறந்த அரிமருத்தன பாண்டியனுக்கு அரசுரிமை யளித்துவிட்டு இறைவன் திருவடி நீழலைச் சேர்ந்தான்.

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த திருவிளையாடல்

1. குடைக்காடன் பசிக்கன்னக் குழியருத்தி
வேட்கையறக் கொடுத்த கங்கைச்
சடைக்காடன் புலவரிக றணிவித்த
முறை யிதுமேற் றன்னைப் பாடுந்
தொடைக்காடன் பகன்றி கழ்ந்த தென்னவனை
முனிந்துதன்னைத் தொழுது போன
இடைக்காட னுடன்போய்ப்பின் பெழுந்தருளிப்
பிணக்கறுத்த வியல்பு சொல்வாம்.

தெளிவுரை : குடை பிடிப்பதற்கு ஆளாகிய குண்டோதரனது பசியை நீக்குதற்கு அன்னக் குழியை வருவித்து ஊட்டி அவன் நீர் வேட்கை நீங்கக் கொடுக்கபபட்ட கங்கையை அணிந்த சடைக்காட்டினையுடைய சோமசுந்தரக் கடவுள், புலவர்களின் கலகத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடல் இது. இனி, தன்னைப் பாடிய செய்யுளுக்குச் செய்யும் அன்பு நீங்கி அவமதித்த பாண்டியனை வெறுத்து, தன்னை வணங்கிப் பிணங்கிச் சென்ற இடைக்காடனுடன் சென்று பின் எழுந்தருளி அவனது பிணக்குத் தீர்த்த திருவிளையாடலைக் கூறுவாம்.

விளக்கவுரை : சங்கப் புலவர்கள் கலகந் தீர்த்த திருவிளையாடலின்பின், இடைக்காடன் செய்யுளை இகழ்ந்த பாண்டியனை வெறுத்துச் சோமசுந்தரக் கடவுள் இடைக்காடன் பின் சென்று பின்பு எழுந்தருளி அவன் பிணக்குத் தீர்த்த திருவிளையாட்டு இங்கு கூறப்படுகிறது என்பதாம். குடைக்கு - ஆள் தன் - குடை பிடிக்கும் ஆளா

கிய குண்டோதரனின். இனி, குடை காடு அன் எனப் பிரித்து குடை பிடிக்கும் இடத்தையுடையவன் என்றும் பொருள் கொள்ளலாம். காடு - இடம். தொடைக்கு ஆடு அன்பு அகன்று - செய்யுளினிடத்து அன்பு நீங்கி அவமதித்து. செய்யுளுறுப்பாகிய தொடை, செய்யுளை யுணர்த்திற்றென்க. தென்னவன் - குலேச பாண்டியன்.

செண்பகமாறன் சிவபதமடைதல்

2. இந்திரன்றன் பழிதுரத்தி யரசளித்துப்
பின்புகதி யின்ப மீந்த
சுந்தரன்பொன் னடிக்கன்பு தொடுத்துநறுஞ்
சண்பகத்தார் தொடுத்துச் சாத்தி
வந்தனைசெய் திருத்தொண்டின் வழிக்கேற்பச்
சண்பகப்பூ மாற வேந்தன்
அந்தரசூ டாமணியாஞ் சிவபுரத்து
ணிறைசெல்வ மடைந்தா னிப்பால்

தெளிவுரை : இந்திரன் பழியை நீக்கி, அவனுக்கு அரசுரிமையுந் தந்து பின் வீட்டின்பத்தையும் அளித்த சோமசுந்தரக் கடவுளின் பொன் போலுந் திருவடிகட்கு அன்பு கூர்ந்து நறுமணங் கமழுஞ் சண பக மாலை தொடுத்து, அக்கடவுளுக்குச் சாத்தி வழிபாடு செய்துவந்த திருத்தொண்டின் நெறிக்குப் பொருந்த சண்பக மாறனென்னும் மன்னன் மேலேழுலகங்களுக்கும் முடிவாயுள்ள சூளாமணி போலுஞ் சிறந்த சிவபுரத்துள் நிறைந்த செல்வத்தைப் பெற்றான் பின்.

விளக்கவுரை : சோமசுந்தரப் பெருமானுக்கு செண்பக மாலை தொடுத்து வழிபட்ட திருத்தொண்டின் சிறப்பினையுடைய செணபக மாறன் என்னும் பாண்டியன் சிவபதமடைந்தான் என்பதாம். இந் திரன் பழி துரத்தல் முதலியன சோமசுந்தரனுக்கு அடைமொழிகள். அந்தர சூடாமணியாம் சிவபுரம்-மேலேழுலகங்களுக்கும் முடிவாயுள்ள சூளாமணி போலும் மேன்மை வாய்ந்த சிவலோகம். அந்தரம்-முடிவு. சிவபுரத்துள் நிறை செல்வம் அடைந்தான் - மங்கல வழக்கு.

செண்பக மாறனுக்குப்பின் ஆட்சி புரிந்த பாண்டியர்கள்

3. ஆற்றன்மிகு பிரதாப சூரியன்வங்
கிசத்துவச னளவில் சீர்த்தி
சாற்றரிய விரிபுமருத் தனன்சோழ
வங்கிசாந் தகன்றன் வென்றி
மாற்றரிய புகழ்ச்சேர வங்கிசாந்
தகன்பாண்டி வங்கி சேசன்
தோற்றமுறு பரித்தேர்வங் கிசசிரோ
மணிபாண்டீச் சுரன்றன் மன்னே

தெளிவுரை: *வலிமிக்க பிரதாப சூரியனும், வங்கிசத் துவசனும், அளவிறந்த புகழ் வாய்ந்த சொல்லுதற்கரிய இரிபு மருத்தனனும், சோழ வங்கி சாந்தகனும், நீக்குதற்கரிய வெற்றியும் புகழும் வாய்ந்த சேரவங்கி சாந்தகனும், பாண்டி வங்கி சேசனும், பொலிவு மிக்க குதிரை பூண்ட தேரிணையுடைய வங்கிச சிரோமணியும், பாண்டீச் சரனும்,*

விளக்கவுரை: *சண்பக மாறன் சிவபதமடைந்த பின், அவன் வழியினரான பிரதாப சூரியன் முதல் பாண்டீச்சரன் ஈறுன பாண்டிய மன்னர் ஆட்சி புரிந்தனர் என்பதாம். வம்சம் என்பது வங்கிசம் எனத் திரிந்து நின்றது. சோழ வங்கிச அந்தகன - சோழ குலததிற்கு எமன போன்றவன். சிரோமணி - முடிமணி போன்றவன். இரிபு மருத்தன் - பகைவரைக் கொல்லுபவன்.*

பாண்டீச்சுர பாண்டியன் வழிவந்த குலேச பாண்டியன் ஆட்சி

4. துணிவுடைய குலத்துவசன் வங்கிசபூ
டணமாறன் சோம சூடா
மணிகுலசூ டாமணியே யிராசசூ
டாமணியே மாற்ருர் போற்றிப்
பணியவரும் பூபசூ டாமணியே
குலேசபாண் டியனே யென்னக்
கணிதமுறு பதினைவர் வழிவழிவந்
துதித்துநிலங் காவல் பூண்டோர்.

தெளிவுரை: *போர்த் துணிவு மிக்க குலத்துவசனும், வங்கிச பூடண மாறனும், சோம சூடாமணியும், குல சூடாமணியும், இராச சூடாமணியும், பகைவர்கள் துதிதது வணங்குமாறு வருந்தோற்றததையுடைய பூப சூடாமணியும். குலேச பாண்டியனும் என்று எண்ணப்படும் பதினைந்து பாண்டியர்களும் ஒருவர் பின் ஒருவராய்த் தோன்றி நிலவுலகினைக் காத்தலை மேற் கொண்டார்.*

விளக்கவுரை: *சண்பகமாற பாணடியன் கால் வழியே வந்த பாண்டியர் பதினல்வருக்குப் பின் குலேச பாண்டியன் அரசாட்சியை மேற்கொண்டான் என்பதாம். வழி வழி வந்து - கால்வழியே வந்து.*

குலேச பாண்டியன் சங்கப் புலவர்களுள் ஒருவனுய்த் திகழ்தல்

5. அத்தகைய பாண்டியருட் குலேசபாண்
டியனென்னு மரசன் மேருண்மேல்
வைத்தவனி தலமபுரப்போ னிலக்கணமு
மிலக் கியமும் வரம்பு கண்டோன்
எத்தகைய பெருநூலு மெல்லை கண்டோ
னுதலினு லிவனுக் கேற
முத்தமிழோர் பயில்சங்க மிடங்கொடுத்த
தனையமணி முழவுத் தோளான்.

தெளிவுரை : அத்தன்மையையுடைய பாண்டியருள் நிலவுலகைத் தோளின் கண் வைத்துக் காப்பவனாகிய குலேச பாண்டியன் என்னும் மன்னன் இலக்கணமும இலக்கியமுமாகிய இவற்றின் முடிவைக் கண்டு வேறு எத்தகைய பெரிய நூலையும் முடிவு கண்டவனாதலால், இப்பாண்டியனுக்கு மூன்று தமிழையுமுணர்ந்த புலவர் இருக்கும் பலகை ஏறுதற்கு இடந்தந்தது ; அந்த அழகிய மத்தளம் போலுந் தோளையுடைய குலேச பாண்டியன்.

விளக்கவுரை : குலேச பாண்டியன் புரவலனாக விளங்கியதோடு இலக்கண இலக்கியங்களின் முடிவு கண்டு அறிஞனாய்த் திகழ்ந்து எத்தகைய பெரு நூலையும் எல்லை காணும் ஆற்றல் பெற்றிருந்தானா தலால், சங்கப் புலவர்கள் இருக்கும் சங்கப் பலகை அவன் ஏறுதற்கு இடமளித்தது என்பதாம். குலேச பாண்டியன் புரவலனாகவும் சிறந்த புலவனாகவும் விளங்கினான் என்க. பெருநூல் - முதனூல் என்றும் கலைகள் அறுபத்து நான்கென்றும் கொள்வர். சங்கம் - சங்கப் பலகை.

இடைக்காடன் குலேச பாண்டியன் முன் தன் பிரபந்தத்தைப் படித்தல்

6\. கழிந்தபெருங் கேள்வியினா னெனக்கேட்டு
முழுதுணர்ந்த கபிலன் றன்பாற்
பொழிந்தபெருங் காதன்மிகு கேண்மையினா
னிடைக்காட்டுப் புலவன் றென்சொன்
மொழிந்தரசன் றனைக்காண்டு மெனத்தொடுத்த
பனுவலொடு மூரித் தீந்தேன்
வழிந்தொழுகு தாரானைக் கண்டுதொடுத்
துரைப்பனுவல் வாசித் தானால்.

தெளிவுரை : மிகப் பெரிய நூல் வல்லான் என்று கற்றோர் கூறக் கேட்டு, கலைகள் முற்றுமுணர்ந்த கபிலனிடத்து பொழியப்பட்ட அன்பு மிக்க நட்பினனாகிய இடைக்காட்டுப் புலவன், ஒரு தமிழ்ப் பிரபந்தங் கூறிச் சென்று அரசனைக் காண்போமென்று கருதி, இயற்றிய அந் நூலுடன் மிகவும் இனிய மது வழிந்தொழுகும் வேப்ப மலர் மாலையை யணிந்த அப்பாண்டியனைக் கண்டு, தானியற்றிய உரையமைந்த செய்யுளைப் படித்தனன்.

விளக்கவுரை : கபிலனது நண்பனாகிய இடைக்காட்டுப் புலவன் பாணடியன் நூற்கேள்வி வல்லான் என்று கேள்வியுற்றுக் காண விரும்பி ஒரு தமிழ் நூலியற்றிக் கொண்டு வந்து குலேச பாண்டியனைக் கண்டு அதிலுள்ள செய்யுட்களைப் படித்தான் என்பதாம். கழிந்த பெருங கேள்வியினான் - மிகப் பெரிய நூல் வேள்வியில் வல்ல குலேச பாண்டியன். கழிந்த பெரு-ஒரு பொருள் பன்மொழி. காண்டும்- தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று. தென்சொல் மொழிந்து - தமிழ்ப் பிரபந்தம் இயற்றி. மூரி - பெருமை. ஆல் - அசை.

குலேச பாண்டியன் இடைக்காடன் நூலை இகழ்ந்திருத்தல்

7\. வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும்
பகிர்ந்தருந்த வல்லோ னுள்ளத்
தழுக்காற்றுற் சிரந்துளக்கா னகமகிழ்ச்சி
சிறிதுமுகத் தலர்ந்து காட்டான்
எழுக்காயுந் திணிதோளா னொன்றுமுரை
யான்வாளா விருந்தா னுய்ந்த
குழுக்காத னண்புடையான் றனைமானம்
புறந்தள்ளக் கோயில் புக்கான்.

தெளிவுரை: *குற்றமில்லாத சொல்லின் சுவையையும் பொருளின் சுவையும் பாகுபடுத்தி நுகரவல்ல அப்பாண்டியன், மனத்தின் கண உள்ள பொறாமையால் முடியை அசைக்காமலும் உள்ள மகிழ்ச்சியை முகத்தின் கண் சிறிதும் மலர்ந்து காட்டாமலும் தூணை வென்ற திண்ணிய தோளையுடைய அப்பாண்டியன் ஒன்றுங் கூறாது சும்மா இருந்தனன். நூல்களை ஆராய்ந்த புலவர் கூட்டத்தால் விரும்பப் பட்ட நட்பினையுடைய அப்புலவன், தன்னை மானமானது வெளியே தள்ளச் சென்று திருக் கோயிலைச் சார்ந்தான்.*

விளக்கவுரை : *குலேச பாண்டியன் சொற்சுவை பொருட் சுவைகளைப் பாகுபடுத்தி உணர வல்லவனாயிருந்தும் தன்மனத்திலுள்ள பொறாமையால் இடைக்காடன் பாடலைக் கேட்டு, சும்மா இருந்து விடவே, புலவர்களால் பாராட்டப் பெற்ற அப்புலவன் அவமானமுற்று இறைவன் திருக்கோயிலை அடைந்தான் என்பதாம். பொறாமையுற்றார்க்கு உள்மகிழ்ச்சி ஒழியுமெனவே முகமலர்ச்சியும் முடியசைத் தலும் பாண்டியனுக்கு இலவாயின. சொற்சுவை பொருட் சுவைகளைப் பாகுபடுத்தி உணரவல்லவனாயிருந்தும் பாண்டியன் தனது நூலைக் கேட்டு ஒன்றும் உரையாதிருக்கவே புலவன் அவமான முற்றான் என்க, தன்னைப் பாராட்டவல்ல பாண்டியனே இகழ்ந்தால் தனக்கு நேர்ந்த அவமானத்தைப் போக்க வல்லவர் பிறர் இலராதலால் புலவன் இறைவனை அடைந்தான் என்பார், 'மானம் புறந்தள்ளக் கோயில் புக்கான்' என்றார். ஏழுக்காயும் - தூணைவென்ற, ஆய்ந்த குழு - புலவர் கூட்டம். ஆய்தல் - அறிவின் நுணுக்கம். ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்' - (தொல், உரியியல் 330.)*

இடைக்காடன் இறைவனிடம் முறையிடல்

8\. சந்நிதியில் வீழ்ந்தெழுந்து தமிழறியும்
பெருமானே தன்னைச் சேர்ந்தோர்
நன்னிதியே திருவால வாயுடைய
நாயகனே நகுதார் வேம்பன்
பொன்னிதிபோ லளவிருந்த கல்வியுமிக்
குளனென்று புகலக் கேட்டுச்
சொன்னிறையுங் கவிதொடுத்தே னவமதித்தான்
சிறிதுமுடி துளக்கா னாகி.

தெளிவுரை : இடைக்காடன் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, 'தமிழை அறியும் பெருமானே! சார்ந்தவர்க்கு நல்ல நிதி போல்வாய்! திருவால வாயினை உடைய இறைவனே! விளங்குகின்ற வேப்ப மலர் மாலை யணிந்த பாண்டியன், பொருட் செல்வ மிக்குடையனாதல் போல அளவிறந்த கல்விச் செல்வமும் மிக்குள்ளான் என்று கற்றோர் கூற, அதனைக் கேட்டு சொற்சுவை நிரம்பிய கவிபாடி அவனிடஞ் சென்றேன்; சிறிதும் தலை அசைக்காமல் அவமதித்தான்.'

விளக்கவுரை : இடைக்காடன் சோமசுந்தரக் கடவுள் திருமுன் வீழ்ந்து வணங்கி, பாண்டியன் பொருந்து கல்வியும் செல்வமும் நிரம்பப் பெற்றவன் என்று கேட்டறிந்து கவிபாடிச் சென்றேன்; அடியேனைச் செருக்கினால் அவமதித்துவிட்டான்' என்று முறையிட்டான் என்பதாம், யான் பாடிச் சென்ற கவி சொற்சுவை பொருட்சுவை நிரம்பப் பெற்றதென்பதை நீயறியவல்லாய் என்பான், 'தமிழறியும் பெருமானே' என்று அழைத்தான் என்க. நகு தார் - விளங்குகின்ற மாலை. வேம்பன் - பாண்டியன். சொல்நிறையும் கவி - சொற்சுவை நிறைந்த பாடல். துளக்குதல் - அசைத்தல்.

இடைக்காடன் தன் செய்யுள் கேட்ட பாண்டியனிருந்த நிலையினைத் தெரிவித்தல்

9. பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க்
ககமகிழ்ந்தோர் பயனு நல்கா
விரிவாய தடங்கடலே நெடுங்கழியே
யடுங்கான விலங்கே புள்ளே
பொரிவாய பராரைமர நிரையேவான்
றெடுகுடுமிப் பொருப்பே வெம்பும்
எரிவாய கொடுஞ்சுரமே யெனவிவற்று
ளஃறிணையொத் திருந்தா னெந்தாய் !

தெளிவுரை : 'எமது தந்தையே, அன்புடன் இனிய மொழியாற் கவி தொடுத்து வருணித்த புலவர்களுக்கு மனமகிழ்ந்து ஒரு பயனும் அளிக்காத விரிந்த பெரிய கடலும், நெடிய உப்பங்கழியும், கொல்லுகின்ற காட்டிலுள்ள விலங்கும், பறவையும், பொருக்கு வாய்ந்த பருத்த அறையையுடைய மரவரிசையும் வானை அளாவிய முடியினையுடைய மலையும், வெதுப்புகின்ற அனலைத் தன்னிடத்துடைய கொடிய பாலை நிலமும், என்று சொலலப்பட்ட இவற்றுள் ஓர் அஃறிணைப் பொருளைப் போன்றிருந்தான்.'

விளக்கவுரை : இடைக்காடன் இறைவனிடம் தன் செய்யுளைக் கேட்ட பாண்டியன், புலவர்கள் வருணித்தாலும் வாளா இருக்கின்ற கடல், கழி, விலங்கு பறவை, மரம், மலை, பாலை நிலம் முதலிய அஃறிணைப் பொருள்களைப் போன்றிருந்தான் என்று வருந்திக் கூறினான் என்பதாம். பெரும் புலவர்களும் இயற்கைப் பொருள்களாகிய கடல் முதலிய அஃறிணைப் பொருள்களைத் தம் புலமை நலம்

தோன்ற வருணித்தல் மரபு. ஆனல் அவ்வஃறிணைப் பொருள்கள் கற்பனை செறிந்த அப்பாடல்களைக் கேட்டு வியந்து அகமகிழ்தலும் இல்லை; பரிசளித்தலும் இல்லை, அங்ஙனமே பாண்டியனும் வாளா இருந்தனன் என இகழ்ந்துரைப்பவர், 'ஓர் அஃறிணையொத்திருந்தான் எந்தாய்' என்றார். கடலே கழியே - எண்ணேகாரம். பராரை - மருஉ.

இடைக்காடன் சினத்துடன் கோயிலினின்று வெளியே செல்லுதல்

10. என்னையிகழ்ந் தனனேசொல் வடிவாய்நின்
 னிடம்பிரியா விமையப் பாவை
தன்னையுஞ்சொற் பொருளான வுன்னையுமே
 யிகழ்ந்தனனென் றனக்கியா தென்று
முன்னைமொழிந் திடைக்காடன் றணியாத
 முனிவீர்ப்ப முந்திச் சென்றன்
அன்னவுரை திருச்செவியி னூறுபா
 டெனவுறைப்ப வருளின் மூர்த்தி.

தெளிவுரை : 'அவன் என்னையோ இகழ்ந்தான்; சொல்லின் வடிவமாக நினது இடப்பாகத்தினின்றும் பிரியாத பார்வதி தேவியையும், அச்சொலலின் பொருளான நின்னையுமே இகழ்ந்தனன்; அதனல் எனக்கு வந்த குறை யாது?' என்று திருமுன் நின்று கூறி, இடைக்காடன் பொறுத்தற்கரிய சினம் இழுப்ப முன்னே சென்றனன். அந்தச் சொல், திருச்செவியின் கண் வேற்படை போலுஞ் சென்றுதைக்கக் கருணை வடிவினனகிய அச்சோமசுந்தரக் கடவுள்.

விளக்கவுரை: தன் செய்யுளைக் கேட்ட பாண்டியனிருந்த நிலையினை இறைவனிடம் கூறி முறையிட்ட இடைக்காடன், மேலும், அவன் என்னை இகழ்ந்தானிலன்; சொல் வடிவமான பார்வதியையும் சொற் பொருள் வடிவான உனையுமே இகழ்ந்தான். எனக்கொரு குறையுமில்லை என்று கூறிச்சினம் மிக்கவனய் கோயிலினின்று வெளியே சென்றன் என்பதாம். பொருளமைந்த சொற்களால் தொடுக்கப்பட்ட செய்யுளைப் பாண்டியன் இகழ்ந்தானதலால், சொல் வடிவாகிய இறைவியையும் பொருள் வடிவாகிய இறைவனையும் இகழ்ந்தானதல் பெறப்பட்டதென்க. ஊறுபாடு - புண்படச் செய்கின்ற கருவிகளில் ஒன்றாகிய வேலாயுதம். சொல்லிலும் பொருளிலும் சிறந்த தன் செய்யுளை இகழ்ந்த பாண்டியன் செயலால் தனக்கொரு அவமதிப்பும் இல்லை என்பான் 'என் தனக்கு யாது' என்றான் என்க. இவ்வாறு கூறியது கேட்ட இறைவன் பெரிதும் வருந்தினன் என்பார் 'அன்னவுரை திருச்செவியினூறு பாடென உறைதது' என்றார்.

இடைக்காடனுடன் இறைவனும் எழுந்தருளுதல்

11. போனவிடைக் காடனுக்குங் கபிலனுக்கு
மகத்துவகை பொலியு மாற்றான்
ஞானமய மாகியதன் னிலிங்கவுரு
மறைத்துமையா ளங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன்
கோயிலினேர் வடபால் வைகை
ஆனநதித் தென்பாலோ ராலயங்கண்
டங்கணினி தமர்ந்தான் மன்னோ.

தெளிவுரை : *அங்ஙனம் கூறிச்சினந்து சென்ற இடைக்காடனுக்கும் அவன் உயிர் நண்பனாகிய கபிலனுக்கும் மனத்தின்கண் மகிழ்ச்சி மிகுமாறு தேவர்கள் தேவனாகிய அவ்விறைவன் ஞானமய மாகிய தனது இலிங்கவுருவை மறைத்து உமைப்பிராட்டியுடன் எழுந்து வெளியே சென்று தனது திருக்கோயிலுக்கும் நேரே வட திசையில் வையையாற்றின் தென்பக்கதது ஒரு திருக்கோயிலை ஆக்கி அதன்கண் இனிதாக அமர்ந்தருளினான்.*

விளக்கவுரை : *இடைக்காடன் சினத்துடன் சென்றதை அறிந்த சோமசுந்தரப் பெருமான், அவனுக்கும் அவனது நண்பன் கபிலனுக்கும் மகிழ்ச்சியுண்டாகுமாறு தனது இலிங்க உருவை மறைத்து இறைவியோடும் புறப்பட்டுச் சென்று வையை யாற்றின் தென்பால் ஓர் ஆலயம் அமைத்து அமர்ந்திருக்கலானான் என்பதாம். கோயிலின் நேர் வடக்கிலும் வையை யாற்றின் தென் பக்கத்திலும் அமைத்த திருக்கோயில் வட திருவாலவாய் எனப் பெயர் பெறும். இது இக்காலத்தில் பழைய சொக்கநாதர் கோயில் என வழங்குகிறது. புறம் போய - திருக்கோயிலினின்று வெளியே சென்று. ஆலயம் கண்டு - கோயில் அமைப்பித்து, மன், ஓ - அசைகள்.*

சங்கப்புலவர்களும் இறைவனைப் பின் தொடர்ந்து செல்லுதல்

12. சங்கவான் றமிழ்த்தெய்வப் புலவோரு
முடனெழுந்து சைலவேந்தன்
மங்கைநா யகன்போன வழிபோயங்
கிருந்தாரவ் வழிநாள் வைகற்
கங்குல்வாய் புலரவரும் வைகறையிற்
பள்ளியுணர்காலத் தெய்தி
அங்கணா யகனடியார் சேவிப்பா
ரிலிங்கவுரு வங்குக் காணார்.

தெளிவுரை : *சிறந்த தமிழ்ச் சங்கத்துத் தெய்வத் தன்மை பொருந்திய புலவர்களும், ஒருசேர எழுந்து மலைமன்னன் புதல்வியாகிய உமையின் கேள்வன் சென்ற வழியே சென்று, அங்குத்*

தங்கினர். அந்நாளின் பின்னுள், இராப் பொழுது கழிய வரும் காலைப் போதில் இறைவனது திருப்பள்ளி எழுச்சிக் காலத்திற் சென்று அச்சிவ பெருமான் அடியார்கள் வணங்கலுற்றவர்கள், அத் திருக்கோயிலின்கண் இலிங்கத் திருவுருவத்தைக் காணுதவராய்.

விளக்கவுரை: இறைவன் இறைவியோடு திருக்கோயிலினின்று நீங்கிவிட்டமையறிந்த சங்கப்புலவர்களும் இறைவன் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று தங்கலாயினர். மறுநாள் விடியற் காலையில் திருப்பள்ளி எழுச்சி பாடி வழிபட வந்த அடியார்கள் இறைவனைத் திருக்கோயிலில் காணப்பெருத்வராய் வருந்தலாயினர் என்பதாம். சைலம்-இமயமலை. பள்ளியுணர் காலத்து-திருப்பள்ளியெழுச்சிக் காலத்தில்.

இறைவனில்லா நகரம் பொலிவிழந்திருத்தல்

13. என்னவதி சயமோவீ தென்றயிர்த்தா
ரிரங்கிரு ரிதனையோடி
மன்னவனுக் கறிவிப்பான் வேண்டுமெனப்
புறப்பட்டு வருவா ராவி
அன்னவரைப் பிரிந்துறையு மணங்கனையா
ரெனவுமல ரணங்கு நீத்த
பொன்னவிர்தா மரையெனவும் புலம்படைந்து
பொலிவழிந்த புரமுங் கண்டார்

தெளிவுரை: 'இஃது என்ன அதிசயம்' என்று ஐயுற்று வருந்தி விரைந்து சென்று இச்செய்தியை அரசனுக்கு அறிவிக்க வேண்டுமென்று கருதிப் புறப்பட்டு வரும் அடியார்கள் உயிர் போன்ற கேள்வரைப் பிரிந்து வசிக்கும் தெய்வமகளிர் போன்ற பெண்கள் போலவும், திருமகள் கைவிட்ட பொன்போல விளங்குந் தாமரை போலவும் தனிமை அடைந்து பொலிவழிந்து நிற்கும் நகரத்தினையுங் கண்டனர்.

விளக்கவுரை: திருக்கோயிலில் இறைவனில்லாதிருத்தலைக் கண்ட அடியார்கள் பெரிதும் அதிசயித்து, அரசனுக்கு அறிவிக்கப் புறப்பட்டு வரும்போது திருநகரமும் பொலிவிழந்திருத்தலைக் கண்டு வருந்தினர் என்பதாம். கணவரைப் பிரிந்து வாழும் பத்தினிப் பெண்டிரும் திருமகளை நீங்கியுள்ள தாமரை மலரும் பொலிவிழந் திருத்தல்போல, இறைவனை நீங்கப் பெற்ற மதுரையும் பொலிவிழந் திருந்த தென்க. புலம்படைந்து-தனிமையுற்று. 'புலம்பே தனிமை' (தொல்-உரியியல்). அறிவிப்பான்-'பான்' ஈற்று எதிர்கால வினை யெச்சம். புரம்-மதுரை மாநகரம்

அடியார்கள் பாண்டியனிடம் நகர் பொலிவிழந் துள்ளமையைக் கூறல்

14. அரசனிடைப் புகுந்துள்ள நடுநடுங்கி
நாவுணங்கி யரசே யாமொன்
றுரைசெயவஞ் சுதுமுங்க ளுயகனைத்
திருப்பள்ளி யுணர்ச்சி நோக்கி
மரைமலர்ச்சே வடிபணியப் புகுந்தனமின்
ருங்கவன்றன் வடிவங் காணேம்
புரமுநனி புலம்படைந்த தென்றழல்வே
லெனச்செவியிற் புகுத்த லோடும்

தெளிவுரை : *வேந்தனிடத்துச் சென்று மனம் பதை பதைத்து நாவுலர்ந்து 'மன்ன! யாங்கள் ஒரு செய்தியை இங்குக் கூற அஞ்சுகின்றோம்; உங்கள் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை திருப்பள்ளி எழுச்சியில் நோக்கித் தாமரை மலர் போலுஞ் சிவந்த திருவடிகளைப் பணிதற்குச் சென்றோம்; இன்று அவ்விடத்தில் அப்பெருமானது திருவடிவத்தைக் கண்டிலேம்; நகரமும் மிகவும் பொலிவிழந்தது' என்று அவன் செவியின் கண் நெருப்பிற் காய்ச்சிய வேறபடைப் போலப் புகுத்திய வளவில்,*

விளக்கவுரை : *அடியார்கள் குலேச பாண்டியனை அடைந்து அரசர் பெரும! இன்று காலை திருப்பள்ளி எழுச்சிபாடி இறைவனைப்பாடி வழிபடச் சென்றபோது இறைவன் திருவடிவத்தைக் காணப்பெறுமல் வருந்தினேம்; திருநகரும் பொலிவிழந்துள்ளது என்று எடுத்துரைத்தனர் என்பதாம். நடக்கக்கூடாதது நடந்து விட்டதனாலும் சொலத்தகாததைச் சொல்ல நேர்தமையாலும் உள்ளம் நடுங்கல், நாவுலர்தல் முதலிய மெய்ப்பாடுகள் அடியார்க்குத் தோன்றியன என்க. அடியார் கூறிய செய்தியைச் செவியுற்ற அரசன், பழுக்கக் காய்ச்சிய வேலைச் செவியிற் புகுத்தினாற்போன்ற துன்பத்தை அடைந்தான் என்க.*

குலேச பாண்டியன் வருந்துதல்

15. வழுதியரி யணையிலிருந் தடியிறவீழ்
பழுமரம்போன் மண்மேல் யாக்கை
பழுதுறவீழ்ந் துயிரொடுங்க வறிவொடுங்கி
மட்பாவை படிந்தாங் கொல்லைப்
பொழுதுகிடந் தறிவுசிறி தியங்க வெழுந்
தஞ்சலிக்கைப் போது கூப்பி
அழுதிருகண் ணீர்வெள்ளத் தாழ்ந்தடியே
னென்பிழைத்தே னன்று லண்ணல் !

தெளிவுரை : *பாண்டியன் வேர் அற வீழ்ந்த ஆலமரம்போல் சிம்மாதனத்தினின்றும் மண்ணின்மேல் உடலின்கண் வடுப்படுமாறு வீழ்ந்து, உயிர் ஒடுங்குதலால் அறிவு ஒடுங்கி சுதையாற் செய்த*

பிரதிமை கிடந்தாற்போல, சிறிது நேரங் கிடந்து, சிறிது உணர்ச்சியுண்டாக எழுந்து, அஞ்சலியாகக் கைத்தாமரைகளைத் தலையின்மேற் குவித்து, அழுது இரண்டு கண்களின்றும் பொழியும் நீர்ப் பெருக்கில் மூழ்கி, 'அடியேன் என்ன தவறு இழைத்தேன்'; பெருமவோ! பெருமவோ!'

விளக்கவுரை : அடியார் கூறியதைக் கேட்ட குலேச பாண்டியன் அடியற்ற ஆலமரம்போல விழுந்து மூர்ச்சையுற்றுத் தெளிந்து கைகளைத் தலையில் குவித்தவனாய் எழுந்து அழுதுகொண்டே 'பெருமானே! அடியேன் செய்த தவறு யாதோ?' என்று கேட்டு வருந்தலானான் என்பதாம். பழுமரம்-ஆலமரம். மட்பாவை படிந் தாங்கு-மண்ணாலான பாவை தரையில் செயலற்றுக் கிடப்பதுபோல பாண்டியன் செயலற்றுத் தரைமீது மூர்ச்சையுற்றுக் கிடந்தான் என்க.

'இறைவா நீ எங்குற்றாய்' என்று பாண்டியன் புலம்பல்

16. கொலையினையோ ரவுணர்புர நொடிவரையிற்
பொடியாகக் குனித்த மேருச்
சிலையினையோ பழையசிவ புரத்தினையோ
வருவிமணி தெறிக்கும் வெள்ளி
மலையினையோ தம்மைமறந் துனைநினைப்பார்
மனத்தினையோ வாழ்த்தும் வேதத்
தலையினையோ வெங்குற்றா யெங்குற்றா
யென்றென்று தளரு மெல்லை.

தெளிவுரை : 'இறைவனே! கொலை புரியும் நெறியை ஆராய்ந்தறியும் அவுணர்களின் திரிபுரம் நொடிப் பொழுதிலே பொடியாகுமாறு வளைத்தமேரு மலையினிடத்திருக்கின்றாயே! நீ பழைய சிவலோகத்தின் கண் உள்ளாயோ? அருவி மணிகளை எறியும் கைலாய மலையின்கண் உள்ளாயோ? தம்மை மறந்து நின்னை நினைக்கின்ற அடியார்கள் மனத்தின்கண் உள்ளாயோ? நினை இடையறாது வாழ்த்துகின்ற மறைமுடியின்கண் உள்ளாயோ? இவற்றுள் எங்குச் சென்றாய்?' என்று சொல்லிச் சொல்லி வருந்தும் பொழுது,

விளக்கவுரை : 'இறைவனே! நீ எங்குச் சென்றிருந்தாய்; மேரு மலைக்கோ? சிவலோகத்திற்கோ? அடியார் மனத்திற்கோ? கைலாய மலைக்கோ? வேதங்களின் உச்சிக்கோ? இவ்விடங்களில் எவ்விடத்திலுள்ளாய்' என்று கூறிப் பாண்டியன் வருந்தலானான் என்பதாம். ஓர் அவுணர்-வினைத்தொகை. ஓர்-ஓர்ந்த, தேர்ந்த. குனித்தமேரு-வளைத்த மேரு. நொடி-கைந்நொடிப் பொழுதினில், தம்மை மறந்து உன்னை நினைப்பார்-தற்போதம் அழிந்த சிவனடியார்.

இறைவனிருக்குமிடத்தைச் சிலர் வந்து தெரிவித்தல்

17. சிலர்வந்து மன்னவோ ரதிசயங்கண்
டனம்வைகைத் தென்சாராக
அலர்வந்தோன் படைத்தநாண் முதலொருகா
லமுங்கண்ட தன்று கேள்வித்
தலைவந்த புலவரொடு மாலவா
யுடையபிரான் முனே செம்பொன்
மலைவந்த வல்லியொடும் வந்திறைகொண்
டுறைகின்றான் மாதோ வென்றார்

தெளிவுரை : *சிலர் வந்து, வேந்தே! 'யாங்கள் ஒரு அதிசயத்தினைக் கண்டோம்; அது யாதெனில் வையை யாற்றின் தென்பாலாகப் பிரமன் இவ்வுலகை ஆக்கிய கால முதல், ஒரு காலத்திலேனும் பார்த்திராதது; நூலாராய்ச்சியாற் சிறந்த சங்கப்புலவர்களோடும் திருவாலவாயினையுடைய சோமசுந்தரக் கடவுள் சிவந்த பொன்னை யுடைய மலையரையன் புதல்வியாகிய உமாதேவியாரோடும் தானே வந்து நிலைபெற்று அமர்ந்திருக்கின்றனன்,' என்று கூறினர்.*

விளக்கவுரை : *பாண்டியன் பலவாறு இறைவனது பிரிவாற்றாது வருந்திக் கொண்டிருக்கும்போது, சிலர் வந்து வையையாற்றின் தென்பால், என்றும் கண்டிராத காட்சியாகச் சங்கப் புலவர் களோடும் சோமசுந்தரக் கடவுள் இறைவியுடன் எழுந்தருளியிருக் கின்றதைக் கண்டதாகக் கூறினர் என்பதாம். அலர் வந்தோன்-பிரமன். தாம் முன்பொருநாளும் அவ்விடத்தில் கோயிலிருந்ததைக் கண்டதுமில்லை; இருந்ததாகக் கேட்டதுமில்லை என்பார் 'பிரமன் படைத்த நாண் முதற்கண்டதன்று என்றார். அங்கெழுந்தருளியிருப் பவர் சோமசுந்தரக் கடவுளே என்பார், 'பிரான்தானே' என்றும் கூறினார் என்க. மாது, ஓ-அசைகள்.*

பாண்டியன் வையைத் தென்கரையில் இறைவனைக் காணல்

18. அவ்வுரைதன் செவிநுழைந்து புகுந்தீர்ப்ப
வெழுந்தரச னச்சத் தாழ்ந்து
தெவ்வர்முடித் தொகையிடறுங் கழற்காலா
னடந்தேகிச் செழுநீர் வையைக்
கௌவைநெடுந் திரைக்கரத்தாற் கடிமலர்தூஉய்ப்
பணியத்தென் கரைமேல் வந்து
மௌவலிள முகைமூரன் மாதினொடு
மிருக்கின்ற மணியைக் கண்டான்

தெளிவுரை : *அச்சொல்லானது, தன் செவிவழியே நுழைந்து உள்ளே புகுந்து இழுக்க, மன்னன் எழுந்து பயத்தின்கண் அழுந்திப் பகைவரின் முடித்தொகையினை இடறுகின்ற வீரக் கழலணிந்த காலினால் நடந்து சென்று, தெள்ளிய நீரையுடைய வையை ஆறானது*

ஒலியினையுடைய நீண்ட அலையாகிய கையினால் மணம் பொருந்திய மலர்களைத் தூவி வணங்க, அதன் தென்கரைமேல் முல்லையினது இளமை பொருந்திய அரும்பு போன்ற பற்களையுடைய பிராட்டியோடும் வந்திருக்கும் பெருமானைக் கண்டான்.

விளக்கவுரை : இறைவன் எழுந்தருளியிருக்குமிடத்தைக் கூறியவர்களைப் பின்தொடர்ந்து பாண்டியன், நடந்துசென்று வையைத் தென்கரையில் தேவியோடு வீற்றிருக்கும் இறைவனைக் கண்டான் என்பதாம். இறைவன் இவ்வாறு இங்கு வந்திருக்குமாறு தான் செய்த பிழை யாதோ என எண்ணிப் பாண்டியன் அஞ்சினான் என்க. தெவ்வர்-பகைவர். கௌவை-ஒலி. தூஉய்-தூவி. மௌவல்-முல்லை.

பாண்டியன் இறைவனிடம் தன் தவறு யாதெனக் கேட்டல்

19. படர்ந்துபணிந் தன்புகுக்குங் கண்ணீர்சோர்ந்
தானந்தப் பௌவத் தாழ்ந்து
கிடந்தெழுந்து நாக்குழறித் தடுமாறி
நின்றிதனைக் கிளக்கும் வேதந்
தொடர்ந்தறியா வடிசிவப்ப நகர்புலம்ப
வுலகீன்ற தோகை யோடிங்
கடைந்தருளுங் காரணமென் னடியேனாற்
பிழையுளதோ வையா வையா.

தெளிவுரை : அங்ஙனஞ் சென்று கண்டு வணங்கி, அன்பானது சிந்துகின்ற கண்ணீரைப் பொழிந்து, இன்பக்கடலுள் அழுந்திக் கிடந்து பின் எழுந்து, நாவானது குழலுற்றுத் தடுமாறி நின்று, இதனைக் கூறுவான் : 'மறைகளுந் தொடர்ந்தறியாத திருவடி சிவக்கவும், நகரிலுள்ளோர் வருந்தவும், உலகினைப்பெற்ற அம்மையோடும் இங்கு வந்து தங்கியருளிய காரணம் யாது? ஐயனே! ஐயனே! அடியேனால் ஏதாயினும் தவறு ஏற்பட்டதோ?'

விளக்கவுரை : பாண்டியன் இறைவனை வணங்கி, அடியேன் செய்த பிழை யாது? என்று கண்ணீர் சோர நாக்குழறக் கேட்டு நின்றான் என்பதாம். கண்ணீர் சிந்துதல் நாக்குழறல் முதலிய செயல்கள் அன்பின் மிகுதியால் பாண்டியனிடம் நிகழலாயின. உலகீன்றதோகை-உமாதேவியார். நகர்-இடவாகுபெயர்.

இறைவன் இங்ஙனம் எழுந்தருளிய காரணம் யாதெனப் பாண்டியன் கேட்டுப் புலம்பல்

20. அல்லதையென் றமராலென் பகைஞராற்
கள்வரா லரிய கானத்
தொல்லைவிலங் காதிகளா லிடையூறின்
றமிழ்நாட்டி லெய்திற் றாலோ
தொல்லைமறை யவரொழுக்கங் குன்றினரோ
தவந்தருமஞ் சுருங்கிற் றாலோ
இல்லறனுந் துறவறனும் பிழைத்தனவோ
யானறியே னெந்தா யெந்தாய்

தெளிவுரை: *அன்றி, என் பரிசனங்களாலாயினும், எனது பகைவராலாயினும் கள்வராலாயினும் செல்லுதற்கரிய காட்டின்கண் உள்ள விலங்கு முதலாயவைகளாலாயினும், இனிய இத்தமிழ் நாட்டின்கண் இடையூறு நேர்ந்ததோ? வேதியர் தமக்குத் தொன்றுதொட்டு வந்த ஒழுக்கத்திற்குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கினவோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியினின்றும் தவறினவோ? எமது தந்தையே! எமது தந்தையே நிகழ்ந்தது யாதென யான் அறியேன்.'*

விளக்கவுரை : *பாண்டியன் இறைவனிடம் தான் செய்த தவறு யாதெனக் கேட்டுப் பின் தனது பரிசனங்கள், பகைவர், கள்வர், விலங்கு முதலியவர்களால் நாட்டில் இடையூறு நேர்ந்ததோ? வேதியர் ஒழுக்கம் குன்றினரா? தவமும் தருமமும் சுருங்கினவா? இருவகை அறங்களும் நெறி தவறினவா? நிகழ்ந்ததென்ன? என்று பலவாறு கேட்டுப் புலம்பினன் என்பதாம். அல்லதை-ஐ சாரியை. பரிசனம்-மந்திரி பிரதானிகள் முதலியோர். பாண்டியன் தனது நாட்டில் எத்தகைய தீங்கும் நிகழவில்லை என்பான் 'இன்றமிழ் நாட்டில் எய்திற்றே' என்றான் என்க. ஆல்-அசை. இன்தமிழ்நாடு-பாண்டி நாடு.*

பாண்டியன் இறைவனைப் பலவாறு துதித்தல்

21\. கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையானே
போற்றிபெருங் கருணை போற்றி
வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே
போற்றியருள் விகிர்தா போற்றி
புள்ளேறு கொடியுயர்த்த புனிதனயன்
றேருத புனிதா போற்றி
வள்ளேறு சிறுகுழவி மதிநுதலங்
கயற்கண்ணி மணாள போற்றி

தெளிவுரை : *'தேன்நிரைந்த தனிய கொன்றை மாலையையணிந்த சடையை யுடையானே! வணக்கம்; பேரருள் உடையானே! வணக்கம்; வெள்ளிய இடபத்தைக் கொடியில் உயர்த்திய இடபவூர்தியை யுடையானே! வணக்கம்; கருணை விகிர்தனே! வணக்கம்; கலுழனைக் கொடியின்கண் உயர்த்திய தூயோனாகிய திருமாலும் பிரமனும் அறியாத தூயவனே! வணக்கம்; கூர்மைமிக்க நுனியினை யுடைய சிறிய பிறைபோலும் நெற்றியையுடைய அங்கயற்கண்ணம்மையின் கேள்வனே! வணக்கம்.'*

விளக்கவுரை : *பாண்டியன் தன் குறையைப் போக்கியருளுமாறு இறைவனைப் பலவாறு துதித்து முறையிட்டான் என்பதாம். விகிர்தன் வேறுபாடுடையவன்; விகிர்தம்-வேறுபாடு. இறைவன் தன்னை அடைந்தாரிடம் கருணையும் அடையாரிடம் சினமுடைமையுமாகிய வேறுபாடு. புள்-கருடன், வள்-கூர்மை.*

பாண்டியன் இறைவனைப் பலவாறு துதித்தல்

22. பாதமல ரிணைபோற்றி பன்னிரண்டு
கையானைப் பயந்தாய் போற்றி
வேதமுடி கடந்தபர ஞானத்தி
லானந்த விளைவே போற்றி
போதவடி வாய்நால்வர்க் கசைவிறந்து
நிறைந்தபரம் பொருளே போற்றி
மாதவள நீறணிந்த மன்னுவங்
கயற்கண்ணி மணாள போற்றி

தெளிவுரை: *திருவடித் தாமரை மலர் இரண்டிற்கும் வணக்கம்; பன்னிரண்டு திருக்கரங்களையுடைய ஆறுமுகக் கடவுளை அளித்தருளியவனே! வணக்கம்; மறை முடியைக் கடந்த பரஞானத்தின்கண் விளையும் இன்ப விளைவே! வணக்கம்; உபதேச வடிவமாய்ச் சனகர் முதலிய நால்வருக்கும் அசைவின்றி நிறைந்தருளிய மேலான பொருளே! வணக்கம்; பெருமை பொருந்திய வெள்ளிய திருநீற்றை யணிந்தருளிய இறைவனே! அங்கயற்கண்ணம்மையின் காதலனே! வணக்கம்.*

விளக்கவுரை: *பாண்டியன் தன்மேல் பிழையிருந்தாலும் பொறுத்தருளுமாறு வேண்டுவான்போல மேலும் மேலும் இறைவனைப் பலவாறு துதித்து வழிபடலானான் என்பதாம். பரஞானம்-மெய்யுணர்வு. மறை முதலியவற்றினாலாய அறிவு அபரஞானம் எனப்படும். பரஞானமாகிய மெய்யுணர்வால் விளையும் இன்ப வடிவமே இறைவனாதலின், 'பரஞானத்திலானந்த விளைவே' என்று விளித்தான் என்க. 'கல்லாலின் புடையமர்ந்து நான்மறையாறங்க முதற் கற்ற கேள்வி, வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய், எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச், சொல்லாமல் சொன்ன' பெருமானாதலால், 'போத வடிவாய் நால்வர்க்கு அசைவிறந்து நிறைந்த பரம்பொருளே' எனப்பட்டார் என்க.*

பாண்டியன் இறைவனைத் துதித்து வணங்குதல்

23. பொக்கமுடை யார்செய்யும் பூசைதவங்
கண்டுநகும் புராண போற்றி
தக்கன்மகம் பொடியாகத் திருப்புருவ
நெரித்த கொடுந் தழலே போற்றி
செக்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத்
திகிரியருள் செல்வா போற்றி
மைக்குவளை யனையமணி கண்டாவங்
கயற்கண்ணி மணாள போற்றி

தெளிவுரை : பொய்மையுடையவர் செய்கின்ற பூசையையுந் தவத்தினையுங் கண்டு சிரிக்கும் பழையோய்! வணக்கம்; தக்கன் செய்த வேள்வி நீறுகுமாறு திருப்புவனத்தினை நெரித்தருளிய கொடிய நெருப்பே! வணக்கம்; செந்தாமரை மலர் போன்ற கண்ணை இடந்து அருச்சித்த திருமாலுக்குச் சக்கரப்படை அருளிய செல்வனே! வணக்கம்; கரிய குவளைமலர் போன்ற நீலகண்டனே! அங்கயற்கண் ணம்மையின் மணவாளனே! வணக்கம்.

விளக்கவுரை : பாண்டியன் மேலும் இறைவனைப் பலவாறு துதித்து வணங்கினன் என்பதாம். பொக்கம்-பொய்ந்நெறி. 'பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு, நக்கு நிற்பனவர் தமை நாணியே' என்னும் அப்பர் தேவாரப்பகுதி, அன்பில்லாது தவமும் பூசையும் புரிவார்க்கு இறைவன் அருளான் என்பதை விளக்குவதறிக. செக்கமலம்-செங்கமலம், வலித்தல் விகாரம், எதுகை நோக்கி வந்தது.

பாண்டியன் துதிக்கிரங்கிய இறைவன் அசரீரியாக அறைதல்

24\. தென்னவ னின்ன வண்ண மேத்தினன் செம்பொற் கூடன்
மன்னவன் கேட்டா காய வாணியால் வைகை நாட
உன்னது சோத்த நாங்கேட் டுவந்தன மினிய தாயிற்
றின்னமொன் றுளது கேட்டி யென்றன னருளிச் செய்வான்

தெளிவுரை : குலேச பாண்டியன் இவ்வாறு துதித்தானாக, செம்பொன் நிறைந்த ஆலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் அதனைக் கேட்டு, அசரீரியால் 'வையை நாடனே! உனது துதியினைக் கேட்டு நாம் மகிழ்ந்தோம்; அது எமக்கு இனிமையுடையதாயிற்று; உனக்குக் கூற வேண்டியது இன்னும் ஒன்று உண்டு; அதனைக் கேட்பாயாக' என்று கூறியருளுவான்.

விளக்கவுரை : குலேச பாண்டியன் உளமுருகித் துதித்தற்கிரங்கிய சோமசுந்தரக் கடவுள் அசரீரியால் ஒரு செய்தியைக் கூறலானார் என்பதாம். சோத்தம்-இழிந்தார் செய்யும் அஞ்சலி என்பர். இங்கு துதியை உணர்த்திற்று. வாணி-வாக்கு. உன்னது-உனது என்பதில் எதுகை நோக்கி னகரம் விரிந்தது. கேட்டி-முன்னிலை ஒருமை எதிர் கால வினைமுற்று; த் - எழுத்துப்பேறு. என்றனன்-முச்செறச்சம்.

இறைவன் குலேச பாண்டியனுக்கு அசரீரியால் கூறியன

25\. இயம்பரும் பதிக டம்மு ளாலவா யேற்ற மீங்குச்
சயம்புவா யனந்த முள்ள தானவ ரியக்கர் சித்தர்
வயம்புரி யரக்கர் வானோர் முனிவரர் மனித ருள்ளார்
நயம்பெற விதியாற் கண்ட நங்குறி யனந்த முண்டால்

தெளிவுரை : சொல்லுதற்கரிய திருப்பதிகள் பலவற்றுள்ளும் திருவாலவாய் சிறந்தது; இங்குத்தாமே தோன்றியனவாய அளவிறந்த அருட் குறிகள் உள்ளன; அசுரர்களும் இயக்கர்களும் சித்தர்களும்

வெற்றியை விரும்பிய அரக்கர்களும், தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும் தாங்கள் விரும்பிய நலன்களைப் பெறுதற் பொருட்டு ஆகம விதிப்படி நிலைபெறுத்திய நமது அருட் குறிகளும் பல உள்ளன.

விளக்கவுரை : சோமசுந்தரக் கடவுள் தம்மைத் துதித்த குலேச பாண்டியனுக்குச் சொல்ல வேண்டியுள்ளதென்று அவனிடம் திருப் பதிகளுட் சிறந்த திருவாலவாயில் தாமே தோன்றிய பல அருட் குறிகளும் (சிவலிங்கங்களும்) அசுரர் தேவர் முதலியோர் விரும்பிய நலன்களைப் பெறுதற்காக ஆகம விதிப்படி நிலைபெறச் செய்த இலிங்கங்கள் பலவும் உள்ளன என்றார். ஏற்றம்-உயர்வு; மேன்மை. சயம்பு-சுயம்பு; தானே தோன்றியது. குறி-அருட்குறி; சிவலிங்கம். ஆல்-அசை

மதுரையிலுள்ள சிவலிங்கங்கள் பலவற்றில் குபேரன் வழிபட்ட குறியுள் யாம் தங்கியுள்ளோம் எனல்

26. அக்குறி களின்மேம் பட்ட குறியறு பத்து நான்காம்
இக்குறி களின்மேம் பட்ட குறிகளெட் டினைய வெட்டுத்
திக்குறை வானோர் பூசை செய்தன விவற்றியாம் வந்து
புக்குறை குறிநந் தோழன் பூசித்த குறிய தாகும்

தெளிவுரை : அவ்வருட் குறிகளிற் சிறந்த குறிகள் அறுபத்து நான்காகும்; இவ்வறுபதது நான்கு குறிகளிற் சிறந்த குறிகள் எட்டாகும்; இவ்வெட்டுக் குறிகளும் எட்டுத் திசைகளிலும் இருக்கும் தேவர்களாற் பூசிக்கப்பட்டன. இவ்வெட்டனுள் யாம் வந்து புகுந்து உறையுங் குறியானது நமது நண்பனாகிய குபேரன் வழிபட்ட குறி யாகும்.

விளக்கவுரை : மதுரையிலுள்ள சிவலிங்கங்களில் சிறந்த அறு பத்து நான்கனுள் மிகவுயர்ந்த குறிகள் எட்டாகும். அவை தேவர்களாற் பூசிக்கப்பட்டன. இவற்றுள் குபேரன் பூசித்த குறியுள் யாம் உறைகின்றோம் என்றார் என்பதாம். திக்குறைவானோர் - இந்திரன் முதலிய எண்டிசைப் பாலகர். நம் தோழன் - குபேரன். குறியது - குறி, அது - பகுதிப் பொருள் விகுதி.

வட திருவாலவாய்

27. அறைந்தவித் தெய்வத் தான மனைத்துமோ ரூழிக் காலத்
திறந்தநந் தோழன் கண்ட விலிங்கமா மதனு லிங்கே
உறைந்தன முறைத லாலே யுத்தர வால வாயாய்ச்
சிறந்திடத் தகுவ தின்று முதலிந்தத் தெய்வத் தானம்

தெளிவுரை : மேற்கூறிய இந்த அருட்குறிகள் உள்ள இடம் அனைத்தும் ஒரு ஊழிக் காலத்தில் மறைந்தன; இது நமது நண்பன் கண்டு வழிபட்ட இலிங்கமாகுதலால், இக்குறியின் கண் உறைந்தருளி

னோம். இங்ஙனம் உறைதலால் இத்தெய்வத் தானமானது இன்று முதலாக வடதிருவாலவாயாகிச் சிறக்கத் தக்கது.

விளக்கவுரை: முற் கூறப்பட்ட அருட்குறிகளெல்லாம் ஓர் ஊழியில் மறையவே குபேரன் வழிபட்ட குறியில் யாம் தாங்கி இங்குறைதலால் இங்கு யாம் எழுந்தருளினோம். இன்று முதல் இது வட திருவாலவாய் என்று விளங்குவதாக என்றான் என்பதாம். இறந்த - அழிந்தன. அன்பெறுத பலவின்பால் வினைமுற்று. உத்தர ஆலவாய் - வட மதுரை; வட திருவாலவாய்.

இறைவன் தான் வடதிருவாலவாய் வந்த காரணத்தைத் தெரிவித்தல்

28. ஓங்குதண் பணைசூழ் நீப வனத்தைநீத் தொருபோ தேனும்
நீங்குவ மல்லேங் கண்டா யாயினு நீயும் வேறு
தீங்குளை யல்லை காடன் செய்யுளை யிகழ்த லாலே
ஆங்கவ னிடத்தியாம் வைத்த வருளினுல் வந்தே மென்று

தெளிவுரை: சிறந்த தண்ணிய வயல்கள் சூழ்ந்த கடம்ப வனத்தை விட்டு ஒரு பொழுதேனும் நீங்கியிருப்பேமல்லேம்; ஆனாலும் நீயும் வேறு தீங்குடையை அல்லை; இடைக்காடன் செய்யுளை அவமதித்தாயாதலால் அப்பொழுதே அவன்கண் யாம் வைத்த அருளினால் இங்கு வந்தேமென்று,

விளக்கவுரை: எமக்குக் கடம்பவனத்தை விட்டு நீங்கியிருக்க விருப்பமில்லை. ஆயினும் நீ தவறுடையை அல்லையாயினும் இடைக்காடன் செய்யுளை இகழ்ந்தாயாதலால் யாம் இங்கு வரலானோம் என்று இறைவன் கூறியருளினார் என்பதாம். பணை-வயல். நீபவனம்-கடம்பவனம்; மதுரை. காடன் - இடைக்காடன், முதற்குறைவிகாரம். கண்டாய், ஆங்கு - அசை நிலைகள்.

பாண்டியன் தன் பிழை பொறுக்குமாறு இறைவனை இறைஞ்சுதல்

29. பெண்ணினைப் பாகங் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்ற மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை யன்றே
எண்ணிய பெரியோர்க் கென்று வேத்திறு னிறைஞ்சி னானே.

தெளிவுரை: உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்டு பெருஞ் சிறப்பினையுடைய மேலான யோகியாகிய இறைவன், வானினின்று அசரீரியாகக் கூறிய சொற்களைப் பாண்டியன் கேட்டு, "தேவர்களின் புண்ணியனே! யாவராலும் நன்கு மதிக்கப் பெறும் பெருமையுடையோர்க்குச் சிறியோர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுவது பெருமையல்லவா?" என்று துதித்து இறைஞ்சினான்.

விளக்கவுரை: பாண்டியன், இறைவன் அசரீரியாக மொழிந்த சொற்களைக் கேட்டு வருந்தி, சிறியோனாகிய தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு இறைஞ்சினான் என்பதாம். இறைவன் வட திருவாயில் எழுந்தருளியதற்குரிய காரணத்தையும் பாண்டியன் செய்த தவற்றினையும் எடுத்துக் காட்டியவுடன் பாண்டியன் தேவர்களின் புண்ணியப் பயனாக எழுந்தருளியுள்ள இறைவனாகிய அறப் பெரியோன் தன்னை யொத்தவன் செய்த பிழையை 'வெறுப்பனவே செய்யும் என் சிறுமை நின் பெருமையினாற் பொறுப்பவன்' நீ யாதலால் பொறுத்தருள வேண்டுமென்று கூறித் துதிக்கலானான் என்க. இறைவன் தூய உடம்பும் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவனாயினும், உயிர்கள் போகம் துய்த்தற் பொருட்டு உமையை ஒரு பாகமாக உடையவன் என்பதைப், 'பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரமயோகி' என்பதாற் புலப்படுத்தினார் என்க. ஏத்தினன் - முற்றெச்சம், பரமயோகி - மேலான யோகியாகிய சோமசுந்தரக் கடவுள்.

இறைவன் திருக்கோயிலுக்கு எழுந்தருளுதல்

30. அடிபணிந் தேத்தி னானை யருள்சுரந் தசையு மின்னுக்
கொடியணி மனையிற் போக்கிக் கோமள வல்லி யோடும்
உடனுறை புலவ ரோடு மொல்லைதன் கோயில் புக்கான்
வடதிரு வால வாயில் வந்துவீற் றிருந்த வள்ளல்.

தெளிவுரை: வட திருவாலவாயின்கண் இடைக்காடனுக்காக வந்து வீற்றிருந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளைத் துதித்து வணங்கிய அக்குலேச பாண்டியனைக் கருணை கூர்ந்து, அசைகின்ற மின் போன்ற கொடி கட்டிய மாளிகையிற் போகவிடுத்து பசுங்கொடி போன்ற இறைவியோடும் உடனுறைந்த சங்கப் புலவர்களோடும் விரைந்து திருக்கோயிலினுட் புகுந்தருளினான்.

விளக்கவுரை: பாண்டியனது துதிக்கிரங்கிய சோமசுந்தரக் கடவுள் அருள் கூர்ந்து இறைவியோடும் சங்கப் புலவர்களோடும் மதுரைத் திருக்கோயிலுக்கு எழுந்தருளினான் என்பதாம். மின்னுக் கொடியணிமனை - அரண்மனை. கோமளம் - அழகு. மின்னு - உகரம் சாரியை.

பாண்டியன் இடைக்காடனை அழைத்துச் சென்று அரண்மனை புகுதல்

31. பின்மதிச் சடையி னான்பி னடந்துபோய் விடைகொண் டேகும்
மன்னவன் றன்னைப் பாடி வந்தவன் றன்னை மாட்சித்
தன்மைசால் சங்க வாணர் தம்மொடுங் கொடுபோ யென்றும்
பொன்மகள் காணி கொண்ட புரிசைசூழ் கோயில் புக்கான்.

தெளிவுரை: மின்னலை ஒத்த சந்திரனை அணிந்த சடையையுடைய சோமசுந்தரக் கடவுளின் பின் திருக்கோயிலுக்கு நடந்து சென்று விடை மீளும் பாண்டியன் தன்னைப் பாடிவந்த இடைக்காடனை

மாண்பின் தன்மை நிறைந்த சங்கப் புலவர்களோடும் அழைத்துக் கொண்டு சென்று, எப்பொழுதும் திருமகள் ஆட்சியிடமாகக் கொண்ட மதில் சூழ்ந்த மாளிகையிற் புகுந்தான்.

விளக்கவுரை : *பாண்டியன் இறைவனுடன் கோயில் புகுமளவும் பின்னே நடந்து சென்று பின்பு இடைக்காடனைச் சங்கப் புலவர்களோடும் அழைத்துக் கொண்டு அரண்மனையை அடைந்தான் என்பதாம். முன் செய்யுளில் இறைவன் அரசனை மனையிற் போக்கிக் கோயில் புக்கான் என்றாரேனும், பாண்டியன், கோயில் புகுமளவும் பின்னேயே நடந்து சென்று பின்பு விடைப்பெற்றுச் சென்றான் என்று இச்செய்யுளாற் பெறப்பட்டது. காணி - ஆட்சி.*

பாண்டியன் இடைக்காடனைப் பொன்னாசனத்திருத்தல்

32. விதிமுறை கதலி பூகங் கவரிவால் விதானந் தீபம்
புதியதார் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றற்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் றன்னை மங்கல வணிசெய் தேற்றி.

தெளிவுரை : *விதிப்படி வாழையும், கமுகும், சாமரையும், வெள்ளிய மேல் விதானமும் விளக்கும், அன்றலர்ந்த மலரால் தொடுத்த மாலையும் பூரண கும்பமும் கொடியும் ஆகிய இவைகளால் அலங்கரித்த விழா நீங்காத ஒளியினையுடைய மணிகள் அழுத்திய மாளிகையின்கண் அழகிய பொன்னாலாகிய இருக்கையின் மேல் புலவர்கள் சூழ அறிவையே அணிகலமாகப் பூண்ட இடைக் காடனை மங்கலமாக அலங்கரித்து அமர்த்தி,*

விளக்கவுரை : *பாண்டியன் தன் மாளிகையை விதிப்படி அலங்கரித்துப் பொன்னாசனத்தில் புலவர்கள் சூழ்ந்திருக்க இடைக்காடனை அமர்த்தி உபசரித்தான் என்பதாம். பெரியோர்களை வரவேற்குங்கால் வாழை, கமுகு முதலியவற்றால் அலங்கரித்துப் பூரண கும்பத்துடன் வரவேற்று உபசரித்தல் மரபாகும். அம்முறைப்படி பாண்டியன் பல்வளமும் செல்வச் சிறப்பும் பொலிந்த அரண்மனையில் மற்றும் பல அலங்காரங்களும் செய்து தனது அன்பின் பெருக்கு வெளிப்பட இடைக்காடனை உபசரித்தான் என்க.*

பாண்டியன் இடைக்காடன் செய்யுளை விரும்பிக் கேட்டல்

33. சிங்கமான் சுமந்த பொன்னஞ் சேக்கைமே லிருத்து வெள்ளைக்
கொங்கவிழ் தாமந் தூசு குளிர்மணி யாரந் தாங்கி
மங்கல முழவ மார்ப்ப மறையவ ராக்கங் கூற
நங்கையர் பல்லாண் டேத்த நன்மொழிப் பனுவல் கேட்டு.

தெளிவுரை : *சிங்கம் சுமந்த பொன்னாலாகிய அழகிய ஆசனத்தின் மேல் தானும் இருந்து மகரந்தத்தோடு மலர்ந்த வெண்மலர் மாலையும் வெள்ளாடையும் தண்மையான முத்துமாலையுமாகிய இவற்றை அணிந்து மங்கல இயங்கள் ஒலிக்கவும் அந்தணர் ஆசி மொழி கூற*

வும், மங்கையர் பல்லாண்டு பாடவும் நல்ல சொற்களாலாக்கிய செய்யுளைக் கேட்டு,

விளக்கவுரை : இடைக்காடன் இயற்றி வந்த நூலின் பாட்டுடைத் தலைவனாகிய பாண்டியன் சிங்காதனத்தில் வெண் மலர்மாலை, வெள்ளாடை, வெண்மணியாரம் அணிந்து மங்கல வாத்தியங்கள் முழங்க, மறையவர் வாழ்த்தொலி பெருக, மங்கையர் பல்லாண்டு பாட வீற்றிருந்து அச்செய்யுட்களை விருப்புடன் கேட்டான் என்பதாம். நூல் கேட்குங்கால், பாட்டுடைத் தலைவன் வெண்மலர் வெள்ளாடை வெண்மணியாரம் அணிந்திருந்து கேட்டல் மரபாகுமென்க. ஆக்கம் - ஆசி கூறல். சிங்கமான் - இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

பாண்டியன் இடைக்காடனுக்குப் பரிசளித்து விடைகொடுத்தல்

34. அறிவுடைக் காட னுக்கு மருமைமாண் புலமை யோர்க்கும்
முறைமையா லாரந் தூசு முகிழ்முலைக் கொடியி னன்னோர்
நிறைநிதி வேழம் பாய்மான் விளைநிலை நிரம்ப நல்கி
அறைகழற் காலிற் பின்னே ழடிநடந் திதனை வேண்டும்.

தெளிவுரை : அறிவுடைய இடைக்காடனுக்கும் கிடைத்தற்கரிய மாட்சியுடைய புலவர்களுக்கும் வரிசைப்படி முத்து மாலைகளையும் அரும்பு போன்ற முலைகளையுடைய கொடி போன்ற ஏவல் மகளிரையும் நிறைந்த பொருளையும் யானைகளையும் குதிரைகளையும் விளை நிலங்களையும் நிரம்பக் கொடுத்து ஒலிக்கின்ற வீரக் கழலணிந்த காலினால் ஏழடி தூரம் அவர்கள் பின் நடந்து சென்று இதனை வேண்டுவானாயினன்.

விளக்கவுரை : பாண்டியன், இடைக்காடன் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து பின் சங்கப் புலவர்களுக்கும் இடைக்காடனுக்கு முத்துமாலை ஆடை ஏவல் மகளிர் யானை குதிரை விளை நிலம் முதலியவற்றைப் பரிசளித்து முறைப்படி ஏழடி நடந்து சென்றான் என்பதாம். புலவர்களுக்குப் பரிசளித்தனுப்புங்கால் அரசர்கள் பின் தொடர்ந்து ஏழடி நடந்து செல்லுதல் மரபாகும்.

பாண்டியன் புலவர்களைப் பிழை பொறுக்குமாறு வேண்டுதல்

35. புண்ணியப் புலவீர் யானிப் போழ்திடைக் காட னார்க்குப்
பண்ணிய குற்ற மெல்லாம் பொறுக்கெனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரு மன்னநீ நுவன்ற சொல்லாந்
தண்ணிய வமுதா லெங்கள் கோபத்தீத் தணிந்த தென்னா.

தெளிவுரை : 'புண்ணிய வடிவாயுள்ள புலவர்களே! அடியேன் இப்பொழுது இடைக்காடருக்குச் செய்த குற்றங்களனைத்தையும் பொறுத்தருளுவீராக' என்று துதித்துவணங்கினான். நுட்பமாகிய நூற் கேள்வி வல்ல புலவர்களும், 'மன்ன! நீ கூறிய சொல்லாகிய குளிர்ந்த அமிழ்தத்தால் எங்கள் சினமாகிய நெருப்பு அவிந்தது என்று கூறி,

விளக்கவுரை: பாண்டியன் புலவர்களை நோக்கித் தான் இடைக் காடனுக்குச் செய்த குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டினான். புலவர்களும் சினந் தணிந்தனர் என்பதாம். சொல்லாம் தண்ணிய அமுது. இங்கு அமுது என்பதற்கு நீர் என்னும் பொருள் கொள்ள லாம். கொள்ளின் சினமென்னும் நெருப்பு' தணிந்தது எனத் தகுதி பற்றிக் கூறியதாகவும் கொள்ளலாமென்க. இச்செய்யுளின் பின்னி ரண்டடிகளிலும் முற்றுருவகம் அமைந்திருத்தல் காண்க. சொல்லாம் அமுது, கோபத்தீயைத் தணித்ததெனக் கூறியுள்ளமை காண்க. பொழுது-போழ்தென விகாரப்பட்டது. பொறுக்கென - வியங்கோளின் ஈற்று அகரம் தொக்கது.

சங்கப் புலவர்கள் பாண்டியனை வாழ்த்துதல்

36. இன்னமு மால வாயெம் மிறையவன் கருணை நோக்காற்
பன்னரும் புகழ்மை குன்றுப் பாக்கிய முனக்குண் டாக
என்னநல் லாக்கங் கூறி யேகினா ராக வந்தத்
தென்னவன் குலேசன் செய்த தவமுருத் திரிந்தா லென்ன.

தெளிவுரை: இனிமேலும் திருவாலவாயில் எழுந்தருளியுள்ள எம்பெருமானது திருவருட் பார்வையினால், சொல்லுதற்கு அரிய புகழ் குறையாத பெருஞ்செல்வம் உனக்கு உண்டாகக் கடவது என்று நல்லாசி மொழிந்து அகன்றனராக; அக்குலேச பாண்டியன் செய்த தவமானது உருமாறி வந்தாற் போல,

விளக்கவுரை: பாண்டியன் மீது எழுந்த சினந் தணிந்த சங்கப் புலவர்கள் அரசனை வாழ்த்தி விடைபெற்றுச் சென்றனர் என்பதாம். நல்லாக்கம் - நல்ல ஆசீர்வாதம், தவம் உரு திரிந்தால் என்ன - தவம் திரிந்து புத்திரப் பேறாகத் தோன்றினாற் போல மகன் பிறந்தான் என அடுத்த செய்யுளில் முடிக்க. புகழ்மை - 'மை'ப் பகுதிப் பொருள் விகுதி.

குலேச பாண்டியனுக்கு மகனாக அரிமருத்தனன் பிறந்தான்

37. எரிமருத் தவனி முன்னா மெண்வகை மூர்த்தி யன்பு
புரிமருத் துவனைச் சூழ்ந்த பொருபழி துடைத்தோன் சோதி
விரிமருத் துடல்வான் றிங்கண் மிலைந்தவ னருளின் வந்தான்
அரிமருத் தனனுந் தென்ன னடலரிக் குருளை யன்னான்.

தெளிவுரை: தீயும் காற்றும் நிலனும் முதலாகிய எட்டு வகை வடிவமுள்ளவனும், அன்பினால் வழிபாடு செய்யும் இந்திரனைச் சூழ்ந்த வருத்தும் பழியினைப் போக்கினவனும் ஒளி விரிந்த அமிழ்தமயமாகிய உடலையுடைய வான் மதியைச் சூடியவனுமாகிய சோமசுந்தரக் கடவு ளின் திருவருளால், வலி மிக்க சிங்கக் குட்டி போன்ற அரிமருத்தனன் என்னும் பாண்டியன் மகனாக வந்து தோன்றினான்.

விளக்கவுரை: சோமசுந்தரக் கடவுள் திருவருளினால் குலேச பாண்டியனுக்கு அரிமருத்தன பாண்டியன் மகனாகப் பிறந்தான் என்ப

தாம். இறைவனது அட்ட மூர்த்தங்கள் தீ, காற்று, நீர், நிலம், ஆகாயம், ஞாயிறு, திங்கள், இயமானன் என்பன. மருத்துவன் - இந்திரன். இவன் பழி தீர்த்த செய்தி இந்திரன் பழி தீர்த்த படலத்துள் கூறப்பட்டுள்ளது. மருததுடல் - அமுதம் நிறைந்த உடல். இதனை யுடையவன் சந்திரன். அரிமருத்தனனும் தென்னன் - அரிமருத்தன பாண்டியன்.

அரிமருத்தனன் அரசுரிமை பூணலும் குலேசன் அரசடி யடைதலும்

38. பரிசிலைப் புலவருக் கருள்குலே சன்பல பகல்கழித்த்
திரிமருப் பிரலைவெம் மழுவெடுத் தவன்மதிச் சென்னிமேல்
வரிசிலைப் படைபொறித் தவனெனப் பெறுவர மைந்தனும்
அரிமருத் தனனிடத் தவனிவைத் தரனடி யெய்தினான்.

தெளிவுரை : புலவர்களுக்குப் பரிசில் அளித்த குலேச பாண்டியன் பல காலங்கழித்துத் திரிந்த கொம்பினையுடைய மானையும் கொடிய மழுவையும் ஏந்திய இறைவனது பிறைமுடியின் மேல் கட்டமைந்த விற்படையினால் அடித்த அருச்சுனன் போல, வரம் பெறும் புதல்வனாகிய அரிமருத்தனனிடத்தில் நிலவு காட்சியை அளித்துவிட்டு அரன் திருவடி நிழலையடைந்தான்.

விளக்கவுரை : குலேச பாண்டியன் பலகாலம் கழித்துத் தன் மகனாகிய அரிமருத்தனனுக்கு அரசாளுரிமையளித்து விட்டு இறைவன் திருவடி நிழலை யடைந்தான் என்பதாம். இடைக்காடனுக்கும் சங்கப் புலவர்கரும் குலேச பாண்டியன் பரிசளித்து உபசரித்தமையைக் குறிக்க, பரிசிலைப் புலவர்க்கருள் குலேசன் எனப்பட்டான். அருச்சுனன் சிவபெருமானை வில்லாலடித்துப் பாசுபதமும் வரங்களும் பெற்றது போல அரிமருத்தனன் இறைவனைப் பிரம்பாலடித்து வரம் பெறுபவனாதலால் இங்ஙனம் அருச்சுனனோடு அவன் ஒத்திடப் பெற்றான் என்க. பகைவரை அழிக்கும் திறத்தால் அருச்சுனனே என்று சொல்லத் தக்க வலிமையுடையவன் அரிமருத்தனன் என்றும் கூறுதல் பொருந்து மென்க. மைந்தன் - வலிமையுடையோன்; புதல்வன். இரலை - மான். படைபொறித்தவன் - அருச்சுனன்.

பயிற்சி வினாக்கள்

1. குலேச பாண்டியன் சிறப்பியல்புகள் யாவை?
2. இடைக்காடன் இறைவன் முன் சென்று முறையிட்டுக் கூறியன யாவை?
3. இறைவன் வையைத் தென்பால் எழுந்தருளியதேன்? இறைவனுடன் சென்றவர் யாவர்?
4. ஆவியன்னவரைப் பிரிந்துறையும் அணங்கு - இவ்வுவமையைப் பொருளொடு பொருத்துக.

5. அடியார் பாண்டியனிடம் கூறிய செய்திகளைத் தெரிவிக்க.

6. இறைவன் நகர் நீங்கியதறிந்த குலேச பாண்டியன் எவ்வாறு புலம்பி வருந்தினன்?

7. வையைத் தென்பாலில் இறைவனிருப்பை அறிந்த பாண்டியன் வேண்டிக் கூறியன யாவை?

8. அலர் வந்தோன் படைத்த நாண் முதலொரு காலமும் கண்ட தன்று - இடஞ்சுட்டி விளக்குக.

9. குலேசபாண்டியன் வையைத் தென்பாலெழுந்தருளியிருந்த இறைவனை எங்ஙனம் துதித்து வழிபட்டான்?

10. 'இன்ன மொன்றுளது கேட்டி' என இறைவன் பாண்டியனுக்கு அசரீரியால் எடுத்துரைத்தன யாவை?

11. இறைவன் வடதிருவாலவாயில் எழுந்தருளியதற்கு என்ன காரணம் கூறினர்? வடதிருவாலவாயின் சிறப்பினைத் தெரிவிக்க.

12. பாண்டியன் இடைக்காடன் பாடல் கேட்டுவந்து சிறப்புச் செய்த முறைகளைத் தெரிவிக்க.

13. 'மழுவெடுத்தவன் சென்னிமேல் வரிசிலைப்படை பொறித்தவன்' - யார்? அவனை ஒத்தவன் யார்? எதனால் ஒத்தவனாகின்றான்? விளக்குக.